விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

தமிழ்த்தந்தி

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

★ விளம்பரங்கள்

★ வாழ்த்துகள்

மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:

Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294

e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 22 ஞாயிற்றுக்கிழமை 28.04.2019 Sunday 28th April 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

தமிழர்களை இலக்கு வைத்தே தாக்குதல்!

தமிழ் சமூகம் பலவீனமடைந்திருப்பதால் முஸ்லிம் தீவிரவாதம் அவர்களில் இலகுவாக கைவைக்கின்றது

தமிழ்த்தந்திக்குப் பிரத்தியேகப் பேட்டி

தமிழர்களுக்கு சரியான தலைமைத்துவம் இன்மையே அவர்கள் மீதான தாக்குதலுக்கு காரணம்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆதங்கம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை (21.04.2019) உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குறிப்பாக தமிழ் கத்தோலிக்க மக்களை இலக்கு வைத்து முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளால் மனித வெடிகுண்டுகள் மூலம் மனி உயிர்களை அழிக்கின்ற ஒரு மிகக் கொடூரமான தாக்குதல் நடைபெற்றது. இதுவொரு மன்னிக்க முடியாத மிலேச்சத்தனமான தாக்குதல்.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தத் தாக்குதல் முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் தீவிரவாத அமைப்புகளினுடைய வளர்ச்சி, அந்த அமைப்பு உருவாக்கப்பட்டு, அந்த அமைப்பினுடைய சகல நடவடிக்கைகளுக்கும் அரசியல் ரீதியான ஒரு ஆதரவு இருந்து வந்திருக்கிறது.

அரசியல்ரீதியான ஆதரவில்லாமல் ஒரு முஸ்லிம் அமைப்பு ஒன்று இவ்வளவு தூரம் வளர முடியாது. அந்தத் தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கும், அந்த அமைப்பிற்கும், முஸ்லிம் அரசியல்வாதிகளிற்கும் ஏதோ ஒரு காரணத்தால், ஏதோ ஒரு வகையில் தொடர்புகள் இருக்கின்றது.

இந்த நிலையில், இந்தத் தாக்குதலை அந்த அமைப்பு மிகக் கொடூரமான ஒரு தாக்குதலை செய்திருக்கின்றது. இந்தத் தாக்குதல் சம்பந்தமாக, அவர்களுடைய நடவடிக்கை சம்பந்தமாக ஆரம்ப காலத்தில் சில தடயங்கள் கிடைத்த போதும், அரசியல் ரீதியான நடவடிக்கை காரணமாக உரிய நடவடிக்கை பாதுகாப்புத் தரப்பால் மேற்கொள்ளப்படவில்லை.

அதாவது, அவர்களை சரியான முறையில் புலன்விசாரணை செய்து, ஆரம்பப் புள்ளியிலிருந்து வரக் கூடிய நடவடிக்கையை அரசாங்கமோ, இராணுவப் புலனாய்வோ, அல்லது பொலிஸ் புலனாய்வோ அதைக் கையாளவில்லை. உதாரணமாக கடந்த மூன்று மாதங்களிற்கு முன்னர் வில்பத்து வனப்பகுதியில் முஸ்லிம் இளைஞர்கள் பயிற்சி பெறுவதாக சிங்கள மக்களால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, அங்கு சென்று சோதனையிட்டதன் அடிப்படையில்,

02 ஆம் பக்கம் பார்க்க

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாமல் செய்ய அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிட போவதாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குடிமக்களைக் கண்காணித்தல் மற்றும் புலனாய்வு சேவையை மீண்டும் கட்டியெழுப்புவதன் மூலம் இஸ்லாமிய தீவிரவாதத்தை பரவதை நிறுத்த முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

ரொயிட்டர்ஸ் சர்வதேச செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

டிசம்பர் மாதமளவில் அடுத்த ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் நூறு சதவீதம் தான் தேர்தலில் போட்டியிடுவதாகவும் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் மகள் கலிபோனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷவு, அது

02 ஆம் பக்கம் பார்க்க

சாய்ந்தமருதில் இதுவரை 15 சடலங்கள் மீட்பு

பெரியநீலாவணை நிருபர்

சாய்ந்தமருது பெலிவோரியன் வீட்டுத்திட்டப் பகுதியில் (26) மாலை 7.30 மணியளவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் இதுவரை 16 பேர் இறந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் மாலை குறித்த பிரதேசத்தில் வாடகை வீடு ஒன்றில்

02 ஆம் பக்கம் பார்க்க

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும்!

இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் வேண்டுகோள்

பெரியநீலாவணை நிருபர்

சாய்ந்தமருது பெலிவோரியன் வீட்டுத்திட்டப் பகுதியில் (26) இடம்பெற்ற குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டு

02 ஆம் பக்கம் பார்க்க

அட்டாளைச்சேனையில் தேடுதல் பல ஆவணங்கள் சிக்கியது

பைஷல் இஸ்மாயில்

உயிர்த்த ஞாயிறு தினத்தில் மேற் கொள்ளப் பட்ட பயங்கரவாத குண்டுத் தாக்குதலுடன் தொடர்பு பட்ட சந்தேக நபர்கள் சிலர், அட்டாளைச்சேனை பிரதேசத்தில்

02 ஆம் பக்கம் பார்க்க

உருவாகியது ∴னிப் புயல்



இந்திய வானிலை அவதான நிலையம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் 12 மணி நேரத்தில் ∴பானி புயலாக வலுப்பெறுகிறது என்று இந்திய வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்திய வானிலை அவதான நிலையம் வெளியிட்டுள்ள தகவலில் தென்கிழக்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது.

02 ஆம் பக்கம் பார்க்க

கொழும்பு மாநகரசபை உறுப்பினர் அதிரடிக் கைது

கொழும்பு மாநகர சபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் நூர்தீன் மொஹமட் தாஜுதீன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கொம்பனிவீதி பள்ளிவாசல் வீதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றிலிருந்து, 46 வாள்கள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே அவர் கைதாகியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து பொலிஸார் நடத்திய விஷேட தேடுதலின் இந்த வாள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வவுனியா பள்ளிவாசல் பகுதியில் இராணுவம் கடும் சோதனை

வவுனியா க.மதி

வவுனியா நகரப் பள்ளிவாசலை சூழவுள்ள பகுதியில் இராணுவத்தினரும் பொலிசாரும் கடும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா நகரப் பள்ளிவாசலை சூழவுள்ள பகுதிகளில் வீதிகள் தடை செய்யப்பட்டு வாகனங்கள், பொதுமக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றிவளைப்பு பகுதியிலிருந்து வெளியேறும் பொதுமக்கள் கடும் சோதனையின் பின் வெளியேச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இச்சோதனை நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் வான் ஒன்று கைப்பற்றப்பட்டு வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கையானது இரகசிய தகவல் ஒன்றையடுத்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தந்தை செல்வாவை நினைவு கூர கூட்டமைப்புக்குத் தகுதியில்லை!

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டஉறவுகளை தேடிக் கண்டறியும் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார்

எங்களின் சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டம் 800 நாட்களை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதனையொட்டி சிறிலங்காவில் நடந்த மன்னிக்கமுடியாத, கொடூரமான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தும், அங்கு உயிரிழந்த மக்களுக்கு, வேண்டுதலும் செய்ய இருக்கின்றோம். அதை வவுனியாவிலுள்ள இறம்பைக்குளம் தேவாலயத்தில் அந்த நிகழ்வை செய்ய ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றோம்.

இவ்வாறு தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்

02 ஆம் பக்கம் பார்க்க

அவசரகாலதடைச்சட்டம்என்றால்என்ன?

சி.திவியா

அரசாங்கத்தால் அவசர காலத் தடைச் சட்டம் நாடளாவிய ரீதியாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அவசர கால தடைச் சட்டம் என்றால் என்ன? என்பதை கட்டாயம் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

இல்லையென்றால் மிகப் பெரிய தண்டனைகளுக்கோ, துப்பாக்கிப் பிரயோகத்திற்கோ இலக்காக நேரிடும்.

★ இந்த செய்தி அனைவருக்குமான ஒரு எச்சரிக்கை

இந்த அதிகாரத்தின் கீழ் முப்படையினரும் 24 நேரமும் கடமையில் இருக்க வேண்டும்.

விடுமுறைகளை எடுக்க முடியாது

இந்த சட்டத்தின் கீழ் நபரொருவர் எந்த நேரத்திலும் காரணமின்றி கைது செய்யப்படலாம்.

அத்துடன் சந்தேகத்தின் பேரில் எவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முடியும்.

இரண்டு பேருக்கு அதிகமாக பொது இடங்களில் (தேசிய பாதுகாப்புக்கு பங்கம் இல்லாத அனுமதிக்கப்பட்ட நிகழ்வுகள் தவிர்ந்த ஏனைய இடங்களில்) கூடுதல், திட்டம் தீட்டுதல்,, அதிக ஒலி எழுப்புதல் உட்பட

ஆயுதங்களை உடமையில் (முகச் சவரம் செய்யும் அலகு, ஊசி என்பனவற்றையும்) வைத்திருத்தல் பாரிய குற்றமாறும்.

அத்துடன் தீவிரவாதத்திற்கு ஒத்து ழைத்தல், நிதிசேகரித்தல் உட்பட பல விடயங்கள் இதற்குள் அடங்கும்

சாதாரண சிவில் கடமைகளுக்கு கூட பொலிஸாரின் கைகளில் ஆயுதங்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.

அவசர கால தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் நபர் ஒருவர் விசாரணைகள் எதுவும் இன்றி எவ் வளவு காலத்திற்கேனும் தடுத்துவைக்க முடியும்.

கைதுக்கு முன்னோ கைதுக்கோ பின்னரோ விசாரணை என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

கைது செய்யப்படும் போது யாரா வது தப்பியோட முயன்றால் சுட்டுப்பி டிப்பதற்கும் அதிகாரம் உள்ளது.

அதேவேளை கைது செய்யப்படும் நபர் தேவையெற்படின் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரிப்பதற்கும் உரிமை உண்டு.

விசாரணைக்காக புலனாய்வுப் பிரிவினரின் கைகளுக்கும் ஒப்படைப்ப தற்கான சரத்துக்களும் உண்டு.

மேலும், அவசரகாலச்சட்டமானது, மக்களின் அல்லது வாகனங்களின் போக்குவரத்துக்களை தடை செய்யவும், பாதுகாப்புப் பிரதேசங்களை உருவாக்கி, அங்கு வெளியிலிருந்து செல்பவர்க ளைத் தடுக்கவும்

அனுமதி அளிக்கின்றது.

பாதுகாப்பு பிரிவினரின் கடமைக்குக் குந்தகம் விளைவிக்கும், குறிப்பிட்ட நபர்களை, குறிப்பிட்ட பகுதிக்கு வரு வதற்கும், அல்லது குறிப்பிட்ட பிரதே சத்தில் வசிப்பதற்கும், தடைசெய்யும் அதிகாரத்தை வழங்குகின்றது.

மக்கள் வாழும் பகுதிகளில், உட னாடியான பாதுகாப்புப் பிரதேசத்தை உருவாக்கி, அவர்களைப் பாதுகாக்கவும் காவற்துறையினர்க்கு அதிகாரம் அளிக் கின்றது.

யாரையும் அவர்களின் வீடுகளில் வைத்துக் கைது செய்வதற்கு அனுமதி வழங்க உள்துறை அமைச்சரிற்கு அதி காரம் வழங்குகின்றது.

நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிப்பவர்கள் எனச் சந்தேகப்படும் யாரையும் கைது செய்து விசாரணை செய்ய முடியும்.

விழா மண்டபங்களையோ அல்லது திரையங்குகளையோ அல்லது கூட்டம் நடக்கும் இடங்களையோ, உடனடியாக மூடுவற்கும் அங்குள்ளவர்களை வெளி யேற்றுவதற்கும் அனுமதி அளிக்கின் றது.

ஒரு கூட்டமோ, அல்லது சந்திப்பு களோ, அமைதிக்குப் பங்கம் விளை விக்கும் எனச் சந்தேகிக்கப்பட்டால், அதனைத் தடை செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தனியாரிடம் இருக்கும் ஆயுதங்க ளை, அனுமதி பெற்றிருந்தாலும் கூட, பறிமுதல் செய்யமுடியும் என்பது குறிப் பிடத்தக்கது.

திருகோணமலையில் சோதனை நடவடிக்கை தீவிரம்

சேனையூர் நிருபர்

நாட்டில் இடம் பெற்ற தொடர்ச்சி யான குண்டு வெடிப்புச் சம்பவங்களை யடுத்து நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை தீவிர சோதனை நடவடிக் கைகளும் பொலிஸாரால் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

அந்தவகையில் சனிக்கிழமை அதிகாலை தொடக்கம் காலை 9.00 மணிவரை திருகோணமலையில் முஸ் லிம் மக்கள் வாழும் சில பகுதிகளும், நகரின் சில பகுதியில் வீதித்தடைக ளும் போடப்பட்டுச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

உருவாகியது...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இது சென்னைக்கு தென் கிழக்கே 1210 கிலோ மீற்றர் தொலைவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலை கொண்டுள்ளது. மணிக்கு 20 கிலோ மீற் றர் வேகத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நகர்ந்து வருகிறது. இது அடுத்த 12 மணி நேரத்தில் ஃபானி புய லாக வலுப்பெறுகிறது.

புயல் 30 ஆம் திகதி மாலை வட தமிழகம் - தெற்கு ஆந்திரா கடற்கரை பகுதியை நெருங்கும். 30 ஆம் திகதி புய லின் போது 120 முதல் 145 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீச வாய்ப்பு உள்ளது என்று இந்திய வானிலை அவதான நிலை யம் தெரிவித்துள்ளது,

முஸ்லிம்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

வீட்டுத்திட்டத்தில் அமைந்துள்ள பாடசாலை வளாகத்தில் ஒன்றுகூடியுள்ள முஸ்லிம் பொதுமக்களை உள்ளூராட்சி மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் நேற்று (27) நேரடி யாக சென்று பார்வையிட்டார்.

இங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும் போதே அமைச்சர் இதனை தெரி வித்தார். தொடர்து கருத்து தெரிவிக்கும் போது,

தற்போது பிரதேசம் எங்கும் முஸ் லிம் மக்கள் அச்சமடைந்து வீடுகளில் தங்கியுள்ளனர். இன்னிலையில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்ப டுத்த வேண்டும். முஸ்லிம் மக்கள் ஒரு போதும் தீவிரவாதம் அல்லது பயங்கர வாதத்தை அனுமதிப்பது கிடையாது. இதனால் தான் இங்கு சந்தேகத்திற்கு இடமாக தங்கியிருந்தவர்களை பொது மக்கள் பாதுகாப்பு தரப்பினருக்கு தெரி யப்படுத்தியுள்ளனர். குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் வெளிஊர் களில் இருந்து இங்கு வந்து வாடகைக்கு குடியிருந்துள்ளனர்.

தற்போது மக்கள் மிகுந்த அச்சத்தில் உள்ளனர். வீடுகளை சோதனை செய்வதற் காக இந்த வீட்டுத்திட்டத்தில் வசிப்பவர் கள்; பாடசாலைக்கு வரவழைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. வீடுகளை சேதனை செய் யும் நடவடிக்கைகள் முடிவடைந்ததும் வீடுகளுக்கு திருப்பியனுப்பப் படுவார் கள். பொதுமக்களின் பாதுகாப்பை உறு திப்படுத்துவது தொடர்பில் பாதுகாப்பு தரப்பினரிடமும் அமைச்சர் தனது வேண் டுகோளை முன்வைத்தார்.

இதேவேளை பாதிக்கப்பட்ட பொதுமக்களின் தேவைகளை கேட்ட றிவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் எம்.எம்.மன்சூர், முன்னாள் மாகாணச பை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல், கல் முனை மாநகர சபை முதல்வர் சட்டத்த ரணி ஏ.எம்.றகீப் மற்றும் சாய்ந்தமருது பள்ளிவாசல் சம்மேளனத்தின் தலைவர் அஸ்செய்க் ஹனிபா மதனி உட்பட பலர் வருகை தந்திருந்தனர்.

இஸ்லாமிய...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அடிப்படையற்றது என்று கூறி யுள்ளார்.

எவ்வாறாயினும் தேர்தல் பிரச்சா ரத்தை ஆரம்பிப்பதற்கு சிறிய தடையெ என்றும், அது அமெரிக்க அதிகாரிகள் குடியுரிமையை நீக்குவதே என்றும், அது வெகு விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தான் வெற்றிபெற்றால் இஸ்லாமிய அடிப்படைவாத அச்சுறுத்தலை இல்லா மல் செய்து பாதுகாப்பு கட்டமைப்பை மீளக்கட்டியமைப்பதே தனது முதன்மை நோக்கமாகும் என்று அவர் கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்க வில்லை என்றும் இன நல்லிணக்கம், மனித உரிமைகள் பிரச்சினைகள் மற்றும் தனிப்பட்ட சுதந்திரங்களைப் பற்றியே பேசியதாகவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

எழுநூறு வெளிநாட்டுப் பிரஜைகளை வவுனியாவில் தங்க வைப்பதற்கான செயற்பாட்டை மீள் பரிசீலனை செய்யவேண்டும்

வவுனியா க.மதி

எழுநூறு வெளிநாட்டுப் பிரஜைகளை வவுனியாவில் தங்க வைப்பதற்கான செயற்பாட்டை மீள் பரிசீலனை செய் யவேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித் தார்.

இது தொடர்பாக அவரிடம் இன்று ஊடகவியலாளர்கள் கேட்டபோது மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமைஉயிர்த்த ஞாயிறு தினத்தன்று கிறிஸ்தவ தேவால யங்களிலும் பகுதிகளில் நடத்தப்பட்ட தற்கொலை பயங்கரவாதத் தாக்குதலை தொடர்ந்து கொழும்பில் இராணுவமும் காவல்துறையும் பல தேடுதல் வேட் டைகளில் ஈடுபட்டு பலர் இன்றுவரை கைது செய்யப்பட்டுக்கொண்டும் இருக் கின்றனர் அந்த வகையில் கொழும்பில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகளை அவர்களின் பாதுகாப்பு கருதி வவுனியா வில் உள்ள தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தற்போது இருக்கும் பூந்தோட்டம் கூட்டுறவு கட்டிடம்இசெட் டிகுளம் மெனிக்பாம் மற்றும் பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் அமைந்துள்ள அரச கட்டிடம் போன்ற பகுதிகளில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக அறி கின்றேன்.

வெளிநாட்டு பிரஜைகள் அகதிகளாக இருந்தால் அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் இவர்களை அணுக வேண்டும் என்பது மறுப்பதற்கில்லை

ஆனால் தற்போது நாட்டில் நிலவியுள்ள அசாதாரண சூழ்நிலையின் போது இங்கே இவர்கள தங்க வைப்பது என்பது இப்பிரதேச மக்கள் மத்தி யில் தேவையில்லாத குழப்பங்களையும் அச்ச உணர்வை ஏற்படுத்துவதாகவே அமையும் நீண்ட கால யுத்தத்திற்கு பின்னர் மீள்குடியேற்றம் காணி விடு விப்பு அரசியல் கைதிகள் விவகாரம் காணாமல் ஆக்கப்பட்டோர் போன்ற பல பிரச்சினைகளுக்கு வடக்கு கிழக்கு மக்கள் முகம் கொடுத்து வருகின்றார்கள் நிலையில் வெளிநாட்டுப் பிரஜைகளை இங்கு தங்க வைப்பது என்பது பொருத்த மற்ற செயற்பாடு ஆகும் எனவே யுத்தம் நடைபெற்ற வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இவர்களை தங்க வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.இந்த விடயம் ஜனாதிபதி, பிரதமமந்திரி ஆகியோரின் கவனத்திற் கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது என தெரிவித்தார்.

மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் சர்வ மத ஒன்று கூடல் கிளிநாச்சியில் இடம்பெற்றது

நாட்டில் உள்ள அசாதாரண சூழ லில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் சர்வ மத ஒன்று கூடல் இன்று கிளிநாச் சியில் இடம்பெற்றது. குறித்த ஒன்றுகூ டல் இன்று காலை 9.30 மணியளவில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர். அ.வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது. கரைச்சி பிரதேச சபை யின் ஏற்பாட்டில் குறித்த நல்லிணக்க ஒன்று கூடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது. குறித்த ஒன்று கூடலில் சர்வ மத தலைவர்கள் பலரும் கலந்து கொண்டி ருந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் கலந்து கொண்டிருந்தார்.

ஒன்று கூடல் நிகழ்வில் கருத்து தெரிவித்த கிளிநொச்சி புனித திரேச ாள் தேவாலய பங்கு தந்தை அருட்பணி ஏ.ஜே.ஜேசுதாஸ் அடிகளார் கருத்து தெரிவிக்கையில்,

நேற்றய பத்திரிகையில் பொலிசா ரால் தேடப்பட்டுவரும் சந்தேகநபர் பட்டியலின் இறுதியில் உள்ள புகைப் படத்தில் உள்ளவர் எமது தேவாலயத் திற்கு வருகை தந்திருந்தார். அதிகாலை வழமைபோன்று தேவாலயத்தின் கதவை திறந்து உள் சென்றபோது சி றிது நேரத்தில் குறித்த நபர் தேவால யத்தின் மத்தியில் நின்றிருந்தார். நான் அப்போது பாரிய அளவில் சந்தேகம் கொண்டிருக்கவில்லை. இன்றிருந்த சூழல் இருந்திருந்தால் நான் சந்தேகப் பட்டிருப்புன். நள்ளிரவு ஆராதனை முடித்து மக்கள் சென்றுவிட்டனர். குறித் நபர் நான் தேவாலயத்தின் உள் பிரவேசித்தபோது அங்கு மத்தியில் வந்திருந்தார். முழு பாவாடை போன்று அணிந்திருந்ததாகவும் அவர் தெரிவித் தார். நாட்டில் தற்போது உள்ள சூழலில் நாம் அமைதியாக செயற்பட வேண்டும் எனவும், ஏனைய மதங்களை மதித்து நடந்து கொள்ளும் வகையில் செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட் டார்.

தந்தை...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கண்டறியும் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தமிழ்த்தந்திக்குத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமக்கான நீதிக்கான போராட்டம் தொடர்ந்து இடம்பெறும். தற்பொழுது சிறிலங்காவில் நடைபெற்ற பயங்கரவா தத் தாக்குதல் சர்வதேச பயங்கரவாதம் உள்ளூர் பயங்கரவாதிகளின் ஒத்துழைப் போடு இடம்பெற்ற செயற்பாடுகளுக்கு முகம்கொடுப்பதற்கு சர்வதேச புலனாய்வு அமைப்புகள் சிறிலங்காவுடன் இணைந்து செயற்படுவதாக நாங்கள் அறிகின்றோம்.

அந்த ரீதியில் எமது கோரிக்கையும் அப்படித்தான் இருக்கின்றது. நீண்டகாலம் தமிழர்கள் இந்த யுத்தத்தில் பட்ட காயங் களிலிருந்து நீங்கி, அவர்கள் தொடர்ந்து ஜனநாயக ரீதியில் அமைதியாக அவர்களு டைய நீதிக்கான போராட்டமாக செய்து வருகின்றோம். இதை அனைவரும் நன்க றிவார்கள்.

அந்த சூழ்நிலையில் தமிழர்கள் நீ ண்டகாலம் துன்பத்திலிருந்து, பொருளா தார ரீதியாகவும் நசுக்கப்பட்டு, எந்தவித அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்துவரும் மக்கள் அதற்கு தீர்வு கிடைக்கும் சூழல் ஐ.நா.வில் ஏற்பட்டிருந்தும், அதற்கான முன்முயற்சிகளை எடுக்காமல், தனிப் பட்ட சுகபோகங்களுக்கும், தமது சொந்த விருப்பு, வெறுப்புகளுக்குமாக பயன்ப டுத்திய தமிழ் தேசிய கூட்டமைப்பினரே இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

இவர்கள்தான் கடந்த காலங்களில் தமிழர்களுக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை தவறாகப் பயன்படுத்தி, தமிழர்களுக்குக் கிடைக்கவிருந்த கிழக்கு மாகாண முதல மைச்சர் பதவியையும் விட்டுக் கொடுத் து, பல ஒத்துழைப்பு வழங்கக்கூடிய செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தார்கள். அதாவது சர்வதேச விசாரணையை உள் ளூர் விசாரணையாக்கி, வடக்கு கிழக்கு இணைப்பில்லை, பௌத்தத்திற்கு முன்னு ரிமை, அரசியல்சாசனம் வருகிறது என்று தமிழர்களை அடிமுட்டாளாக்கி இன்று அவர்களை அழிவின் அபாய விளிம்பி லும், இலங்கை ஒரு அபாயகரமான சூழ் நிலைக்கு வருவதற்கும் இவர்கள் முக்கிய காரணம்.

ஏனெனில் இவர்களின் அரசி யல் முதிர்ச்சியின்மையும், தூரநோக் கின்மையும் அதாவது உலகெங்கும் வாழும் தமிழர்களின் ஆலோசனைகளைப் பெற்று சரியான முறையிலே அதைக் கொண்டு செல்லாமையும் அண்மைக் காலங்களில் வந்த வெளிநாட்டுத் தூதுவர் கள், தொடர்ந்து அவர்களிடமிருந்து இதற் கான நீதியைப் பெறுவதற்கு விட்டுவிட்டு, இதை குழப்ப வேண்டாம், அரசியல்சா சனம் வரப்போகின்றது, தீர்வு வரப்போ கின்றது இந்த ஆட்சியைக் குழப்ப வேண் டாம் என்று எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தர் இருந்து கொண்டு இந்த அபாய கரமான சூழ்நிலைக்கு வித்திட்டவர்களாக வும் இவர்களே இருக்கின்றார்கள்.

தங்களுக்கு வாக்களித்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் தங்களின் சுகபோக வாழ்க்கையை குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் தமிழ் தேசிய கூட் டமைப்பு உறுப்பினர்கள் தங்கள் பதவிக ளைத் துறந்து அரசியல் அரங்கிலிருந்து ஒதுங்க வேண்டுமென்று தெருவிலிருந்து வலியை உணர்ந்து போராடும் தாய்மார் மற்றும் தமிழ் மக்கள் எல்லோருடைய உணர்வாகவும் இதுவாகத்தான் இருக்கின் றது.

அண்மையில் இவர்கள் தந்தை செல் வாவின் நினைவு தினத்திற்கு அஞ்சலி செய்யச் சென்றிருக்கிறார்கள். அதற்கு இவர்களுக்கு என்ன தகுதி உண்டு? தந்தை செல்வாவிற்கு அஞ்சலி செய்வதற்கு உரிய தகுதி தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு அல் லது தமிழரசுக் கட்சிக்கோ அறவே இல் லை. ஏனென்றால் அவர் சமஷ்டி கேட் டுப் போராடியவர். இறுதியில் சிங்களத் தலைமைகளிடமிருந்து நம்பிக்கையிழந்து தனிநாடுதான் தமிழர்களுக்கு தீர்வு என்று கோரிக்கையை முன்வைத்து மடிந்துபோ னவர்தான் தந்தை செல்வா. அப்படி தீர்க் கதரிசனமாக கருத்துக் கூறியவரின் கருத் தையே எதிர்மறையாக செயற்படுத்தும் கூட்டமைப்பினர், அவரின் கட்சிக் கொள் கையிலிருந் வழி தவறிப் போனவர்கள் இந்த அரசியல் அரங்கிலிருந்து அகற்றப் பட வேண்டும் என்று அவர் மேலும் கூறி னார்.

அட்டாளை...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

உள்ள வீடொன்றில் மறைந்திருப்பதாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, நேற்று (26) குறித்த வீடு பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டது.

அட்டாளைச்சேனை நான்காம் பிரி வில் உள்ள ஜலால்தீன் வீதியில் அமைந் துள்ள குறித்த வீட்டினை அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜித் பண்டாரவின் தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் மற்றும், பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரும் இணைந்து குறித்த வீட்டை சோதனைக்கு உட்படுத்தினர்.

கடந்த 19 ஆம் திகதி குறித்த வீட்டை வாடகைக்குப் பெற்றுக் கொண்டு குடியி ருந்த சிலர் குண்டுத் தாக்குதலுடன் தொடர் புபட்டிருந்ததாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து குறித்த வீடு நேற்று முன்தினம் மாலை முதல் சுற்றிவளைக்கப்பட்டு தேடு தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட் டன.

வாடகைக்கு பெறப்பட்ட இவ்வீட்டில் ஆறு பேர் அடங்கிய குடும்பமொன்று தங் கியிருந்ததாகவும் அவர்களுள் இரண்டு ஆண்களும், மூன்று பெண்களும், சிறுபிள் ளையொன்றும் அடங்குவதாக தெரிவிக் கப்படுகின்றது.

இவர்கள் (25) அதிகாலை வேளை யில் வீட்டிலிருந்து வெளியேறியதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வீட்டை சுற்றி வளைத்து தேடு தல் மேற்கொண்ட போது கணினி ஹாட் டிஸ்க், தகவல் சேகரிப்பு பென் டிரைவர் ஒன்றும் சில சந்தேகத்துக்கிடமான ஆவ ணங்களும், பொருள்கள் சிலவும் கைப்பற் றப்பட்டன.

குறிப்பிட்ட நான்கு நாள்களுக்குள் தங்கியிருந்த இவர்கள் புதிய பல வீட்டு உபகரணங்கள், புதிய குளிர்சாதனப் பெட்டி போன்ற ஆடம்பரப் பொருள்கள் பலவற்றை கொள்வனவு செய்து பாவித் துள்ளனர். இவர்கள் போக்குவரத்துக்காக பயன்படுத்திய வேன் வண்டி தொடர்பா கவும் பொலிஸார் விரிவான விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த இச்சம்பவம் தொடர்பில் அக் கரைப்பற்று பொலிஸாரும் பாதுகாப்புத் தரப்பினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சாய்ந்த...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

சந்தேகத்திற்கு இடமான நபர்களின் நடாட்டத்தை அறிந்த பொதுமக்கள் தகவலை பொலிஸாருக்கு தெரிப்படுத் தியுள்ளனர். இதனை அடுத்து அங்கு பாதுகாப்பு தரப்பினர் சோதனை நடவ டிக்கையை துரிதப்படுத்தியுள்ளனர் இந்த சந்தர்பத்தில் குறித்த வீட்டில் 4 குண்டுகள் வெடித்துள்ளன.

இதனையடுத்து பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்குமிடையில் சுமார் இரண்டரை மணித்தியாலயங்கள் துப்பாக்கி பிரயோகம் நடைபெற்றுள்ளன.

நேற்று (27.04.2019) காலை சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு கல்முனை நீத வான் நீதிமன்ற நீதிபதி ஐ.என்.றிஸ்வான் நேரடியாக சென்று பார்வையிட்டார் இதன் போது பாதிக்கப்பட்ட பொதுமக்க ளின் கருத்துக்களையும் நீதவான் கேட்ட றிந்து கொண்டார்.

இந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் குறித்த வீட்டில் ஆண்கள், பெண்கள், சி றுவர்கள் என 15 பேருடைய சடலங்கள் கிடப்பதாகவும் இதேவேளை துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த ஒருவரது சடலம் அம்பாறை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகி றது.

காயமுற்ற இருவர் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எல். எப்.றஹுமான் தெரிவித்தார்

இதேவேளை குறித்த பகுதியில் சாய் தமருது தொடக்கம் காரைதீவு வரைக்கு மான பிரதான வீதி தற்காலிகமாக மூடப் பட்டு விசேட தேடுதல் நடவடிக்கைகளை பதுகாப்பு தரப்பினர் முன்னடுத்துள்ளனர். வீதிகள் வெறிச் சோடி காணப்படுவது டன் மக்கள் வீடுகளுக்குள் இருக்குமாறு பள்ளிவாசல்களில் அறிவித்தல் விடப்பட் டுள்ளன.

தற்போது பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால் அன்றாட நடவடிக்கைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகிறது.

தமிழர்க...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

நூறு கிலோ சி-4 வெடிமருந்து கைப் பற்றப்பட்டும் குறிப்பிட்ட சில நாட்களில் கைப்பற்றப்பட்டவர்கள் விடுதலை செய் யப்பட்டதும் அரசியல் ரீதியான ஒரு அழுத் தம் என்பதை அமைச்சர் கபீர் ஹாசிம் கூட பாராளுமன்றத்தில் வெளிப்படையாக செ ால்லியிருக்கிறார்.

இது வெளிப்படையாகத் தெரிந்த விடயம். இதேமாதிரி ஒவ்வொரு விட யங்களிலும் அந்த அமைப்புகளினுடைய வளர்ச்சிக்கு அரசியல் ரீதியான பக்கபலம் இருந்திருக்கின்றது. இதற்கு உண்மையில் அரசாங்கம்தான் பொறுப்புக்கூற வேண் டும். ஏனென்றால் ஒவ்வொரு அரசியல் வாதிகளினுடைய பங்களிப்பு தங்களின் அரசாங்கத்திற்கு இல்லாமல் போகுமென்ற காரணத்தினால், குறிப்பிட்ட அரசியல்வா திகளை அரசாங்கம் அவர் செய்யும் செயல் களை பாராமுகமாக இருந்து வந்திருக்கி றது.

அந்த வகையில் தான் இந்த மனித வெடிகுண்டு வெடிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது வெடிப்புச் சம்பவத்திற்கு பிற்பாடும், நடைபெறும் விசாரணையில் அரசியல்ரீதியான தலைவீடுகள் இருக்கக் கூடாது. அரசியல் ரீதியான தலைவீடுகள் இருந்தால் உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்க முடியாது. அரசியல் ரீதியான தலைவீடு இல்லாமல், விசாரிப்பவருக்கு முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டு அவர் கள் யாராக இருந்தாலும் விசாரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு சரியான தண் டனையை வழங்கினால்தான் நாட்டில் மக் கள் பயமில்லாமல், தேவாலயங்களுக்கோ, பாடசாலைகளுக்கோ செல்லக்கூடிய சூழல் உருவாகும்.

இன்றைக்கு குறிப்பாக பாடசாலை களை நடத்தமுடியாமல், தேவாலயங் களுக்கு செல்ல முடியாமல் மக்கள் அச் சத்துடன் தங்கள், தங்கள் வீடுகளில் பதுங்கியிருக்கிறார்கள். மிக அச்சத்துடன் மக்கள் தங்கள் வீட்டை விட்டு மிக முக்கிய மான விடயங்களுக்குத்தான் வெளிக்கிளம் புகிறார்கள். இதற்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும்.

அதேநேரம் இந்த குண்டுத்தாக்குத லுக்கு எந்த வகையில் உதவி புரிந்திருந் தாலும் அவர்கள் யாரென்று பாராமல் அதற்குரிய தண்டனைகளை வழங்க வேண்டுமென்பதுதான் என் கருத்து.

மேலும், தமிழர்களை முதலில் சிங்கள மக்கள் தாக்கினார்கள். இப்பொழுது முஸ் லிம் தீவிரவாத அமைப்புகள் அடிக்கின்றன. இன்றைக்கு இலங்கையில் தமிழர்களுக்கு சரியான ஒரு தலைமைத்துவம் இல்லாத காரணத்தினால்தான், சரியான ஒரு ஆளு மையான, மக்களை வழிநடத்தக்கூடிய, ஒரு தலைமகன் இல்லாத காரணத்தினால் தான் இன்றைக்கு எல்லாரும் எங்களை போட்டு தாக்குகிறார்கள்.

இன்றைக்கு தமிழ் சமூகம் பலவீனப் பட்ட ஒரு சமூகமாக இருக்கின்ற காரணத்தி னால்தான், முஸ்லிம் தீவிரவாதிகள் கத்தோ லிக்க தேவாலயங்களை, குறிப்பாக தமிழ் மக்களை இலக்கு வைத்து அழித்திருக்கி றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மலையகம் முழுவதும் அஞ்சலி நிகழ்வுக் இடம் பெற்றது இதில் அட்டன் எபோட்ஸ்லி தோட்டத்தின் மொன்டிபயர் பிரிவில் அமைந்துள்ள எசம்பிளி ஒப் கோட் ஆலயத்தின் முன்றலில் தோட்ட பொதுமக்களால் அஞ்சலி நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தோட்ட மக்கள் அனைவரும் தொழிலுக்கு செல்லாது வீட்டில் இருந்து தமது அனுதாபங்களை தெரிவித்ததோடு ஆலய முன்றலில் கூடி மெழுதிரிகளை ஏற்றி உயிர்நீத்தவர்களின் ஆத்ம சாந்திகாகாவும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என பிராத்தனைகளில் ஈடுப்பட்டனர். அதேநேரம் அட்டன் செனன் தோட்ட முகாமை மற்றும் பொது மக்கள் இனைந்து அஞ்சலி நிகழ்வு ஒன்றை அட்டன் கொழும்பு பிரான வீதியில் ஏற்பாடு செய்திருந்தனர். தொழிலுக்க செல்லாது தோட்டத்தின் பொது இடத்தில் கூடி மெழுகுதிரிகளை ஏற்றி மலர்களை வைத்து உயிர்நீத்தவர்களின் ஆத்ம சாந்திகாகாவும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என பிராத்தனைகளில் ஈடுப்பட்டனர்.

படம்: ஆர்.ரஞ்சன்

இரத்தினபுரி மாவட்டத்தில் தனியார் வகுப்புக்கள் நடாத்த தடை!

இரத்தினபுரி நிருபர்

தற்போது நாட்டில் ஏற்பட்டுவரும் சூழ்நிலையை கருத்திற் கொண்டு இரத்தினபுரி மாவட்டத்தில் தனியார் வகுப்புக்கள் நடாத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று முன்தினம்(25) இரத்தினபுரி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக தனியார் வகுப்புக்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்தால் தனியார் வகுப்புக்களை தடை செய்வ தற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை சப்ரகமுவ மாகாண சபை மற்றும் மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்ட செயலகங்கள், சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் உட்பட மாகாணத்தில் உள்ள ஏனைய அரச காரியாலயங்களுக்கு பொலிசார் மற்றும் இராணுவத்தினரை பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இரத்தினபுரி மாவட்டத்தில் பாடசாலைகள் மற்றும் கிராமபுற தோட்ட புறங்களுக்கு பொலிசார் மற்றும் இராணுவத்தினருடன் இணைந்து பாதுகாப்பு குழு அமைப்பது குறித்தும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சப்ரகமுவ மாகாணத்தில் இருபத் தொரு இலட்சம் பேர் வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க, இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.ஏ.விஜேதுங்க, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜானக வக்கும்புர, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலனி லொக்கு போதாகம மற்றும் சப்ரகமுவ மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர், குருவிட்ட இராணுவ முகாமின் உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் உட்பட இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள சகல அரச அலுவலகங்கள், திணைக்களங்கள் என்பவற்றின் உயர்அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பூங்கா மற்றும் ஹெலபோஜன உணவகம் திறந்து வைக்கப்பட்டது

மஸ்கெலியா நிருபர்

மினிபே பிரதேச சபைக்குட்பட்ட அசலக பிரதேசத்தில் மினிபே பிரதேச சபை தவிசாளரின் வேண்டுகோளுக்கு இணங்க மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சிறுவர் பூங்கா மற்றும் போசாக்கு (ஹெலபோஜன) உணவகமும் இந்நாடிற்காக உயிர் தியாகம் செய்த இராணுவ வீரர் காமினி குலரத்ன வின் பெயரில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவையும் உணவகத்தையும் அந்த இராணுவ வீரரின் தாயார் திறந்து வைத்ததுடன் இந்நிகழ்விற்கு மினிபே பிரதேச சபை தவிசாளர், மத்திய மாகாண சபை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கிண்ணியாவில் பலத்த பாதுகாப்புடன் சோதனை நடவடிக்கைகள்

ஹஸ்பர் ஏ ஹலீம்

கிண்ணியாவில் பலத்த பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் நேற்றைய தினம் (27) சோதனை நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன.

தேசிய அடையாள அட்டை பரிசோதிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

பிரதான வீதிகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வாகனங்கள் உள்ளிட்ட பஸ் போக்குவரத்து பயணிகளை இறக்கி பரிசோதனை நடவடிக்கைகள் தீவிர மாக இடம் பெற்று வருகின்றன.

பொது மக்களின் நடமாட்டம் கடைகள் திறக்கப்பட்டு வியாபார நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன .

கிண்ணியா தளவைத்தியசாலையில் நுழைவாயிலிலும் தேசிய அடையாள அட்டை பரிசோதிக்கப் படுவதுடன் ஏனைய சோதனை நட வடிக்கைகளும் இராணுவத்தினரால் நடைபெற்று வருகின்றனர்கள்.

பொது மக்கள் , வாகன சாரதிகள் பாதுகாப்பு நலன் கருதி படையினர்க ளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின் றமையும் குறிப்பிடத்தக்கது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களில் உயிர்நீத்த உறவுகளின் ஆன்மா சாந்தியடையவும் ,வைத்தியசாலைகளில் இருப் பவர்கள் குணம் பெற வேண்டியும் திருகோணமலை பாலையூற்று தூய லூர்து அன்னைத் திருத்தல இறைமக்களின் பிரார்த்தனையும் மற்றும் அஞ்சலி நிகழ்வும் 26-04-2019 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு உணர்வுபூர்வமாக இடம் பெற்றது.

படம்: சேனையூர் நிருபர்

மோட்டார் சைக்கிளினால் பதற்றம்

வவுனியா நிருபர்

வவுனியா குருமன்காடு சந்தியில் தனிமையில் நின்ற மோட்டார் சைக்கிலினால் அவ்விடத்தில் சற்று பதட்டமான நிலை காணப்பட்டது.

குருமன்காடு சந்தியில் அமைந்துள்ள அச்சகம் ஒன்றிக்கு முன்பாக மோட்டார் சைக்கில் ஒன்று தனிமையில் நிற்பதாக வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னேடுத்தனர்.

இதன் போது குறித்த அச்சகத்திற்கு அருகேயுள்ள வர்த்தக நிலையத்தின் சி.சி.ரி.வி காணோளியினையும் பொலிஸார் சோதனையிட்டனர். அதன் பின்னர் குறித்த அச்சக நிலையத்தின் உரிமையாளருக்கு பொலிஸார் தொலைபேசி மூலம் தொடர்பினை ஏற்படுத்தி சம்பவ இடத்திற்கு வரவழைத்தனர்.

குறித்த மோட்டார் சைக்கில் தனது நண்பனது அவர் வேறு இடத்திற்கு செல்வதற்காக இவ்விடத்தில் தரித்து விட்டு சென்றதாக குறித்த அச்சக நிலையத்தின் உரிமையாளர் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்தார். இதனையடுத்து அவரிடம் வாக்குமூலத்தினை பெற்றுக் கொண்ட பொலிஸார் மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலிலேயே விட்டு சென்றனர்.

மோட்டார் சைக்கில் மற்றும் வாகனங்களை நீண்ட நேரம் வீதியில் தரித்து விட்டு செல்லும் சமயத்தில் பெயர், தொலைபேசி இலக்கங்களை ஒட்டி விட்டு செல்லுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அப்பாவி மக்ககளின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதத் தாக்குலாகும்

வடமாகாண முஸ்லிம் சிவில் சமூகம்

வவுனியா நிருபர்

அப்பாவி மக்ககளின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதத் தாக்குலாகும் என வடமாகாண முஸ்லிம் சிவில் சமூகம் அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டி கண்டித்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 21.04.2019 ம் திகதி உலக கத்தோலிக்கர்களும் கிறிஸ்த்தவர்களும் தமது முக்கியமான உயிர்த்த ஞாயிறு திருநாளைக் கொண்டாடிய வேளை இலங்கையின் மட்டக்களப்பு சியோன் தேவாலயம் , கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், கட்டுவப்பிட்டி செபஸ்தியார் ஆலயம் என்பவற்றிலும் பல நட்சத்திர கோட்டல்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுதாக்குதல்களை வடமாகாண முஸ்லிம் சிவில் சமூகமானது வன்மையாக தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இத்தாக்குதல்களால் 45 சிறுவர்கள் உட்பட 325ற்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டும் 500 ற்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் காயமடைந்தும் உள்ளமையானது. இலங்கை நாட்டில் நடைபெற்ற மிகப் பெரிய மிலேச்சத்தனமானதும் மிகக்கொடூரமானதுமான பயங்கரவாதச் செயலாக வடமாகாண முஸ்லிம் சிவில் சமூகம் நோக்குகின்றது. இச்சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு மக்களுக்காக ஆழ்ந்த அனுதாபத்ததையும் துக்கத்தையும் வெளிப்படுத்துகின்ற அதேவேளை பாதிக்கப் பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களினதும் உறவினர்களினதும் துயரங்களிலும் துன்பங்களிலும் வடமாகாண முஸ்லிம்கள் பங்கேற்று அவர்களது ஆழ்ந்த கவலையினை பகிர்ந்து கொள்கின்றனர்.

சகல மதங்களும் வன்முறைகளை தவிர்த்து வாழ்வதையே முக்கியப்படுத்துகின்றது குறிப்பாக இஸ்லாத்தில் வன் முறைகளுக்கும் பயங்கர வாதத்திற்கும் இடமே இல்லை. ஏன்ற நிலைப்பாடு சகலருக்கும் புரிய வேண்டும்.

ஆகவே இந்த மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத செயலை மேற்கொண்டு இலங்கைத் திரு நாட்டில் ஒற்றுமையைச் சீர்குலைக்க எந்த மிருகத்தகமானவர்கள் முயற்சித்தார்களோ அவர்கள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் இவ் வாறு வழங்கப்படுகின்ற தண்டனையானது இது போன்ற ஈனச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு ஒருபாடமாக அமைய வேண்டும் எனவும் வடமாகாண முஸ்லிம் சிவில் சமூகம் நம்புகின்றது.

மனிதாபிமானமற்ற தாக்குதல்களை மேற்கொண்ட ஒரு சில வங்கரோத்துக் காரர்களின் நடவடிக்கையால் இலங்கை நாட்டில் வேறு எந்த அப்பாவி மக்களும் பாதிக்கப் படக்கூடாது என்பதுடன் இம்மிலேச்சசெயலை பாவித்து சமுக கங்களிடையே பிரிவு, சந்தேகக்கங்கள் மற்றும் குரோத மனப்பாங்கு என்பவை ஏற்பட்டு விடாதிருக்க தேவையான முயற் சிகளையும் நடவடிக்கைகளையும் சகல சமூகத்தவர்களும் செய்யவேண்டும் என வும் வடமாகாண சிவில சமூகம் எதிர் பார்ப்பதோடு தனது பங்களிப்புகளையும் செய்ய முன்வந்துள்ளது.

இவ்வாறான பாதிப்புக்களில் இருந்து அப்பாவி மக்களைப் பாதுகாக்க இலங்கை அரசும், பாதுகாப்புத் துறையினரும்,சமயக் கட்டமைப்புக்களும்,சிவில் சமூக அமைப் புக்களும், சர்வதேச சமூகமும், ஐக்கிய நாடுகள் அமைப்புக்களும் முயற்சிக்க வேண்டும் எனவும் சம்மந்தப்பட்ட சகல ரையும் தயவுடனும் அன்புடனும் கேட் டுக் கொள்கின்றோம்.

வவுனியா தெற்கு பிரதேச சபையில் அஞ்சலி நிகழ்வு!

வவுனியா நிருபர்

இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பில் கொல்லப் பட்டவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு வவுனியா தெற்கு பிரதேச சபை முன்றலில் (25.04) பிரதேச சபையின் தவிசாளர் து.நடராஜசிங்கம் தலமையில் நடைபெற்றது.

இவ் அஞ்சலி நிகழ்வில் முதலாவது சுடரினை தவிசாளர் ஏற்றி

வைக்க அதனைத் தொடர்ந்து பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினார்கள். அதன் பின்னர் தவிசாளரின் அஞ்சலி உரையும் இடம்பெற்றது.

இலங்கையில் இடம்பெற்ற குண்டுகள் வெடிப்பு சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை (26-04-2019) அமெரிக்காவின் நோர்த் கரோலினா மாநிலத்தின் சார்லெட் நகரத்தில் உள்ள மார்சல் பூங்காவில் இடம்பெற்றபோது இங்குள்ள இலங்கை,இந்திய,மற்றும் அமெரிக்க மக்கள் மெழுகுதிரிகள் எரித்து மௌன அஞ்சலி செலுத்தினர்.

படம்: ம.ரூபன், அமெரிக்கா

கள்ளக்காதலுக்கு மறுத்த பெண்.. 3 குழந்தைகளின் தாய் என்றும் பாராமல் மனிதவெடிகுண்டாக மாறிய வியாபாரி

கள்ளக்காதலுக்கு பெண் ஒப்புக் கொள்ளாத தால் மனித வெடிகுண்டாக மாறி அந்த பெண் ணையும் கொன்று தானும் உடல் சிதறி இறந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் சுல்தான் பத்தேரி அருகே உள்ளது நாய்கட்டி. இப்பகுதி யைச் சேர்ந்தவர் நாசர். இவருடைய மனைவி அமலா (37). இவர்களுக்கு 3 பெண் குழந்தைகள் உள்ளனர்.

நாசர் அதே பகுதியில் கணினி மையத்தை வைத்து நடத்தி வருகிறார். இவரது கடைக்கு அருகில் பென்னி (47) பர்னிச்சர் கடை நடத்தி வந்தார். இந்நிலையில் நாசர் வெள்ளிக்கிழமை என்பதால் மதியம் அங்குள்ள பள்ளிவாசலுக்கு சென்றுவிட்டார்.

அப்போது அவரது வீட்டில் பயங்கர சப்தத் துடன் குண்டுவெடித்தது. உடனே அக்கம்பக் கத்தினர் அங்கு சென்று பார்த்தனர். அப்போது பென்னியும், அமலாவும் உடல் சிதறி இறந்து கிடந்தனர். இதுகுறித்து சுல்தான்பத்தேரி காவல் நிலையத்துக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

சிதறி கிடந்த உடல்பாகங்களை மீட்ட போலீ ஸார் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத் தனர். இதுகுறித்து விசாரணை நடத்திய போலீ ஸார் கூறுகையில், நாசர் மனைவி அமலா மீது பென்னிக்கு காதல் மலர்ந்துள்ளது. இதை அவர் பலமுறை அமலாவிடம் கூறியுள்ளார்.

ஆனால் அதை அமலா ஏற்கவில்லை. இத னால் ஆத்திரமடைந்த பென்னி அவரை கொலை செய்ய திட்டமிட்டிருந்தார். இதனால் நாசர் பள்ளிவாசலுக்கு சென்றவுடன் அமலாவின் வீட் டுக்கு சென்ற பென்னி மீண்டும் ஒரு முறை தனது காதலை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனால் அமலா அதை ஏற்கவில்லை. இத னால் அமலாவை கட்டிப்பிடித்தபடி தனது உட லில் கட்டி வைத்திருந்த வெடிகுண்டை பென்னி வெடிக்கச் செய்துள்ளார். இதனால் இருவரும் உடல் சிதறி பலியாகிவிட்டனர்.

வாரணாசியில் பிரியங்கா போட்டியிடாதது ஏன்?

உத்தர பிரதேச மாநிலம், வாரணாசி தொகுதியில் போட்டி யிடுவது இல்லை என்பது, காங்., பொதுச் செயலர், பிரியங்கா, தானாக எடுத்த முடிவு என காங்., மூத்த தலைவர் சாம் பிட்ரோடா கூறியுள்ளார்.

உ.பி.,யில் உள்ள வாரணாசி தொகுதியில் பிரதமர் மோடி மீண் டும் போட்டியிடுகிறார். இதற் காக அவர் வேட்புமனு தாக்கல் செய்தார். இங்கு, காங்கிரஸ் ச ார்பில் போட்டியிடும் வேட்பாளர் பெயர், அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டது. பிரதமர் மோடிக்கு, கடுமையான போட்டி கொடுக் கும் வகையில், காங்., தலைவர் ராகுலின் சகோதரியும், கட்சியின் உ.பி., கிழக்கு பகுதி பொதுச் செயலருமான, பிரியங்கா போட் டியிடவுள்ளதாக, தகவல் வெளியா னது.

ஆனால், வாரணாசி தொகுதிக் கான, காங்., வேட்பாளராக, அஜய் ராய், அறிவிக்கப்பட்டார். இவர், கடந்த தேர்தலிலும், இதே தொகு தியில் போட்டியிட்டு தோற்றவர். வாரணாசியில், பிரதமர் மோடிக்கு உள்ள செல்வாக்கு காரணமாக, அங்கு போட்டியிடும் முடிவில் இருந்து, பிரியங்கா பின்வாங்கிய தாக, தகவல் வெளியானது.

இந்நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவர் சாம் பிட்ரோடா கூறுகை யில், 'உத்தர பிரதேச மாநிலம், வாரணாசி தொகுதியில் போட்டி யிடுவது இல்லை என்பது, காங்., பொதுச் செயலர், பிரியங்கா, தானாக எடுத்த முடிவு. 'தனக்கு, வேறு பல முக்கிய கடமைகள் இருப்பதால், ஒரு தொகுதியில் மட் டும் கவனம் செலுத்துவதை தவிர்க் கும் வகையில், இந்த முடிவை, அவர் எடுத்துள்ளார்.' இவ்வாறு அவர் கூறினார்.

ரஜினி ரசிகர்களின் ஆதங்கம்!

சட்டமன்ற தேர்தல் வரும்போது கண்டிப் பாக அரசியலுக்கு வருவேன்; எனது ரசிகர் களை ஏமாற்ற மாட்டேன் என சமீபத்தில் கருத்து தெரிவித்திருந்தார் ரஜினிகாந்த். இது அவரது ரசிகர்களை உற்சாகப்படுத்தினாலும் அதனை பெரிய அளவில் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

அவர்களைப் பொறுத்த வரை யில், 22 சட்டமன்ற தொகுதிகளின் இடைத்தேர்தலில் போட்டியிட்டிருந் தால் 22 தொகுதிக ளையும் கைப்பற் றியிருக்க முடியும். இந்த வெற்றி, 2021 -ல் நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க உதவியிருக்கும். அதனை ரஜினி தவறவிட்டுள்ளார் என்கிற ஆதங்கமே வெளிப்பட்டு வருகிறது.

ரசிகர்களின் எண்ண ஓட்டங்கள் இப்ப டியிருக்க, ரஜினியோ, எடப்பாடி ஆட்சிக்கு ஆபத்து வராது ; இன்னும் 2 வருட ஆட்சி யை நிறைவு செய்வார். அதனால் இன்னும் ஒரு வருடத்தில் எத்தனை படங்களில் நடிக்க முடியுமோ அத்தனைப் படங்களில் நடித்து விடுவது என்கிற திட்டத்தில் புதுப்படங்க ளுக்கு கால்சீட் கொடுத்து வருவதாக அவ ருக்கு நெருக்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

அமைச்சர் சீனிவாசனின் மகன் வீட்டில் கொள்ளையடித்தது யார்?

வனத்துறை அமைச்சர் திண்டுக் கல் சீனிவாசனின் மகன் வெங்கடேஷ் திண்டுக்கல் நகரில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இந்த நிலை யில்தான் கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு வெங்கடேசன் குடும்பத்துடன் சென்னையில் உள்ள உறவினர் வீட்டு விசேஷத்திற்கு சென்றுவிட்டார்.

இதனை நோட்டமிட்ட மர்ம நபர் கள் நேற்று இரவு முன் தினம் அவரது வீட்டின் பின்பக்க ஜன்னல் கதவை உடைத்து உள்ளே புகுந்து பீரோவில் இருந்த நகை பணத்தை கொள்ளை யடித்து சென்றனர். அதிகாலையில் ஜன்னல் கதவு உடைக்கப்பட்டு இருப்பதை பார்த்த அக்கம்பக்கத்தினர் உடனே வெங்கடேசனுக்கு தகவல் கொடுத்தனர். ஆனால் வெங்கடேசன் வெளியூரில் இருந்ததால் அவருடைய உறவினரான சரவண பாண்டியனுக்கு தெரிவித்தார். உடனே சரவணபாண்டி யன் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது பீரோவில் இருந்த 50 பவுன் நகை மற் றும் 4 லட்சத்தை மர்ம நபர்கள் திருடிச் சென்றது கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இந்த கொள்ளை சம்பவம் குறித்து அவர் வெங்கடேஷிடம் தெரிவித்தார். அதன் பின் திண்டுக்கல் நகர் வடக்கு போலீசில் சரவணபாண்டியன் புகார் அளித்தார். இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீச ார் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் விசாரணை நடத்தினர் மேலும் வெங் கடேசன் வீட்டுக்கு எதிர்புறம் உள்ள வீட்டில் பொருத்தப்பட்டுள்ள கண்கா ணிப்பு கேமராக்களில் பதிவான காட்சி களையும் ஆய்வு செய்தனர். அதோடு மோப்பநாய் வரவழைக்கப்பட்டது.

அது வெங்கடேசன் வீட்டுக்குள் மோப்பம் பிடித்து விட்டு அங்கி ருந்து சிறிது தூரம் ஓடியது. ஆனால் யாரையும் பிடிக்கவில்லை தொடர்ந்து கைரேகை நிபுணர்களும் வரவழைக் கப்பட்டு வெங்கடேஷன் வீட்டில் பதிவான தடயங்களை சேகரித்தனர்.

இந்த சம்ப வம் குறித்து வடக்கு போலீசார் வழக்கு பதிவு செய்து விசா ரணை செய்து வருகிறார்கள். இருந்தாலும் அமைச்சர் மகன் வீட்டில் நகை பணம் கொள்ளை அடித்துச் சென்றது திண்டுக்கல் நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக் கிறது.

மம்தாவுக்கு ஓட்டு போடலயா நீ? மனைவி வாயில் ஆசிட் ஊற்றிய கணவன்

மம்தா பேனர்ஜியின் கட்சி வேட் பாளருக்கு ஓட்டு போடாத காரணத்தால், மனைவியை அடித்து அவரது வாயில் ஆசிட் ஊற்றிய கணவரால் சர்ச்சை ஏற் பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி மம்தா பானர்ஜி தலை மையிலான ஆட்சி நடத்தி வருகிறது. சமீபத்தில் அதாவது ஏப்ரல் 11ஆம் தேதி அங்கு மக்களவை தேர்தல் நடைபெற் றது.

இந்நிலையில், முர்ஷிதாபாத் மாவட் டத்தை சேர்ந்த ஒருவர் மம்தா கட்சியின் தீவிர ஆதரவாளர் ஆவார். இவர் தேர்த லுக்கு முன்பிருந்தே தன் மனைவிடம் மம்தாவின் கட்சி வேட்பாளருக்கு ஓட்டு போட வேண்டும் என கூறிவந்துள்ளார். ஆனால், இதை அவரது மனைவி ஏற்கவில் லை.

இதனால், ஆத்திரமடைந்தவர் ஓட்டு போட்டு வந்ததும் அவரது மனைவிட்யை அடித்து துன்புறுத்தி வாயில் ஆசிட் ஊற்றி யுள்ளார்.

இதனால், அந்த பெண்ணிற்கு கடுமை யான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. இது குறித்து அந்த பெண்ணின் மகன் போலீ ஸில் புகார் அளித்துள்ளான்.

அந்த புகாரில், ஓட்டுபோட்டு வந்த வுடனேயே எனது குடும்பத்தினர் எனது தாயை துன்புறுத்த ஆரம்பித்துவிட்டனர். என் தந்தை தாயின் தலைமுடியை பிடித்து இழுத்துச்சென்று அடித்து, வாயில் ஆசிட் ஊற்றினார் என தெரிவித்துள்ளான். போலீ ஸார் இதனை வழக்காக பதிவு செய்து விசா ரித்து வருகின்றனர்.

கோமியத்தால் கேன்ஸர் குணமானது; பொய் சொல்லி மாட்டிக்கொண்ட பாஜக வேட்பாளர்

பாரதிய ஜனதா கட்சியின் போபால் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள சா த்வி பிரக்யா தாக்கூர் தனது கேன் ஸர் கோமியத்தால் குணமானது என பொய் சொல்லியுள்ளார் என்பது இப்போது தெரியவந்துள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் நாடா ளுமன்ற வேட்பாளராக போபால் தொகுதியில் சாத்வி பிரத்யா நிறுத் தப்பட்டுள்ளார். ஆன்மீக குருவான இவர் 2006-ம் ஆண்டு நடந்த மலகான் குண்டுவெடிப்பில் கைது செய்யப்பட்டு சிறையில். இப்போது ஜாமீனில் வெளியில் வந்து மக்கள வைத் தேர்தலில் நிற்கிறார்.

இந்நிலையில் இவர் சமீபத்தில் அளித்த நேர்காணல் ஒன்றில் தனக்கு வந்த புற்றுநோய் கோமியத்தின் மூலம் குணமானது எனக் கூறினார். இதனையடுத்து அறிவி யலாளர்களும் மருத்து வத்துறையைச் சே ர்ந்தவர்களும் அவரின் இந்த பிற்போக்குத்த னமானக் கருத்துக்கு எதிராகப் போர்க்கொ டித் தூக்கினர். இதனை யடுத்து பிரக்யாவுக்குப் புற்றுநோய் சிகிச்சை யளித்த மருத்துவர் அவருக்கு மூன்று முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டதை ஒப்புக் கொண்டார்.

இது குறித்து பிரக்யாவின் புற்று நோய் நிபுணர் டாக்டர் எஸ்.எஸ். ராஜ்புத் பிரக்யாவுக்கு முதல் நிலை புற்றுநோய் இருந்தது. 2008-ம் ஆண்டு மும்பை ஜேஜே மருத்துவ மனையில் அவரின் வலது மார்பில் இருந்த கட்டி வெட்டி அகற்றப்பட் டது மறுபடியும் போபாலில் நடந்த அறுவை சிகிச்சையில் பிரக்யாவின் வலது மார்பின் பெரும் பகுதி அகற் றப்பட்டது. பின்னர் 017-ம் ஆண்டு ஜாமீனில் வெளிவந்த பிரக்யா, ராம் மனோகர் லோகியா மருத்துவம னையில் இரு மார்பகங்களையும் அறுவை சிகிச்சை செய்து அகற்றிக் கொண்டார் எனத் தெரிவித்துள்ளார்.

பெண்களை கற்பழித்த கணவன் : வீடியோ எடுத்து மிரட்டிய மனைவி!

உத்தரபிரதேசம் மாநிலத்தில் முசாஃபர் நகர் மாவட்டத்தைச் சேர்ந்த சஞ்வி லோஹன் என்பவர் இரு பெண்களை மிரட்டி பாலியல் பலாத்காரம் செய் துள்ளார். இதை சஞ்வி லோஹனின் மனைவி வீடியோ எடுத்துவைத்துள்ளார்.

சில நாட்கள் கழித்து சஞ்சி அந்த பெண் களை மிரட்டி மீண்டும் பலாத்காரம் செய்ய முயற்சிமேற்கொண்டுள்ளான்.

அந்த இரு இளம் பெண்கள் இதற் குப் பயந்துள்ளனர்.ஆனால், தன் கணவன் ஏற்கனவே இரு பெண்களை வன்புணர்வு செய்யும் வீடியோவை காட்டிய மனைவி ரீதா அவர்களை மிரட்டியுள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த இரண்டு பெண்கள் அவகளது உறவினர்களுடன் இதுபற்றி கூறியுள்ளனர். பின்னர் அவர்கள் அருகில் உள்ள காவல்நிலையத்தில் புகார் அளித்தனர்.

இதனையடுத்து சஞ்வி ஹோலனும் அவரது மனைவி ரீதாவையும் போலீஸார் கைது செய்து தீவிரமாக விசாரித்து வருவ தாக தகவல் வெளியாகிறது.

தமிழகத்தை தாக்க பயங்கரவாதிகள் திட்டம்: திடுக்கிடும் தகவல்

இலங்கையில் கடந்த ஞாயிறு அன்று பயங்கரவாதிகளின் தொடர் தாக்குதலால் அந்நாடே நிலைகுலைந்தது. இந்த தொடர் தாக்குதலில் 300க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் தங்கள் உயிரை இழந்தனர். இதில் சுமார் ஐம்பது பேர் வெளிநாட்டவர் என் பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் 500க் கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கையில் பயங்கரவாதிகள் நடத்திய இந்த தாக்குதலை அடுத்து இந்தியாவிலும் குறிப்பாக தமிழகம் உள்பட ஒருசில தென்மா நிலங்களிலும் தாக்குதல் நடத்தலாம் என்று கூறப்பட்டதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட் டது

இந்த நிலையில் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தவுள்ளதாகவும் ராமநாதபுரத்தில் 19 பயங்கரவாதிகள் பதுங்கியுள்ளதாகவும் தமிழக போலீசாருக்கு பெங்களூரு போலீசார் கடிதம் எழுதியுள்ளனர். இதுகுறித்து முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தமிழக காவல்துறைக்கு பெங்களூரு காவல் துறை அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது. இந்த திடுக்கிடும் தகவலால் தமிழக காவல்துறை அதிர்ச்சி அடைந்துள்ளது. பயங்கரவாதிகளின் சதியை முறியடிக்க தமி ழக காவல்துறை முக்கிய நகரங்களில் பாது காப்பை அதிகரித்துள்ளது

அமெரிக்க நூலகத்தில் திருடப்பட்ட 400 ஆண்டுகள் பழமையான பைபிள் மீட்பு

அமெரிக்காவின் பென்சில்வே னியா மாகாணம் பிட்ஸ்பர்க் நகரில் கார்னிஜே என்ற புகழ்பெற்ற நூல கம் உள்ளது. இங்கு பழமைவாய்ந்த புத்தகங்களுடன், பழங்கால அரிய பொக்கிஷங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 1990-ம் ஆண்டு இந்த நூலகத்தில் ஆவண காப்பாளராக பணியாற்றிய ஒருவரும், அவரது நண் பரும் இணைந்து 8 மில்லியன் டாலர் மதிப்புடைய 300-க்கும் மேற்பட்ட அரிய பொக்கிஷங்களை திருடி சென்ற னர். இதில் 404 ஆண்டுகள் பழமை யான பைபிளும் ஒன்று.

திருட்டு சம்பவம் நடந்த 26 ஆண்டுகளுக்கு பிறகு, கடந்த 2017 -ம் ஆண்டு அமெரிக்காவின் மத்திய புலனாய்வு போலீசார் இந்த வழக்கை கையில் எடுத்தனர். திருடுபோன அரிய பொக்கிஷங்களை கண்டறிய விசாரணையை தீவிரப்படுத்தினர்.

இந்த நிலையில், நெதர்லாந்தில் உள்ள அருங்காட்சியகம் ஒன்றில், கார்னிஜே நூலகத்தில் இருந்து திரு டப்பட்ட 404 ஆண்டுகள் பழமை யான பைபிள் இருப்பது கண்டுபி டிக்கப்பட்டது. இதையடுத்து 12 ஆயிரம் டாலர் (ரூ.8 லட்சத்து 42 ஆயிரம்) கொடுத்து, அந்த பைபிளை மீட்ட மத்திய புலனாய்வு போலீசார், அதனை கார்னிஜே நூலகத்தில் ஒப்ப டைத்தனர்.

உருளைக்கிழங்கில் இரட்டை படுக்கை கொண்ட தங்கும் விடுதி

இந்த உருளைக் கிழங்கு உலகிலேயே மிகப் பெரிய உருளைக்கிழங் காக அறியப்பட்டது. அதன் பின்னர் மக்களின் பார்வைக்காக இந்த உரு ளைக்கிழங்கு ராட்சத லாரி மூலம் அமெரிக்கா முழுவதும் சுற்றிவந்தது. கடந்த ஆண்டு இறு தியில் இந்த சுற்றுப்ப யணம் முடிந்தது. இந்த நிலையில், தற்போது இந்த உருளைக் கிழங்கு இரட்டை படுக்கை கொண்ட சிறிய தங்கும் விடுதியாக மாற்றப்பட் டுள்ளது. உருளைக்கி ழங்கை குடைந்து உரு வாக்கப்பட்டுள்ள இந்த தங்கும் விடுதியில், செ ராகுசு இருக்கைகள், படுக்கை மற்றும் கழி வறை என அனைத்து வசதிகளும் உள்ளன. இது பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்து வருகிறது.

அமெரிக்காவின் இடாஹோ மாகா ணத்தில் தலைநகர் போய்சில் உருளைக் கிழங்கு பயிரிடுவதை ஊக்குவிக்கும் விதமாக, கடந்த 2012-ம் ஆண்டு மிகப் பெரிய உருளைக்கிழங்கு விளைவிக்கப் பட்டது.

28 அடி நீளம் மற்றும் 12 அடி அக லத்தில் 6 டன் எடையுடன் விளைந்த

இந்த விடுதியில் ஒரு நாள் தங்குவ தற்கு 200 டாலர் வசூலிக்கப்படுகிறது. அப்படி இருந்தும் மே மாதம் முழுவதும் இந்த விடுதி முன்பதிவு செய்யப்பட்டு விட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆஸ்திரேலியாவில் ஆண்களிடம் மட்டும் அதிக வரி வசூலித்த ஓட்டல் மூடல்

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரை சேர்ந்த பெண்ணியவாதிகள் சிலர் கடந்த 2017-ம் ஆண்டு ஹன்ட்சம் ஹெர் (அவள் அழகானவள்) என்ற பெயரில் ஓட்டல் ஒன்றை துவங்கினர்.

இந்த ஓட்டலில் பெண்களுக்கு தான் முதல் முன்னுரிமை. பெண்களின் இருக் கைகள் நிறைந்த பிறகு, இடம் இருந்தால் மட்டும் ஆண்கள் அனுமதிக்கப்படுவார் கள். அத்துடன் ஆண்கள் தாங்கள் ச ாப்பிடும் உணவுக்கு கூடுதலாக 18 சத வீதம் வரி செலுத்த வேண்டும். ஆண்களி டம் இருந்து வசூ லிக்கப்படும் இந்த கூடுதல் தொகை பெண்களுக்கான நலத்திட்டங்களுக் காக செலவிடப் படும்.

இந்த ஓட்டலுக்கு பெண்கள் மத்தியில் அதிக வரவேற்பு கிடைத்த அதே வேளை, சமூக வலைத் தளங்களில் கடும் விமர்சனத்துக்கு உள்ளா னது. இந்த ஓட்டல் குறித்த எதிர்மறை யான கருத்துகள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டன. இதனால் சமீபகாலமாக இந்த ஓட்டலுக்கு வருபவர்களின் எண் ணிக்கை வெகுவாக குறைந்தது.

இந்த நிலையில், இந்த ஓட்டலை மூடுவதாக அதன் உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர். நாளை(ஞாயிற்றுக் கிழமை) ஓட்டல் மூடப்படுவதாக தங்களின் பேஸ்புக் பதிவில் தெரிவித் துள்ள அவர்கள், ஆண்களின் எதிர்ப் புக்கு பயந்தோ, பணம் சாம்பாதிக்க முடியவில்லை என்றோ ஓட்டலை மூடவில்லை என குறிப்பிட்டுள்ள னர். ஓட்டலை மூடும் அறிவிப்புக்கு ஆதரவாகவும், எதிராகவும் சமூக வலைத்தளங்களில் கருத்துகள் பகிரப் பட்டு வருகின்றன.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

ஞாயிற்றுக்கிழமை 28.04.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

இலங்கையின் துயரங்கள்

இலங்கையில் உயிர்ப்பின் திருநாளான ஈஸ்டர் பண்டிகையின்போது ஈவு இரக்கமின்றி நடத்தப்பட்டுள்ள தாக்குதல் உலகத்தையே உலுக்கியுள்ளது. தேவாலயங்கள், 3க்கும் மேற்பட்ட நட்சத்திர விடுதிகளில் நடந்துள்ள குண்டு வெடிப்பில் 350க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். சுமார் 500 பேர் காயமடைந்து தீவிர சிகிச்சையில் உள்ளனர். ஈஸ்டர் திருநாளை முன்கூட்டியே தேர்வு செய்து, நூற்றுக்கணக்கானோர் கூடும் ஆலயங்களையும், நட்சத்திர விடுதிகளையும் தேர்தெடுத்து இந்த கொடூர தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது நிதர்சனம். கொழும்பு வீதிகளில் ஒலிக்கும் ஓலம், மக்கள் மத்தியில் நிலவும் பதற்றம் நாட்டின் அமைதியை சீர்குலைத்துள்ளது. கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு, இலங்கையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் நடந்துள்ள இந்த கோர சம்பவம் பீதியை கிளப்பிவிட்டுள்ளது. இலங்கையின் துயரங்கள் கடந்த 30 ஆண்டுகளாக ஒரு தொடர்கதையாக உள்ளது. அரசுக்கும், விடுதலைபுலிகளுக்கும் நடந்த யுத்தங்கள் பல ஆண்டுகளாக நடந்தன. அப்போது எந்த நேரத்தில் என்ன நிகழுமோ என்ற அச்சமே நிலவியது. கடந்த 2009ல் இலங்கையில் நடந்த போரில் லட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அதற்கு பின்னர் தற்போது நடந்துள்ள குண்டுவெடிப்பே அதிக உயிர்களை காவு கொண்டுள்ளது.

இலங்கை, இந்திய பிரதமர்கள் தொடங்கி உலக தலைவர்கள் பலரும் இச்சம்பவத்திற்கு தங்கள் கண்டனத்தை தெரிவித்துள்ளனர். இலங்கை அதிபர் சிறிசேனா தலைமையில் உயர்மட்டக் குழு கூட்டமும் குண்டுவெடிப்புக்கான பின்னணி குறித்து விவாதித்து வருகிறது. இந்த சம்பவத்திற்கு எந்தவொரு அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. போருக்கு பின்னர் அமைதி திரும்பி விட்டதாக கூறிய இலங்கை அரசு கடந்த 10 ஆண்டுகளாக உள்நாட்டு அரசியல் குழப்பத்தையே அதிகளவில் சந்தித்து வந்தது. இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐநாவும் விசாரணை நடத்தியது. இலங்கை அரசு இதை அதிருப்தியோடு எதிர்கொண்டது. அதன் தொடர்ச்சியாக இலங்கை அரசு பாதுகாப்பிலும் அலட்சியமே காட்டியது. இலங்கையில் பெரும் தாக்குதல் நடத்தப்படலாம் என இந்தியா உள்பட சர்வதேச புலனாய்வு அமைப்புகள் எச்சரித்தும் அதை ஒரு பொருட்டாக கருதவில்லை.

கடந்த ஓராண்டாக இலங்கையின் அரசியல் குழப்பமும் உச்சக்கட்டத்தில் உள்ளது. இலங்கை அதிபர் சிறிசேனா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்வை பதவியில் இருந்து நீக்கினார். புதிய பிரதமராக மகிந்த ராஜபக்சவை நியமித்தது, அதை தொடர்ந்து நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பு என இலங்கை அரசியலின் ஆடு புலி ஆட்டங்கள் சந்தி சிரித்தன. இலங்கையில் மக்களுக்கு பாதுகாப்பற்ற நிலை காணப்படுகிறது என்கிற கருத்துகளும் எதிர்கட்சிகளால் படம் பிடித்து காட்டப்பட்டன.இத்தகைய பிரச்னைகளில் இருந்து இலங்கை அரசு மீள்வதற்குள், திட்டமிட்ட கோர தாக்குதல் தற்போது நிகழ்ந்துள்ளது. கடந்த ஏப்ரல் 21ம் தேதி இணையங்களில் வெளியான ஒரு கடிதத்தை முன்வைத்தே சில அமைப்புகள் இதை முடிச்சு போட்டதோடு, சமூக மோதல்களையும் தூண்டிவிட்ட விஷமிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க உள்ளதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். இலங்கையில் சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டுள்ளதோடு, ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மத சுதந்திரத்தோடு ஒரு பண்டிகைக்கான வழிபாட்டில் பங்கேற்றவர்கள் மீது நடந்துள்ள தாக்குதல் சற்றும் மனிதாபிமானமற்றது. தாக்குதல் நடத்தியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதோடு, மக்கள் மத்தியில் அமைதி திரும்ப இலங்கை அரசு விரைந்து செயல்பட வேண்டிய நேரமிது.

அரசும் மாணவ சமுதாயமும்

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

நாட்டில் யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டதாக அரசாங்கம் அறிவித்து ஒன்பது ஆண்டுகள் கடந்த நிலையில் நாட்டில் வாழும் சகல பிரஜைகளுக்குமான விடுதலை உரிமை வழங்கப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியான நிலையில், நல்லாட்சி பதவியேற்று மூன்று வருடங்களைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் நாட்டில் இனங்களுக்கிடையே சமத்துவம், சமரசம், நல்லிணக்கம் என்ற பேச்சுக்கள் அதிகமாகிக் கொண்டே செல்கின்றதே தவிர அவற்றின் முழுமையான பயனை அனுபவிக்காதவர்களாகவே நாட்டில் அனைத்து மக்களும் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அதிகளவில் பாதிக்கப்பட்ட இனமாக தமிழினம் காணப்படுகின்றது. குறிப்பாக தங்களது பூர்வீக இடங்களான வட கிழக்கில் வாழ்ந்த தமிழ்மக்கள் கடந்த கால யுத்த சூழ்நிலைகளுக்கு பலவாறும் முகம் கொடுத்து இன்று அனைத்தையும் இழந்து காணி நில மற்று சொத்துடமை இழந்து, உயிர்உறவுகளை இழந்து அநாதரவாகியுள்ளனர். இன்றுவரையும் தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஊண் உறக்கமின்றி வீதிகளில் போராடி பொழுதை கழித்துவருகின்றனர். இதனை வாக்களித்து தேர்ந்தெடுத்து நம்பிக்கை கொண்ட தமிழ்த் தலைமைகளும் பாராமுகமாக இருந்து வருவது மறுவடிவப் பிரச்சினையாகும்.

கோப்புப்படம்

நாட்டில் யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதாக அரசாங்கம் அறிவித்து ஒன்பது ஆண்டுகள் கடந்த நிலையில் நாட்டில் வாழும் சகல பிரஜைகளுக்குமான விடுதலை உரிமை வழங்கப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியான நிலையில், நல்லாட்சி பதவியேற்று மூன்று வருடங்களைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் நாட்டில் இனங்களுக்கிடையியே சமத்துவம், சமரசம், நல்லிணக்கம் என்ற பேச்சுக்கள் அதிகமாகிக் கொண்டே செல்கின்றதே தவிர அவற்றின் முழுமையான பயனை அனுபவிக்காதவர்களாகவே நாட்டில் அனைத்து மக்களும் வாழ்ந்து வருகின்றனர்

இவ்வாறு நல்லாட்சியில் கூறிய வாக்குறுதிகள் செவ்வனே நிறைவேற்றப்படாத சூழலில் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து போராடிவரும் தமிழினம் ஒரு புறமிருக்க , இன்று நல்லாட்சியில் அதிகளவில் பேசப்படும் ஒரு விடயமாக சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் து;பிரயோகங்கள், துன்புறுத்தல்கள், குறிப்பாக பாடசாலைகளில் ஒழுக்கமற்ற செயற்பாடுகளில் மாணவர்களும், ஆசிரியர்களும் என்றவாறு அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாகவும் செய்திகள் வெளிவந்தவண்ணமே உள்ளன. அந்தவகையில் இன்று பாடசாலைகளில் பிரதானமாக ஒழுக்கத்தை போதிக்க வேண்டிய சூழலில் கல்வியமைச்சு கல்வி முறையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். அந்தவகையில், கடந்த பெப்ரவரி 2017ல் கொழும்பு பகுதியை சேர்ந்த சகோதர மொழி மூல பாடசாலை ஒன்றில் நடைபெற்ற மாணவ, மாணவிகள் சிலரின் காமக் களியாட்டங்கள் இணையதளங்களில் வெளியாகி அனைவரினதும் கையடக்க தொலை பேசிகளிலும் முக்கிய காட்சியாக இடம் பிடித்ததுடன் வாட்ஸ்அப், பேஸ்புக் மற்றும் யூடியுப் போன்ற சமூக வலை தளங்களிலும் வைரலாக பரவிய காட்சிகள் நாம் அறிந்ததே.

கல்வி, ஒழுக்கம், நேர்மை மற்றும் நல்ல பண்புகளை கற்று நாட்டின் நற்பிரஜைகளாக உருவெடுக்க வேண்டிய இளைஞர்கள் பாடசாலைக்குள்ளேயே அதுவும் பாடசாலை, பாட நேரத்திலேயே அசிங்கமாக நடந்து கொண்ட காட்சிகள் இலங்கை மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை உண்டாக்கியுள்ளது. இரண்டு மாணவ ஜோடிகள் பாடசாலையில் செய்த

கோப்புப்படம்

ஒழுங்கீனமான செயற்பாடும் பத்திரிகைகள் கூட எழுதத் துணியாத வார்த்தைகளை உச்சரிப்பதும் குறித்த செல்போன் வீடியோவில் பதிவு செய்யப்பட்டிருந்தது. பாடசாலை நேரத்தில் மாணவர்கள் மத்தியில் நடைபெற்ற குறித்த அசிங்கமான செயல்பாட்டின் உருவங்களை மறைத்து வீடியோவை செய்தியாக்கியிருந்தது ஒரு பிரபல சிங்கள செய்தி ஊடகம். மாணவர்கள் மத்தியில் பரவிவரும் இது போன்ற இழி செயல்கள் தொடர்பான சமூக விளிப்புணர்வுகள் இன்மையும், மாணவர்களுக்கு ஒழுக்கத்துடன் கூடிய உரிய கல்வி வழங்கப்படாமையும் இதற்காக முக்கிய காரணங்களாகும்.

இலங்கையின் கல்வி முறைமையில் மாற்றம் வேண்டும் என்கிற கோரிக்கைகள் கடந்த பல வருடங்களாகவே எழுந்து வருகின்றன. பாடத்திட்ட மாற்றம், நடைமுறை மாற்றம், ஆசிரியர் செயற்பாடுகளில் மாற்றம், கல்வி சார் ஊழியர்களின் செயற்பாடுகளில் மாற்றம் என்று கல்வித் துறை பல்வேறுபட்ட மாற்றங்களையும் வேண்டி நிற்கிறது. வலியுறுத்தப்படும் மாற்றங்கள் செயல்பாட்டிற்கு வருவதில் ஏற்படும் தாமதமும், தயக்கமுமே பலவிதமான சீர்கேடுகளும் பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் தொடர்ந்தும் காலூன்றுவதற்கு காரணமாக அமைகிறது.

தாம் கஷ் டப்பட்டு பெற்றெடுக்கும் பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாக, ஒழுக்கமுள்ளவர்களாக, நாட்டின் நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதற்காகவே பாடசாலைக்கு பெற்றோர் தம் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். மூன்று வயது, நான்கு வயது, ஐந்து வயது என்று ஒவ்வொரு பெற்றோரும் குறிப்பிட்ட ஒரு வயதை பிள்ளை அடைந்தவுடன் அவர்களை கல்வியின் பக்கம் நாட்டம் கொண்டவர்களாக மாற்ற எத்தணிக்கிறார்கள். ஒழுக்கத்தையும், கல்வியின் முன்னேற்றத்தையும் நினைத்து பாடசாலைக்கு தம் பிள்ளைகளை பெற்றோர் அனுப்பும் போது, அவர்களுக்குரிய சிறந்த கல்வியை கொடுப்பதும், ஒழுக்கமிக்கவர்களாக அவர்களை மாற்றுவதும் ஒவ்வொரு பாடசாலையினதும் கட்டாயக் கடமையாகும். நமது கல்வியினால் நமக்கு பயன் கிடைக்க வேண்டும் என்றால் கண்டிப்பாக அது சிறந்த ஒழுக்கத்துடன் கூடிய கல்வியாக மாத்திரமே இருக்க வேண்டும்.

பிள்ளைகளின் ஒழுக்க வாழ்வை கணக்கில் கொள்ளாத பெற்றோர்களும் எம்மத்தியில் வாழாமல் இல்லை. இவ்வாறான ஒரு சில பெற்றோர்களினால் கூட இவ்வாறான ஒழுக்கமற்ற பிள்ளைகள் உருவாவதற்கு வழி சமைக்கப்படுகின்றது. எந்தவொரு மாணவனும் தனது எதிர்காலத்தில் சிறந்தவனாக ஒழுக்கமுள்ளவான வளர்வதற்கு பெரிதும் காரணமாக இருப்பவர்கள் அவனுடைய பெற்றோர்கள். பிள்ளைகளைப் பொறுத்த வரையில் பிறக்கும் குழந்தை தனது முதல் ஆசானாக தாயையும், தந்தையையும் தான் பெற்றுக் கொள்கிறது. அன்புக்கு தாயும், அறிவுக்கு தந்தையும் உதாரணமாக இவ்வுலகில் பேசப்படுகிறார்கள். தம் பிள்ளைக்கு அன்பு காட்டும் பல பெற்றோர்கள் உரிய முறையில் அறிவை குழந்தைகளுக்கு போதிப்பதில்லை. அறிவு பெற்றவனாக தன் பிள்ளையை வளர்க்க நினைக்கும் பலர் ஒழுக்கமுள்ளவான தன் பிள்ளையை வளர்ப்பதில்லை. உலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் இயற்கையாக சிறந்தவர்களாகத்தான் இறைவனால் படைக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களை வளர்த்தெடுக்கும் பெற்றோர்கள் தான் ஒழுக்கமற்றவனாக, நற்குணமற்றவனாக, கல்வியறிவற்றவனாக, சமயத் தெளிவற்றவனாக என்று பல விதங்களில் அவனை மாற்றி விடுகிறார்கள். எதிர்காலத்தில் டாக்டராக, எஞ்சினியராக, விஞ்ஞானியாக, மேதையாக வர வேண்டும் என்றெல்லாம் கனவு காணும் இன்றைய ஒருசில பெற்றோர்கள் தம் பிள்ளை ஊரில் சிறந்த, ஒழுக்கமுள்ள நல்ல குணமுள்ளவனாக வளர வேண்டும் என்பதில் அக்கறையற்றிருக்கிறார்கள்.

உலகில் உள்ள தொழில்களில் மிகவும் மதிப்பு மிகுந்த தொழிலாக ஆசிரியர் தொழிலே பார்க்கப்படுகிறது. உலகில் எவ்வளவு பெரிய இடத்திற்கு உயர வேண்டும் என்றாலும் அதற்குரிய வழிகாட்டல்கள் ஆசிரியர் மூலம் வழங்கப்படுகிறது. எந்தத் துறையில் ஒருவன் கோலோச்ச வேண்டும் என்றாலும் அதற்குரிய வழிமுறைகள், வழிகாட்டல்களை வழங்குபவர்கள் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். இவ்வளவு முக்கியத்துவம் மிக்க ஆசிரியர் பணியில் கடமையாற்றும் பல ஆசிரியர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து நிறைவேற்றாதவர்களாகவே இருக்கிறார்கள். சம்பளத்திற்கு வேலை செய்யும் அதிகாரியாகவே பலர் இருக்கிறார்களே ஒழிய. சமுதாயத்திற்கு சேவை செய்யும் உன்னத பணியாக ஆசிரியர் பணியை அவர்கள் நினைப்பதில்லை. தாம் பெற்ற கல்வியை, ஒழுக்கத்தை முறைப்படி மாணவர்கள் மத்தியில் ஆசிரியர் ஒப்புவித்தால் கண்டிப்பாக அந்தக் குழந்தைகளும் ஒழுக்கமுள்ள சிறந்த கல்வியாளர்களாக மாறுவார்கள்.

ஆகவே, பிள்ளைகளின் பொறுப்பாளர்களாக பாடசாலையில் பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ள ஆசிரியர்கள் தமது பணியில் கூடிய கவனம் செலுத்துவதே மாணவர்களின் எதிர்கால ஒழுக்க வாழ்வுக்கு உகந்ததாக அமையும். பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் தன்னுடன் கல்வி கற்கும் சக மாணவியுடன் காதல் வயப்படுகிறான். மாணவனும் மாணவியும் சல்லாபத்தில் ஈடுபடுகிறார்கள். அதனை சக மாணவன் தன் மொபைலில் வீடியோ படமெடுக்கிறான் என்றால் என்ன காரணம்? (அண்மையில் இடம்பெற்ற சம்பவம்) மாணவர்கள் புத்தகத்தை சுமக்கும் சுமைதாங்கிகளாகத் தான் வளர்க்கப்படுகிறார்களே தவிர, ஒழுக்கத்தை சுமக்கம் உத்தமர்களாக அவர்கள் வளர்க்கபடுவதில்லை என்பதே யதார்தமானதாகும்.

மாணவர் மன்றங்கள் என்ற பெயரில் பாடசாலை மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்ட நடத்தப்படுகிற நிகழ்வுகளில் கூட ஆண் பெண் கலவை களியாட்டங்களும், சினிமா பாடல்களும், ஆடல்களும், குத்தாட்டங்களும் நடந்தேறுவதை நாம் அவதானிக்க முடிகிறது. பாடசாலையில் குறித்த மாணவர்கள் இருவரும், மாணவிகள் இருவரும் சல்லாபத்தில் ஈடுபட்டதை ஒரு மாணவன் தனது செல்போனில் வீடியோ பதிவு செய்துள்ளான். அதனையும் ஆசிரியர்கள் கண்காணிக்க வில்லை. மாணவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்ப்பதற்காக இல்லாவிட்டாலும் அரசு தரும் சம்பளத்திற்காகவாவது கண்காணித்திருக்க வேண்டாமா? காலையில் 07.00 மணிக்கு பாடசாலை செல்ல வேண்டிய பல ஆசிரியர்கள் தங்கள் இஷ்டப்படி பாடசாலைக்கு செல்வதும், அதிபரை சமாளித்து பொய் காரணம் சொல்லி ஏமாற்றுவதும், பல பொழுதுகளில் ஆசிரியர்களின் இத்தகைய செயல்பாட்டுக்கு அதிபர்களே துணை போவதும் சகஜமான ஒன்றாகி விட்டது.

கல்வியையும், ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டியவர்களே இப்படியிருக்கும் போது மாணவர்கள் எப்படியிருப்பார்கள்? பாடசாலைக்குள் செல்போன் எடுத்து வருவதும், இணையதளங்கள் பயன்படுத்துவதும், பாடசாலைக்குள்ளிருந்தே பேஸ்புக்கில் தகவல் பதிவதும் கூட இன்று சர்வ சாதாரணமான ஒன்றாக மாறியிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் காரணமாக இருப்பது யார்? கொழும்பில் குறித்த பாடசாலையில் ஏற்பட்டதைப் போன்ற காரியங்கள் இனியும் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு மத்தியில் ஏற்படாமல் இருக்க வேண்டுமாயின் உரிய முறைப்படி அறிவுடன் கூடிய ஒழுக்கக் கல்வி புகட்டப்பட வேண்டும் என்பதே சரியான தீர்வாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

தகவல் கொடுக்கத் தவறிய குற்றச்சாட்டில்

முஸ்லிம் அரசியல்வாதிகள்

கைது செய்யப்படாதது ஏன்?

இரா.துரைரத்தினம்
சுவிட்சர்லாந்து

காத்தான்குடியை தளமாக கொண்டு முஸ்லீம் ஆயுதக்குழு இயங்கி வருகிறது, அவர்களுக்கு அரபு நாடுகளிலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது, இதன் பின்னணியில் முஸ்லீம் அரசியல்வாதிகள் உள்ளனர் என கடந்த காலங்களில் இப்பத்தியாளர் சுட்டிக்காட்டிய போது அது இனவாத கருத்து என சிலர் நிராகரித்திருந்தனர்.

கடந்த ஞாயிறு இலங்கையில் நடத்தப்பட்ட பயங்கர தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப் பின் உதவியுடன் தேசிய தௌபீக் ஜமாத் என்ற அமைப்பை சேர்ந்தவர்களே நடத்தியிருந்தனர்.

காத்தான்குடியை தலைமையகமாக கொண்டு இயங்கிய தேசிய தௌபீக் ஜமாத் இயக்கத்தின ருடன் கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா எடுத்துக் கொண்ட படம் ஒன்றும் சில காலத்திற்கு முதல் வெளியாகியிருந்தது.

பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு ஆயு தப்பயிற்சி பெற்ற விடயமும், தாக்குதலுக்கான ஒத்திகைகளும் ஏற்கனவே நடைபெற்றதை பொலி ஸாரும் புலனாய்வுப்பிரிவினரும், முஸ்லீம் அரசி யல்வாதிகளும் அறிந்திருந்த போதிலும் அதனை ஏன் தடுக்க முன்வரவில்லை என்பதே இன்று எழும் கேள்வியாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை எட்டு இடங்க ளில் தற்கொலை தாக்குதல்களை நடத்தி 300க்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக்களை படுகொலை செய்த கொடூரம் நடைபெறுவதற்கு சில தினங்க ளுக்கு முதல் காத்தான்குடி பகுதியின் தாழங்குடா, வேடர் குடியிருப்பில் வெடிப்பு சம்பவம் இடம் பெற்றிருந்தது.

இச்சம்பவம் ஊடகங்களில் வெளிவராதவாறு அரசியல்வாதிகளால் தடுக்கப்பட்டிருந்தது. ஊடகங் களின் கவனத்தை ஈர்க்காத விதமாக, அந்த செய்தி முழுங்கடிக்கப்பட்டிருந்தது.

கட்சி அலுவலகமொன்றிலும் குண்டு ஒன்று வெடித்திருந்தது. கட்சி அலுவலக குண்டு வெடிப் பிற்கு பின்னர் நடத்தப்பட்ட சோதனைகளில் காத்தான்குடியில் நேரக்கணிப்பு குண்டை பொலிச ார் மீட்டிருந்தனர்.

காத்தான்குடி கொலைசம்பவத்தின் பின்னர் கைதான ஒருவர் தற்போது மட்டக்களப்பு சிறைச்சா லையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவர் அண்மையில் சிறையில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தார்.

கள் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முதல் தாழங்குடாவில் ஆட்களற்ற காணிக்குள் வெடிப்பு சம்பவம் இடம்பெற்றது.

பொலிஸ் விசாரணையில் அது ஒரு பரீட்சார்த்த குண்டு வெடிப்பு என தெரியவந்தது

மோட்டார் சைக்கிளிற்குள் வெடிகுண்டை வைத்து, நேரக்கணிப்பு அல்லது தொலைவிலிருந்து இயக்கி அதை வெடிக்க வைத்திருந்தனர். அங்கு மோட்டார் சைக்கிளின் சிதைவடைந்த பாகங்கள் காணப்பட்டன.

இந்த விடயத்தை பெரிது படுத்த வேண்டாம் என்றும் அரசியல்வாதி ஒருவர் அழுத்தம் கொடுத்த தன் விளைவாக அந்த விசாரணைகள் கைவிடப்பட் டிருந்தன.

அந்த பகுதியில் இரண்டு ஆயுதக்குழுக்கள் இயங்குவதாகவும், அவற்றிற்கிடையிலான மோத லின் விளைவாக, மறுதரப்பின் மீது தாக்குதல் நடத்த இந்த ஒத்திகை நடத்தப்பட்டிருக்கலா மென்று பொலிசார் ஏற்கனவே சந்தேகம் வெளி யிட்டிருந்தனர்.

இப்பாரிய உயிர்ச்சேதத்தை ஏற்படுத்திய தாக்கு தல்கள் குறித்தும் இத்தாக்குதல்களை நடத்தியவர் கள் பற்றியும் இலங்கையில் இருக்கும் முஸ்லீம் அரசியல்வாதிகள் பலருக்கு தெரிந்திருந்தது. அவர்க ளுடன் நெருங்கிய தொடர்பும் இருந்தது.

பயங்கரவாத செயலுடன் தொடர்பு பட்டிருந் தார் என சில மாதங்களுக்கு முதல் கைது செய் யப்பட்ட நபரை முஸ்லீம் அரசியல்வாதி ஒருவர் தலையிட்டு விடுதலை செய்திருந்தார் என்றும் அந்த முஸ்லீம் அரசியல்வாதி ஜனாதிபதியுடன் நேரடியாக தொடர்பு கொண்டதை அடுத்தே

அமைச்சர் ரிசாட் பதியுதீனின் வலதுகரமாக செயற் பட்டு, நிதி விவகாரங்களை கையாள்பவர் என தெரியவருகிறது.

வர்த்தகரின் குடும்ப திருமண தொடர்பின் மூலம், ஹாஜியாரும் ரிசாட் பதியுதீனுடன் சில வர்த்தக நடவடிக்கைகளில் இணைந்து செயற்பட்ட தாகவும் கூறப்படுகிறது.

கைதானவர்கள் அமைச்சர் ரிசாட் பதியுதீனிற்கு நெருக்கமானவர்களாக இருந்துள்ளனர்.

இலங்கையில் பயிற்சி பெற்றுக்கொண்ட 160 தீவிரவாதிகள் உள்ளதாகவும் அதில் தற்கொலை குண்டுதாரிகளும் உள்ளடங்குவதாகவும் தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

பயங்கரவாத தாக்குதல் பயிற்சி பெற்றுக் தற்கொலை குண்டுதாரி களாக சினமன் கார்டன், கிங்ஸ்பெரி ஹோட்டல் களில் தாக்குதல் நடத்தி யிருந்தனர்.

இளைய மகன் தலைமறைவாகி விட் டார். இன்னொரு மகன் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கைதான மகன் திருமணம் செய்தது, பிரபல நகைக்கடை உரிமையாளர் ஒருவரது மகளை. அந்த நகைக் கடை உரிமையாளரே,

ஹஷீம் என்பவர் வந்து போயுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

பயிற்சி பெற்றுக்கொண்ட 160 தீவிரவாதிகளின் பட்டியல் ஒன்றும் அவர்களின் செல்லிடப்பேசி விபரங்களும் திரட்டப்பட்டுள்ளன.

புத்தளம் வனாத்தவில்லு பகுதியில் இரகசிய ஆயுத பயிற்சி முகாம் ஒன்று தொடர்பாக தேடப் பட்ட இருவர் கடந்த ஞாயிறு தற்கொலை தாக்கு தல்களை நடத்தியிருந்தனர்.

முஸ்லிம் அல்லாதோர் எல்லோரும் கொல் லப்படவேணும் என பேசிய வீடியோ ஒன்று சில மாதங்களுக்கு முன்னர் வெளிவந்திருந்தது. காத்தான்குடியை சேர்ந்த சஜஹான் ஹாஷீம் இந்த பயங்கரவாத அமைப்புக்கு தலைவராக விளங்கி னார் என்றும் கூறப்படுகிறது.

சில காலங்களுக்கு காத்தான்குடியை விட்டு வெளியேறி மாவனெல்லை போன்ற இடங்களில் தங்கியிருந்த போதிலும் இவர் காத்தான்குடியில் உள்ள பலருடன் தொடர்பில் இருந்ததாகவும் கூறப் படுகிறது.

இலங்கையில் இயங்கி வரும் தேசிய தௌபீக் ஜமாத் அமைப்பு ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் ஒரு பிரிவு என்பது தற்போது வெளிப் படையாக தெரியவந்திருக்கிறது.

இத்தாக்குதல்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கர வாத அமைப்பு உரிமை கோரியிருக்கிறது.

இலங்கையில் ஆயுதப்பயிற்சி முகாம்களும் குண்டு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்ட போதிலும் கண்டுபிடிக்கப்படா மல் மேலும் பல முகாம்கள் இருக்கலாம் என்றே நம்பபடுகிறது.

இத்தாக்குதல்கள் சொற்பகாலத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதல்ல. இது மிக நீண்டகால திட்டத்தில் நடத்தப்பட்ட ஒன்றாகும்.

ஒரே நாளில் மட்டக்களப்பு கொழும்பு நீர்கொ ழும்பு தெகிவளை என பல இடங்களில் எட்டிற்கு மேற்பட்ட தாக்குதல்களை நடத்துவது என்பது நீ ண்டகால பயிற்சி திட்டமிடலின் மூலமே சாத்திய மாக கூடியதாகும்.

இது மதவாதம் பேசுகின்ற ஒரு உள்ளூர் தீவிர வாத அமைப்பால் தனித்து செய்திருக்க முடியாது என்ற சந்தேகம் தாக்குதல் நடைபெற்ற உடனேயே மக்கள் மத்தியில் எழுந்திருந்தது. அதனை நிரூபிக் கும் வகையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியிருக்கிறது.

வெளிநாட்டில் உள்ள பயங்கரவாத அமைப்பின் பயிற்சிகள் மற்றும் உதவிகள் மட்டுமல்ல இலங் கையில் இருந்த முஸ்லீம் அரசியல்வாதிகள் வர்த் தகர்கள், மதவாதிகள் என பலருக்கும் தொடர்பு

கிழக்கின் முக்கிய பொறுப்பை வகிக்கும் அர சியல் பிரமுகர் ஒருவரின் பின்னணியில் இயங்கும் ஆயுதக்குழு பற்றியும், அவர்கள் ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கும் இடங்களை பற்றியும் தனக்கு தெரியும் என அவர் தெரிவித்திருந்தார், அந்த இடங்களை காண்பிப்பதாக தெரிவித்தும், பொலிசார் அதில் அக்கறை காண்பிக்கவில்லை யென தெரிவித்தே, அவர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தார்.

ஆனால் இந்த சம்பவங்கள் ஊடகங்களில் வெளிவராத வகையில் அரசியல்வாதிகளின் மிகச் சாதுரியமாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந் தனர்.

இந்த நிலையில்தான், தற்கொலை தாக்குதல் ஜனாதிபதியின் உத்தரவின் பேரிலேயே அவர் விடுவிக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. அந்த நபரை கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஹங் கரி லா ஹொட்டலில் தற்கொலை தாக்குதலை நடத்தியிருந்தார்.

இந்த நிலையில், புத்தளத்தில் அமைந்துள்ள அமைச்சர் ரிசாட் பதியுதீனின் சகோதரி வீட்டில் குற்றப்புலனாய்வு பிரிவினர் சோதனையில் ஈடுபட் டனர். இதன்போது, சில ஆவணங்களை பொலிச ார் கைப்பற்றியதாக தெரிகிறது.

தெமட்டகொடவில் கைதான பிரபல வர்த்தகர் இப்ராஹிம் ஹாஜியார், அமைச்சர் ரிசாட் பதியுதீனு டன் நெருக்கமானவர் என தெரிகிறது.

இப்ராஹிம் ஹாஜியாரின் இரண்டு மகன்கள் கொண்டவர்களில் குறிப்பிடத்தக்களவானவர்கள் தற்கொலைக் குண்டுதாரிகள் என்றும் கூறப்படுகி றது.

வனாத்தவில்லு பிரதேசத்தில் 75 ஏக்கர் தென் னந்தோப்பில் தேசிய தௌபீக் ஜமாத் பயங்கரவாத அமைப்பின் முகாம் முற்றுகையிட்டப்பட்ட போது இந்த தகவல்கள் கிடைக்கப் பெற்றதாக தெரியவந் துள்ளது.

இந்த முகாமில் ஆயுத பயிற்சி, தற்கொலைக் குண்டுத் தாக்குதல் பயிற்சி போன்றன வழங்கப்பட் டுள்ளது.

இந்த முகாமில் குண்டுகள் தயாரிக்கப்பட்ட தாகவும், முகாமிற்கு அடிக்கடி இந்த தீவிரவாத இயக்கத்தின் தலைவராக கருதப்படும் சஜஹான் இருந்திருக்கிறது என்பதை மறைக்க முடியாது.

பயங்கரவாதிகள் பற்றி அவர்கள் நடத்தப் போகும் தாக்குதல்கள் பற்றி தெரிந்திருந்திருந்தும் படையினருக்கு தகவல் கொடுக்க தவறினால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் 5ஆம் பிரிவில் தண் டனைக்குரிய குற்றமாகும். பயங்கரவாதிகளுக்கு உதவுவதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

தற்கொலை தாக்குதல்களை நடத்தியவர்கள் பற்றி அவர்கள் ஆயுதப்பயிற்சி பெற்றார்கள் என் பது அரசாங்கத்தில் செல்வாக்கு மிக்க முஸ்லீம் அரசியல்வாதிகளுக்கு தெரிந்திருந்தது.

அப்படியானால் தகவல் கொடுக்க தவறிய குற்றத்தின் கீழ் முஸ்லீம் அரசியல்வாதிகள் கைது செய்யப்படாதது ஏன்?

கத்தோலிக்க மக்களின் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு காண வேண்டும்

நாட்டில் இரு கத்தோலிக்க தேவாலயங்கள்,ஒரு சுதேச கிறிஸ்தவ சபை தேவாலயம் மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதல்கள் இடம்பெறுவதற்கு முன்னரே கிறிஸ்தவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். தெற்கில் ஒரு சில கிறிஸ்தவ தேவாலயங்கள் சிலரின் சிறு,சிறு தாக்குதல்களுக்கு உள்ளாகின.கத்தோலிக்கர்கள் அதிகமாக வாழும் நீர்கொழும்பு பகுதியில் யேசுநாதரின் சொரூபத்துக்கு அருகில் புத்தர் சிலை வைக்கப்பட்டு, நீதிமன்றம் வரை சென்றது. இவை அன்று பெரிய செய்தியாக வரவில்லை. ஆனால், இவற்றை விட வடக்கு,கிழக்கில் யுத்தம் காரணமாக சில தேவாலயங்கள் வான் தாக்குதலால் சேதமடைந்தன. பலர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

சுனாமி அனர்த்தத்தால் வடக்கு கிழக்கின் கரையோர கத்தோலிக்க தேவாலயங்கள் அழிந்துள்ளன. இவற்றுக்கு நட்ட ஈடு,நிவாரண உதவிகள் அரசால் வழங்கப்படவில்லை. அந்த மக்களே அவற்றை புனரமைத்தனர். 1990 க்கு பின்னர் பாதுகாப்பு வலயமாக்கி, 25 வருடங்களுக்கு பின்னர் விடுவிக்கப்பட்ட வலி.வடக்கில் பல தேவாலயங்கள் அழந்துள்ளன. அந்த மக்களே தற்போது புனரமைக்கின்றனர். இவற்றைப்பற்றி எவருமே நினைப்பதில்லை. யுத்த சூழலில சில கத்தோலிக்க மதகுருமார் காணாமல் போனார்கள். சிலர் கொல்லப்பட்டனர். அந்த சம்பவங்களை மறப்பதற்கு முன் இன்று இந்த துயரமான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. எதிர்வரும் தேர்தல்களில் கத்தோலிக்க மக்களின் வாக்குகள் மிக முக்கியமானவை என்பதை இன்றைய அரசியல் தலைவர்களும் புரிந்துகொள்ள வேண்டும். சிறுபான்மை இனத்தவர்களின் வாக்குகளே இன்று தேவையானது.

இலங்கையில் கத்தோலிக்க சமயம் போரத்துக்கீசரின் வருகைக்கு பின்னரே (1505)பரவியது. அதன் பின்னர் ஒல்லாந்தர் ஆட்சி ஏற்பட்டதும் அவர்கள் புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயத்தை பரப்ப எடுத்த நடவடிக்கையில் அதனை ஏற்க மறுத்த கத்தோலிக்கர்களை துன்புறுத்தினார்கள்,கொலை செய்தனர் என்பது வரலாறு.இதனையடுத்து ஆங்கிலேயர் இலங்கையை பிடித்ததும்,மத சுதந்திரத்தை அளித்தனர்.இதனால் மீண்டும் கத்தோலிக்க சமயம் வளர்ந்தது.அத்துடன் ஆங்கிலேயரும் அதற்கு ஆதரவு அளித்தனர்.பல ஐரோப்பிய துறவிகள்,குருக்கள் இலங்கைக்கு வந்தனர். கத்தோலிக்க மதத்தை பரப்பி,தேவாலயங்களை,பாடசாலைகளை கட்டினார்கள்.அவர்களால் கட்டப்பட்ட பல தேவாலயங்கள்,பாடசாலைகள் இன்றும் வடக்கு,கிழக்கு உட்பட நாடு முழுவதும் உள்ளன.அவர்களின் பாடசாலைகளில் சகல இனத்தவர்களும் கற்று வந்தனர்.ஆங்கிலம் கற்றவர்களுக்கே அரச அலுவலகங்க ளில் அன்று வேலை வாய்ப்புகள் கிடைத்தன.ஆங்கிலேய அரசின் முழு ஆதரவும் அவர்களுக்கு கிடைத்தன்.அதன்பின்னரே ஏனைய மத,இன பாடசாலை கள் உருவாகின என்று கூறலாம்.

1945 இல் சட்டசபையில், முதலாவது கல்வி அமைச்சரான கலாநிதி சீ.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா இலவச கல்வி முறையை கொண்டுவந்தார். அதன் காரணமாகவே இலவச கல்வியின் தந்தை என அவர் அழைக்கப்படுகிறார்.ஆனால்,அவரும் கத்தோலிக்க பாடசாலைகளை அரசு பொறுப்பேற்கும் ஒருதிட்டத்தை செயற்படுத்த திட்டமிட்டார். ஆனால்,1947 தேர்தலில் அவர் தோல்வியடைந்தார். பின்னர் 1952 தேர்தலில் வெற்றிபெற்ற அவருக்கு வேறு அமைச்சர் பதவி கிடைத்தது. அதனால் அதனை அவர் செய்யமுடியவில்லை. அவருக்கு பின்னர் டபிள்யூ தகநாயக்கா கல்வி அமைச்சராக வந்தார். அவர் கத்தோலிக்க,கிறிஸ்தவ பாடசாலைகளை எடுப்பதை விரும்பவில்லை. அவரைப்போல பல அரசியல்வாதிகள் அந்த திட்டத்தை ஏற்கவில்லை. ஏனெனில் பல அரசியல் வாதிகள் கிறிஸ்தவ பாடசாலைகளிலேயே கற்றவர்கள்.

கத்தோலிக்க பாடாசாலைகளை சுதந்திரக்கட்சி அரசு சுவீகரித்தது

1956 இல் பண்டாரநாயக்காவின் சிங்கள மொழியே நாட்டின் அரச கரும மொழி என்ற சட்டம் வந்த பின்னர், அவரும் இதனை செய்யவில்லை. ஆனால், 1960 ஆடி தேர்தலில் பதவிக்கு வந்த அவரது மனைவியான திருமதி சிறிமாவோவின் சுதந்திரக்கட்சி அரசு கத்தோலிக்க,மற்றும் கிறிஸ்தவ பாடசாலைகளை சுவீகரிக்கும் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றியது. இதற்கு ஐ.தே.கட்சியும்,தமிழரசு கட்சியும் எதிராக வாக்களித்தது.

அமெரிக்காவிலிருந்து எம்.ரூபன்

கம்யூனிஸ்ட்,சம சமாஜ கட்சிகள் அரசுடன் ஆதரவாக வாக்களித்தன. அரசின் இந்த முடிவை கத்தோலிக்க மக்கள் எதிர்த்தனர். ஏனைய கிறிஸ்தவ சபைகள் எதிர்க்கவில்லை.நாட்டில் உள்ள பாடசாலைகளில் 80 வீதமானவை கத்தோலிக்க பாடசாலைகளே. திருமதி பண்டாரநாயக்காவும் கத்தோலிக்க பாடசாலையான நல்லாயன் கன்னியர் மடத்தின் பழைய மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும்,சில பௌத்த அமைப்புகள் கத்தோலிக்க பாடசாலைகளால் பௌத்த மதத்துக்கு பிரச்சினைகள் ஏற்படுவதாக கூறிவந்ததே இதற்கு காரணம்.

கத்தோலிக்க பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதை கத்தோலிக்க மக்கள் கண்டித்தனர். அரசுக்கு சொந்தமாகும் வரையும் அவற்றின் நிர்வாகம்போன்றவை அந்தந்த பகுதி ஆயர்களிடம் இருந்தது. அப்போது கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், சிலாபம், திருகோணமலை-மட்டக்களப்பு, காலி ஆகிய மறை மாவட்டங்களே காணப்பட்டன. நாங்கள் கட்டிய பாடசாலைகளை அரசு எடுப்பதா என்று கூறி, அந்த மக்கள் கத்தோலிக்க பாடசாலைகளில் மறியல் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். அன்று கல்வி அமைச்சராக பதியுதீன் முகமத் பணிபுரிந்தார். இந்த போராட்டத்தினால் அரசு எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. பலவந்தமாக படை பலத்துடன் இப்போராட்டத்தை முறியடிக்கவும் முடிய வில்லை. ஆலயங்களில் துக்க மணி அடித்தனர். ஒருவர் இறந்தால் கத்தோலிக்க தேவாலயங்களில் துக்க மணி அடிப்பார்கள். நீர்கொழும்பு போன்ற கத்தோலிக்க மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் அமைதி ஊர்வலங்கள், பிரார்த்தனைகளும் இடம்பெற்றன. பல பெற்றோர், குருக்கள் கண்ணீர் விட்டனர்.

எதிர்காலத்தில் இவர்கள் எப்படித்தான் பாடசாலைகளை நிர்வகிக்கப்போகிறார்கள். மாணவர்களின் ஒழுக்கம்,கல்வியில் பிரச்சினைகள் எல்லாமே பாதிக்கப்படும், பொறுத்திருந்து பாருங்கள் என அன்றைய யாழ்.ஆயர்.எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அன்று கூறினார். அதேபோல இன்று மாணவர்களின் வீதி போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம், பாடசாலைகளில் பாலியல் பிரச்சினை, அரசு நடாத்தமுடியாது என கைவிட்ட நூற்றுக்கணக்கான பாடசாலைகள் என கல்வி அமைச்சில் இடம்பெறுவதைக்காண்கிறோம். அநுராதபுரம் சென்.ஜோசப் கல்லூரி அரசு சுவீகரிக்க முன்பு யாழ்.ஆயரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கியதும் குறிப்பிடத்தக்கது. யாழ்.அருட்.தந்தையர்களே அதிபர்களாக பணிபுரிந்தனர். இன்று அது பௌத்த கலாசார பாடசாலையாக மாறிவிட்டது. சில தினங்களுக்கு முன் அநுராதபுரத்தில் ஒரு மெதடிஸ்த தேவாலயத்தின் மீது சிலர் கற்களை வீசி தாக்கியுள்ளனர்.

இந்திய கருதினால் தலையிட்ட பாடசாலை சுவீகரிப்பு பிரச்சினை

அன்று இலங்கையில் கருதினால் பணியாற்றவில்லை. இந்திய கருதினாலின் கீழ் இலங்கை கத்தோலிக்க திருச்சபை இயங்கியது. இதனால், பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, இந்திய பிரதமர் நேருவுடன் தொடர்புகொண்டு, அவர் மூலம் இந்திய கருதினாலின் கவனத்துக்கு இப்பிரச்சினையை கொண்டுவந்தார். இந்திய கருதினால் வண.கிறேசியானோ ஆண்டகை இலங்கைக்கு வந்து அன்றைய கொழும்பு பேராயர் தோமஸ் குரே மற்றும் ஆயர்கள்,பிரமுகர்களுடன் பேச்சுக்களை நடாத்தினர். அரசுக்கு எதிராக மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளை கைவிட்டுவிட்டு, அரசுடன் இணைந்து செயற்படுமாறு ஆலோசனை கூறினார். இதனால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது. அதன் பின்னர் கத்தோலிக்க மக்களின் போராட்டம் கைவிடப்பட்டதுடன், ஒரு சில கத்தோலிக்க பாடசாலைகளை தமது பொறுப்பில் இயங்க அனுமதி பெற்று, ஏனையவற்றை அரசிடம் ஒப்படைத்தனர். அந்த பாடசாலைகளே இன்று கத்தோலிக்க தனியார் பாடசாலைகளாக கொழும்பு உட்பட நாட்டின் சில இடங்களில் இயங்குகின்றன.

அதன்பின்னரும் சில காலத்தால் அதிகமாக காணி, நிலம் வைத்திருப்பவர்களிடம் அவற்றை எடுக்கும் ஒரு சட்டம் வந்ததால் கத்தோலிக்க திருச்சபைக்கு சொந்தமான பல தென்னந்தோட்டங்கள், வயல்கள் போன்றவற்றை அரசு எடுக்க நடவடிக்கை எடுத்தது. இங்குள்ள ஐரோப்பிய

16 ஆம் பக்கம் பார்க்க....

எந்தவொரு இடத்திலிருந்தும்
உங்கள் வங்கிச்சேவைகளை
நிறைவேற்றிக்கொள்ள

முழுமையான டிஜிட்டல் வங்கிச் சேவையை முதன்முறையாக உங்களுக்கு வழங்கிய மக்கள் வங்கியின் People's Wave App இனை download செய்யுங்கள்

PEOPLE'S Wave

GET IT ON Google Play
Download on the App Store

1961 PEOPLE'S BANK CALL CENTRE

www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

PEOPLE'S BANK
The Bank of the People

உலகில் தீவிரவாதப் பரம்பல்

கடந்த மூன்று தசாப்தங்களாக யுத்தக்கோரப் பிடிக்குள் சிக்குண்டு இன்றுவரை மீளாத துயருள் மூழ்கியிருக்கும் எம்மினத்துக்கு மீண்டும் ஆறாத ரணத்தை ஏற்படுத்தியு சம்பவமே கடந்த 21.04.2019 அன்று இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்புச் சம்பவமாகும். அந்தவகையில் யேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடுடன் கூடிய 40 ஆம் நாள் நோன்பினை நோற்று இறுதி யேசுபிரானின் உயிர்த்த ஞாயிறு தினத்தில் எவ்வுயிரும் எதிர்பார்த்திராத கோரச் சம்பவம் நாட்டில் நடந்தேறியது. இவை நாட்டின் தலைநகர் மற்றும் மட்டக்களப்பை மையப்படுத்தி தமிழினம் மற்றும் வெளிநாட்டு பிரதானிகள் உள்ள இடங்கள் குறித்து இடம் பெறற்ணீருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு சென் செபஸ்ரின் தேவாலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் ஆகிய மூன்று தேவாலயங்கள் உட்பட கொழும்பின் பிரபலமான நட்சத்திர உணவகங்களான சினமன் கிரான்ட் உணவகம், சங்கரிலா உணவகம், கிங்ஸ்பெரி உணவகம் மற்றும் தெகிவளை மிருகக் காட்சி சாலைக்கு அருகாமையில் உள்ள உணவகம், தெமட்டகொடை அடுக்குமாடித் தொடர் வீடு மற்றும் பூங்கா உட்பட எட்டு இடங்களில் குண்டுவெடிப்பினை மேற்கொண்டிருந்தனர். இச்சம்பவங்களின் போது சுமார் 360 பேரினது உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் 500 க்கு மேற்பட்டோர்கள் காயமடைந்து இ;ன்று வரையும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்கள்.

பின்னணி

அரசியல் நோக்கங்களை அடைவதற்காக மதத்தின் பெயரால் குறித்த சில இஸ்லாமியர்களால் செய்யப்படும் தீவிரவாதச் செயல்களால் இன்று இலங்கையும் ஆளாகி அழுகின்றுது. இத்தீவிரவாதச் செயல்களுக்கான கருத்தியல் ஆதாரமாக குரானின் வசனங்களைக் கொள்ளுவதால் இவை இஸ்லாமியத் தீவிரவாதம் என அழைக்கப்படுகிறது. சில இஸ்லாமியக் குழுக்கள் அவர்கள் நிகழ்த்தும் வன்முறையையும் கொலைகளையும் குரான்வசனங்கள் மற்றும் ஹதீஸ் மூலம் நியாயப்படுத்துகின்றனர். சமீப காலங்களில் உலகெங்கும் தீவிரப் போக்குடைய இஸ்லாமியக் குழுக்கள் பிற இஸ்லாமியப் பிரிவைச் சார்ந்தவர்களையும் இறை நம்பிக்கையற்றவர்களையும் மற்றும் பிற மதத்தவர்களையும் கலீபா ஆட்சிமுறையின் படி தலையை வெட்டிக் கொல்லப் பரிந்துரைப்பது மற்றும் அடிமைப்படுத்துவது ஆகியவற்றைச் செய்கின்றனர். இவ்வாறான செயல்கள் மிதவாத இஸ்லாமியர்களுக்கும் தீவிரவாதப் போக்குடைய இஸ்லாமியர்களுக்கும் கருத்தியல் வேறுபாடுகளை உருவாக்குகின்றன. இத்தீவிரவாதச் செயல்களானது இந்தியா, பாக்கித்தான், ஆப்கானித்தான், நைஜீரியா, சோமாலியா, சூடான், ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கு, ஐரோப்பா, தென்கிழக்கு ஆசியா, தெற்கு ஆசியா, சீனா, காக்கேசியா, வட அமெரிக்கா, மியான்மர், பிலிப்பீன்சு மற்றும் பசிபிக் பிராந்திய நாடுகள் உட்பட உலகம் முழுவதும் நடைபெறுகிறது.

குறித்த சில (இஸ்லாமியர்களால்) இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்கள் குண்டுவெடிப்புகள், கடத்தல், தற்கொலைப் படையினர் போன்றவற்றிற்காக பல்வேறு தந்திரோபாயங்கள் மூலம் இணையம் வழி புதிய உறுப்பினர்களைத் தேர்வு செய்வதாகவும் அறியப்படுகிறது.

கருத்தியல்

இஸ்லாமியத் தீவிரவாதத்திற்கு ஜிகாதே அடிப்படைக் காரணமாகக் கூறப்படுகிறது. ஜிகாத்தானது பெரும்பாலும் இஸ்லாமியர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள அல்லது தங்களது இனத்தவரைத் தாக்கியவரைப் பழிவாங்கும் நோக்கோடு தாங்குதல் ஆகும். பெரும்பாலான ஜிகாதிக் குழுக்கள் மேற்குலக நாடுகள் அல்லது இஸ்ரேலுக்கு எதிராகத் தாக்குதலை நடத்துகின்றன. இந்தியாவில் இந்துகளுக்கும் இஸ்லாமியர்களுக்குமான வரலாற்றுக் காரணங்களாலேயே தீவிரவாதத் தாக்குதல்கள் நடைபெறுகின்றன. அமெரிக்க வெளியுறவுத்துறையின் அறிக்கையின் படி இஸ்லாமியத் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட முக்கியமான நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். உலகம் முழுவதையும் இஸ்லாமியச் சட்ட ஆட்சியின் கீழ் கொண்டுவர வரம்பற்ற தாக்குதல்களை நடத்தலாம் என்பதே ஜிகாத் ஆகும் என பெர்னார்ட் லீவிஸ் கூறுகிறார். மேலும் அவர் இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இஸ்லாமியர் அல்லாத மக்கள் அடிமை வரி செலுத்த வேண்டும் என்றனர்.

நடவடிக்கைகள்

குறித்த சில இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்கள் உலகின் பல நாடுகளில் நடத்திய தீவிரவாதத் தாக்குதல்களில் நடவடிக்கைகளில் சில,

அர்ஜெண்டினா

1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் தியதி அர்ஜெண்டினாவிலுள்ள இஸ்ரேலியத் தூதரகத்தின் மீது ஹர்கத் அல் - ஜிகாத் அல் - இஸ்லாமி எனும் தீவிரவாத அமைப்பு நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 79 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 242 பொது மக்கள் காயமடைந்தனர். இத்தாக்குதலுக்கு ஈரானின் ஹிஸ்புல்லா அமைப்புடன் தொடர்புடைய ஹர்கத் அல் - ஜிகாத் அல் - இஸ்லாமி எனும் தீவிரவாத அமைப்பு பொறுப் பேற்றுக் கொண்டது.

ஆப்கானிஸ்தான்

மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் அறிக்கையின் படி 2006 ஆம் ஆண்டு வரை தாலிபான்கள் மற்றும் ஹெஸ்ப் - இ இஸ்லாமி குல்ப்புதீன்ஆகியவற்றின் தாக்குதல்கள் மூலம் குறைந்தபட்சம் 669 பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கக் கூடும் என்கிறது. மேலும் 350 ஆயுதத் தாக்குதல்கள் பொது மக்கள் மீது நடத்தப்பட்டன எனவும் இவ்வறிக்கை கூறுகிறது.ஐ16ஸ

தஜிக்கிஸ்த்தான்

செப்டம்பர் மாதம் 3 ஆம் தியதி 2010 ஆம் ஆண்டு தற்கொலைத் தாக்குதலில் 2 காவலர்கள் கொல்லப்பட்டனர். 25 பேர் காயமுற்றனர். தஜிக்கிஸ்த்தான் அரசு இத்தீவிரவாதச் செயல்களுக்கு இஸ்லாமிக் மூவ்மெண்ட் ஆப் உஸ்பெக்கிஸ்த்தான் (Islamic Movement of Uzbekistan) எனும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பைக் குற்றம் சாட்டியது.

உஸ்பெக்கிஸ்த்தான்

16 பெப்ரவரி 1999 ஆம் ஆண்டு நடந்த ஆறு ஊர்த்தித் தாக்குதல்களில்(car bombs) 16 பொது மக்கள் கொல்லப்பட்டனர் மேலும் 100-க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இத்தாக்குதலுக்கு அரசு இஸ்லாமிக் மூவ்மெண்ட் ஆப் உஸ்பெக்கிஸ்த்தான் (Islamic Movement of Uzbekistan) எனும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பைக் குற்றம் சாட்டியது.

உஸ்பெக்கிஸ்த்தான்

16 பெப்ரவரி 1999 ஆம் ஆண்டு நடந்த ஆறு ஊர்த்தித் தாக்குதல்களில்(car bombs) 16 பொது மக்கள் கொல்லப்பட்டனர் மேலும் 100-க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இத்தாக்குதலுக்கு அரசு இஸ்லாமிக் மூவ்மெண்ட் ஆப் உஸ்பெக்கிஸ்த்தான் (Islamic Movement of Uzbekistan) எனும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பைக் குற்றம் சாட்டியது.

இஸ்லாமிக் மூவ்மெண்ட் ஆப் உஸ்பெக்கிஸ்த்தான் (Islamic Movement of Uzbekistan) எனும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பு 2004 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் தாஷ்கண்ட்டில் நடத்திய தொடர் தாக்குதல்களில் 33 இராணுவ வீரர்கள், 10 காவலர்கள் மற்றும் நான்கு பொது மக்கள் கொல்லப்பட்டனர். அரசு ஹிஸ்ப் உத் - தாஹிர் (Hizb ut-Tahrir) எனும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பைக் குற்றம்சாட்டியது. இத்தாக்குதல்களுக்கு இஸ்லாமிய ஜிகாத் ஒன்றியம் (Islamic Jihad Union (IJU)) பொறுப்பேற்றுக் கொண்டது.

ஃபுர்காத் காஸிமோவிச் யுசுபோவ் என்பவர் மார்ச் 28 அன்று நிகழ்ந்த தாக்குதலுக்காக 2004 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டார். இவர் ஹிஸ்ப் உத் - தாஹிர் எனும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பிற்காக இத்தாக்குதலை நடத்தினார்.

30 ஜூலை 2004 தாஷ்கண்டின் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலியத் தூதரகங்கள் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் இரண்டு பாதுகாவலர்கள் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலுக்கு இஸ்லாமிய ஜிகாத் ஒன்றியம் பொறுப்பேற்றுக் கொண்டது.

ருஷ்யா

அரசியல் மற்றும் மத நோக்கங்களுக்காக பொது மக்கள் மீது இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகள் 1994 ஆம் ஆண்டு முதல் தாக்குதல் நடத்தி வருகின்றன. மத்திய ரஷ்யா மற்றும் காக்கேசியாயின் வட பகுதிகளில் அதிக அளவு இஸ்லாமியர்கள் வசிக்கும் பகுதிகளில் பிரிவினை வாத நோக்கத்திற்காக இத்தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

23 அக்டோபர் 2002 ஆம் ஆண்டில் 40 முதல் 50 செசன்யத் தீவிரவாதிகள் மாஸ்கோவில் திரையரங்கு ஒன்றில் நடத்திய தாக்குதலில் 170 பேர் கொல்லப்பட்டனர் மேலும் 700-க்கும் அதிகமானோர் காயமுற்றனர்.

செப்டம்பர் மாதம் 2004 ஆம் ஆண்டில் பெஸ்லான் பள்ளியில் நடந்த தீவிரவாதத் தாக்குதல் சம்பவத்தில் 1000 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல்களைத் தொடர்ந்து அமெரிக்க வெளியுறவுத் துறை காகேசிய எமிரேட் எனும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பை தடை செய்யப்பட்ட அமைப்பு என அறிவித்தது.

பிரான்ஸ்

2015 நவம்பர் 13 அன்று பிரான்சின் தலைநகர் பாரிசில் இசிஸ் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

7 சனவரி 2015 அன்று ஒ.ப.நே 10:30 மணியளவில் முகமூடி அணிந்த மூன்று தீவிரவாதிகளால் பிரான்சு நாட்டின் பாரிஸ் நகரில் அமைந்துள்ள சார்லி ஹெப்டோ பத்திரிகையின் தலைமையகத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். முதலில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி 12 பேர் கொல்லப் பட்டனர் மற்றும் 11 பேர் காயமுற்றனர்.

துருக்கி

துருக்கியின் ஹெஸ்புல்லா அமைப்பு மற்றும் குர்து சுன்னு அமைப்பு ஆகிய இரண்டும் தீவிரவாத அமைப்பு என வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவை 2003 நவம்பர் குண்டு வெடிப்பிற்கு காரணமானவை என குற்றம் சுமத்தப்பட்டன. இத்தீவிரவாதத் தாக்குதல்களில் 58 பேர் கொல்லப்பட்டனர்.

ஐரோப்பா

சார்லி ஹெப்டோ துப்பாக்கிச் சூடு

மேலும் ஐரோப்பாவின் பல பகுதிகளில் பொதுமக்கள் மீது குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் தீவிரவாத அமைப்புகளால் நடத்தப் பட்டுவருகின்றன. 1985 ஆம் ஆண்டு ஸ்பெயினின் மாட்ரிட் நகரின் உணவுச் சாலையின் மீது நடத்தப் பட்ட தீவிரவாதத் தாக்குதலில் 18 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மேலும் 82 பொதுமக்கள் காயமடைந்தனர். இஸ்லாமிய ஜிகாத் அமைப்பு இத்தாக்குதலுக்கு பொறுப்பேற்றுக் கொண்டது. இத்தாக்குதலுக்குக் காரணமான பாகிஸ்தான் எழுத்தாளர் மற்றும் அல் காயிதா உறுப்பினர் முஸ்தபா செத்மரியம் நாசர் என்பவரை சரணடையுமாறு ஸ்பெயின் கேட்டுக் கொண்டது.

ஈராக்

தற்காலத்தில் மிக அதிக அளவு தீவிரவாதத் தாக்குதல்கள் நடைபெறும் இடம் ஈராக் ஆகும். 2005 ஆம் ஆண்டின் ஈராக் போரின் போது சுமார் 400 தீவிரவாதத் தாக்குதல்கள் பொதுமக்களின் மீது நடத்தப்பட்டன இதில் சுமார் 2000 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 2006 ஆம் ஆண்டின் உலகில் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதல்களில் (6,600) பாதிக்கும் மேற்பட்ட தீவிரவாதத் தாக்குதல்கள் ஈராக்கில் நடைபெற்றது இதில் 13,000 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையத்தின் அறிக்கை கூறுகிறது.

ஈராக்கில் நடந்த இஸ்லாமியத் தீவிரவாதத் தாக்குதல்களின் பட்டியல்

பொதுமக்களிடம் கண்ணியமாக நடந்துகொள்பவர்களாகவும் ஈராக் தீவிரவாதிகள் அறியப்படுகின்றனர். இந்திய செவிலியர்கள் கடத்தப்பட்ட சமயம், விடுவிக்கப்பட்ட பின்னர் செவிலியர்கள் இதனைத் தெரிவித்திருந்தனர்.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனப் பகுதிகள்

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கம் 1987 ஆம் ஆண்டு இஸ்ரேல் பகுதிகளில் பொதுமக்கள் மீதும் இராணுவத்தினர் மீதும் நடத்தப்படும் தீவிரவாதத் தாக்குதல்களை ஊக்குவித்தது. பின்னர் 1988 ஆம் ஆண்டு ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலை அழித்தொழிப்போம் என அறிவித்தது. ஹமாஸ் இயக்கத்தின் இராணுவப் பிரிவு இஸ்ரேல் பகுதியில் நடந்த பல தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்றுள்ளது. குறிப்பாக தற்கொலைத் தாக்குதல்கள்மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள். இஸ்ரேல் நாட்டைப் பாலஸ்தீனர்களுக்குப் பெற்றுக்கொடுத்து இஸ்ரேல், மேற்குக் கரை, காசா ஆகிய பகுதிகளை இஸ்லாமிய நாடாக மாற்றுவதே ஹமாசின் முக்கிய குறிக்கோள் ஆகும். மேலும் ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீனிய அமைதி முன்னெடுப்புகளைக் கெடுக்கும் விதமாகப் பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளது. ஹமாஸ் இயக்கம் ஐரோப்பிய ஒன்றியம், கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, இஸ்ரேல், ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைக் கழகம் ஆகியவற்றால் தீவிரவாத அமைப்பு என கருதப்பட்டு தடை செய்யப்பட்ட அமைப்பாகும். ஆனால் ஹமாஸ் இயக்கம் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்ட இயக்கமாததால் ரஷ்யா இவ்வியக்கத்தைத் தடை செய்யவில்லை. 2000 முதல் 2005 ஆம் ஆண்டுவரை நடந்த தற்கொலைத் தாக்குதல்களில் ஹமாஸ் இயக்கத்தால் நடத்தப்பட்டவை ஆகும். ஹமாஸ் இயக்கம் தனது முதல் தற்கொலைப்படைத் தாக்குதலை 1993 ஆம் ஆண்டு நடத்தியது. மேலும் ஹமாஸ் இயக்கம் இத்தகைய பயங்கரவாதச் செயல்கள் இஸ்ரேலை அழித்தொழிப்பதற்காக நடத்தப்படுபவை என்றும் இவை தொடரும் என வும் இவற்றை நியாயப்படுத்துகிறது.

ஹமாஸ் நடத்திய தீவிரவாதத் தாக்குதல்களின் பட்டியல்

லெபனான்

லெபனானிலுள்ள ஹிஸ்புல்லா அமைப்பு 1983 ஆம் ஆண்டு அமெரிக்கத் தூதரகத்தில் தற்கொலை குண்டு வெடிப்புத் தாக்குதலை நடத்தியது. இத் தாக்குதலில் 258 அமெரிக்கர்களும் 58 பிரெஞ்சுக் காரர்களும் கொல்லப்பட்டனர். இந்த அமைப்பானது அமெரிக்கா, கனடா, இஸ்ரேல், பஹரைன், பிரான்சு, நெதர்லாந்து, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் இவ்வமைப்பத் தீவிரவாத அமைப்பாகக் கருதி தடை செய்துள்ளன. இந்தத் தீவிரவாத அமைப் பிற்கு ஈரான் அதிக அளவு நிதி வழங்கி வருகிறது.

ஹிஸ்புல்லா அமைப்பு நடத்திய தீவிரவாதத் தாக்குதல்களின் பட்டியல்

சவுதி அரேபியா

அமெரிக்கா 1990 ஆம் ஆண்டு சதாம் உசேன் குவைத்தை ஆக்கிரமித்ததை எதிர்த்து தனது படைகளை சவுதி அரேபியாவிற்கு அனுப்பியது. அங்கு நடந்த வளைகுடாப் போரில் அமெரிக்கக் கூட்டணிப் படைகள் வெற்றி பெற்றன. சவுதி அரேபியாவில் தான் இஸ்லாமியர்களின் புனித நகரங்களான மெக்காமற்றும் மெதினா அமைந்துள்ளன. இந் நகரங்களில் அமெரிக்கப் படைகள் நுழைந்ததை இஸ்லாமிய அடிப்படைவாதிகள் விரும்பவில்லை. மேலும் ஒசாமா பின் லாடன் அமெரிக்காவிற்கு எதிராக ஜிகாத்தை அறிவித்ததும் இந்நிகழ்வின் காரணமாகத்தான் என நம்பப்படுகிறது.

சவுதி அரேபியாவில் நடந்த இஸ்லாமியத் தீவிரவாதத் தாக்குதல்களின் பட்டியல்

ஏமன்

உலகளாவிய தீவிரவாதத்திற்கு எதிரான போரில் ஏமன் முக்கியமான கூட்டாளி என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அல் காயிதா ஏமனில் நடத்திய தீவிரவாதத் தாக்குதல்களின் பட்டியல்

எகிப்து

எகிப்து நாட்டைச் சேர்ந்த சுணி இஸ்லாமியக் குழு ஆகும். இக்குழுவானது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவால் தீவிரவாத இயக்கம் என தடை செய்யப்பட்டுள்ளது. இக்குழுவின் முக்கிய நோக்கம் எகிப்து அரசை அகற்றிவிட்டு முகம்மது முர்ஸியா தலைமையில் ஓர் இஸ்லாமிய ஆட்சியை நிறுவுவது ஆகும். இந்த இயக்கம் 1992 முதல் 1998 வரை எகிப்து அரசுக்கு எதிரான தாக்குதல்களின் மூலம் 796 எகிப்தியக் காவலர்களையும், போர் வீரர்களையும் மற்றும் பொது மக்களையும் கொன்றுள்ளது. இந்த அமைப்பிற்கு ஈரான் மற்றும் சூடான் அரசுகள் ஆதரவளிக்கின்றன. மேலும் அல் காயிதா இந்த அமைப்பின் தீவிரவாதச் செயல்களுக்கு உதவுகிறது. 2008 செப்டம்பர் 17 அன்று ஏமனில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகம் தாக்கப்பட்டதில் 18 பேர் கொல்லப்பட்டனர். 16 பேர் காயமடைந்தனர்.

எகிப்தில் நடந்த தீவிரவாதத் தாக்குதல்களின் பட்டியல்

அல்ஜீரியா

1992 முதல் 1998 வரையிலான காலகட்டத்தில் அல்ஜீரியாவில் ஆயுதம் தாங்கிய இஸ்லாமியக் குழுக்களின் தீவிரவாதச் செயல்கள் உக்கிரமாயிருந்தன. இஸ்லாமியர்களின் மக்கட்தொகையை அதிகரிக்கும் எண்ணத்தில் அவை செயல்பட்டன. இதற்கான பெரிய எண்ணிக்கையிலான பொதுமக்களை இன அழிப்பு செய்தன. ஒட்டு மொத்தக் கிராமத்திலுள்ளவர்களையும் கொன்றொழித்தனர். அல்ஜீரிய அரசை அகற்றிவிட்டு அங்கு இஸ்லமிய அரசை உருவாக்க வேண்டும் என விருப்பின. அல்ஜீரியாவில் வசிக்கும் வெளிநாட்டினரைக் குறிவைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டது. 100 க்கும் அதிகமான வெளிநாட்டினர் கொல்லப்பட்டனர். சமீபகாலங்களில் ஏற்கனவே பிளவுற்ற இரண்டு குழுக்கள் அல் காயிதாவின் கீழ் இணைந்து இஸ்லாமிக் மொஹரப் எனும் பெயரில் இயங்கிவருகின்றன.

அல்ஜீரியாவில் நடந்த தீவிரவாதத் தாக்குதல்களில் பட்டியல்

கனடா

கனடிய அரசின் அறிக்கையில் இஸ்லாமித் தீவிரவாதம் கனடாவுக்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கனடிய பாதுகாப்புப் புலனாய்வு சேவைத் துறையின் உளவுப் பிரிவு இப் பிரச்சனையைத் தீவிரமாக கண்காணிக்கிறது. 2006 ஆம் ஆண்டில் தெற்கு ஒண்டாரியோவில்விமானத் தாக்குதலில் ஈடுபட்ட 18 அல் காயிதா உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும் ஒண்டாரியா பகுதியில் பிற தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்ட சிலரும் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் தீவிரவாதத் தாக்குதல்

கடந்த வாரம் அதாவது 21.04.2019 அன்று ஜேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு ஞாயிறு அன்று இலங்கையில் எட்டு இடங்களில் தீவிரவாதிகளால் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்;பு சென் செபஸ்ரியன் தேவாலயம், மட்டக்களப்பு சியோன் தேவாலயம் மற்றும் கொழும்பு நட்சத்திர விடுதிகளான சினமன் கிரான்ட் விடுதி. சங்கரிலா, கிங்ஸ்பெரி விடுதி ஆகியவை உட்பட தெகிவளை மற்றும் தெமட்டகொடையில் இரு இடங்கள் அடங்கலாக தீவிரவாதக் குழுக்களால் குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்த்தப்பட்டிருந்தது. இதன்போது சுமார் 360 பொதுமக்கள் உயிரை இழந்ததுடன் 500 க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துமுள்ளனர். சுமார் 20 க்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான தீவிரவாத அமைப்புக்களை நாட்டில் வேரோடு பிடுங்கி எறிவதன் மூலம் உலகில் அனைத்து நாடுகளையும் தீவிரவாதத் தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற முடியும் என்பதே இன்றைய நிலைப்பாடாகும்.

தொகுப்பு: தமிழ்நிலா



மீண்டும் ஒரு அழிவு வேண்டாம்!

இலங்கையில் நாட்டின் மக்கள், 2009க்கு முன் பல்வேறு அழிவுகளை கண்டனர். இரத்தக்கறைகளுடனையே வாழும் அவலத்தினையும் கொண்டிருந்தனர். பின்வந்த ஒவ்வொரு ஆண்டும் பேரிழப்புக்களைக் காணாத இழப்புக்கள் குறைந்த ஆண்டுகளாகவே இருந்தன. சிறிய சிறிய இயற்கை அனர்த்தங்களிலான இழப்புக்களையும், விபத்துக்களிலான இறப்புக்களையுமே சந்தித்துவந்தனர். இதனால் மக்கள் மனதில் ஓரளவிலான நிம்மதியான நிலை காணப்பட்டது. அச்சமின்றி பயணிக்கக்கூடிய சூழல் இருந்தது. பண்டிகைகளை மகிழ்ச்சிகரமாக களிக்க கூடியவகையில் நாட்டின் நிலையிருந்தது. இவ்வாறான சூழலில் எதிர்பாராது நாட்டின் தலைநகர் கொழும்பில் இருந்த தேவலாயங்கள், ஹோட்டல்கள், மட்டக்களப்பு மாவட்டத்தின் சீயோன் தேவாலத்திலுமாக எட்டு இடங்களில் நடாத்தப்பட்ட தற்கொலைகுண்டுத்தாக்குதல் பேரிடியையும், பேரீடரையும் உருவாக்கியுள்ளன. மழலை மொழியில் பேசி விளையாடிய சின்னஞ்சிறு குழந்தைகள் தொடக்கம் ஹோட்டலில் தங்கியிருந்த பெரியவர்கள் வரையான

359பேர் நாசகார செயல்களினால் பலியாகியுள்ளனர். 500க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதில் 45சிறுவர்கள் உயிரிழந்துள்ளமை மிகவேதனைக்குரிய

நாட்டில் நடைபெற்ற கடந்த கால யுத்தத்தின் அனுபவத்தினால், மீண்டுமொரு யுத்தமோ, இவ்வாறான தாக்குதல்களோ நடந்துவிடக்கூடாது என்பதனை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையாகவிருந்தது. ஆனாலும் அக்கோரிக்கை இன்னமும் நிலைநாட்டப்படவில் லையென்பதையே நாட்டில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல் வெளிப்படுத்தி நிற்கின்றது

சம்பவமாக மாறியுள்ளது. இலங்கை நாட்டினைச் சேர்ந்தவர்கள் மாத்திரமின்றி வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் இக்குண்டுத்தாக்குதல்களிலே மரணித்துள்ளனர். இதனால் நாடு அசாதாரண சூழலினை அடைந்திருக்கின்றது.

குண்டுத்தாக்குதல்கள் நடைபெற்று ஒருவாரமாகின்ற நிலையில் நாட்டில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள், சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் தொடர்பிலும், அவர்களது அமைப்புத் தொடர்பிலும், அவர்களால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலும் கருத்துக்கள் வெளியாகி வருவதுடன், நாட்டில் வெடிபொருட்கள் மீட்கப்பட்டும் வருகின்றன. இதனால் இலங்கை நாடு சாதாரண நிலையினை அடையாது, அசாதாரண சூழலிலேயே இருந்து கொண்டிருக்கின்றது.

தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இக்குண்டுத்தாக்குதல் மிகவும் மிலேச்சத்தனமானதெனவும், இவ்வாறான குண்டுத்தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கதெனவும் பல்வேறு நாட்டுத் தலைவர்களும் கண்டனங்களையும் தெரிவித்துள்ளனர். அதேவேளை இக்குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரிகளை இல்லாமல் செய்வதற்கான தாம்சார்ந்த ஒத்துழைப்புக்களை மேற்கொள்வதாகவும் கூறியிருக்கின்றனர். ஒத்துழைப்பினையும் வழங்கியுள்ளனர். எதிர்பாராத நிலையில் இக்குண்டுத்தாக்குதல் இடம்பெற்றிருந்தமை இலங்கை நாட்டில் உள்ள மக்களை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ஆனாபோதிலும் இக்குண்டுத்தாக்குதல் இலங்கையில் நடைபெறவிருப்பதாக முன்கூட்டியே உளவுப்பிரிவினரால் தகவல்கள் வழங்கப்பட்டதாகவும், இதனை இலங்கை அரசாங்கம் சரியாக கையாளவில்லையென்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனால் மரணித்த, காயமடைந்தவர்களுக்கான முழுப்பொறுப்பையும் இலங்கை அரசாங்கமே ஏற்க வேண்டுமென்ற கருத்துக்களும் இலங்கை அரசியல்வாதிகளினாலும் கூறப்பட்டுவந்த நிலையில், நாட்டு மக்களிடம் மன்னிப்புக்கோருவதாகவும், அப்பொறுப்பினை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுவதாகவும் கூறியிருக்கின்றது. ஆனாலும் மரணித்த உயிர்களை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாதென்பதே யாதார்த்தமுமாகும். பாதிக்கப்பட்டிருக்கின்ற, காயமுற்றிருக்கின்றவர்களுக்கு உளரீதியான ஆற்றுப்படுத்தல்களையும், வாழ்க்கைக்கான ஏனைய உதவிகளையும் மேற்கொள்ள வேண்டியதும் அரசின் முக்கிய பொறுப்பாகவிருக்கின்றன. குறிப்பாக ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த இரண்டுக்கு மேற்பட்டவர்கள், அக்குடும்பத்தின் பிள்ளைகள் இருவர், மூவர், குடும்பத்தின் தந்தை, மகன் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் இறந்திருக்கின்றமை அக்குடும்பங்களின் உறவுகளை மிகவாக பாதித்திருக்கின்றது. இவ்வாறு பாதித்திருக்கின்ற மக்களை வழமைக்கு கொண்டுவருவதற்கு தற்போதைய சூழலில் உள ஆற்றுப்படுத்தலே அவசியமாகியிருக்கின்றது.

தலைநகர் கொழும்பிலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் நடைபெற்ற இக்குண்டுத்தாக்குதலினால் இரு இடங்களும் சோகத்தில் ஆழ்ந்திருக்கின்றன. இலங்கை நாடே வியப்பினையும், சோகத்தினையும் எதிர்கொண்டாலும் உறவுகளை பறிகொடுத்தவர்கள் என்ற ரீதியில் இரண்டு மாவட்ட மக்களும் அதிகம் கண்ணீரிலே இருந்து மீள்எழமுடியாதவர்களாக உள்ளனர். குண்டுத்தாக்குதல் இடம்பெற்றபோது, எவ்வாறு நடந்தது, என்ன நடந்தது என்று தெரியாமலே பலர் இருந்த நிலையில், அதன்பின்னரான இழப்புக்களின் தொகை அதிகரிப்பும், தொடர்சம்பவங்களும் இலங்கை நாட்டின் அரசாங்கத்தினை அடுத்த கட்ட நிலையினை நோக்கிச் செல்ல வைத்துள்ளது. மதத்தலமீதான தாக்குதல், ஹோட்டல்கள் மீதான தாக்குதல் எதற்காக மேற்கொள்ளப்பட்டன என்ற வினாவினை தொடுத்துநிற்கின்றன. இத்தாக்குதல்களுக்கு காரணமென்ன? இலங்கையில் இத்தாக்குதல் ஏன் மேற்கொள்ளப்பட்டதென்ற வினா பலர் மத்தியில்

ஏற்பட்டிருக்கின்ற நிலையில், நாட்டில் தொடர் கைதுகளும், விசாரணைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனால் உறுதியான, தீர்க்கதரிசனமான விடயங்களை அறியமுடியாதுள்ளபோதிலும், அவ்வவ்போது பல்வேறுகாரணங்கள் கூறப்பட்டுவருகின்றமையுடன், இத்தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு உரிமை கோரியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இங்கு கைதுசெய்யப்பட்டவர்களும், தற்கொலைதாரிகள் என அடையாளம் காணப்பட்டவர்களுமாக பலர் இலங்கைநாட்டினைச் சேர்ந்தவர்களே என்றும் கூறப்படும் சூழலில்தான், இத்தாக்குதல்தாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் தொடர்புள்ளதென்றவகையில் கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்ற அதேவேளை, அதனையும் மறுத்தும் வருகின்றனர். இதன் உண்மை, பொய்களை அறிவதற்கு நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதே எல்லோரதும் விருப்பும், அவ்வாறு நடைபெறும் என்ற நம்பிக்கையுமே மக்கள் மத்தியில் இருக்கின்றன.

உயிர்த்த ஞாயிறு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலிகளும், தேசிய துக்க தினமும் அனுஸ்டிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், நாடுபதற்றமான சூழலிலேயே இன்று வரை இருந்து கொண்டிருக்கின்றது. நாட்டில் ஏற்பட்ட தாக்குதல்களை தொடர்ந்து நாட்டின் நிலைமையை சாதாரண நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்பதில் அரசாங்கம் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமையும் கவனிக்கத்தக்கதே. நாட்டில் அவ்வவ்போது அவசியத்தன்மையினைக் கருத்தில் கொண்டு ஊரடங்கு சட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்தி வருவதுடன், அவசாரகால சட்டத்தினையும் அமுல்படுத்தியுள்ளனர். சமுகவலைத்தளங்களின் ஊடாக போலியான தகவல்கள் பகிரப்படும் என்பதுடன், மதரீதியான, இனரீதியான வன்முறைகளை கக்கும் தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்படும், இதன்மூலமாக இன்னமும் நாட்டிலே பிரச்சினைகள் அதிகரிக்ககூடும் என்ற வகையில் சமூகவலைத்தளங்களை இலங்கை நாட்டு அரசாங்கம் தற்காலிகமாக தடைசெய்துள்ளது. ஆனாபோதிலும் வேறுவகையிலான தொழிநுட்ப திறன்களை பாவித்து சமுகவலைத்தளங்களை பயன்படுத்துகின்ற நிலையும் இருக்கின்ற நிலையில், அவ்வாறானவர்களையும் கைதுசெய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. பொய்யான செய்திகளை பரப்புவதனை சமுகவலைதளங்கள் நிறுத்தாவிட்டால் சமுகவலைத்தளங்களை

முனையூரான்

முழுமையாக தடைசெய்துவிடுவேன் என்ற எச்சரிக்கையினையும் நாட்டின் தலைவர் அண்மையில் விடுத்துள்ளார்.

பத்தாயிரம் இராணுவத்தினர் நாடுபூராகவும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆங்காங்காங்கு தேடுதல்களும், சோதனைகளும் நடைபெற்று வருகின்றமையுடன், மதத்தலங்கள், பொது இடங்களிலும் பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

போக்குவரத்துத்தொடர்பிலும், போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் தொடர்பிலும், அவை வீதிகளில் நிறுத்திவைக்கப்படவேண்டிய முறைதொடர்பிலும், பொதுஇடங்களில் முகத்தினை மூடி செல்லக்கூடாதென்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் மக்கள் கவனம்செலுத்த வேண்டுமென்பதனையும் அரசாங்கம் அறிவித்துள்ளமையுடன், சந்தேகமான வாகனங்கள், பொருட்கள், நபர்கள் தொடர்பிலும் தகவல்களை வழங்குமாறும் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை அனைத்துவீடுகளையும் சோதனையிடும் வகையில் வீட்டில் தங்கியுள்ளவர்கள் தொடர்பிலும் தகவல்களை கோரியுள்ளனர். இதன்மூலம் நாட்டில் தற்போதுஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளை தீர்க்கமுடியும் என்பதே அரசின் எண்ணமாகும்.

நாட்டில் உள்ள பாடசாலைகளுக்கு 1ம்தவணை விடுமுறை வழங்கப்பட்டு அப்பாடசாலைகள் அனைத்தும் கடந்த 22ம் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த நிலையில், எதிர்பாராது இடம்பெற்ற தொடர் குண்டுத்தாக்குதலின் விளைவினால் எதிர்வரும் 29ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்திருக்கின்றது. இதன்காரணமாக தற்போதைய சூழல் சாதாரணநிலையினை அடையாமையினால் பாடசாலையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாப்பு குழுக்களை அமைக்கும் நோக்கில் விசேட சுற்றுநிருபம் ஒன்றினையும் அரசாங்கம் வெளியிட்டுள்ளது. இதன்மூலமாக பாடசாலைகளின் பாதுகாப்பினை நிலைநாட்ட அரசுமுயல்கின்றது. அதேபோன்று கிராமங்கள் ரீதியாக அமைக்கப்பட்டுள்ள சிவில்பாதுகாப்பு குழுக்களை வலுப்படுத்தும் விசேட சுற்றுநிருபத்தினையும் அரசாங்கம் வெளியிட்டுள்ளது. நாட்டு அரசாங்கத்தின் மீது உளவுத்துறையினர் கூறியதனை கவனத்தில் கொள்ளவில்லை யென்ற குற்றச்சாட்டுக்கள் இருந்தபோதிலும், தொடர்தேர்ச்சியாக நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை வரவேற்கத்தக்கதே.

நாட்டில் நடைபெற்ற கடந்த கால யுத்தத்தின் அனுபவத்தினால், மீண்டுமொரு யுத்தமோ, இவ்வாறான தாக்குதல்களோ நடந்துவிடக்கூடாதென்பதனை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையாகவிருந்தது. ஆனாலும் அக்கோரிக்கை இன்னமும் நிலை நாட்டப்படவில்லையென்பதையே நாட்டில் நடைபெற்ற குண்டுத்தாக்குதல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

நாட்டில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற ரீதியில் இழப்புக்களை சந்தித்தவர்கள் என்ற ரீதியிலும், தாங்கொண்ணா அவலங்களை எதிர்கொண்டவர்கள் என்ற ரீதியிலும், அச்சூழலைப்பற்றி நினைத்துப்பார்;ப்பதற்கோ, அதனை அனுபவிப்பதற்கோ அஞ்சுகின்றனர். இவ்வாறான தாக்குதல்களாலான சூழலைக்கண்ணுற்றாலோ பதட்டமடைகின்றனர். எனவே கவலைதோய்ந்து, மீண்டும் இவ்வாறான சூழலை எதிர்பாராது வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள் எவ்வித அஞ்சமின்றியும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கேற்ற சூழலை இலங்கை அரசாங்கம் வழங்கவேண்டும். அதேவேளை மீள்நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களின் கோரிக்கையுமாகும்.



மன்னிக்கமுடியாத சம்பவங்கள்!

இலங்கையின் தற்போதைய இக்கட்டான நிலைமைகளைப் பயன்படுத்தி ஒரு சில அரசியல்வாதிகள் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போன்று தமது அரசியல் இலாபங்களுக்காக காய்களை நகர்த்துவது அவ்வளவு ஆக்க பூர்வமான செயற்பாடுகளாக அமையாது.

உலகில் மனிதன் வாழும் அதிகமான நாடுகளில் சமாதானத்திற்கும், இன ஐக்கியத்திற்கும் எதிரான ஒரு கூட்டம் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இவர்களால் அந்த நாட்டுக்கு மட்டுமல்லாமல் உலக நாடுகளுக்கும் அது பாரிய ஆபத்தான ஒன்றாகவே இருந்து வருகின்றனர்.

இவ்வாறனவர்கள் சமய, மத ரீதியாகவும், அரசியல், பொருளாதார ரீதியாகவும் தமது சுய இலாபங்களுக்காக செயற்படுபவர்களாகும். இன்று பயங்கரவாதம் என்பது சர்வதேச மயப்படுத்தப்பட்ட ஒன்றாகமாறி உலகின் பல நாடுகளில் மக்களின் இயல்பு வாழ்வினை கேள்விக் குறியாக்கி வருவதுடன் மனிதாபிமானச் செயற்பாடுகளை முற்றாகவே மழுங்கடிக்கச் செய்து வருகின்றன.

உலக பயங்கரவாதம் ஏற்படுவதற்கு ஒருசில வல்லரசு நாடுகளே காரணமாகும். இந்த நாடுகள் உலகில் அமைதி வேண்டும், சமாதானம் வேண்டும் என்று வெளிப்படையாக கூக்குரலிட்டுக் கொண்டு தாம்தான் உலகில் சமாதானப் புறாக்கள் என்று விலாசமிட்டுக் கொண்டும் மறுபுறத்தில் பொருளாதார வளமுள்ள இஸ்லாமிய நாடுகளை இலக்காக வைத்து அந்த நாடுகளின் வளங்களை சூறையாடுவதற்கு தமது உதவிகளை வழங்குவாத கூறிக் கொண்டு அந்த நாடுகளுக்குள் ஊடுருவி தமது கபடத்தனங்களைக் காட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

முக்கியமாக ஒரு நாட்டில் இனவாத அல்லது மதவாத பிரச்சினைகளை உண்டாக்கி ஒருபுறம் அரசுக்கு உதவுவதாகவும் மறுபுறம் பயங்கரவாத சக்திகளுக்கு உதவிக் கொண்டு இரட்டை வேடம் பூண்டு கொண்டு இன்று பல உலக நாடுகளை அழிவின் விழிளிம்புக்கு கொண்டு வந்து விட்டது மட்டுமல்லாது பிரச்சினைகள் இன்றி நிம்மதியாக இருக்கும் நாடுகளை நோக்கி தமது காய்களை நகர்த்துகின்றனர் என்பதே கவலைக்குரிய விடயமாகவும், சிந்திக்க வேண்டிய விடயமாகவும் இருக்கின்றன.

கடந்த மூன்று தஸாப்த காலமாக இந்த நாட்டில் தமிழ் பிரிவினைவாதம் கோரி விடுதலைப் புலிகள் அரசுக்கும், அரச படைகளுக்கும் எதிராக மேற் கொண்ட யுத்தம் இலங்கையில் சகல மக்களையும் தாராளமாகவே பாதித்தது. அதிலும் இலங்கை வாழ் வடகிழக்கு முஸ்லிம்கள் அவர்களின் கோரத் தாண்டவத்தால் இன்று வரை சொந்த இடமின்றி அகதிகளாக பல்வேறுபட்ட வடுக்களுடன் தாண்டவமாடுகின்றனர். இது விடயத்தில் இன்றுவரை முஸ்லிம் மக்கள் நியாயமின்றி இருக்கின்றனர். இதற்கு உடந்தையானவர்கள் இன்றும் இலங்கைப் பாராளுமன்றம் வரை இருக்கின்றனர். அமைச்சர்களாகக்கூட இருந்துள்ளனர். என்றாலும் இவர்கள் இன்றுவரை எந்தவித விசாரணைகளும் இன்றி இன்று தாம் செய்ததை மறந்துவிட்டு தற்போது குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முனைகின்றனர்.

கடந்த 30வருட துன்பியல் நிலைமைகளுக்கு வித்திட்ட பயங்கரவாதச் செயற்பாடுகள் கடந்த 2009ஆம் ஆண்டு முடிவிற்கு கொண்டு வரப்பட்டு மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க வழிசமைத்தது எனலாம். இவ்வாறான நிலையில் தற்போது அமைதி குழம்பி மீண்டும் அச்ச நிலைமைகள் தோற்றம் பெற்றுள்ளமை வருந்தத்தக்க ஒரு விடயமாகும்.

கோப்புப்படம்

கடந்த 10 வருடமாக மக்கள் பயங்கரவாதச் செயற்பாடுகள் அற்று எந்தவித அச்சமும் இன்றி அமைதியாக வாழும் நிலையில் கடந்த 21ஆம் திகதி கத்தோலிக்க ஆலயங்களிலும், உல்லாச ஹோட்டல்களிலும் இடம் பெற்ற மனிதாபிமான மற்ற குண்டுத்தாக்குதல்கள் இலங்கையின் இன ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் சின்னா பின்னமாக்கி ஒரு சமுகத்தினை இன்னொரு சமுகம் குற்ற உணர்வுகளுடனும், சந்தேகங்களுடனும் பார்க்குமளவிற்கு வழிகோலி விட்டது.

ஒருசில மதவாத கயவர்களின் கோழைத்தனமான செயற்பாடுகள் இன்று இந்தச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் முஸ்லிம்கள்தான் என்ற முத்திரை ஒட்டு மொத்தமாக குத்தப்பட்டு விட்டது. கடந்த 30 வருட கோர யுத்தத்தின் வடுக்களில் இருந்து இலங்கை வாழ் மக்கள் மீண்டெழுவதற்குள் கடந்த 21ஆம் திகதிய குண்டுத்தாக்குதல் பாரிய சீரழிவை ஏற்படுத்தி விட்டது. சகோதரத்துடன் வாழ்ந்த மக்களுடன் அவர்களின் முகங்களைப் பார்ப்பதற்குக்கூட வெட்கித் தலைகுனிய வேண்டிய தர்ம சங்கடமான நிலைமைகளை தோற்று வித்து விட்டது எனலாம்.

குறுகிய நோக்கங் கொண்ட ஒருசில கோழைகளின் தீய செயற்பாட்டினால் சுமார் 350க்கும் மேற்பட்ட அப்பாவி உயிர்களை இன்று அநியாயமான முறையில் பலி கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. யார் என்னதான் சொன்னாலும் இச்செயற்பாடு மாபெரும் துரோகத்தனமானது, மன்னிக்க முடியாத கடுமையான கண்டனத்திற்குரிய விடயமாகும்.

ஆனால் நடைபெற்ற சம்பவங்களை வைத்து இன்று பல அரசியல் வாதிகள் தமது அரசியல் குரோதங்களுக்காகவும், தாம் இழந்த அரசியல் செல்வாக்குகளை மீண்டும் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் மீதும், அரசியல் வாதிகள் மீதும் குற்றங்களைச் சுமத்தி பொய்யான கருத்துக்களை முன் வைக்கின்றமை மிகவும் பாரதூரமான ஆபத்தான விடயமாகும் என சமாதான விரும்பிகளும், சமுக ஆர்வளர்களும் கவலை வெளியிடுகின்றனர்.

இன்று பாராளுமன்றத்தில் ஒருசில அரசியல் வாதிகள் தமது அரசியல் பலவீனத்தாலும், காழ்ப்புணர்ச்சியனாலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது வீண்பழி சுமத்தும் நாடகங்கள் அரங்கேறி வருகின்றன. இந்த விட யங்கள் பல்லின சமுகங்கள் வாழும் இந்த நாட்டில் அவ்வளவு ஆக்கபூர்வமான நல்ல செயற்பாடுகளாக இருக்காது எனலாம்.

இன்று பாராளுமன்றத்தில் இருக்கும் அரசியல் கட்சிகளில் உள்ள பல பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்பு தீவிரவாத கொள்கைளுடன் அதன் வழி நடத்தலில் வந்தமை என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். ஜே.வி.பியாக இருக்கலாம், தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இருக்கலாம், விமல் வீரவன்சவின் கட்சியாக இருக்கலாம், டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியாக இருக்கலாம் ஏன் ஆளும் மற்றும் எதிர்தரப்பு கட்சிகளுக்குள்ளும் தீவிரவாத கொள்கை உடையவர்களும், இனவாதக் கொள்கை உடையவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இவர்கள் எல்லோரினதும் கடந்தகால வரலாறுகளை சற்று பின்நோக்கிப் பார்த்தால் அவர்களின் முன்னைய காலம் எந்த அடிப்படையில் இருந்தது என்பது நன்கு புலனாகும். இவர்கள் அக்காலத்தில் செய்தபல விரும்பத்தகாத செயற்பாடுகள்தான் இன்று இலங்கையின் இனவாத மற்றும் மதவாத செயற்பாடுகளுக்கு வித்திட்டுள்ளது எனலாம்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் யாராகவும் இருக்கலாம் அவர்கள் கத்தோலிக்க மக்கள் மீது ஒருசில முஸ்லிம் அடிப்படைவாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் விடயங்களை ஒட்டுமொத்த முஸ்லிம்கள் மீதும் போடும்படியான கருத்துக்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என ஒரு சுயாதீன ஊடகவியலாளர் என்ற வகையில் பணிவாக கேட்டுக் கொள்கின்றேன். காரணம் நீங்கள் பாராளுமன்றத்தில் பேசும் பேச்சுக்கள் சமுகத்தில் அது விகாரமடைந்து அமைதியாக இருக்கும் மக்களிடத்தில் இன வன்முறைகளுக்கு வித்திடலாம் என்ற விடயத்தை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

நாட்டில் இடம் பெற்ற கொடூரத்தின் உண்மையான குற்றவாளிகளை கண்டு பிடித்து சட்டத்தின்முன் நிறுத்தி அவர்களுக்கான கடுமையான தண்டனைகளை வழங்க வேண்டிய பொறுப்பு பாதுகாப்புத் தரப்பினருக்கும், நீதி மன்றங்களுக்கும் உள்ளதால் அவர்கள் அந்த விடயங்களை நிதான மாக சரியாக மேற்கொள்வார்கள். ஆனால் அவர்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அல்லது அவர்களின் நடவடிக்கைகளுக்கு தடங்கள்கள் ஏற்படும் வகையில் அரசியல் வாதிகள் செயற்படுவார்களானால் அது பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கும், நியாயத்திற்கும் பங்கம் ஏற்படுத்துபவையாகவே அமையும்.

இலங்கை ஒரு பல்லின, பல்சமய, பல மொழிகளைப் பேசும் மக்கள் வாழும் நாடாகும் இங்கு இன ஒற்றுமையும், சமாதானமும் இன்றியமையாததாகும். இந்த விடயங்களுக்கு பங்கம் ஏற்படும் வகையில் நாம் நடந்து கொண்டால் அது இந்த நாட்டின் வீழ்ச்சிக்கும், ஆபத்துக்குமான ஒரு வழிமுறை என்றே கூறலாம்.

ஒருசில கயவர்களின் கபடத்தனங்களால் இன்று 99 சதவீதமான முஸ்லிம்கள் அதற்கு எதிரானவர்களாகவே இருக்கின்றனர். குற்றவாளிகள் கண்டறியப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்ற ஒரே கொள்கையில்தான் இருக்கின்றனர். இவ்வாறான செயற்பாட்டில் இருப்பவர்களை ஒட்டுமொத்தமாக குற்றவாளிகளாக ஆக்குவது ஏற்றுக் கொள்ள முடியாது.

எது எவ்வாறாக இருந்தாலும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பாதுகாப்புத் தரப்பினர் தமது முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்ற நிலையில் நாட்டு மக்கள் என்ற வகையில் அமைதியாகவும், நிதானமாகவும் இருக்க வேண்டிய பொறுப்புக்கள் மக்களுக்கு உள்ளதுடன் சந்தேகத்திற்கு இடமானவர்கள் விடயத்தில் பாதுகாப்புத் தப்பினருக்கு தகவல்களைக் கொடுத்து இனியும் ஏற்பட இருக்கும் அபாயங்களில் இருந்து நாம் விடுபட முயற்சிக்க வேண்டும்.

இதேவேளையில் ஒருசில சமுக ஊடகங்கள் தேவையற்ற வகையில் முஸ்லிம் சமுகத்தின் மீது விரல்களை நீட்டி இன ஒற்றுமைக்கு பங்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் மக்கள் ஆத்திரமடையும் வகையிலும் செய்திகளை வெளியிடுகின்றனர். இது விடயத்தில் பாதுகாப்புத் துறையினரும், அரசாங்கமும் கவனஞ் செலுத்தி பொறுப்பற்ற விதத்தில் செய்திகளை உறுதிப்படுத்தாது முந்திக் கொண்டு இவ்வாறான செய்திகளை வெளியிடுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமாதான விரும்பிகளும், சமயத் தலைவர்களும் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு பேராயர்கூட நடைபெற்ற சம்பவங்களை அடிப்படையாக வைத்து முஸ்லிம் சமுகத்தினைப் பார்க்க வேண்டாம் எனவும் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் நடைபெற்ற சம்பவங்களை கடுமையாக எதிர்க்கின்றனர் என்றும் மிகவும் காத்திரமான முறையில் தெரிவித்துள்ளார். எனவே பேராயரின் கருத்துக்களுக்கு மக்களும், சமுக ஊடகங்களும் மதிப்பளித்து தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என சமய ஆர்வளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் கத்தோலிக்க ஆலயங்கள் மீதான தாக்குதலை பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ நியுசிலாந்து தாக்குதலுக்கு பழி தீர்க்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டது என்ற கருத்தை தெரிவித்துள்ளமை மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. இலங்கை தாக்குதலுக்கும் நியுசிலாந்தக்கும் தொடர்பில்லை என்று நியுசிலாந்துப் பிரமதர் உறுதியாகவே தெரிவித்துள்ளார். இவ்வாறு தமது அரசியல் இலாபங்களுக்காக பிரச்சினைகளை மேலும் வழுவூட்டும் வகையில் பொறுப்பற்ற வகையில் அரசியல் வாதிகள் இத்த ருணத்தில் கூறுவது கவலையளிக்கின்றதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே நடைபெற்ற சம்வங்கள்போன்று இனியும் நடைபெறாது நடவடிக்கைகளை மேற்கொள்ள அணைவரும் ஒன்றினைய வேண்டுமே தவிர ஒரு சமுகத்தின் மன நிலைமைகளில் எரிகின்ற புண்ணில் வேல்பாய்ச்சும் செயற்பாடுகளை விட்டும் விலகுவதுடன் அரசியல் இலாபங்களுக்காகவும், தமது சுய இலாபங்களுக்காகவும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சுமத்தி சண்டையிடுவதை விட்டும் அரசியல் வாதிகள் நிதானமாக இருக்க வேண்டும் என்பதே அநேகரின் எதிர்பார்ப்பாகும்.

ஏ.எஸ்.எம்.ஜாவித்

மனிதநேயம் இன்னும் உயிர் வாழ்கிறதா?

உயிர்த்த ஞாயிறு சமய நிகழ்வுகளின்போதும், வெளி நாட்டவர்கள் தங்கியிருந்த உல்லாச விடுதிகளிலும் ஏற்பட்ட அனர்த்தமானது இன்று இலங்கைவாழ் மக்கள் மாத்திரமன்றி உலகில் வாழும் எந்தவொரு மனிதனாலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விடயமாகவே பார்க்கப்படுகின்றது. மனிதநேயமற்ற மனிதர்கள் இந்த உலகில் எங்கோர் இடத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் மனிதசாதிகளுக்குள் உலாவும் மனித மிருகங்கள் என்றுகூடச் சொல்லும் அளவுக்கு அவர்களின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன. மனிதனை மனிதனாக நினைத்து அடுத்தவனுக்கு நல்லது செய்கின்றவனே உண்மையான மனிததர்மாகும். முப்பது வருட யுத்தத்தில் நொந்துதொய்ந்து போன இலங்கை வாழ்மக்கள் நிம்மதி பெரு மூச்சு விட்டு பத்துவருடங்கள் ஆகும் நிலையில் மீண்டும் ஒரு கலவரத்தை ஏற்படுத்த முனைந்திருக்க மிகக் கொடூரமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தக்க தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே அனைத்து மனிதநேயமிக்க மக்களின் விருப்பமாகும். பச்சிளம் பாலகர்கள் என்ன பாவம் செய்தார்கள். சின்னஞ்சிறுசுகள் சந்தோசமாக இருந்த வேளையில், தன்னைப் படைத்த இறைவனை, தனது சமயக் கடமைகளை நிறைவேற்றுகின்றபோது படுபாவிகளின் குண்டுகளுக்கு பலியாகியமை, மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் பாவச் செயலைச் செய்தவர்களுடைய மனதின் கொடூரத்தை நினைக்கின்றபோது இவர்களும் மனிதர்களா? என்று கேட்கத் தோன்றுகிறது.

பாதிக்கப்பட்ட அத்தனை பேருக்கும் இறைவனது நல்லாசி கிடைக்க இவ்வேளை பிரார்த்திக்க வேண்டியது அவசியமானதாகும். உயிர்த்த ஞாயிற்றுக் கிழமை மக்களுக்கு ஏற்பட்ட அந்தத் துயரின் வெளிப்பாடு இன்று இலங்கைவாழ் மக்களின் அன்றாட வாழ்வியலையே புரட்டியிருக்கிறது. முப்பது வருடகால யுத்திலும் இல்லாத அளவுக்கு நாடு சர்வதேச மட்டத்தில் தொடர்குண்டுவெடிப்பு பல்வேறு கருத்தாடல்களை நினைவூட்டியிருக்கிறது. இலங்கையின் பொருளாதாரத்தில் மிக முக்கிய தொழில்துறையான உல்லாசப் பிரயாணத்துறையும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மக்களின் இயல்பான வாழ்வியலும் பெரும் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டிருக்கிறது. மனிதநேயம் செத்துவிட்டதா என்று கேட்கும் அளவுக்கு மனித வாழ்வு சிதைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான விடயங்களைக் கருத்திற் கொண்டுதான் என்னவோ கடந்த பாராளுமன்ற அமர்வின்போது உறுப்பினர்கள் பலரது கருத்துக்கள் ஒரு சமூகத்தை மாத்திரம் நோக்காமல் பாதிப்பினை ஏற்படுத்தியவர்கள், ஏற்படுத்துவதற்கு ஆதரவு வழங்கியவர்கள், பின்னணியில் இருந்தவர்களை கண்டறிந்து அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்கிற விடயங்களைக் கூறியிருந்தனர்.

மனிதநேயத்தை சமயங்கள் அனைத்துமே மதிக்கின்றன. சமயவாதச் சிந்தனைகள் மனிதர்களை புனிதர்களாக்கும். ஒவ்வொரு சமயமும் நல்வாழ்வுக்கான கருத்துக்களையும், சீரான வாழ்க்கை முறைகளையுமே கூறிக்கொண்டிருக்கின்றமையாவரும் அறிந்த விடயமாகும். மனிதத்துவத்தை மனிதன் சமயவாதக் கருத்துக்கள் ஊடாக கற்றறிந்து, தான் பெற்ற கல்வி அதற்கு உதவியாக இருக்க வேண்டும். இதனால்தான் கல்வி ஒருவனை சிறந்த நற்பிரஜையாக்க வேண்டும். அவன் கற்ற கல்வியின் ஊடாக சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்பவேண்டும். நாட்டுகுகந்த நற்பிரஜையாக அவன் வரவில்லையானால் அவன் கற்ற கல்வியினால் எவ்விதமான பலனும் இல்லை என்பதைத்தான் தன்னை மாய்துக்கொண்ட படித்தவர்கள் என்று கூறப்படுகின்ற இந்த தற்கொலையாளிகள் மனிதநேயமற்றவர்கள் என்பதை நிருபித்திருக்கின்றார்கள். தொடர்குண்டுவெடிப்புச் சம்பவத்திற்குப் பிறகு நாட்டில் அவசரகால சட்டத்தின் சில சரத்துக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இனிமேலும் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறவே கூடாது என்பதற்காக அனைவரும் ஒன்றுபட்டு நமது நாட்டையும், நாமும் வாழவேண்டும். அழகிய நாட்டை சீரழிப்பவர்கள், சீரழிக்க முனைபவர்களை ஒதுக்கிட வேண்டும்.

இந்த நிலையிலும் இந்த நாட்டின் மக்கள் எல்லோரும் ஒன்றுமையாக வாழவேண்டும். அந்த ஒற்றுமையை சீர்குலைப்பவர்கள் சமயவாதிகளாக இருக்க முடியாது என்பது அனைவரினதும் கருத்தாகும். அந்த அடிப்படையில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் அவர்கள் கூறியிருக்கின்ற கருத்துரைகள் மன ஆறுதலை அளிக்கிறது. அதாவதுமுஸ்லிம்களுக்கு கிறிஸ்தவர்களினால், ஆபத்து கிடையாதென உறுதிபடக் கூறுகின்றேன் எனத்தெரிவித்திருந்தார். மேலும் அவர் குறிப்பிடுகையில் மதத்தின் பெயரால் தாக்குதல் நடத்தி வன்முறைகளில் ஈடுபடும் நபர்கள் எந்தவொரு மதத்தையும் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது. எந்தவொரு மதத்தையும் பின்பற்றும் நபர்களினால் இவ்வாறான கொடூரத் தாக்குதல்களை முன்னெடுக்க முடியாது. கிறிஸ்தவர்ளுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பிணைப்பு மிகவும் வலுவானது. நீண்ட காலமாக இந்த பிணைப்பு காணப்படுகின்றது. இந்த தாக்குதலை நடத்தியவர்கள் இஸ்லாமிய முறைப்படி தாக்குதல் நடத்தியதாக கூறினாலும் இந்த எதுவும் இஸ்லாமிய மார்க்கத்தின் வழியானது அல்ல. எம்மீது தாக்குதல் நடத்திய தரப்பினருக்காகவும் நாம் பிரார்த்;தனை செய்கின்றோம். இஸ்லாமிய மக்கள் மீது நாம் கைதூக்கிவிடக் கூடாது என்கிற விடயங்களை ஆண்டகை அவர்

16 ஆம் பக்கம் பார்க்க....

தந்திமகன்

உயிர்த்தஞாயிறு தொடர் பயங்கரத் தாக்குதல்கள் இலங்கைத் தீவைக் களமாக்கியது ஏன்?

ஈழத்தமிழர் தாயகத்தில் ஆயுதப் போராட்டம் நடந்த காலத்தில் தாம் விரும்பிய நேரத்தில் போர்க்கப்பல் களை இத் தீவுக்கு அனுப்பக்கூடிய நிலை அமெரிக்காவுக்கு இருந்தி ருக்கவில்லை. ஆனால் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னைய சூழலில், திருகோணமலையில் மட்டுமல்ல அம் பாந்தோட்டையிலும் இலங்கைக் கடற் படையுடன் தாம் நினைத்த நேரத்தில் கூட்டுப்பயிற்சி செய்வோம் என்பதைச் சீனாவுக்கு அமெரிக்கா வெளிப்படுத்திய மூன்று நாட்களுக்குள் இலங்கையின்

ஸ்திர நிலை கேள்விக்குள்ளாக்கப்பட் டிருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. சீன நட்பு நாடான பாகிஸ்தான் ஊடாக முன்னேற்பாட்டுடன் உருவாக்கப்பட்ட இஸ்லாமியாவாத குழு ஒன்று தொடர் பயங்கரத் தாக்குதல் ஒன்றைக் கடலால் சூழப்பட்ட தீவொன்றுக்குள்ளும் தன் னால் செய்ய முடியும் என்று நிறுவியி ருக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

அமெரிக்கா எங்கெல்லாம் கால்ப திக்கிறதோ அங்கெல்லாம் தாக்குதல் நடத்தத் தன்னாலும் முடியும் என்ற செய்தியை இந்தக் குண்டுத்தாக்குதலை ஏவிய தரப்பு சொல்லியிருப்பது புலனா கிறது.

மத ரீதியான போரில் பயங்கரவாதத் தாக்குதல்களைப் புரிவதற்கு இலகுவாக மனிதக் குண்டுகளை இஸ்லாமியவாதம் தயாரித்துக்கொடுக்கிறது. ஆனால், அந்தக் குண்டுகள் எங்கே, எப்போது, எதற்காக ஏவப்படுகின்றன என்பதை இராணுவ மற்றும் புவியியல் அரசியல் ரீதியாகப் பகுப்பாய்வு செய்தே நாம் புரிந்து கொள்ள வேண்டும்

இந்தியா-பாகிஸ்தான் முரண்பாட் டையும் சீன-பாகிஸ்தான் உறவையும் இந்தத் தாக்குதலின் பின்னணியாக ஏன் நோக்கக்கூடாது என்ற கேள்வியை ஈழத் தமிழ் அரசியல் அவதானிகள் எழுப்பு கின்றனர்.

கிறிஸ்தவர்களின் உயிர்த்த ஞாயி றன்று இஸ்லாமியவாதம் உலகுக்கு அறையும் பயங்கரவாதப் போர் முரச ாக மட்டும் இந்தத் தாக்குதல்களை நாம் பார்த்துவிட முடியாது. இதன் பின்னால் இருக்கக் கூடிய கேந்திர, புவிசார் அரசி யல் சூட்சுமங்களையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

இஸ்லாமிய அல்லது இஸ்லாமி யவாதம் மீதான எதிர்ப்பு உணர்வுக்கு ஆட்பட்ட மன நிலையில் இருந்தாவாறு இதை நாம் அணுகுவது அறிவு பூர்வ மான அணுகுமுறை ஆகாது.

சிரியாவில் இராணுவரீதியாகத் தோற்கடிக்கப்பட்டுள்ள இஸ்லாமிய அரசு என்று தன்னைத்தானே சொல்லிக் கொண்டிருந்த குழு நேரடியாக இந்தத் தாக்குதலை வழிநடத்தியிருப்பதற்கு வாய்ப்புகள் குறைவு. அதன் தலைமைத் தளம் சிரியாவில் சிதறடிக்கப்பட்டிருக் கிறது. ஆனால், அதே கருத்தியலுடன் இயங்கும் வேறொரு குழு, குறிப்பாக பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டி யங்கும் ஒரு குழு இந்த மனிதக் குண்டு களைத் தயார் செய்திருக்கலாம். இந்த மனிதக்குண்டுகள் இலங்கையைச் சே ர்ந்தவையாகவும் இருக்கலாம்

எது எவ்வாறிருப்பினும், தாக்குதல் திட்டமிடலும் வழிநடத்தலும் இலங் கைத்தீவுக்கு வெளியே இருக்கும் ஒரு தரப்பால் மேற்கொள்ளப் பட்டிருப்பதற் கான வாய்ப்புகளே அதிகம்.

அண்மைக்காலத்தில் இந்து-பசிபிக் சமுத்திரப் பகுதியில் சீனாவுக்கெதிரான போர்முனை அமெரிக்காவால் மிக வேக மாகத் தீவிரப்படுத்தப் பட்டிருக்கிறது.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையான முரண் நிலை, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க-இந்திய உறவு பலப்படக் காரணமாகி றது.

அதே போல், அமெரிக்க-இந்திய உறவு வலுவடைந்து வருவது பாகிஸ் தான்-சீன உறவு மேலும் நெருக்கமடை யக் காரணமாகிறது.

எனவே இந்து சமுத்திரப் பிராந்தி யத்தில் அரங்கேறும் புவிசார் அரசியல் இராணுவ சர்வதேசக் கெடுபிடி அல்லது நிழற் போரின் ஒரு வடிவமாவும் இலங் கைத் தீவில் நடந்த குண்டுவெடிப்பை நோக்கலாம்.

இலங்கையின் தற்போதைய அரசி யல் சூழலையும் கணக்கில் எடுத்தே தாக்குதலை நடத்திய வெளிச்சக்திகள் திட்டமிட்டிருக்க வாய்ப்பிருக்கிறது.

மதரீதியான தாக்குதலாக வெளிப் படும் இத்தாக்குதல் எதேச்சையான உணர்வு வெளிப்பாட்டின் ஒரு வடிவ மாகப் புலப்படவில்லை.

திட்டமிடல், வழி நடத்தல் மற்றும் தெரிவுகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்களில் இராணுவத் தேர்ச்சியுள்ள ஒரு தரப்பே இதை நடாத்திமுடித்தி ருக்கிறது என்பது வெடிப்புகள் நடந்த இடங்களையும், மேற்கொள்ளப்பட்டி ருக்கும் தெரிவுகளையும், அவற்றின் தாக்கத்தையும் வைத்துப் பார்க்கும் போது தெரிகிறது.

பௌத்த சிங்கள மக்கள் மீதோ பௌத்த விகாரைகள் மீதோ தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால் அது முஸ்லிம் களை நோக்கிய எதிர்த்தாக்குதலுக்கு வழிசமைத்திருக்கும்.

இலங்கைத் தீவில் இடம்பெற்ற போர்க் குற்றங்களில் எவ்வாறு இலங்கை அரசு, புலிகள் ஆகிய இரு தரப்புக்களுக்கும் சம பங்கு இருப்பதாக அமெரிக்க, இந்திய அணி வாதிடுகிற தோ, அதைப் போலவே பயங்கரவாதத் தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் தரப் பும் இலங்கையின் தமிழர் சிங்களவர் ஆகிய இரு தரப்புகளையும் பலிக்கடா வாக்குவதில் சம தரப்பாகப் பார்த்திருப் பது ஒரு புதிய அம்சம்.

மேற்கில் கொழும்பும் கிழக்கில் மட் டக்களப்பும் இலக்குகளாகத் தெரிவாகி யுள்ளன.

சிங்கள, தமிழ் கிறிஸ்தவ மக்க ளும் வெளிநாட்டவர்களும் குண்டுத் தாக்குதலில் இறந்திருக்கின்றார்கள், காயமடைந்திருக்கிறார்கள். கிறிஸ்தவ தேவாலயங்களும் வெளிநாட்டவர் தங்கும் நட்சத்திர ஹோட்டேல்களும் மற்றும் தமிழ் மக்கள் பெரும்பான்மை யாக வாழும் கிழக்கு மாகாணத்தில் மட் டக்களப்பும் தாக்குதலுக்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

அண்மைக்காலத்தில் இந்து-பசிபிக் சமுத்திரப் பகுதியில் சீனாவுக்கெதிரான போர்முனை அமெரிக்காவால் மிக வேக மாகத் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடை யான முரண் நிலை, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க-இந்திய உறவு பலப்படக் காரணமாகிறது. அதே போல், அமெரிக்க-இந்திய உறவு வலுவ டைந்து வருவது பாகிஸ்தான்-சீன உறவு மேலும் நெருக்கமடையக் காரணமாகி றது. எனவே இந்து சமுத்திரப் பிராந்தி யத்தில் அரங்கேறும் புவிசார் அரசியல் இராணுவ சர்வதேசக் கெடுபிடி அல்லது நிழற் போரின் ஒரு வடிவமாவும் இலங் கைத் தீவில் நடந்த குண்டுவெடிப்பை நோக்கலாம்

நீண்ட நாட்கள் திட்டமிடப்பட்டே தாக்குதல் உரிய நேரத்தில் நடத்தப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது வெளிச் சக்திகளின் வேலையாக இருந் தாலும் உள்ளூர் ஆதரவுத் தளம் அல்லது தளங்கள் இவர்களுக்கு இருந்திருக்க வேண்டும்.

இலங்கை ஏனைய அயல் நாடுக ளோடு நிலத்தொடர்பு உடையதல்ல. இது ஒரு தீவு.

முதன் முறையாக வெளிச்சக்திக ளின் இஸ்லாமியவாத பயங்கரவாதத் தாக்குதல் ஒன்று நிலத் தொடர்பில்லாத தீவொன்றில் நடத்தப்பட்டிருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில்தான் உண்மையான பயங்கரவாதம் இலங்கைக்கு வந் துள்ளது என்பதையும் அமெரிக்காவுக்கு இந்தத் தாக்குதல் உணர்த்தியுள்ளது.

1997 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலில் அமெரிக்கா சேர்த்திருந்தது. அது ஒரு புவி சார் அரசியல் தேவையை ஒட்டி எடுக்கப்பட்ட முடிவென்றே அர சியல் அவதானிகள் கருதுகின்றனர்.

புலிகளின் வளர்ச்சியை மழுங் கடிக்கவும் அதேவேளை இலங்கை அரசைத் தம் வழிக்குக் கொண்டுவரும் தேவையை முன்னிட்டும் இந்தத் தடை கொண்டுவரப்பட்டிருந்தது.

தற்போது, இலங்கை இராணுவத் தளபதிகள் சிலர் வெளிநாட்டுப்பயணங் களை மேற்கொள்ளும் போது அவர் களைச் சில நாடுகளில் போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்துவோம் என்ற அழுத்ததைத் தோற்றுவித்து இலங்கை அரசைச் சீனாவின் பக்கம் செல்லவி டாது தடுக்கும் ஒரு உத்தியை மேற்கு லக நாடுகள் வகுத்திருப்பது ஜெனீவா அறிக்கைகள் ஊடாகப் புலனாகிறது.

அதேவேளை சிங்கள மக்களிடம் மேற்குலம் மீதான அதீத எதிர்ப்பு வராத வகையில், வன்னியில் இருந்து ஐரோப் பிய, அவுஸ்திரேலிய, வட அமெ ரிக்க நாடுகளுக்குச் சென்று புகலிடம் கோரியுள்ள முன்னாள் போராளிகளை, குறிப்பாகத் தளபதிகளை, போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்ற அணுகுமுறையும் ஜெனீவா நகர்வு களின் பின்னணியில் வகுக்கப்பட்டிருப் பதாகத் தெரிகிறது.

முன்னாள் புலம்பெயர் செயற்பாட் டாளர்களை இலங்கை அரசுடன்

16 ஆம் பக்கம் பார்க்க....

விசேட தேவையுடையோரை பட்டை தீட்டி எடுக்கும் மருதமுனை 'ஹியுமன் லின்க்'

றாசிக் நபாயிஸ்
(BA, MA) சமூகப்பணியார்,
மருதமுனை

உலக சனத்தொகையில் சுமார் 1 பில்லியன் (15%) மக்கள் எதோ ஒருவகையில் வலது குறைந்தோராக காணப்படுகின்றனர். அதிலும் மிக அதிகமான மக்கள் வளர்ந்து வரும் நாடுகளிலேயே காணப்படுவதும், அவர்களின் சமூகப் பொருளாதார வசதிகள் நல்ல நிலையிலுள்ள மக்களை விடவும் மிகப்பின்தங்கிய நிலையில் காணப்படுவதும் உலகறிந்த உண்மைகளாகும். குறைவான கல்வி, வலுவிழந்த ஆரோக்கிய வெளிப்பாடு மிகவும் அரிதான தொழில்வாய்ப்புகள் மற்றும் அதிகரித்த வறுமைச் சுட்டெண், அவர்களின் வாழ்வியலின் நிஜங்களாக பரிணமிக்கின்றன.

ஒரு நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள், சட்டம், பௌதீக மற்றும் சமூகவியல் சூழல்கள் வலது குறைந்த மக்களின் குடியுரிமை, சமூகம் சார்ந்த மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கும், அவற்றை சிறந்த முறையில் பராமரிப்பதற்கும் தடைகளாக இவ்வுலகு கண்டு கொண்டாலும், புதிய கட்டுமானங்களிலும் ,போக்குவரத்து அணுகு முறைகளிலும், தகவல் தொழிநுட்ப வளர்ச்சிப் பாதைகளிலும், சட்டம் இயற்றலிலும் மற்றும் நிதி ஒதுக்கீடுகளிலும் இன்னும் மந்தகரமான நிலமைகளையே இவ்வுலகு காட்சிப்படுத்துகின்றது.

உலகில் வாழும் மனிதர்களில் ஏழு பேரில் ஒருவர் வலது குறைந்தோராக காணப்பட்டாலும் அவர்கள் அனைவருமே பிறப்பில் அந்நிலைமைகளை அடைந்ததில்லை. பிறக்கும் போதே சில மனிதர்கள் வலது குறைந்தவர்களாக, இறைவனின் ஆசியோடு பிறக்கின்றனர். மேலும் பலர் விபத்துக்களினாலும் ,இவ்வுலகை அழிக்கும் கொடிய யுத்தங்களினாலும் இந் நிலைமைகளுக்கு உள்வாங்கப்படுகின்றனர்.

அந்த வகையில் 2005ஆம் ஆண்டு மருதமுனையில் கே.எம். றொஷான் அவர்களினால் நடாத்தப்பட்டு வந்த 'சப்போட்டஸ் டொட் கொம்' என்ற முகாமைத்துவப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் கிளை அமைப்பான 'சமூக பொருளாதார அபிவிருத்தி ஒன்றியம்' என்ற அமைப்பினால் விஷேட தேவையுடையோருக்கு சேவை செய்கின்ற புனிதமான பணி ஆரம்பிக்கப்பட்டது அந்தக் காலக்கட்டத்தில் கல்முனையில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காக இயங்கி வந்த 'டெப் லிங்க்' நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பாகவும் அந்நிறுவன ஆசிரியர்கள், மாணவர்களைக் கௌரவிக்கின்ற நிகழ்வுகளையும் நடாத்தி தனது பணியை விஷேட தேவையுடையோர் பக்கம் திருப்பியது.

எனினும் தவிர்க்க முடியாத பலமான சில காரணிகளை மையாக வைத்து மருதமுனையில் உள்ள விஷேட தேவை யுடைய பிள்ளைகளைப் பராமரிப்பதற்கென தனியாக ஒரு நிலையம் அவசியம் என உணர்ந்த றொஷான் அவர்கள் அது தொடர்பாக ஊரில் பல முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடி 2007.05. 01ஆம் திகதி 'ஹியுமன் லின்க்'என்ற பெயரில் பகல் பராமரிப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு வித்திட்டார். இந்த பராமரிப்பு நிலையத்தை தனது வீட்டிலேயே மருதமுனையைச் சேர்ந்த கற்றல் குறைபாடுடைய (மூளை வளர்ச்சி குன்றிய) 05 பிள்ளைகளுடனும் 01 ஆசிரியருடனும் ஆரம்பித்து செயற்படுத்தப்பட்டு வந்தது.

நாளடைவில் பிள்ளைகளின் எண்ணிக்கையும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் படிப்படியாக வளர்ச்சி அடையத் தொடங்கியது. அதன் சிறப்பான ஆரம்பத்தினையும் செயற்பாடுகளையும் கண்டு திருப்தி அடைந்த சுகாதாரத்திணைக்கள உத்தியோதர்கள் அதிலும் குறிப்பாக டாக்டர் கணேஷன் அவர்கள் இந்நிலையத்தைப் பார்வையிட்டு திருப்பதி அடைந்து அவர்களின் சிபார்சுக்கமைவாக கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளரினால் மருதமுனை காரியப்பர் வீதியில் அமைந்துள்ள அவர்களுக்கு சொந்தமான சுகாதார பராமரிப்புக் கட்டிடத்தின் ஒரு பகுதி 'ஹியுமன் லின்க்'நிறுவனத்தின் உபயோகத்திற்காக 2008.01.02ஆம் திகதியிலிருந்து வழங்கப்பட்டது.

கற்றல் குறைபாடுடைய எண்ணிக்கை கணிசமான அளவில் அதிகரிக்கவே கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன் பாடத்திட்டமொன்றை தயாரித்து அதற்கேற்ப பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட்டு வந்தார்கள்.

2008ஆம் ஆண்டு கல்முனை பிரதேச செயலகத்திலும் 2009இல் சமூக சேவைகள் அமைச்சு (மத்திய அரசு) மற்றும் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திலும் விஷேட தேவையுடையோருக்கான முழு நேரப் பகல் பராமரிப்பு நிலையமாகவும் 2012.05 10ஆம் திகதியிலிருந்து விஷேட தேவையுடையோருக்காக கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட்டது. தற்பொழுது இதன் சேவைகளை 'விசேட தேவையுடையோருக்கான வளப்படுத்தல் நிலையம்' என்ற பெயரில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மூன்று பிரதான பிரிவுகளாக செயற்படுத்தி வருகின்றது.

01. விசேட கல்வி பிரிவு
02. பயிற்சி மற்றும் ஆலோசனைப் பிரிவு
03. விசேட தேவையுடையோருக்கான ஒன்றியம்

01. விஷேட கல்விப் பிரிவு:

இப்பிரிவில் 03 வயது முதல் 18 வயது வரையிலான கற்றல் குறைபாடுடைய பிள்ளைகள், பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகள், செவிப்புலன் மற்றும் பேச்சுத்திறன் அற்ற பிள்ளைகள் மெல்லக் கற்கும் பிள்ளைகள் என பல வகைகளைச் சேர்ந்த விஷேட தேவையுடைய பிள்ளை இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களின் குறைபாடுகளுக்கு ஏற்ப பயிற்றுவிக்கக் கூடியவாறு ஆசிரியர்களுக்கு தேவையான சகல பிரிவுகளில் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்து வளங்களையும் உருவாக்கி செயற்படுத்தி வருகின்றது. மாணவர்கள் கற்பித்தல் செயற்பாடுகளோடு மட்டுப்படுத்தப்படாது சுகாதார பராமரிப்பு, துணைப்பாடவிதான செயற்பாடுகள், திறன் விருத்தி, விளையாட்டு, போன்ற பல்வேறு விடயங்களிலும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றார்கள். 05 பிள்ளைகளுடன் உருவாக்கப்பட்ட நிலையம் தற்பொழுது 60 மேற்பட்ட தமிழ், முஸ்லிம் ஆண், பெண் மாணவர்களைக் கொண்டதாக காணப்படுகிறது. இதன் பலனாக மாணவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகுப்புக்களாகப் பிரித்து பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றார்கள்.

★முன்பள்ளிப் பிரிவு
★கற்றல் குறைபாடுடையவர்கள் பிரிவு
★மெல்லக்கற்பவர்கள் பிரிவு
★பார்வை குறைபாடுடையவர்கள் பிரிவு
★கேட்டல் மற்றும் பேச்சுக்குறைபாடுடையவர்கள் பிரிவு
★ஆரம்ப தொழில் பயிற்சிப்பிரிவு
★தொழில் பயிற்சி பிரிவு
★விடுதி வசதி

வழங்கப்படுகின்ற மேலதிக சேவைகள்:

ஹியுமன் லின்க் தனது மேற்படி செய்யற்பிடுகளுக்கு அப்பால் வளப்படுத்தும் நிலையத்துக்கு வருகைதருகின்ற சகல பிள்ளைகளுக்கும்

★போக்குவரத்து வசதி
★உணவு
★சீருடை
★கற்றல் உபகரணங்கள்
★தங்குமிட என்பனவற்றை இலவசமாக வழங்கி வருகின்றது. தூர இடங்களில் இருந்த வருதி பிள்ளைகளுக்கு தங்குவதற்கு விடுதி வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

02. பயிற்சி மற்றும் ஆலோசனைப் பிரிவு:

இப்பிரிவு கல்முனை வாடிவீட்டு வீதியில் அமைந்துள்ள தனியான கட்டிடத்தில் இயங்கி வருகின்றது.

★தொழில் பயிற்சி பிரிவு:

18 வயதுக்கு மேற்பட்ட விசேட தேவையுடைய இளைஞர் பவதிகளுக்கு தையல், கணணி, பிளம்பிங், வயறிங் போன்ற துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

★ஆசிரியர் பயிற்சிப் பிரிவு:

இந்நிலையத்தில் பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு தொடர்ச்சியாக வெளியிலிருந்து வளவாளர்கள் வரவழைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் இலங்கையின் சகல பாகங்களிலும் ஏனைய விஷேட கல்வி தொடர்பான செயற்றிட்டங்களில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் ஏனையவர்களுக்கும் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

★சுகாதார பராமரிப்பு பிரிவு:

ஹியுமன் லின்க்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது முதல் தற்பொழுது வரையில் பிள்ளைகளுக்கு தேவையான வைத்திய வசதிகளை கல்முனை ஆதார வைத்தியசாலை, அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை. மற்றும் மருதமுனை பிரதேச வைத்தியசாலைகளிலிருந்து பெற்று வருகின்றது. எதிர்காலத்தில் இந்நிலையத்துக்கென தனியான அதில் பிரதானமாக Physiotherapy, Speech therapy , Occupational therapy போன்ற பிரிவுகள் அடங்கலாக பராமரிப்பு நிலையமொன்றை அமைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் கொள்ளப்பட்டு வருகின்றது.

தொழில் முயற்சிப் பிரிவு :

எதிர்காலத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட விஷேட தேவையுடையவர்களுக்கு அடையாளங் காணப்படுகின்ற தொழில்களில் பயிற்சியளித்து தொழில் வாய்ப்பு வழங்குவதோடு சுயமாகத் தொழில் செய்வதற்கான பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்கான விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்தோடு இந்த முயற்சிகளினூடாக வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் திட்டமிடப்பட்டு வருகின்றது.

03. விஷேட தேவையுடையாருக்கான ஒன்றியம்:

சகல கிராமங்களிலும் வாழ்ந்து வருகின்ற விஷேட தேவையுடையவர்கள் அனைவரையும் அடையாளங் கண்டு அவர்கள் அனைவரையும் உள்ளடக்குகின்றவாறு ஒவ்வொரு கிராமத்துக்கும் தனித்தனியான சங்கங்கள் அமைத்து அவர்களது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு தேவையான வழிகாட்டல்களை மேற்கொள்வதற்கான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கிராமங்கள் தோறும் உருவாக்கப்படுகின்ற சங்கங்கள் பிரதேச மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் வலைப்பின்னல்களாக ஏற்படுத்தி செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிருவாகக் கட்டமைப்பும் செயற்பாடுகளும் :

மருதமுனைக் கிராமத்தைச் சேர்ந்த பல்வேறு துறைகளில் அனுபவமும் ஆற்றல் மிக்கவர்கள் நம்பிக்கையாளர் சபை மற்றும் செயற்குழுவில் இணைத்துக்கொள்ளப்பட்டு அவர்களது வழிகாட்டலில் நிறுவனத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன .

நிறுவனத்திற்கென தனியான யாப்பும் , நிருவாக செயல்முறைக் கோவையும் மற்றும் நிதி செயல்முறை கோவையும் தயாரிக்கப்பட்டு அவற்றிற்கேற்ப செயற்படுத்தப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது. ஆரம்பிப்பட்ட காலத்திலிருந்து வருடா வருடம் வரவு செலவுகள் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் கணக்காய்வு நிறுவனத்தின் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டு கணக்காய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளபட்டு அவை பிரதேச செயலகம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் என்பனவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றது .

மருதமுனையைச் சேர்ந்த 05 பிள்ளைகளுடனும் 01 ஆசிரியையுடனும் தற்பொழுது அம்பாரை மாவட்டத்தின் பல ஊர்களைச் சேந்த அநேக பிள்ளைகளும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சோந்த ஒரு சில பிள்ளைகளுமாக 60க்கு மேற்பட்ட தமிழ் முஸ்லிம் ஆண் பெண் பிள்ளைகள், நிருவாகிகள், ,ஆசிரியர்கள், ஊழியர்கள் காணப்படுகின்றனர். எதிர்காலத்தில் பிள்ளைகளின் எண்ணிக்கையை கணிசமான அளவில் அதிகரித்து சேவையாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலே கூறப்பட்ட இலவச சேவைகளுக்கப்பால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்ற கவர்ச்சிகரமான செயற்பாடுகள், ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்கள். என்பன பிள்ளைகளின் சராசரி வரவை 50% த்திலிருந்து 92 % வரை அதிகரிக்க செய்துள்ளது .

வருடா வருடம் சர்வதேச சிறுவர் தினம், சர்வதேச விஷேட தேவையுடையோர் தினம், சுதந்திதினம் என்பன எமது பிரதேசத்திலுள்ள பிரமுகர்கள், அரச உத்தியோகத்தர்கள் அரசியல் பிரமுகர்களின் பங்கேற்றல்களுடன் சிறப்பாக நினைவு கூறப்பட்டு வருகின்றன. மேலும் பிரதேச, மாவட்ட மாகாண மற்றும் தேசிய ரீதியில் நடாத்தப்படுகின்ற கலை, கலாசார போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பனவற்றில் இப்பிள்ளைகள் பங்குபற்றி வெற்றிபெற்று பரிசில்களும் பெற்றுள்ளார்கள். பிள்ளைகளின் மனதில் மகிழ்வுக்காக நாட்டின் பல பாகங்களுக்கும் சுற்றுலாப் பயணங்கள் அழைத்துச் செல்லப்பட்டு வருவது வழக்கம்.

கல்முனை பிரதேச செயலகத்தினால் 'ஹியுமன் லின்க்' நிறுவனத்திற்கென வழங்கப்பட்ட அரச காணியில் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் மாடிக்கட்டிடமும் ஒன்று அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. மருதமுனை மேட்டு வட்டைப் பிரதேசத்தில் 65 மீட்டர் வீட்டுத்திட்டத்திற்கு அருகாமையில் 03 ஏக்கர் காணி கல்முனை பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது அக்காணியில் முழுமையான ஒரு வளப்படுத்தல் நிலையத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை ஒரு சிறப்பான விடயமாக காணப்படுகின்றன.

நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பொதுமக்கள், நலன் விரும்பிய நல்லுள்ளம் கொண்டவர்கள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் சமூக சேவைத்திணைக்களம் என்பனவற்றின் நிதி மற்றும் பொருள் உதவிகளைக் கொண்டே இன்று வரை இயங்கி வரும் இது தொடர்ந்தும் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்குறித்த அனைவரதும் பங்களிப்புக்கள் அத்தியவசியமாகின்றன.

அதேவேளை நிலையான வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான செயல்திட்டங்களை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு தீவிர முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த 12 வருட காலத்தில் ஹியுமன் லின்க் நிறுவனம் பல சவால்களுக்கு மத்தியில் சரியான பாதையில் வழிநடாத்தி வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்வதற்கு அருள்பாலித்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு இதற்காக நிதியுதவி, பொருள் உதவி, சரீர உதவி, ஆலாசனைகள் , வழிகாட்டல்கள் வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நிறுவனத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இவ்வாறான பெரும் இன்னல்கள், சவால்களுக்கு மத்தியில் வளர்ந்து வரும் இந்நிறுவனம் விஷேட தேவையுடையோரை பட்டை தீட்டி எடுத்து அழகு பார்க்கின்றது என்றால் அது வரவேற்கக் கூடிய விடயமே என்றால் அது மிகையாகாது.

'விஷேட தேவையுடையோருக்கு உதவுவது சமூகப் பொறுப்பேயன்றி கருணையல்ல'

அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்
011-2434251, 011-4055105, 011-4055106, 076-6911604, 011-24333335

உயிர் பதித்த ஞாயிறு!

என்.ஹரன்

ஐ.எஸ்.ஐ.எஸ் ஸ்ரீ லங்கா எனும் எழுத்துக்களுடன் கூடிய பதாதைகள் 2018.03.07 புதன் கிழமை தொங்கவிடப்பட்டு வெடிப்பதற்கான நேரம் ஒழுங்கமைக்கப்பட்டு மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியினை அண்மித்த ஆரையம்பதி - 03 பொன்னுத்துரை ஆசிரியர் வீதியில் புலேந்திரன் மற்றும் மங்கை என்பவர்களின் வீடுகளில் வெடிப்பொருட்கள் காணப்பட்டதால் பிரதேச மக்கள் பெரும் பதட்டத்துக்கு உள்ளாகினர். இதன் போது காத்தான்குடி பொலிஸார், குற்றத்தடவியல் பொலிஸ் பொறுப்பதிகாரிகள், குண்டு செயலிளக்கச் செய்யும் பிரிவினர் மற்றும் இரானுவத்தினர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டு விசாரணைகளை மேற்க்கொண்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த குண்டு செயலிளக்கச் செய்யும் பிரிவினரால் இது ஆராயப்பட்டு செயலிழக்கச் செய்துள்ளனர்.

பெற்றோல் போத்தலுடன் கூடிய வெடிப்பொருட்கள் பொருத்தப்பட்டுள்ளது. இது இங்கே உற்பத்தி செய்யப்பட்டவை என்பதுடன் சந்தேகத்துக்கு இடமானவர்களை தேடி வருகின்றனர்.

ஆரையம்பதி மற்றும் காங்கேயன் ஓடை பிரதேசத்தின் எல்லையில் இவ்வாறான சம்பவம் இடம் பெற்றுள்ளது. தமிழ், முஸ்லீம் இனத்தவர்களின் சகோதரத்துவத்தைக் குலைக்கும் வண்ணம் இருக்கலாம் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது கடந்த வருடம்

2018.03.07 புதன் கிழமை வெளியான செய்தியாகும் எனினும் அன்று ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் எமது நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பு தொடர்பில் அன்று உளவுபாத்துள்ளார்களா என இன்று எண்ணத்தோன்றுகின்றது.

இலங்கை உலகிலேயே துயரமான காரணங்களுக்காக உலக அரங்கில் இடம் பிடடிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால், உயிர்த்த ஞாயிறு படுகொலை முதன் முறையாக உலகில் உள்ள எல்லா மக்களையும் அனைத்து சர்வதேச ஊடகங்களையும் அத்தோடு உலக தலைவர்களையும் உலுக்க வைத்து எமது பக்கம் 10ஆண்டுகளின் பின்னர் திரும்ப வைத்துள்ளது.

இலங்கை தீவை பொறுத்தளவில் உல்லாச பயணத்துறை ஒரு முக்கிய வருமானம் ஈட்டும் ஒரு துறையாக உள்ளது. இத் துறைக்கும் பொருளாதாரத்திற்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது இந்த சம்பவம் பின்னடைவை ஏற்படுத்தும் என எதிர்வுகூறப்படுகின்றது.

உலக தலைவர்களின் கண்டன செய்திகளிலும் (டொனால்ட் டிரம் , புட்டின் , திரேசா மே, நரேந்திர மோடி , பாப்பரசர்) மற்றும் உலகின் பிரசித்த கோபுரம் ஈபிள் டவர், வழமைக்கு மாறாக தனது விளக்குகளை அணைத்து கரி நாளை நினைவுகூர்த்துள்ளது.

உலக பயங்கரவாதிகளின் மிக துல்லியமாக திட்டமிட்டு பெரிய அளவிலான மனித பேரழிவை ஏற்படுத்தக்கூடிய வகையில் அரங்கேற்றப்பட்ட ஒரு மிருகத்தனமான படுகொலையாகும். உலக பத்திரிகையாளர்களை பொறுத்தளவில் இந்த மனித படுகொலையானது ஒரு தனி குழுவால் மேற்கொள்ளமுடியாத அளவிற்கு திட்டமிட்டு ஒரே நேரத்தில் பல இடங்களில் குறிப்பிட்ட மனித வர்க்கத்தை குறி வைத்து அத்தோடு குறிப்பிட்ட நேர காலத்திற்குள் மிக கூடுதலான அப்பாவி மக்களின் உயிர்களை பறிக்கக்கூடிய வகையில் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பாரிய மிருக்கத்தனமான மனித படுகொலைகள் ஆகும்

எட்டு இடங்களில் பயங்கரவாத தாக்குதல்

★ மூன்று தேவாலயங்கள்
★ மூன்று ஹோட்டல்கள்

★ இரு வேறு இடங்களில் பயங்கர வாதிகளின் வதிவிடங்களாகவும்

தாக்குதல்கள் நடந்த விதத்தை பார்ப்போமானால் முதல் ஆறு தாக்குதல்களும் நன்கு திட்டமிட்டமுறையில் ஒரு குறிப்பிட நேர இடைவெளியில் வெவ்வேறு இடங்களில் மிகவும் துல்லியமாகவும், மிக கூடுதலான மனித பேரழிவை ஏற்படுத்த கூடிய வகையிலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு மிருகத்தனமான படுகொலையாகும்

கிறிஸ்தவ மக்களை பொறுத்த அளவில் இது அவர்களுடைய ஒரு மிக முக்கியமான புனித தினமாகும் மிக கூடுதலான கிறிஸ்தவ மக்கள் தேவாலயங்களுக்கு சென்று உயிர்த்த ஞாயிறு ஆராதனையில் ஈடுபடுவது வழக்கமாகும் .அதே போல் ஐரோப்பியர்களை பொறுத்தளவில் பல காரணங்களால் ஈஸ்டர் விடுமுறை ஓய்வு என்பது ஒரு சிறிய விடுமுறைக்கு சிறந்த காலமாகும் அண்மை காலமாக இலங்கை இவர்களுக்கு ஒரு சிறந்த இடமாகவும் விளங்குகின்றது. அதுவும் எது ஒரு சிறிய கால விடுமுறை என்பதால் மிக கூடுதலானவர்கள் தலைநகர்களை அண்டிய ஹோட்டல்களில் தங்குவது வழமை.

ஐரோப்பிய நாடுகளை பொறுத்த அளவில் கூடுதலான நாடுகளில் இந்தக்காலப்பகுதியானது 4 நாட்களை கொண்ட விடுமுறையாகும் அதாவது ஐரோப்பியர்கள் விடுமுறையை முடித்துவிட்டு நாடுகளுக்கு திரும்புவது திங்கள்கிழமை அதாவது ஞாயிறு அவர்களது கடைசி விடுமுறை நாளாகும்.

இலங்கை தீவை பொறுத்த அளவில் உல்லாசத்துறை பெருமளவு வருமானத்தையும் அத்தோடு கணிசமான அளவு ஐரோப்பியர்களையும் உள்வாங்கும் ஒரு துறையாக உள்ளது. மேலும் 2.5 மில்லியன் உல்லாசப்பிரயாணிகளை ஒரு வருடத்திற்கு வருகைதரும் ஒரு நாடாகவும் இலங்கை தீவு உள்ளது.

பயங்கரவாத தாக்குதல்களை நடத்தியவர்கள் மேற்குறிப்பிட்ட விடயத்தை துல்லியமாக அவர்களது திட்டமிடலில் உள்வாங்கியுள்ளார்கள் போல் தென்படுகின்றது. அவர்களை பொறுத்தளவில் பெரும் மனித அழிவை மத தளத்திற்கு ஆராதனைக்கு வந்தவர்களுக்கும் அத்தோடு விடுமுறையில் வந்த உல்லாசப்பிரயாணிகளுக்கும் ஏற்படுத்தியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

கொலைசெய்யப்பட்ட பேரில் வெளிநாட்டவர்களும் உள்ளடங்குகின்றனர்.

மூன்று தேவாலயங்களிலும் கொழும்பு,நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உயிர்த்த ஞாயிறு ஆராதனை நடந்து கொண்டிருந்த வேளை காலை 8.30 இருந்து 8.45 வரையிலான காலப்பகுதியில் இந்த பயங்கரவாத தற்கொலை தாக்குதல் அரங்கேற்றப்பட்டுள்ளது

இதே போல் கொழும்பில் உள்ள மூன்று ஹோட்டல்களிலும் தேவாலயங்களில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்கு தல்கள் போல் காலை 8.30 இருந்து 9.00 மணிவரையான காலப்பகுதியே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மீண்டும் இந்த நேரத்தையும் ஹோட்டலின் இடத்தையும் பார்ப்போமானால் ஹோட்டலின் காலை உணவு அருந்தும் இடம் தேர்தெடடுக்கப்பட்டுள்ளது. மிக கூடுதலான மனித அழிவை ஏற்படுத்த கூடிய வகையில் தேவாலயங்களும்,அத்தோடு கிறிஸ்தவர்களுக்கான அதி முக்கிய நாளான உயிர்த்த ஞாயிறும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது

இலங்கையிலே மிக கூடுதலாக மூன்று இனமும் வாழும் இடங்களாக கிழக்கு மாகாணமும் மேல் மாகாணமும் அமைந்துள்ளது , அணைத்து தாக்குதல்களும் இந்த இரு மாகாணங்களிலும் தான் இடம்பெற்றுள்ளது. அதுவும் மற்றுமொரு விடயமும் துல்லியமாகின்றது

தவ மக்கள் தேவாலயங்களுக்கு சென்று உயிர்த்த ஞாயிறு ஆராதனையில் ஈடுபடுவது வழக்கமாகும் .அதே போல் ஐரோப்பியர்களை பொறுத்தளவில் பல காரணங்களால் ஈஸ்டர் விடுமுறை ஓய்வு என்பது ஒரு சிறிய விடுமுறைக்கு சிறந்த காலமாகும் அண்மை காலமாக இலங்கை இவர்களுக்கு ஒரு சிறந்த இடமாகவும் விளங்குகின்றது. அதுவும் எது ஒரு சிறிய கால விடுமுறை என்பதால் மிக கூடுதலானவர்கள் தலைநகர்களை அண்டிய ஹோட்டல்களில் தங்குவது வழமை.

ஐரோப்பிய நாடுகளை பொறுத்த அளவில் கூடுதலான நாடுகளில் இந்தக்காலப்பகுதியானது 4 நாட்களை கொண்ட விடுமுறையாகும் அதாவது ஐரோப்பியர்கள் விடுமுறையை முடித்துவிட்டு

அதாவது மட்டக்களப்பு தாக்குதலை பொறுத்த அளவில் படுகொலை செய்யப்பட்ட அனைவரும் கிறிஸ்தவ மத தமிழர்களே. இத் தாக்குதல் மூலம் பயங்கரவாதிகள் அல்லது கொலையாளிகள் இன்னொரு செய்தியையும் கூற வருகின்றார்களா அல்லது இந்த இடம் இவர்களுக்கு ஏதுவாக உள்ள இடமாக இருந்ததா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களில் மிக கணிசமான அளவு தமிழர்களும் மற்றும் சிங்கள மக்களாகவும் உள்ளனர். நட்சத்திர ஹோட்டல்களை பொறுத்தளவில் பயங்கரவாத தாக்குதல்கள் நடைபெற்ற ஹோட்டல்களில் கணிசமான ஐரோப்பியர்களும் மற்றும் இந்தியர்களும் தங்கும் இடமாகவும் உள்ளது.

மீண்டும் ஒரு முறை இந்த தாக்குதல்கள் குறிப்பிட்ட ஒரு வகை இன மக்களை கொலைசெய்ய நன்கு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களாகும். மேலும் இவர்கள் தங்களுடைய இந்த பயங்கரவாத தாக்குதல்களால் ஒன்றுமே அறியாத அப்பாவி மக்களின் உயிர்களை பறித்தெடுத்துள்ளார்கள். இந்த கொலையாளிகளும் அத்தோடு இத் தாக்குதலுக்கு துணையாக இருந்த அனைத்து பயங்கரவாதிகளும் சரியான முறையிலும் விரைவாகவும் தண்டிக்கப்படவேண்டும்.

உலகில் உள்ள ஒரு முக்கிய சமயத்தின் அதி முக்கிய சமய நாளில் இடம்பெற்ற இந்த படுகொலையை எந்த வகையிலும் நியாய படுத்தமுடியாது

எனவே இவ்வாறு அசாதார சூழ் நிலையில் நாம் என்ன செய்வது ...

★ அதிகமாக மக்கள் கூட்டமாக நிப்பதை தவிர்த்தல்
★ பயனங்களின் போது பெரிய கைப்பையை தவிர்த்தல்
★ சந்தேக நபர்களை அறிந்ததும் பொலிஸாருக்கு அறியப்படுத்தல்
★ தமது வாக்கங்கள் தொடர்பில் கவனமாய் இருத்தல் குறிப்பாக நிறுத்தி விட்டு செல்லும் பொது மிகவும் அவதானம் தேவை
★ பாதையில் செல்லும் போது தெரியாதவர்களை வாகனத்தில் ஏற்றிச்செல்வதை தவிர்த்தல்
★ சந்தேகப்படும் பொருட்களை கண்டவுடன் பாதுகாப்பு பிரிவிற்கு அறிவித்தல் ,அறிகிலுள்ளோருக்கு தெரியப்படுத்தல்
★ தமது வீடுகளிற்கு அருகில் தரித்து நிற்கும் வாகனம் தொடர்பில் விழிப்பாய் நிறுத்தல்
★ முகவரிகளை விசாரிப்போர் தொடர்பில் விழிப்பாய் இருப்போம்
★ தெரியாதவர்கள் தரும் கை பை களை தவிர்ப்போம்
★ ஆனோமேதேய அழைப்புகள் குறும் செய்திகள் தொடர்பில் விழிப்புணர்வுடனும் இருத்தல் வேண்டும்
★ வங்கிகள் ,வைத்தியசாலைகள், பாடசாலைகள், மதஸ்தலங்கள், பொது சந்தை சதுக்கம், களியாட்ட விடுதிகள், விடுதிகள், வாகன தரிப்பிடங்கள், பொது போக்குவரத்துகள், சமிச்சை விளக்கு சந்திகள், விளையாட்டு நிகழ்வுகள் போன்ற இடங்களில் இரண்டிற்ற்கு மூன்று மடங்கு விழிப்பாய் இருங்கள்
★ வெளியில் செல்லும் பொது உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தினை எடுத்துச்செல்லுங்கள் ,
★ வீட்டில் இருந்து செல்லும் இடம் திரும்பும் நேரம் என்பவற்றை வீட்டில் உள்ள உறுப்பினர்களிடம் தெரியப்படுத்திவிட்டு செல்லுதல்
★ உங்கள் கையடக்க தொலைபேசிகளில் காணப்படும் இடத்தினை அறியும் (LOCATION ON) பகுதி யினை ஒன்னில் வைத்துக் கொண்டு செல்வது உங்கள் பாதுகாப்பான பயணத்துக்கு வழி வகுக்கும்
★ அத்துடன் பாதுகாப்பு பிரிவினருக்கு எப்பொழுதும் ஒத்துழைப்பு வழங்கவும்
★ வீதி போக்குவரத்தின் போது போக்குவரத்து பொலிசாரின் சமிச்சைகளை பின்பற்றவும்
★ ஒரு அவசர நிலைமையின் போது நீங்கள் நடந்து கொள்ளக்கூடிய வழிமுறைகள் தொடர்பில் குடும்பத்தாருடன் கலந்து ஆலோசியுங்கள்

தகவல்களை வழங்கவென, 011-2434251, 011-4055105, 011-4055106, 076-6911604, 011-24333335 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பில், சந்தேகம்கொள்ளத்தக்க வகையிலான நபர்கள் மற்றும் வாகனங்கள், பயங்கரவாத செயற்பாடுகள் குறித்து அறியக் கிடைத்தால், அந்த விடயம் தொடர்பில் அறிவிக்க, இராணுவத் தலைமையகம் விசேட தொலைபேசி இலக்கங்கள் சிலவற்றை அறிமுகம் செய்துள்ளது.

சந்தேகத்துக்கிடமான தகவல்கள் தொடர்பில் உடன் அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்குமாறு, இராணுவ தலைமையகம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

எமது பாதுகாப்பு எம் கைகளிலேயே எனவே உங்களை பாதுகாப்பதற்கான எமது விழிப்புணர்வு செயற்பாடு என்பதுடன் சமூக பாதுகாப்பிற்கு முதலிடம் கொடுப்போம்.

இலங்கை-இந்திய ஒப்பந்தமும் தமிழ் மக்களும்!

சி.அ.யோதிலிங்கம்

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஆடி 29ம் திகதியுடன் 31 வருடங்களாகின்றன. இந்த ஒப்பந்தம் இந்தியாவிற்கும் தோல்வியைத் தந்தது. தமிழ் மக்களுக்கும் தோல்வியைத் தந்தது. இந்தியப் படைகள் தமிழ் மக்களினதும், சிங்கள மக்களினதும் கடுமையான எதிர்ப்பைப் பெற்று அவமான கரமாக வெளியேறியதுடன் ஒரு வகையில் ராஜீவ் காந்தியின் மரணத்திற்கும் காரணமாகியது. ஏட்டிக்கு போட்டியாக புலிகளை அழிக்க வேண்டும் என்ற வெறியில் இந்தியா யுத்தத்திற்கு பக்க பலமாக நின்று தனக்கு சார்பான வலுச் சமநிலையையும் சீனாவிற்கு சார்பாக திருப்பிவிட்டிருக்கிறது. இன்று சீனாவின் செல்வாக்கினை எவ்வாறு முறியடிப்பது என்று தெரியாமல் விழி பிதுங்கி நிற்கின்றது. சீனாவினை அகற்றுதல் என்ற ஒற்றை இலக்கிற்காக அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்ததும் கூட தனது இலக்கில் ஒரு அங்குலம் கூட அதனால் முன்னேற முடியவில்லை. இந்தியாவின் அணுகுமுறையை நடைமுறைப்படுத்திய சிவசங்கர் மேனன், நாராயணன் போன்ற அதிகாரிகள் கூட தற்போதைய இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை விமர்சிக்கின்றனர்.

மறுபக்கத்தில் தமிழ் மக்களை இந்தியாவின் அணுகுமுறை பெருந்தேசிய வாதத்தின் வாயில் கொண்டு போய்விட்டிருக்கின்றது. ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட வட - கிழக்கு இணைப்பையோ, அதிகாரங்களையோ தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்;க இந்தியாவால் முடியவில்லை. கஸ்டப்பட்டு கொண்டு வந்த மைத்திரி - ரணில் அரசாங்கம் கூட இந்தியாவிற்கு கைகொடுக்கவில்லை.

1977ஆம் ஆண்டு 5/6 பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்த ஜே.ஆர் அரசாங்கம் அமெரிக்;காவிற்கு இலங்கையின் கதவுகளை வரையறையின்றி திறந்துவிட்டது. அமெரிக்கா தலைமையிலான அணிக்கும், சோவியத் யூனியன் தலைமையிலான அணிக்கும் இடையே உச்சகட்ட பனிப்போர் நிலவிய காலகட்டம் அது. சோவியத் யூனியனின் ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்பை கண்டு அஞ்சிய அமெரிக்கா அவசரம் அவசரமாக பாகிஸ்தானுடன் இராணுவக்கூட்டு ஒப்பந்தத்தைச் செய்தது. சீனாவும் பாகிஸ்தானுக்கு இராணுவ உதவிகளை வழங்கியது. ஏற்கெனவே சீனப் படையெடுப்பால் பலத்த அடி வாங்கிய இந்தியா தனது புகழ் பெற்ற அணிசேராக் கொள்கையைக் கைவிட்டு சோவியத் யூனியனுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்திருந்தது.

அமெரிக்கா - பாகிஸ்தான் கூட்டு இந்தியாவிற்கு அச்சத்தை கொடுத்த நிலையில் தனது வாசற்படியான இலங்கையும் அமெரிக்காவிற்கு கதவுகளை திறந்து விட்டமை இந்தியாவிற்கு பலத்த அச்சத்தை உருவாக்கியது. அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழ் மக்களின் போராட்டத்தை நசுக்குவதற்கு இந்தியாவிற்கு எதிரான சக்திகளான அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல், தென்னாபிரிக்கா, சீனா போன்றவற்றிடமிருந்து ஆயுத உதவிகளையும் இராணுவ பயிற்சிகளையும் பெற்றார்.

அமெரிக்கா இலங்கைக்கான தனது உதவிகளை இராணுவ, தொழில்நுட்ப இஸ்ரேலுக்கூடாகவே வழங்கியது. கொழும்பில் இருந்த அமெரிக்க தூதரகத்தில் இதற்காக இஸ்ரேல் நலன்புரிப் பிரிவு திறக்கப்பட்டது. இஸ்ரேலின் உதவியுடன் இலங்கையின் கடற்படை நவீன மயமாக்கப்பட்டு கட்டியெழுப்பப்பட்டது. இஸ்ரேலின் உளவுப்பிரிவான சின்பெற் தமிழர்களின் ஆயுதப்போராட்டத்தை நசுக்குவதற்கான போரியல் நுட்பங்களை விசேட அதிரடிப் படைக்கு வழங்கியது. அமெரிக்கா சிலாபத்தில் அமெரிக்காவின் குரல் வானொலிச் சேவையை விரிவாக்கம் செய்தது. திருகோணமலையிலுள்ள எண்ணெய் குதல்களையும் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ள முயற்சித்தது. அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கைக்கு அடிக்கடி வருகை தந்து ஆலோசனை நடாத்தினர். இந்தப் போக்கு அமெரிக்காவுடன் இரகசிய இராணுவ ஒப்பந்தத்திற்கு இலங்கை செல்லுமா? என்;ற அச்சத்தையும் இந்தியாவிற்கு ஏற்படுத்தியது.

இன்னோர் புறத்தில் பிரித்தானியாவின் கினிமினிசேவை அமைப்பின் படைநிபுணர்களும் அதிரடிப்படைகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்கினர். பாகிஸ்தானின் விசேட படைப்பிரிவும் படையினருக்கு விசேட பயிற்சிகளை வழங்கியது. கருஞ்சிறுத்தைகள் என்ற அதிரடிப் படைப் பிரிவும் பாகிஸ்தான் ஆலோசனையில் உருவாக்கப்பட்டது.

இவ்வாறு இந்திய நலன்களுக்கு விரோதமான சக்திகள் இலங்கையின் காலூன்றுவது தனது தேசியப் பாதுகாப்பிற்கும், புவியியல் - கேத்திர நலன்களுக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் என இந்தியா கருதியது. இந்தியத் தலையீட்டிற்கு பிரதான காரணம் இவைதான். 1983 ஆம் ஆண்டு கறுப்பு யூலை அழிவுகளும், அதன் விளைவாக தமிழ் நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்புகளும் தலையிடுவதற்கான களச் சூழலை உருவாக்கின. அப்போது பிரதமராக இருந்த இந்திராகாந்தி தமிழ் விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதங்களும், பயிற்சியும் கொடுப்பது எனத் தீர்மானித்தார். இதன் நோக்கம் தமிழர்களுக்கு தமிழீழத்தைப் பெற்றுக் கொடுப்பதல்ல. மாறாக ஜே.ஆரைப் பணியவைத்து இலங்கையை இந்தியாவின்; செல்வாக்கின் கீழ் கொண்டு வருவதே! இலங்கையைப் பணியவைப்பதற்காக தமிழ்ப் பிராமணரான கோபாலசாமி பார்த்தசாரதி மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டார். இந்திய உளவுப்பிரிவினூடாக தமிழ் இயக்கங்களுடன் தொடர்புபட்டு ஆயுதமும், பயிற்சியும் வழங்கப்பட்டது. முதலில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் புளட் இயக்கங்களுக்கும் பின்னர் புலிகளுக்கும் வழங்கப்பட்டது. இந்நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக உளவுப்பிரிவைச் சேர்ந்த ஆர்.என்.ராவ், கிரிஸ்சக்சேனா, சங்கரன் நாயர் என்போரைக் கொண்ட குழுவையும் இந்திரா காந்தி உருவாக்கினார். இவ்மூவரும் இந்திராகாந்தியின் மிகுந்த நம்பிக்கைக் குரியவர்களாக இருந்தனர்.

இந்திரா காந்தியின் முயற்சியினால் இலங்கைப் படைகளுக்கு எதிரான இயக்கங்களின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கின. வல்வெட்டித்துறை நெடுங்காடு தாக்குதல், ஒட்டிசுட்டான் காவல் நிலையத் தாக்குதல், பொலிகண்டி தாக்குதல்கள், வெள்ளாங்குளத் தாக்குதல்கள், வல்வெட்டித்துறை காவல் நிலையத் தாக்குதல்கள், கரவெட்டித் தாக்குதல் என ஒரு மாதத்திலேயே பல தாக்குதல்கள் இடம்பெற்றன. ஜே.ஆர் அரசாங்கம் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறியது.

இந்த தீவிர சூழ்நிலையில் தான் 1984ஆம் ஆண்டு ஜப்பசிமாதம் 31 ஆம் திகதி இந்திராகாந்தி தனது சீக்கிய மெய்ப்பாதுகாவலர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் முன், பின் அனுபவமில்லாத ராஜீவ் காந்தி பதவிக்கு வந்தார். இந்திராகாந்தியின் மரண நிகழ்வுக்கு வந்த ஜே.ஆர் ஜெயவர்த்தனா இந்தியாவிற்கு அடங்கிப் போவதற்கான சைகையை நேரடியாகவே ராஜீவ் காந்தியிடம் காட்டினார். இந்தியா எதிர்பார்த்ததும் இதுதான். இதன் பின்னர் இந்தியா விடுதலை இயக்கங்களை அடக்கத் தொடங்கியது. விடுதலை இயக்கங்களுக்கு அதிக விருப்பம் இல்லாத நிலையிலேயே திம்பு மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தது. இந்திய உளவுப்பிரிவைக் கொண்டு கடுமையான அழுத்தங்கள் விடுதலை இயக்கங்களுக்கு கொடுக்கப்பட்டன. தமது பேரம் பேசும் நிலையை உயர்த்துவதற்காக இலங்கை இராணுவம் பலவீனமாகும் வரை பேச்சு வார்த்தைக்கு செல்வதை விடுதலை இயக்கங்கள் விரும்பியிருக்கவில்லை.

இந்தியாவின் இந்த அழுத்தங்களுக்கு முகம் கொடுப்பதற்காகவும், விடுதலைப் போராட்டத்தை ஜக்கியப்பட்ட நிலையில் முன்கொண்டு செல்வதற்காகவும் விடுதலை இயக்கங்களினால் ஈழத்தேசிய விடுதலை முன்னணி என்ற அமைப்பு 1984 சித்திரையில் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஈரோஸ் என்பன இணைந்து உருவாக்கின. பின்னர் புலிகளும் அதில் இணைந்து கொண்டனர். இம் முன்னணி முதலில் இலங்கை அரசு அரசியல் தீர்வை முன் வைத்தால் தான் பேச்சுவார்த்தைக்கு செல்வது எனத் தீர்மானித்தது. ஆனால் இந்திய உளவுப்பிரிவினர் நிபந்தனைகள் விதித்தால் நீங்கள் இந்தியாவிலிருந்து துரத்தப்படுவீர்கள் என அச்சுறுத்தியமையினாலேயே விடுதலை இயக்கங்கள் எந்த வித நிபந்தனையுமில்லாமல் பேசச் செல்வதற்கு இணங்கின.

திம்பு மாநாடு 1985ஆம் ஆண்டு ஆடி மாதம் 8ஆம் திகதி ஆரம்பமானது. இதில் ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் இணைந்து கொண்ட இயக்கங்களைத் தவிர புளட் இயக்கமும், தமிழர் விடுதலை கூட்டணியும் பங்கு கொண்டன. அரசாங்கத்திலிருந்து அமைச்சு மட்ட உறுப்பினர்கள் கலந்து கொள்ளாததினால் விடுதலை இயக்கங்களிருந்தும் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை. அடுத்த மட்ட உறுப்பினர்களே கலந்து கொண்டனர்.விடுதலைப்புலிகள் சார்பில் முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் லோரன்ஸ் திலகரும், அன்ரன் சிவகுமாரனும் கலந்து கொண்டனர்.

இரண்டாவது சுற்றுப் பேச்சின் போது யோகரத்தினம் யோகியும் இவர்களுடன் இணைந்து கொண்டார். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் (நுகசுடுகு) வரதராஜப் பெருமாளும், கேதீஸ்வரநாதனும் கலந்து கொண்டனர். தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் சார்பில் (வுநுடுழு) முதல் சுற்றுப் பேச்சில் சாள்சும், பொபியும் கலந்து கொண்டனர். இரண்டாவது சுற்றுப் பேச்சில் இவர்களுடன் நடேசன் சத்தியேந்திராவும் இணைந்து கொண்டார். ஈழப்புரட்சி அமைப்பின் சார்பில் (நுசுழுளு) மூத்த தலைவர்களான இளையதம்பி இரத்தினசபாபதியும், சங்கர் ராஜியும் பங்குபற்றினர். தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் சார்பில் வாசுவாதேவாவும், சித்தாரத்தனும் பங்குபற்றினர். இவற்றிற்கு மாறுபட்டதாக தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். எனினும் ஈழத் தேசிய விடுதலை முன்னணியே பேச்சுவார்த்தை மேசையில் மேல்நிலையில் நின்றது.

அரச தரப்பின் சார்பில் அப்போதய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் சகோதரர் எச்.டபிள்யு.ஜெயவர்த்தனா தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டனர். அரச அதிகாரிகளும் சட்டத்தரணிகளுமே அதில் அங்கம் வகித்தனர். அமைச்சு மட்டத்திலிருந்து எவரும் பங்கேற்கவில்லை.

முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தை 1985ம் ஆண்டு ஆடி மாதம் 08ம் திகதி தொடக்கம், ஆடி மாதம் 13ம் திகதி வரை சுமார் ஆறு நாட்கள் இடம்பெற்றது. இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 12ம் திகதி ஆரம்பமானது. தமிழர் தரப்பு திம்புமாநாட்டின் அரசியல் தீர்விற்கான கோட்பாட்டு அடிப்படையை முன் வைத்தது. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், வடகிழக்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு, அனைவருக்கும் பிரஜாவுரிமை என்கின்ற நான்கு அம்சக் கோரிக்கைகள் அதில் அடங்கியிருந்தன. இரண்டாவது சந்திப்பின் போது சிறீலங்கா அரசு தரப்பு தமிழ்த் தரப்பின் கோரிக்கைகளை நிராகரித்தது. திம்புப் பிரகடனத்தின் முதல் மூன்று கோட்பாடுகளையும், அவற்றிற்கு வழங்கப்பட்ட சட்டரீதியான அர்த்தத்துடன் மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், அரசாங்கத்தால் அவற்றை முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாது. சிறிலங்காவின் இறையாண்மைக்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் தீமை விளைவிக்கும் என்பதாலும், ஒன்றுபட்ட சிறிலங்காவுக்குப் பங்கம் ஏற்படுத்துவதுடன் இந்நாடட்டில் வாழ்ந்து வரும் ஏனைய சமூகத்தவர்களின் நலன்களுக்கும் விரோதமாக அமையும் என்ற காரணத்தால் இக் கோட்பாடுகள் நிராகரிக்கப்பட வேண்டியவையாகும்.

அரசாங்கப் பேச்சுக் குழுவின் விட்டுக்கொடுக்காத கடும்போக்கைத் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் வலுவாகக் கண்டித்தனர். திம்புக் கோட்பாடுகளை ஆதரித்து, தர்க்காீதியான வாதங்களை முன்வைத்துப் பேசிய அவர்கள், தமிழ் மக்கள் தேசிய இனக் கட்டமைப்பைக் கொண்டவர்கள் என்பதையும், அவர்களுக்கு இனம் காணக்கூடிய, வரலாற்று ரீதியான தாயகப் பிரதேசம் உண்டு என்பதையும், எல்லாவற்றிலும் முக்கியமாக, தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள் என்பதையும் வலியுறுத்தினார்கள். அவர்களது விளக்கம் பின்வருமாறு அமைந்திருந்தது.

எமது மக்களின் உறுதியான அரசியற் போராட்டங்களிலிருந்து வரலாற்று ரீதியான படிநிலை வளர்ச்சி பெற்று வடிவம் எடுத்தது தான் எமது சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை. ஒரு பொதுவான பாரம்பரியமும், பண்பாடும், ஒரு தனித்துவமான மொழியும், தாயக நிலமும் உடையவர்கள் என்பதால், ஈழத்தமிழர்கள் அல்லது தமிழீழ மக்கள் ஒரு தேசிய இன அமைப்பைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். அத்தோடு அவர்கள் அடிமைப்பட்ட மக்கள் என்பதால், அந்நிய ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டு. இதன் அடிப்படையில்தான் சர்வதேசச் சட்டத்தின் முக்கிய நியமமாக சுயநிர்ணய உரிமை இன்று அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்த சுயநிர்ணய உரிமையை ஆதாரமாகக் கொண்டுதான் எமது அரசியற் தகமையை நாமே நிர்ணயிக்கும் உரிமை எமக்குண்டு. அதாவது சிறீலங்கா அரசுடன் ஒன்று சேர்ந்து இணைந்து வாழ்வதா அல்லது பிரிந்து சென்று சுதந்திரமான தனியரசை நிறுவிக்கொள்வதா என்ற உரிமை எமக்குண்டு.

நாம் பிரகடனம் செய்த மூலக் கோட்பாடுகளின் அடிப்படையில் எம்முடன் பேச்சுக்களை நடத்துவதற்கு சிறீலங்கா அரச பிரதிநிதிகள் தவறிவிட்டனர். பரஸ்பரம் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வோம். என சிறீலங்கா அரச பிரதிநிதிகள் ஆவணி 12ல் விடுத்த அறிக்கையில் உறுதியளித்த போதும் அவர்கள் அதைக் கடைப்பிடிக்கவில்லை. அதற்கு பதிலாக 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 16ம் நாள் அரச பிரதிநிதிகள் புதிய யோசனைகள் என்ற பெயரில் ஒரு திட்டத்தை சமர்ப்பித்தனர் அது முன்னைய மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஒத்ததாக இருந்தது. நாம் அதனை நிராகரித்தோம்

இதற்கிடையில் யுத்த நிறுத்தத்தை மீறி அரச படைகள் வவுனியாவில் மக்களை கொலை செய்தன. ஈழத்தேசிய விடுதலை முன்னணி பிரதிநிதிகளை சென்னையிலிருந்து வழிநடாத்திய அதன் தலைவர்கள் பேச்சுவார்த்தையிலிருந்து வெளிநடப்புச் செய்யுமாறு கட்டளையிட்டனர். இதற்கேற்ப அவர்கள் வெளிநடப்புச் செய்யவே பேச்சுவார்;த்தை குழம்பியது.

பேச்சுவார்த்தை முறிவடைந்ததை இந்தியா விரும்பவில்லை. இந்திய மத்தியஸ்தராக திம்புவில் கலந்து கொண்ட றொமேஸ் பண்டாரிக்கும் ரெலோவின் பிரதிநிதி சத்தியேந்திராவிற்குமிடையில் பலத்தவாக்கு வாதமும் இடம்பெற்றது. இந்திய அரசாங்கத்திற்கு கோபம் தாங்கவில்லை. பாலசிங்கம், சத்தியேந்திரா, சந்திரகாசன், என்போருக்கு நாடுகடத்தும் உத்தரவு விடுக்கப்பட்டது. சத்தியேந்திரா அதற்கு முன்னரே பயணமாகியிருந்தார். பாலசிங்கமும், சந்திரகாசனும் நாடுகடத்தப் பட்டனர். தமிழ்நாடு இதனை எதிர்த்து கொந்தளித்தது. அனைத்துகட்சி ஆர்ப் பாட்டங்கள் நடாத்தப்பட்டன. இறுதியில் இந்திய அரசு நாடுகடத்தலை வாபஸ் பெற்றது. எனினும் விடுதலை இயக்கங்கள் மீதான இந்திய உளவுப்பிரிவின் அச்சுறுத்தல்கள் தொடர்ந்தன. விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் அச்சுறுத்தல்களுக்கு பணிந்தன.

இந்நிலையில் புலிகள் தனித்து விடப்பட்டனர். ஏனைய இயக்கங்களினால் தமக்கு அச்சுறுத்தல்கள் வரும் எனக் கருதி தாயகத்தில் புலிகள் இயக்கம் ஆயுதத் தாக்குதலை நடாத்தி ரெலோ இயக்கத்தை தடைசெய்தது. தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் இனையும் தடைசெய்தது. புளொட் இயக்கம் தானாக ஒதுங்கிக் கொண்டது. ஈரோஸ் இயக்கத்தின் பெரும்பகுதி புலிகள் இயக்கத்துடன் இணைந்து செயற்பட சம்மதித்தது. ஏனையவர்கள் ஒதுங்கிக் கொண்டனர். விடுதலைப் போராட்டத்தை நடாத்தும் பொறுப்பை புலிகள் இயக்கம் தனித்து கையிலெடுத்தது.

இந்தச் சூழ்நிலை இந்திய அரசிற்கு மிகப் பெரும் தலைவலியாகியது. எல்லா விடயங்களையும் புலிகளுடன் மட்டும் கையாள வேண்டியிருந்தது. புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பது இலகுவானதாக இருக்கவில்லை. அவர்களைப் பணிய வைக்காமல் அடங்குவதற்கு தயாராக இருந்த சிறீலங்கா அரசினைக் கையாள முடியவில்லை. இந்நிலையில் 1986 நவம்பரில் பெங்களூரில் சார்க் உச்சிமாநாட்டின் போது புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும், சிறீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிற்குமிடையில் பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்த இந்திய அரசு முயற்சித்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தீர்வுத் திட்டம் ஒன்றினை முன்வைக்க இதன் போது நிர்ப்பந்திக்கப்பட்டார். கிழக்கு மாகாணத்தை மூன்று துண்டுகளாக பிரிக்கும் திட்டத்தை ஜே.ஆர் முன் வைத்தார். தாயகத்தை கூறு போடும் திட்டத்தை பிரபாகரன் ஏற்க மறுத்தார். இந்தியாவின் முயற்சி தோல்வியடைந்தது. பெங்களூருக்கு பிரபாகரனை அழைத்துச் சென்ற போதும் இந்திய முயற்சி கைகூடவில்லை.

புலிகள் மீதான இந்தியாவின் கோபம் உச்சத்திற்கு சென்றது. புலிகளைப் பணியவைப்பதற்காக அவர்களின் தொலைத் தொடர்புக் கருவிகள் அனைத்தையும் பறித்தது. இதனை எதிர்த்து பிரபாகரன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடக்கினார். தமிழகம் கொந்தளித்தது. இறுதியில் தொலைத் தொடர்புக் கருவிகளை பிரபாகரனின் காலடியில் வைத்த பின்னரே பிரபாகரன் உண்ணாவிரதத்தை நிறுத்தினார்.

இதன்பின்னர் இந்தியாவில் தங்கி நிற்பது போராட்டத்திற்கு இடைஞ்சலைக் கொடுக்கும் எனக் கருதி பிரபாகரன் தாயகம் திரும்பினார். இது புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் இந்தியாவின் செயல்களுக்கு நெருக்கடிகளைக் கொடுத்தது. மறுபக்கத்தில் இந்தச் சூழலைப் பயன்படுத்தி புலிகள் இயக்கத்தை அழிக்கும் வகையில் சிறீலங்கா அரசு ஒப்பிறேசன் லிபறேசன் என்ற பெயரில் வடமராட்சி தாக்குதலை நடாத்தியது. தன்னுடைய பிடி நழுவிப் போகும் என்பதற்காக இந்தியா இத்தாக்குதலை விரும்பவில்லை.

சிறீலங்கா அரசினைப் பணிய வைப்பதற்காக உணவு இராஜதந்திரத்தை இந்தியா கையிலெடுத்தது. உணவுப் பொருட்கள் கப்பல் மூலம் வடபகுதிக்கு அனுப்ப முயற்சிக்க சிறீலங்கா கடற்படை கடலில் தடுத்தது. இந்தியா விமானம் மூலம் உணவுப் பொட்லங்களை யாழ்ப்பாணத்தில் போட்டது. இதன் மூலம் தெளிவான சைகை சிறீலங்கா அரசிற்கு காட்டப்பட்டது. படையெடுப்பை சந்திக்க வேண்டி வரும் என்பதே அச்சைகை. ஜே.ஆர் உடனடியாகவே பணிந்தார்.

இப்பணிவைப் பயன்படுத்தி விடுதலை இயக்கங்களை விடுத்து தானே சிறீலங்கா அரசுடன் ஒப்பந்தம் செய்ய இந்திய அரசு தயாரானது. எப்படியாவது ஒப்பந்தம் செய்து இந்திய நலன்களுக்கு எதிரான சக்திகளை இலங்கையிலிருந்து கலைப்பதே நோக்கம். இலங்கை - இந்திய ஒப்பந்தம் வரைபு தயாரிக்கப்பட்டது. இதற்கு புலிகளை சம்மதிக்க வைப்பது தான் இந்தியாவிற்கு இருந்த மிகப் பெரிய சவால்.

ஒப்பந்தம் பற்றி எதுவும் கூறாமலே ராஜீவ்காந்தி தீர்வுத்திட்டம் பற்றி பிரபாகரனுடன் கதைக்க விரும்புகின்றார் எனக் கூறப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து புதுடில்லிக்கு பிரபாகரன் 1987ம் ஆண்டு ஆடி மாதம் 23ம் திகதி அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அசோக் விடுதியில் பிரபாகரனும் அவரது குழுவினரும் சிறைவைக்கப்பட்டனர். அவரது வெளித்தொடர்பு உட்பட தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. இலங்கைக்கான இந்தியத் தூதுவர் டிக்சிற் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கான நகலை பிரபாகரன் முன்வைத்தார். ஒப்பந்த நகல் ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வை சிபார்சு செய்தது. வட-கிழக்கு நிரந்தாரமாக இணைக்கப்படவில்லை. மாகாண சபையின் அதிகாரங்கள் செயற்பாடுகள் பற்றி தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. ஆயுதக்களைவு ஏற்பாடுகள் ஏற்றதாக இருக்கவில்லை.

தொடரும்

கிழக்குத் தமிழர் ஒன்றியமும் அதன் அரசியலும்

17.03.2019 அன்றைய தமிழ்த்தந்தியில் ‘கிழக்குத் தமிழர் ஒன்றியம் கிழக்குத் தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யுமா? எனும் தலைப்பில் என்னால் எழுதப்பட்ட கட்டுரைக்கு கிழக்குத் தமிழர் ஒன்றிய ஸ்தாபகர்களில் ஒருவரான திரு.த.கோபாலகிருஸ்ணன் அவர்கள் தன்னுடைய பதிலை தனது தன்னிலை விளக்கமாக 21.04.2019 அன்றைய தமிழ்த்தந்தியில் எழுதியுள்ளார். பல விடயங்களை ஒளிவு மறைவின்றி ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியமைக்கு அவருக்கு எனது நன்றிகள்.

மேற்படி எனது கட்டுரை வெளிவந்ததன் பின்னர் 29.03.2019 அன்றைய வீரகேசரியில் கிழக்குத் தமிழர் ஒன்றிய ஸ்தாபகர்களில் ஒருவரும் தற்போதைய அதன் தலைவருமான திரு.த.சிவநாதன் அவர்கள் கிழக்குத் தமிழர் ஒன்றியம் தொடர்பாக ஒரு பேட்டியினை வழங்கி உள்ளார். இப்பேட்டியானது எனது கட்டுரைக்கு பதிலாக இல்லாவிட்டாலும் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் செயற்பாடு தொடர்பானதாக அமைந்திருந்தது.

எனது கட்டுரைக்குப் பின்பு இரு ஸ்தாபகர்களும் தங்களுடைய நிலைப்பாட்டினை ஏதோ ஒரு வகையில் முன்வைத்துள்ளதனை கூர்மையான வாசகர்கள் கண்டு கொள்ள முடியும் எனக் கருதுகின்றேன். இந்த அடிப்படையில் இவ்விருவர்களுடைய விளக்கங்களில் இருந்து சில விடயங்களை வாசகர்களுக்கு முன்வைக்க வேண்டிய தேவை உள்ளது எனக் கருதுகின்றேன்.

திரு.த.கோபாலகிருஸ்ணன் அவர்களுடைய கட்டுரையிலிருந்து விளங்கிக் கொள்ளக்கூடிய விடயம் என்னவென்றால் ‘கிழக்குத் தமிழர் ஒன்றியம்’ கிழக்குத் தமிழர்களின் அபிலாசைகளையன்றி திரு.த.சிவநாதன் போன்றவர்களின் தனிப்பட்ட அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு அமைப்பாக உள்ளது என்பதேயாகும். இதனை அவர் கிழக்குத் தமிழர் ஒன்றியம் முன்னெடுத்த அரசியல் மீவைலைத்திட்டங்களிலிருந்து சிவநாதன்; ஒதுங்கியிருந்தது டன் தான் இந்தியாவில் இருந்த போது வேண்டுமென்றே ஓரங்கட்டப்பட்டு தனக்கு வேண்டியவர்களைக் கொண்ட ஒரு அணியை உருவாக்கியிருக்கின்றார் என்பதிலிருந்து விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு இல்லையானால் இது தொடர்பான விளக்கத்தினை திரு.த.சிவநாதன் அவர்கள் முன்வைக்க வேண்டும் என எதிர் பார்க்கின்றேன்.

எழுவான் வேலன்

மேலும், திரு.த.சிவநாதன் அவர்களுடைய பேட்டி திரு.த.கோபாலகிருஸ்ணன் அவர்களுடைய கட்டுரைக்கு முரணாக இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக அனைத்து தமிழ் கட்சிகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து எமது இலக்கை அடைவதற்காக அயராது உழைத்து வருகிறோம் என திரு.த.சிவநாதன் கூறியுள்ளார். ஆனால் திரு.த.கோபாலகிருஸ்ணனோ தனது கட்டுரையில் இக்கால கட்டத்தில் ஸ்தாபகர் மற்றும் மாகாண இணைப்பாளர்களில் ஒருவரான நண்பர் த.சிவநாதன் (சிரேஸ்ட்ட சட்டத்தரணி) ஒன்றியத்தின் செயற்பாடுகளிலிருந்து ‘ஓடும் புளியம் பழமும் போல’ ஒதுங்கியே இருந்தார். எனக் குறிப்பிடுகின்றார்.

23.08.2018 அன்று கிழக்குத் தமிழர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்த கலந்துரையாடல் கூட்டத்தில் கூட இதன் தற்போதைய தலைவரான திரு.த.சிவநாதன் சமுகமளித்திருக்கவில்லை என்பதையும் அறியக்கூடியதாக இருக்கின்றது. இது திரு.த.கோபாலகிருஸ்ணன் அவர்கள் குறிப்பிடுவதை ஊர்ஜிதப்படுத்துவதாகவும் உள்ளது.

அயராது உழைத்து வருகிறோம் என்பதின் அர்த்தம் தான் எடுத்துக்கொண்ட சமூகப் கடமையினை நிறைவேற்றுவதற்காக எந்தவிதமான தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கும் அப்பால் செயற்படுவதையேயாகும். ஒரு முக்கியமான கூட்டத்திற்கே சமுகமளிக்க முடியாது தனது தனிப்பட்ட விடயங்களைக் கவனித்துக் கொண்ட திரு.த.சிவநாதனால் அயராது உழைத்து வருகிறோம் எனக் கூறுவது எவ்வகையிலும் பொருத்தப்பாடானதல்ல.

இதுபோன்றே தனது பேட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் பேசியிருக்கின்றோம். இதில் இலங்கை தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து போட்டியிடுவதற்கான விருப்பத்தினை தெரிவித்துள்ளன எனக் கூறியுள்ளார். தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ரெலோ, புளட் ஆகிய கட்சிகளே உள்ளன. களுவாஞ்சிகுடியில் நடந்த அனைத்து தமிழ் கட்சிகளுடனான கலந்துரையாடலின் போது இவ்விரு கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தாங்கள் இருப்பதால் அவர்களின் முடிவுக்கேற்பவே தாங்கள் செயற்பட முடியும் என அறிவித்த தாக அறியக் கூடியதாகவும் உள்ளது. இவ்வாறு பொது வெளியில் அவர்கள் தங்கள் நிலைப்பாட்டைக் கூறியிருக்கின்ற நிலையில் திரு.த.சிவநாதன் உண்மைக்குப் பறம்பான வகையில் தனது விருப்பத்துக்கேற்ப கூறி கிழக்கு மக்களை ஏமாற்று அரசியலுக்குள்ளால் இழுத்தக் கொண்டு செல்வதற்கே முயல்கிறார் போல் தெரிகிறது. இதற்கு அவருடன் சேர்ந்திருக்கும் புத்திஜீவிகளான எந்திரி.வ.கருணானந்தம், எந்திரி.வ.பரமகுருநாதன், திரு.வ.மகேந்திரநாதன், ஆகிய சகோதரர்களும் மற்றும் வைத்தியர்.திரு.அளுளானந்தம் போன்றவர்களும் இதனூடாக தங்களுக்கான ஒரு அரசியல் அடையாளத்தை நிறுவமுயல்கிறார்கள் எனலாம்.

மேலும், நீங்கள் ஒரு சிரேஸ்ட்ட சட்டத்தரணி என்ற வகையில் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழுநிறைவான பிரதேச செயலகமாக தரமுயர்த்தவது தொடர்பில் யாராவது சட்டத்தின்பால் சென்று வாதாடி வெற்றி கொள்ள முடியும் என்று கூறமுடியுமா? என ஊடகவியலாளரின் கேள்விக்கு ஒரு சிரேஸ்ட்ட சட்டத்தரணியாக அன்றி மக்களை ஏமாற்றும் ஒரு அரசியல்வாதியாகவே திரு.சிவநாதன் அவர்கள் பதிலளித்துள்ளார். அத்துடன் இது தொடர்பாக சீ.வி.விக்னேஸ்வரன் ஐயாவுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இணைக்கப்பட்டிருந்த வடகிழக்கு மாகாணசபையை ஜே.வி.யினர் ஒரு வழக்கின் மூலம் எவ்வாறு பிரித்தார்கள் என்பதையும் அது தொடர்பாக யாருடன் கலந்துரையாடினார்கள் என்பதையும் எமது தமிழ் சட்ட மேதைகள் அவர்களிடம் சென்று கற்றுவர வேண்டியிருக்கின்றது. கூட்டமைப்பிலுள்ள சட்ட மேதைகளும் சரி சிவநாதனைப் போன்ற சட்டவாளர்களும் சரி தமிழ் மக்களின் பிரச்சினைகளை நீதி மன்றத்தினூடாகத் தீர்ப்பதில் அக்கறை காட்டாது அதனை வைத்து தங்களுடைய அரசியலை எவ்வாறு செய்யலாம் தாம் எப்படி பிரபல்யம் அடையலாம் என்றே சிந்திக்கிறார்கள். நான் எனது முந்திய கட்டுரையில் சுட்டிக்காட்டியது போன்று கிழக்கு மாகாண ஆளுநர் நியமனத்தில் மௌனம் காத்த கிழக்குத் தமிழர் ஒன்றியம், இஸ்லாமிய பல்கலைக் கழக கட்டுமானத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பாக வழக்கு நிலுவையில் உள்ள ஒருவரும் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஓட்டமாவடியில் கோயிலை இடித்து பள்ளிவாசலுக்குக் கொடுத்து சந்தையைக் கட்டுவித்தேன் என்றவரும் காத்தான்குடியில் நட்ட ஈச்ச மரங்களுக்காக நீதிவானையே இடம் மாற்றினேன் எனக் கூறி சட்டத்துக்கு முரணாகச் செயற்பட்ட ஒருவருக்கு ஆளுநர் பதவி வழங்கலாமா என நீதி மன்றத்தை நாடி ஒரு விளக்கத்தைத்தானும் கேட்க வக்கில்லாதவர்களாகவே எமது சட்டவாளர்கள் இருக்கிறார்கள்.

எனவே கிழக்குத் தமிழர் ஒன்றியத்திலிருக்கும் சிலர் தங்களுக்குள்ள கல்வித்தகமைகளையும் தொழில் அந்தஸ்த்தினையும் அடையாளங்களாக முன்வைத்து அவற்றின் மூலம் கிழக்கு மக்களுக்கு சரியான அரசியல் தலைமைத்துவத்தினை வழங்குவோம் என்றவாறு கூட்டங்களைக் கூட்டி உண்மைக்குப் புறம்பானவகையில் மக்களிடம் கதையளப்பது கிழக்கை மேலும் இருட்டுக்குள் தள்ளி தங்களை அரசியல் வெளிச்சத்துக்கு கொண்டுவருவதற்கு என்பதை கிழக்குத் தமிழர்கள் உணர்ந்து கொளளுதல் அவசியமாகும்.

பறிபோன உயிர்களுக்கு யார் பொறுப்பு?

வவுனியா நகரசபைக்கு சொந்தமான கொல்களத்தில் சுகாதார தொழிலாளிகள் நால்வர் மரணிக்க காரணம் என்ன என்பது தொடர்பாக வவுனியா பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந் நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக பல்வேறுபட்ட தகவல்கள் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளது.

நகரசபையின் மாடு வெட்டும் கொல்களம் 1994 ஆம் அண்டு காலப்பகுதியில் தாண்டிக்குளம் சோயா ஒழுங்கைப்பகுதியில் குறிப்பிட்ட சில குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில் அமைக்கப்பட்டிருந்தது.

இதன்போது அயலில் இருந்தவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்ததுடன் குறித்த இடம் தாண்டிக்குளம் என்ற பிரதான இடத்திற்கு அருகில் அமைக்கப்படுவதாலும் கழிவு பொருட்கள் வெளியேற்றுவது தொடர்பாக வரக்கூடிய சுகாதார பிரச்சனைகள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டியிருந்ததுடன் குறித்த கொல்களத்திற்கு பின்புறமாக உள்ள விவசாய குளமான தாண்டிக்குளம் மாசடைவதற்கான வாய்ப்புள்ளமையும் குறைபாடுகளாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தனர்.

எனினும் அக்காலப்பகுதியில் யுத்தம் நடைபெற்றமையினாலும் நகரசபையில் ஆட்சியில் இருந்தவர்களது அதிகார நிலைமையினை கருத்தில் கொண்டும் மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தாது இருந்துள்ளனர். இந் நிலையில் குறித்த இடத்தில் மாடு வெட்டுவதற்கான கொல்களம் அமைக்கப்பட்டது.

காலப்போக்கில் குறித்த கொல்களத்தினால் நகரசபைக்கு வருமானப்பெருக்கம் அதிகரித்த நிலையில் கெல்கள பகுதியில் கட்டிடங்கள் விரிவாக்கப்பட்டதுடன் கழிவு பொருட்கள் சேகரிக்கும் இடங்கள் அமைக்கப்பட்ட போதிலும் சிறந்த முகாமைத்துவத்தினை நகரசபை பின்பற்றாமையினாலும் காலப்போக்கில் வவுனியா நகரத்திற்கு தேவையான மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கு மேலதிகமாக கொழும்பு போன்ற பகுதிகளுக்கு இறைச்சிக்காக மாடுகள் இங்கேயே வெட்டப்பட்டன.

நாளொன்றுக்கு 7 மாடுகளே வெட்டக்கூடிய வசதிகளை கொண்ட இக்கட்டிடத்தொகுதியில் நாளொன்றுக்கு சராசரியாக 30 மாடுகளுக்கும் அதிகமாக வெட்டப்பட்டதான தகவல்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தினூமாக தெரியவந்திருந்தது. அதன் பிரகாரம் 23.05.2018 முதல் ஓகஸ்ட் மாத இறுதி வரையான 4 மாத காலப்பகுதியில் 2391 மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது. என நகரசபை தெரிவித்துள்ள நிலையில் வவுனியா கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை நான்கு மாத காலப்பகுதியில் 122 மாடுகளையே இறைச்சிக்காக வெட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் அதிகளவான மாடுகளை வெட்டுவதற்கு நகரசபை எந்த அடிப்படையில் அனுமதி அளித்தது என்பது தொடர்பில் ஆராயப்படவேண்டும். அவ்வாறு மாடுகள் வெட்டப்படுமாக இருந்தால் அம் மாடுகள் சுகாதார தரம் வாய்ந்ததா என்பதனை கால்நடை வைத்தி அதிகாரிகள் ஆராய வேண்டிய தேவை இல்லையா என்பதுடன் குறித்த மாடுகளை கால்நடை வளர்ப்பாளர்களிடம் இருந்த யாருடைய அனுமதியுடன் வாகனங்களில் கொல்களத்திற்கு கொண்டுவரப்பட்டது என்பதான நிறைந்த கேள்விகள் உள்ளது. இது தொடர்பில் குறித்த கொல்களத்திற்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர்கள் தமது கடமையினை சரிவர செய்துள்ளனரா என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

வவுனியா க.மதி

இவ்வாறான காரணங்களாலேயே குறித்த கொல்களத்தில் அதிகளவான கழிவுப்பொருட்கள் தேங்கியுள்ளதுடன் துர்நாற்றம் வீசும் நிலையும் காணப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அயலவர்கள் தெரிவிக்கையில், குறித்த கொல்களம் மிகவும் துர்நாற்றம் வீசும் வகையில் காணப்படும். தற்போது அப்பகுதியில் அதிகளவான மக்கள் குடியேறியுள்ளதால் சுகாதார நலன் கருதி இங்கிருந்து அகற்றுமாறு கோரியிருந்தோம். கடந்த நகரசபை தேர்தலிலும் எமது வட்டாரத்தில் போட்டியிட்டவர்களிடம் இது தொடர்பான கோரிக்கையை விடுத்தோம் தேர்தல் காலத்தில் அதற்கு உடன்பட்டவர்கள் பின்னர் அதனை செய்து தரவில்லை. எமது வட்டாரத்தில் 3 உறுப்பினர்கள் உள்ளனர். அதில் ஒருவரே நகரசபை தலைவராகவும் உ;ள்ளார் என தெரிவித்தனர்.

இந் நிலையில் குத்தகைக்கு குறித்த கொல்களத்தினை எடுத்தவர் மாடு வெட்டப்படுவதற்காக வெளியாரை கூலிக்கு அமர்த்தியிருந்தபோதிலும் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு நகரசபை வாகனங்களும் நகரசபை சுகாதார தொழிலாளிகளுமே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இது ஒப்பந்தத்தின் பிரகாரமான செயற்பாடாகவே இருந்துள்ளது.

இந்தவகையில் கொல்களத்தில் அதிகாலையில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்பட்டு வருகின்ற நிலையில் வெட்டப்படும் மாடுகள் அதனை உரிமையாளரிடம் வாங்கிய பற்றுச்சீட்டுகள் என்பன கொல்களத்திற்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகரால் பரிசோதனைக்குட்படுத்தப்படுவது வழமை.

வவுனியா நகரசபையின் கொல்களத்தில் நால்வர் இறந்ததற்கான பொறுப்பை பாதுகாப்பு அங்கிகள் இன்றி ஆபத்தான பணியில் ஈடுபடுத்திய அதிகாரி ஏற்பாரா?

இது தொடர்பான வேலைத்திட்டம் சில வேளைகளில் முதல்நாள் இடம்பெறும் இல்லையேல் மாடு வெட்டப்படும் அன்று இடம்பெறுவது வழமையான செயற்பாடு. எனினும் சிலவேளைகளில் இது நடைபெறுகின்றதா என்பதான கேள்வி இருக்கத்தான் செய்கின்றது.

இச் சூழலில் சுகாதார தொழிலாளிகள் நேற்றைய தினம் வியாழக்கிழமை பொது சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலின் படி கழிவுக்குழியை சுத்தம் செய்வதற்கு முற்பட்டுள்ளனர். நான்கு தொழிலாளர்கள் இப்பணியில் முழுமையான ஈடுபட்டிருக்கின்றனர். கழிவு பொருட்களை ஏற்றிச்செல்லும் தாங்கி வாகனத்தில் 3 தடவைகள் குறித்த கழிவுக்குழியில் இருந்த கழிவுகள் ஏற்றப்பட்ட நிலையில் நான்காவது தடவையாக கழிவினை எடுக்க முற்பட்டபோது அது கடினமாக இருந்துள்ளது. குறித்த நேரத்தில் சம்பவ இடத்தில் குறித்த கொல்களத்திற்கு பொறுப்பான பொதுசுகாதார பரிசோதகர் அங்கிருந்து சென்றுள்ளார். சுகாதார தொழிலாளிகள் பணியாற்றிக்கொண்டிருக்கும் நிலையில் அதிலும் ஆபத்தான தொழில் ஒன்றில் ஈடுபட்டிருக்கும் நிலையில் இவ்வாறு பொது சுகாதார பரிசோதகர் சம்பவ இடத்தில் இருந்து சென்றுள்ளார்.

இதன்போது சுகாதார தொழிலாளிகள் கழிவினை எடுப்பதற்கு கடினத்தன்மையை போக்குவதற்கும் குழியை முழுமையாக சுத்திகரிப்பதற்கும் நீரினால் சுத்திகரிக்க முற்பட்டுள்ளனர். இதற்காக மூடப்பட்டிருந்த குழியின் மூடியை சிறிதளவில் அகற்றிவிட்டு திரவிய சந்தனசாமி (38 வயது) என்ற சுகாதார தொழிலாளி குழியினுள் இறங்கியுள்ளார்.

நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த குழி அத்துடன் இரத்தம், சாணகம், நீர் உட்பட மாட்டின் சிறு கழிவுப்பொருட்கள் நீண்ட காலமாக தேங்கிகிடக்கும் குறித்த குழியில் ‘ஹைட்ரஜன் சல்பைட்’ என்ற வாயு உருவாகியிருக்கும் எனவும் இது மிகவும் ஆபத்தானது என்பதுடன் இதனை சுவாசிக்கும் ஒருவருக்கு ஒரு நிமிட நேரத்தில் மூளை சாவடைந்து விடும் எனவும் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியாக முன்பு செயற்பட்ட வைத்திய கலாநிதி லவன் தெரிவித்திருந்தார். இதற்கு மப்பால் குறித்த குழியில இரத்தம் தேக்கப்படுவதனால் இரத்தத்தில் புரோட்டின் காணப்படும் என்பதனால் அவை ஏனைய பொருட்களுடன் நொதிந்து சயனைட் வாயுவையும் வெளிப்படுத்த கூடியது எனவும் சுற்றாடல் துறை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் சுகாதார தொழிலாளிகளை குறித்த ஆபத்தான பணியில் ஈடுபடுத்திய பொது சுகாதார பரிசோதகருக்கு தெரிந்திருக்கவில்லையா என்ற கேள்வி எழச்செய்கின்றது.

இதற்குமப்பால் முதலாவதாக குழியில் இறங்கிய சுகாதார தொழிலாளி மயக்கமுற்று சுமார் 20 அடி குழியில் சுமார் 3 அடி உயரத்தில் காணப்பட்ட கழிவுக்குள் வீழ்ந்துபோக சக தொழிலாளிகளும் வாகன சாரதிகள் இருவரும் கொல்களத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தரும் பதறிப்போயுள்ளனர்.

அவரை காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக மற்றைய தொழிலாளி உள்ளே இறங்கியபோது அவரும் மயக்குமுற்று வீழ்ந்துள்ளார். இவ்வாறே தம்மோடு கூடவே பணியாற்றும் தோழனை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அடுத்தடுத்து குழியில் இறங்கவே பிலிப் வசந்தகுமார் (39), ஞா. சசிக்குமார் (27), சேவுகன் செல்வராசா (40) ஆகிய நால்வரும் கழிவுக்குழியிலேயே மூழ்கி இறந்துபோயுள்ளனர்.

இவ்வாறான மரணத்திற்கு யார் காரணம். குறித்த கழிவு குழியில் சுவாசிக்க முடியாத வாயுக்கசிவு ஏற்பட்டுள்ளது என்பதனை அறிந்துகொள்ள முடியாத சுகாதார தொழிலாளிகளை வழிநடத்தியிருக்க வேண்டிய பொது சுகாதார பரிசோதகர் அவ்விடத்தில் இல்லாமல் போனது காரணமா? அவர் தொழிலாளிகளுக்கு பாதுகாப்பான அங்கிகள் ஏதுமின்றி ஆபத்தான பணியில் ஈடுபட்டுத்திவிட்டு சென்றது ஏன்? சுகாதார தொழிலாளிகளின் பாதுகாப்பு தொடர்பிலும் அவர்களுக்கான பாதுகாப்பு அங்கிகள் தொடர்பாகவும் நகரசபை பொறுப்புடன் செயற்படாதது எதற்காக? அலுவலகத்தினுள் சுகாதார தொழிலாளிகள் வந்தால் துர்நாற்றம் வீசுவதாகவும் யன்னல் ஓரமாக நின்று கொடுப்பனவுகளை பெறுமாறும் அவர்களது பணிகளை செயற்படுத்துமாறும் வெளியில் நிற்குமாறு அவர்களை மனித தன்மைக்கு அப்பால் பணிக்கும் அலுவலர்கள் அவர்களின் பரிதாபத்திற்குரிய சேவையினை கவனத்தில் கொள்ளாமை ஏதனால்? சுமார் 25 ஆண்டுகளாக இவ்வாறான நிலைமை குறித்த கொல்களத்தில் இடம்பெறாத நிலையில் தற்போது நான்கு உயிர்கள் பறிபோகும் அளிவிற்கு அசண்டையாக குறித்த பணியை மேற்கொள்ளுமாறு பணித்;து இருந்த அதிகாரி சட்டத்தின் முன் நிறுத்தப்படுவாரா என்ற கேள்விகளே இந்த மரணங்கள் ஏற்படுத்தியிருக்கின்றது.

வடுக்களை சுமந்து நிற்கும் மவுசாக்கலை நீர்த்தேக்கம்

1961ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி நீர் மின்சார உற்பத்திக்காக 95000 ஆயிரம் ஹெக்டேயர் தேயிலை தோட்டங்கள் உள்ளடக்கிய பகுதியில் மவுசாக்கலை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது.

இந்த நீர்த்தேக்கத்தை அமைக்க சுமார் ஆறு ஆண்டு காலம் பணியாளர்கள் பணியாற்றினர் அத்துடன் 1969ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நீர்த்தேக்கத்தில் நீர் நிரப்பும் பணி ஆரம்பமானது.அவ்வாறு நீர் நிரப்பும் போது மூன்று நகரங்கள், பதினேழு தோட்டங்கள் மற்றும் ஏழு தொழிற்சாலைகள் மூழ்கியது.

அவ்வாறு மூழ்கடிக்கப்பட்ட மஸ்கெலியா,கங்கேவத்தை மற்றும் காட்டுவாகடை ஆகியன நகரங்களும் மறே,நூக்குவத்தை,லக்சபான,ரக்காடு,அல்வா தோட்டம்,கங்கேவத்தை,சின்ன கங்கேவத்தை,கிராப்பு தோட்டம்,வன்னியன் தோட்டம், பொடியன் தோட்டம்,தோத்தலா தோட்டம்,காட்டு மஸ்கெலியா, பெரிய நடு தோட்டம்,சீமை தோட்டம்,மொக்கா மற்றும் பெரிய மஸ்கெலியா தோட்டங்களாகும்.அத்துடன் நகரில் காணப்பட்ட கோயில், விகாரை, முஸ்லிம் பள்ளிவாசல், கிறிஸ்தவ தேவாலயம்,கடை தொகுதி மற்றும் குடியிருப்புகளும் நீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டது.

ஆதலால் அங்கு வாழ்ந்த மக்களில் 25 சதவீதமானவர்கள் இந்தியாவிற்கு சென்றனர் 70 வீதமானவர்கள் வேறு இடங்களுக்கு சென்றனர் 5 வீதமானோர் என்ன செய்வது என்று தெரியாமல் கையேந்தும் நிலைக்கு தல்லப்பட்டனர்.

ஆகையால் அப்போது ஆட்சியில் இருந்த அரசு மூழ்கடிக்கப்பட்ட நகரங்களில் இருந்த வர்த்தகர்களுக்கு புதிய நகரம் ஒன்றை அமைத்து கொடுத்தது. ஆனால் நீரில் மூழ்கிய மூன்று நகர வர்த்தகர்களுக்கு ஒரே நகரில் வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டன.இவ்வாறு வழங்கப்பட்ட போதிலும் ஒரு சில வர்த்தகர்களுக்கு இடம் கிடைக்காமையால் இந்தியாவிற்கு சென்றனர். அதுமட்டுமின்றி இவ்வாறு புதிய நகரம் அமைப்பதற்கு முன்பு சிவனொலிபாத மலைக்கு வரும் யாத்ரீகர்கள் இந்நகரில் இருந்த மதஸ்தலங்களில் இரவு நேரங்களில் தங்கியிருந்து சென்றுள்ளனர்.அவ்வாறு வருகை தரும் யாத்ரீகர்களின் மூலம் நகர வர்த்தகர்களுக்கு சிறந்த வர்த்தக நடவடிக்கைகள் காணப்பட்டது ஆனால் புதிய நகர் அமையப்பெற்றமையால் பெரும்பாலான யாத்ரீகர்கள் நகருக்கு வருகை தராமல் செல்வதால் வர்த்தக நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

புதிய நகரம் அமைப்பதற்கு முன்பாக சிவனொலிபாதமலைக்கு செல்லும் யாத்ரீகர்கள் தமது வாகனங்களை கங்கேவத்தை வரை மட்டுமே பயணிக்க கூடியதாக இருந்தது.அதனால் கங்கேவத்தையிலிருந்து மலை அடிவாரம் வரை சிறியரக பேருந்து சேவை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.ஆனாலும் 1969ஆம் ஆண்டில் நீர் நிரம்பிய பின்னரும் பயனற்ற நிலை ஏற்பட்டது.

1972ஆம் ஆண்டு காலப்பகுதியில் கெனியன் நீர் மின்சார நிலையம் அமைத்ததன் பின்னர் இங்கு நீர் மின்சாரம் உற்பத்திக்கு பயன்படுத்திய நீரை கெனியன் நீர் மின்சார நிலையத்திற்கு கொண்டு சென்று அங்கு நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது.

தற்போது மவுசாக்கலை நீர்த்தேக்கத்தில் இருந்து பெறப்படும் நீர் கெனியன் நீர் மின் உற்பத்தி நிலையத்தில் பயன் படுத்திய பின்னர் லக்சபான நீர் மின் உற்பத்தி நிலையம்,பொல்பிட்டிய நீர் மின் உற்பத்தி நிலையம் மற்றும் புதிய லக்சபான நீர் மின் உற்பத்தி நிலையம் ஆகியவை இந்நீரை பயன்படுத்தி நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.இப்போது புதிதாக கலுகலையில் நீர் மின் உற்பத்தி நிலையம் அமைத்து வரும் பணி ஆரம்பித்திருப்பதால் அங்கும் இந்நீர் பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அதன் பின்னர் வருடாந்தம் வரட்சி காலத்தில் 62அடி வரை நீர் வற்றி அங்கு காணப்பட்ட கோயில், புத்தர் சிலை, பள்ளி வாசல் மற்றும் காவடி பாலம் ஆகியவை காட்சி தரும்.அவ்வாறு வரட்சி காலத்தில் காவடி பாலத்தில் காணப்பட்ட இரும்பு தூண்களை வெட்டி எடுத்து விற்றுவிட்டார் சில விஷமிகள்.

அத்துடன் இந்நகரில் காணப்பட்ட சிவன் கோயிலில் இருந்த சிவன் சிலையை நூக்குவத்தை தோட்ட அம்மன் கோயிலில் தற்போது வைத்திருக்கின்றனர். இப்போது இந்நீர்தேக்கத்தில் நீர் வற்றும் போது உள்ளூர் பயணிகள் மட்டும் வருகை தராமல் வெளி நாட்டு உள்ளாச பயணிகளும் இந்நீர்தேக்கத்தை பார்வையிட்டு செல்கின்றனர்.

இங்கு காணப்பட்ட கட்டிடங்களில் தற்போதும் தனது அமைப்பில் சிறிதும் மாற்றம் ஏற்படாமல் சண்முக நாதர் கோயில் காட்சி தருகின்றது.இக்கோயிலானது சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நீரில் மூழ்கி இருந்து வருகிறது.ஆனால் ஏனைய வணக்கஸ்தலங்களில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் இக்கோயில் அப்போது இருந்த வடிவமைப்பில் இருப்பது ஒரு அதிசயமான விடயமாகும்.இப்பகுதியை தொழும் பொருள் ஆராய்ச்சி மையம் பாதுகாக்கும் நோக்கில் இங்கு காணப்படும் கட்டிடங்களை பாதுகாக்கும் நோக்கில் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்துடன் இணைந்து பாதுகாத்து வருகின்றனர்.

இவ்வாறு காணப்படும் வரலாற்று சிறப்பு வாய்ந்த இடத்தில் தற்போது குப்பை குவிந்து கிடப்பதால் பார்வையிட வரும் பார்வையாளர்கள் பெரும் அசௌகரியத்திற்கு முகம்கொடுத்து வருகின்றனர். இக்குப்பைகளால் துர்நாற்றம் வீசுவதுடன் இந்நீர்தேகத்தில் காணப்படும் மீன்பிடி மீனவர்களும் பாதிக்கும் வாய்ப்பு தோன்றியுள்ளது.ஆகவே இக்குப்பைகளை நீர் இல்லாத இச்சந்தர்ப்பத்தில் அகற்ற மஸ்கெலியா பிரதேச சபை அதிகாரிகளோ அல்லது தொண்டு நிறுவனங்களோ முன்வரவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்

உயிர்த்த...

II ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒத்துழைத்து அபிவிருத்தி புனர்வாழ்வு வேலைகளில் இணைந்து செயற்படுமாறு மேற்கு நாடுகள் தமது திட்டங்களை வகுப்பதும் இதன் அடிப்படையிலேயே.

மேற்கு நாடுகளின் கைகளில் இந்தப் புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் சிக்கிக் கொள்ளும்போது அந்த நாடுகள் இலங்கை அரசுடன் பேரம் பேசுவதற்கான பகடைக்காய்காளாக அவர்களைப் பயன்படுத்துகிறார்கள். இதைப் பலர் புரிந்துகொள்வதில்லை.

மறுபுறம், ஈழப் போரின் போது இடம்பெற்றது தமிழ் இன அழிப்பா என்பதற்கான சர்வதேச விசாரணை நடத்தப்படவில்லை. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க்குற்ற விசாரணை நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் கூட 2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கம் இலங்கையில் அமைக்கப்பட்ட பின்னர் கைவிடப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தை முழுமையாகத் தமக்குச் சாதகமாக மாற்றியமைக்கும் இவ்வாறான அணுகுமுறைகளில் மேற்குலகம் ஒருபுறம் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது மறுபுறம் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தமது உறவின் மூலம் இலங்கையை எப்படித் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம் அல்லது அமெரிக்கா இலங்கையில் நிலைகொள்வதை எவ்வாறு குழப்பலாம் என்ற உத்திகளைக் கையாளும் என்பதும் வெள்ளிடை மலை.

மத சார்பான பிளவுகளை தமிழர் மத்தியில் ஏற்படுத்திவிடும் நோக்கில், குறிப்பாக சைவர்களையும் கிறித்தவர்களையும், தமிழர்களையும் இஸ்லாமியர்களையும் முரண்படச் செய்யும் கைங்கரியத்தில் இந்திய மதவாதப் புலானாய்வுத் தரப்புகள் ஈடுபடுவதும், இன்னொரு புறம் சிங்கள பௌத்தத்துக்கும் வட இந்திய இந்துத்துவவாதத்துக்கும் இடையே ஒருங்கிசைவு ஏற்படுத்தப்பட்டிருப்பதையும் ஈழத்தமிழர்கள் உற்று நோக்கவேண்டும்

இன அழிப்பு, மானுடத்துக்கெதிரான குற்றம் போன்ற பாரதூரமான குற்றங்களைச் செய்தாலும் பொறுப்புக் கூறல் இன்றித் தப்பித்துவிடலாம் என்பது இலங்கை இராணுவத்துக்கு மாத்திரமல்ல பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபடும் வெளிச்சக்திகளுக்கு உதவி, ஒத்தாசை புரியும் தரப்புகளுக்கும் சாதகமான நிலையாகிவிடுகிறது.

இதையெல்லாம் மேற்குலக நாடுகள் விளங்கிக்கொண்டாலும், அவைகளுக்கு தத்தம் கேந்திர நலன்களே பிரதானமாகப்படுகிறது.

ஆகவே ஈழத்தமிழர்கள் தமது நலன் குறித்த அரசியலைத் தாமே தீர்மானிப்பவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

இலங்கை ஒற்றையாட்சி அரசு வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் தான் தனது பெரும்பாலான இராணுவ முகாம்களை அமைத்துள்ளது. நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து சதவீதமான இராணுவத்தை வடக்கு கிழக்கில்தான் இலங்கை அரசாங்கம் வைத்திருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலிலும் உள்நாட்டுப் போர் ஒன்றைத் தடுத்தல் என்ற மன நிலையிலேயே இலங்கை அரசாங்கம் செயற்படுகிறது. தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளை அபகரித்து இராணுவ முகாம் அமைத்தல், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்ற முழுக் கவனத்தையும் இலங்கை இராணுவம் செலுத்துகின்றது.

இத் தருணத்தில் தான், இலங்கை இராணுவத்தோடு ஒருபுறம் உறவு வைத்துக்கொண்டு மறுபுறம் வேறு குழுக்களை இலங்கைத் தீவுக்குள் பாகிஸ்தானில் இருந்து ஏவி விடும் நடவடிக்கைகளும் நடகின்றனவா என்ற ஐயம் வலுப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு விசுவாசமாகச் செயற்படுவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை காண்பித்து வருகின்றது. அதேவேளை சீனாவோடு அரசியல், பொருளாதார கலாச்சார உறவுகளும் பேணப்படுகின்றன.

இந்த இருதலைக் கொள்ளி நிலை பாகிஸ்தானுக்கும், அது அணிவகித்திருக்கும் சீனத்தலைமைக்கும் கசப்பானதொரு விவகாரம் என்பது வெளிப்படை.

சுருங்கக் கூறின், 2009 இன அழிப்புப் போருக்குப் பின்னர், தென்னிலங்கை ஒரு பெரிய பொறிக்குள் மாட்டிக்கொண்டிருக்கிறது எனலாம்.

இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள், மைத்திரி - மஹிந்த முரண்பாடுகள், கோட்டாபய, பசில் ராஜபக்ச மற்றும் பிரதான அரசியல் கட்சிகளிடையேயான உள்ளக முரண்பாடுகள் என இலங்கை அரசியலில் தற்போது தலைவிரித்தாடும் குழப்பமான சூழலை சீன-பாகிஸ்தான் அணி ஒரு புறமும், அமெரிக்க-இந்திய அணி மறு புறமுமாகப் பயன்படுத்த விழையும்.

சீன-பாகிஸ்தானிய அணுகுறை இவ்வாறிருக்குமென்றால் மறுபுறம் இந்திய அணுகுமுறை, குறிப்பாக வடக்கு கிழக்கில், எவ்வாறு அண்மையில் இருந்திருக்கிறது என்பதையும் நாம் நோக்க வேண்டும்.

மத சார்பான பிளவுகளை ஈழத்தமிழர் மத்தியில் ஏற்படுத்திவிடும் நோக்கில், குறிப்பாக சைவர்களையும் கிறித்தவர்களையும், தமிழர்களையும் இஸ்லாமியர்களையும் முரண்படச் செய்யும் கைங்கரியத்தில் இந்திய மதவாதப் புலானாய்வுத் தரப்புகள் ஈடுபடுவதும், இன்னொரு புறம் சிங்கள பௌத்தத்துக்கும் வட இந்திய இந்துத்துவவாதத்துக்கும் இடையே ஒருங்கிசைவு ஏற்படுத்தப்பட்டிருப்பதையும் ஈழத்தமிழர்கள் உற்று நோக்கவேண்டும்.

வடக்கு கிழக்கில் வாழும் சைவத் தமிழ் மக்களும் கிறிஸ்தவத் தமிழ் மக்களும் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் இந்திய, பாகிஸ்தான் புலனாய்வுத் துறையினரின் பிரித்தாளும் தந்திரங்களுக்குள் சிக்காமல் உரிமைகள் தொடர்பான மாற்று அணுகுமுறைகளைக் கையாள வேண்டும்

தென்னகத் தமிழர்களை உய்ய விடக்கூடாதென்றும், அவர்களைச் சாதி மதம் என்ற அடிப்படைகளில் கூறுபோட்டு வைத்திருக்க வேண்டும் என்றும் வட இந்திய புலனாய்வு அணுகுமுறையும், இந்துத்துவ வாதமும் எண்ணுகின்றன.

தமிழகத்தை எவ்வாறு கூறு போடுவதில் வட இந்தியா மும்முரம் காட்டுகிறதோ அதே மும்முரத்தையே ஈழத்தமிழர் விடயத்திலும் அது செய்கிறது.

2009 இற்குப் பின்னர் இந்த அணுகுமுறை வடக்கிலும் கிழக்கிலும் சில பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு, அண்மையில் சில வெற்றிகளையும் காண ஆரம்பித்திருக்கிறது என்பது வேதனைக்குரிய உண்மை. இந்தியாவின் இந்த அணுகுமுறையை பாகிஸ்தானின் புலனாய்வும் பார்த்துக் கொண்டு வாளா இருக்குமா என்ற கேள்வி இங்கு எழுகிறது.

ஆகவே வடக்கு கிழக்கில் வாழும் சைவத் தமிழ் மக்களும் கிறிஸ்தவத் தமிழ் மக்களும் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் இந்திய, பாகிஸ்தான் புலனாய்வுத் துறையினரின் பிரித்தாளும் தந்திரங்களுக்குள் சிக்காமல் உரிமைகள் தொடர்பான மாற்று அணுகுமுறைகளைக் கையாள வேண்டும்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை, உயிர்த்த ஞாயிறன்று நடந்த குண்டுத் தாக்குதல் இந்தப் படிப்பினையைத்தான் விட்டுச் சென்றுள்ளது.

நன்றி: இணையம்

மனித...

I0 ஆம் பக்கத் தொடர்ச்சி

கள் தெரிவித்திந்தார். மனிநேயத்தை மனிதத்துவத்தின் தத்துவார்த்தமான விடயங்களை தனது சமூகத்தின் முன்னே எடுத்தாண்டிருக்கின்றமை மனிதர்களுக்கு ஆறுதடிலைத் தந்திருக்கிறது எனலாம்.

இவ்வாறான செயற்பாடுகளை தூரவிலக்கிடும் வகையில்தான் என்னவோ உலகில் வாழும் மனிதத்துவத்தை இணைத்து உலக மனிதநேயத்திற்கும் ஒரு நாள் மக்கள் மத்தியில் விதந்துரைக்கப்பட்டு அதனை முழு வருடமும் மனதில் இருப்பதற்கான ஒரு தினத்தை ஐக்கியநாடுகள் சபை ஏற்படுத்தியிருக்கிறது.

சமூகத்தில் காணப்படும் பல்வேறு ஏற்றத்தாழ்வு நிலைமைகள்கூட இதுபோன்ற மக்களின் அழிவுகளுக்கு தூபமிடுகின்ற தீவிரவாதத்தை தூண்டுகின்றதா என்கிற கேள்வியும் எழுகிறது. இவற்றை முற்றாக ஒழிப்பதற்கு மனிதநேயம் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் காணப்படுதல் அவசியமானதாகும். இயற்கை அனர்த்தம் ஏற்படுகின்றபோது பாதிக்கப்படுகின்ற மக்களுக்காக ஓடோடிச் சென்று உதவுகின்றோம். அதுதான் மனிதநேயம். மனிதர்கள் என்கிற வகையில் எல்லோருமே ஒன்றுதான். வழிபாடுகளும், வாழ்க்கை முறைகளும் வெவ்வேறாக இருந்தாலும் உண்ணும் உணவிலிருந்து, தூங்கும் வரையிலான மனித செயற்பாடுகள் அனைத்தும் ஒன்றுதான்;. ஆகவேதான் நமது சகோதரன் ஒருவன் பாதிக்கப்பட்டால் அவனுக்கு உதவுகின்ற மனமே மனிதநேயமாகும்.

ஐ.நாடுகள் தகவல் நிலையம் 2010 இல் விடுத்திருந்த அறிக்கையில் உலக வரலாற்றில் மனிதகுலம் பல தடைகளைத் தாண்டி முன்னேறியுள்ளது. ஆரம்பத்தில் கடல் கொந்தளிப்பு, நில நடுக்கம், எரிமலை வெடிப்பு போன்ற இயற்கையின் சீற்றங்களிலிருந்து தம்மைக் காத்துக்கொண்டு மனிதன் வளர்ந்தான். அடுத்தபடியாக, காட்டுவாழ்க்கையில் புலி, கரடி, சிங்கம், பாம்பு போன்ற கொடிய மிருகங்களின் தாக்குதல்களைச் சமாளித்து வாழக் கற்றுக் கொண்டான். மனிதன் குடும்பமாக வாழத்தலைப்பட்டதும் சமூக வாழ்வில் புதுவித ஆபத்து மனிதனுக்கு வந்தது. மனிதர்களிலேயே பலர் மிருகங்களாக மாறி, மற்றவர்களை இனத்தின் பெயரால், நிறத்தின் பெயரால், தேசத்தின் பெயரால், மதத்தின் பெயரால் தாக்கத் தலைப்பட்டனர். இவ்வாறு மனிதர்களால் மனிதர்களுக்குத் தரப்படும் கொடுமைதான் இன்றைய காலம் வரை நீடித்து வருகிறது. ஆயினும் ஒவ்வொரு காலகட்டத்திலும், அன்போடு, அருளோடு, தன்னலமற்ற பொதுநலத்துடன், மனித நேயத்துடன் மற்ற உயிர்களையும் காத்து நிற்கும் உத்தமர்கள் ஒரு சிலர் இருந்த காரணத்தால்தான் மனித குலம் இன்னமும் தழைத்து நிற்கிறது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய், தம்நோய்போல் போற்றாக் கடை என்கிறார் வள்ளுவர். கல்வியறிவு, செல்வச் செழிப்பு, பட்டம், பதவி ஆகியவை பெருமளவில் ஒருவனுக்குக் கிடைத்திருந்தாலும், அவற்றுடன் மனிதநேயம் அவனிடம் இல்லை என்றால் அவனிடம் உள்ள அனைத்தினாலும் எவ்விதமான பயனும் இல்லை என்கிறார் வள்ளுவர். எனவேதான் மனிநே நேயம் என்பது மனிதத் தன்மையின் உயர் போக்கினை அடிப்படையாகக் கொண்ட உலக நோக்கு மனிதநேயமாகும். சிறப்பான மனித வாழ்க்கையின்; அம்சங்களில் கண்மூடித்தனமான நம்பிக்கை வைக்காமல் மனிதரின் பகுத்தறிவை, அறத்தை, ஆற்றலை மனிதநேயம் முன்னிறுத்துகின்றது. அனைத்து மனிதர்களையும் அது மதிப்போடு நோக்குகின்றது. எனவேதான் நமது தலைவர்கள் பலர் எமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இந்த அசாதாரண நிலைமைகள் சாதாரண நிலைக்கு வரவேண்டும் என்பதற்காக பல்வேறு நோக்குகளிலிருந்து சமூகநோக்கில் மனித நேயத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

மிகவும் உயர்வாகக் கிடைக்கின்ற நோபல்பரிசு பெற்ற வெங்கட்ராமன் 2009 ஆண்டு இரசாயனவியலுக்கான நோபல் பரிசு பெறுவோரில் ஒருவராக அறிவிக்கப்பட்டவுடன் உலக ஊடகங்களில் அவரைப் பற்றிய செய்திகள் உலாவரத் தொடங்கின. ஓர் விஞ்ஞான மேதையாக அறிமுகம் பெற்ற வெங்கட் ராமனின் மனிதநேயத்தை பாருங்கள். இவர் சிறு வயது முதலே குஜராத் மாநிலத்தில் வளர்ந்தவர். இவரது தந்தையார் வெங்கட்ராமன் பல்கலைக்கழக பேராசிரியர், தாயார் ராஜலஷ்மியும் குழந்தை உணவூட்டம் மற்றும் உயிர் வேதியல் துறையில் பேராசிரியர். எனவே இவரையும், இவரது சகோதரியையும் வளர்த்த வேலைக்கார அம்மையார் மீது இவருக்கு எப்போதுமே அதிக பாசத்தோடும் பரிவோடும் கவனித்து வந்திருக்கின்றார்.

2002ம் ஆண்டு குஜராத்தில் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக வறுமையில் வாடும் மாற்றுமத சிறுவர்கள் சிறுமிகளின் கல்வி தடைபடாமல் தொடர நிதியுதவி செய்திருந்தார். பணம் கொடுத்தோம், கடமை தீர்ந்தது என்று இல்லாமல், அடிக்கடி அந்த ஏழை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை விசாரித்துக் கொள்வாராம். அமெரிக்காவில் கல்வி பயின்று, அந்நாட்டின் நிரந்தரக் குடியுரிமையையும் பெற்றிருந்த அவர்கள், குஜராத்தில் கல வரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து அக்கறை செலுத்துவதும், அம்மாற்றுமத சிறார்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவுகின்ற ஒருவராக அறியப்பட்டிருந்தார். எனவேதான் மனிதநேயம் மனிதர்களுக்குள் உருவாக்கப்பட வேண்டும். கல்வியும், பெரியோரின் வாழ்க்கை முறைகளும், நல்லடக்கமான விடயங்களும் சிறுவயதிலிருந்து ஊட்டப்பட வேண்டும். மனிதன் அறிவாளியாவது இலகுவானதாகும். ஆனால் அந்த அறிவாளி மனிதன் மனிதநேயத்தோடு வாழவில்லையானால் அவன் மனிதனே அல்ல. அவனுடைய அறிவும் செல்லாக் காசாகிவிடுகிறது. இலங்கையில் ஏற்பட்ட சம்பவங்கள் துயரமான ஒரு நிகழ்வாகும். இதனை யார்செய்திருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். மனிநேயம் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் வர நாம் ஒவ்வொருவரும் தியானிப்போம். வல்ல இறைவனை பிரார்த்திப்போம். துன்பங்களுக்குள்ளான மக்களுக்காக மனிதநேயத்தோடு அணுகுவோம். மனிதநேயத்தை வளர்ப்பதில் எம்மை அர்ப்பணிப்போம்.

கத்தோலிக்க..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

துறவிகள் நாட்டை விட்டு செல்ல வேண்டும் என்ற அறிவித்தல் போன்ற வையும் கத்தோலிக்க மக்களை பெரிதும் பாதித்தது என்றே கூறலாம். அரச வைத்தியசாலைகளில் சிலவற்றில் அருட் சகோதரிகள் சிலர் பணிபுரிந்தனர். அவர்களையும் இடை நிறுத்தும் உத்தரவும் வந்தது. ஆரம்பத்தில் இயங்கிய கத்தோலிக்க ஆசிரிய பயிற்சி கலாசாலைகளையும் அரசு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்தது. இங்குதான் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது.

கத்தோலிக்க கடற்றொழிலாளர் பிரச்சினைகள்

போர்துக்கீசர் இலங்கையின் கரையோரப்பகுதிகளில் கத்தோலிக்க சமயத்தை பரப்பினார்கள்.அதனால்தான் அந்த மக்களில் பலர் கிறிஸ்தவர்களாவர் வடக்கு,கிழக்கு உட்பட நாட்டின் கரையோர பகுதிகளில் அதிகமான கடற்றொழிலாளர்கள் கத்தோலிக்கர்களே.இவர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அடிக்கடி பல போராட்டங்களையும் நடாத்துகின்றனர். ஆனால்,அவை சரியாக தீர்க்கப்படுவதில்லை என அவர்களின் அமைப்புக்கள் கூறுகின்றன. கடற்றொழில் அமைச்சு எமது பிரச்சினைகளை தீர்த்தால் மீன்பிடித்துறையில் பெரும் வருமானத்தை ஈட்டித்தரமுடியும் என்கின்றனர். அடிக்கடி எரிபொருள் விலை ஏற்றம்,உட்பட பலதரப்பட்ட கஷ்டங்கள் மத்தியில் தாம் வாழ்வதாக அவர்கள் போராட்டம் நடாத்தும்போது கூறுவர். கடற்றொழில் அமைச்சு,திணைக்களத்துக்கு பட்ஜட்டில் அதிக நிதியை ஒதுக்கி,மீன்பிடித்துறையை வளர்த்தால் நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி அடையும் என மேடைகளில் பேசுகின்றனர். ஆனால்,செய்வதில்லை. புத்தளம் முதல் பாணந்துறை வரை கத்தோலிக்க மீனவ குடும்பங்களே வாழுகின்றன. இவற்றை விட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இந்த மக்கள் செறிந்து வாழுகின்றனர்.

இதேபோலவே வடக்கிலும் மன்னார் முதல் பூநகரி,யாழ்ப்பாணம்,தீவுப்பகுதி,மாதகல்,காங்கேசன்துறை,வடமராட்சி,வடமராட்சி கிழக்கு,முல்லைத்தீவு, திருகோணமலை வரையும் கத்தோலிக்க மக்களே கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர்.யுத்த காலத்தில் பல உயிரிழப்புகளை,சொத்து அழிவுகளை சந்தித்தவர்கள். இன்று நிலைமை வழமைக்கு திரும்பியும் தொழில் செய்வதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.வடக்கின் கடல் வளம் மிகவும் சிறந்ததாக இருப்பதால் தான் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் அங்கு வந்து தொழில் செய்கின்றனர். கடற்படையினர் கைது செய்து தடுத்தும் அவர்கள் வருவதை நிறுத்தவில்லை. இதனால் தமது தொழில் பாதிக்கப்படுவதாக அரசிடமும்,அதிகாரிகளிடமும்,அரசியல்வாதிகளிடமும் பல தடவைகள் கூறியும்ஒரு பயனும் கிடைக்கவில்லை என்கின்றனர்.முல்லைத்தீவில் தென்பகுதியினர் தொழில் செய்வதையும் அரசு தடுக்கவில்லை.

யுத்தத்துக்கு முன்னர் வடக்கில் இருந்து பெருமளவு கடல் உணவுகள் தென் பகுதிக்கு ரயில்,லொறிகளில் அனுப்பப்பட்டன.இன்று நவீன போக்கு வரத்துக்கு உரிய வசதிகள்.உடனுக்குடன் குளிரூட்டப்பட்ட வாகனங்களில் கடல் உணவுகளை எடுத்துச்செல்லும் வசதிகள் உள்ளன.80 வீதமானவை வடக்கில் இருந்தே அனுப்பப்பட்டன. எனவே அரசு இவர்களை கத்தோலிக்கர்கள்,சிறுபான்மையினர் எனப்பாராது உரிய முறையில் கவனம்செலுத்தி அவர்களின் பிரச்சினைகளுக்கு தீரவைக்கண்டால் கடற்றொழில் அபிவிருத்து அடைவதுடன்.நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சியடையும்.அத்துடன் நாட்டில் வாழும் சகல மீனவ குடும்பங்களுக்கும் இனம்,மொழி என்ற பாகுபாடு அரசின் வீடமைப்பு உதவிகள்,இந்த மாண வர்களுக்கான கல்வி தொடர்பி லான புலமைப்பரிசில் உதவிகள்,கடன் வசதிகள் போன்றவற்றை செய்யவேண்டியது அவசியமாகும்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 28.04.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

தன்னுயிரை ஈந்து பலஉயிரைக் காத்த ஊழியர்

கல்லடி நிருபர்

மட்டக்களப்பில் சீயோன் தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் 26பேர் உயிரிழந்ததுடன் 73பேருக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தது அனைவரும் அறிந்தது.

இந்த குண்டுத்தாக்குதலின் பின்னணி தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் குறித்த தினம் குண்டுதாரி தேவாலயத்திற்கு உள் பகுதியில் நடாத்தவிருந்த தாக்குதல் ராஜீ ரமேஸ் என்னும் குறித்த தேவாயலத்தின் ஊழியரினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தாக்குதல்தாரி ஆலயத்திற்குள் இரண்டு பைகளுடன் நுழைய முற்பட்டபோது தேவாலயத்தின் ஊழிய ரான ராஜீ ரமேஸ் அவரை சந்தேகம் கொண்டு விசாரணை செய்துள்ளதுடன் ஆலயத்திற்குள் நுழைவதையும் தடுத்துள்ளார்.

குறித்த தாக்குதல்தாரி ஆலயத்திற்கு வெளியே கொண்டுசென்று விட்டுள்ள துடன் மீண்டும் தாக்குதல்தாரி ஆல யத்திற்குள் நுழைய முற்பட்டபோதும் அவரை மீண்டும் தடுத்து வாக்குவாதத் தில் ஈடுபட்டுள்ளார்.

அன்றைய தினம் தாக்குதல்தாரி ஆலயத்திற்குள் குறித்த தாக்குதலை நடாத்தியிருந்தால் நூற்றுக்கு மேற்பட்ட வர்கள் உயிரிழக்கும் நிலையேற்பட்டி ருக்கும்.

எனினும் ராஜீ ரமேஸின் செயற்பா டுகள் காரணமாக தாக்குதல்தாரியின் இலக்கு தடுக்கப்பட்டு தேவாலயத்தின் முன்பகுதியிலேயே தாக்குதல்தாரி தாக் குதலை நடாத்தியுள்ளார்.

இந்த தாக்குதலின்போது ராஜீ ரமேஸ் உட்பட அவரது சகோதரி, சகோ தரியின் கணவர், அவர்களின் மகன் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த தாக்குதல்தாரியுடன் ராஜீ ரமேஸ் அவர்கள் போராடியமை தொடர்பில் சம்பவத்தில் படுகாய மடைந்த பலர் இன்று கருத்துகளை முன்வைத்துவருகின்றனர்.

மட்டக்களப்பு கல்லடி,வேலூர் 07ஆம் குறுக்கில் வசித்துவந்த ராஜீ ரமேஸ் ஒரு ஒப்பந்தகாரர் என்பதுடன் சிறந்த பண்புகளைக்கொண்ட மனிதர் எனவும் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்டவர்களை பாதுகாத்து தனது உயிரை தியாகம் செய்த ராஜீ ரமேஸின் பூதவுடன் கடந்த திங்கட்கிழமை ஓரே குழியில் தனது உறவுகளுடன் நல்லடக்கம் செய்யப்பட் டது.

அவர்களின் சடலங்கள் திங்கட்கி முமை கல்லடி வேலூரில் உள்ள உயிரி முந்தவர்களின் இல்லத்தில் அஞ்சலிக் காக வைக்கப்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து அன்று மாலை மட்டக்களப்பு நாவலடியில் உள்ள பொதுமயானத்திற்கு கொண்டுசெல்லப் பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

கல்லடி,வேலூர் 06ஆம் குறுக்கு வீதியை சேர்ந்த ராஜீ ரமேஸ் (சீயோன் தேவாலய ஊழியர்), அவரது தங்கை சசீகலா ஜசாந்தன் (30வயது), அவ ரது கணவன் நாராயணன் ஜசாந்தன் (36வயது), அவர்களது மகன் ஜசாந்தன் ஜாபேஸ்(2,1/2)ஆகியோரே குண்டுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தினை சே ர்ந்தவர்கள் உயிரிழந்துள்ளனர்.

துக்கதினம் அனுஷ்டிப்பு

என்.ஹரன்

குண்டுத் தாக்குதல்களில் அகாலமர ணமடைந்த எமது உறவுகளின் ஆத்மா ச ாந்தியடையும் வண்ணம் அம்பாறை மாவ டடத்தின் பல பகுதிகளிலும் பொது மக் கள் மௌன அஞ்சலியைச் உணர்வு பூர்வ மாகச் செலுத் தினர்

இதே வேளை அக் கரைப்பற்று பனங்காடு ஸ்ரீ பாசுபதேஸ்வர ஆலயத்தில் ஆலய நிர்வா கத்தினரால் ஒழுங்கு செய்யப்படட பூஜையில் ஆலய குருவுடன் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து சுடரேற்றி பிரார்த் திப்பதை காணலாம்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மாநாடு ஒத்திவைப்பு த.தே.கூ மேதின நிழகழ்வுகள் இரத்து செய்யப்பட்டுள்ளது

க.விஜயரெத்தினம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மாநாடு ஒத்திவைப்பு, த.தே.கூ மேதின நிகழ்வுகள் இரத்து செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் அசாதாரண நிலைமை கருதி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாநாடு ஒத்தி வைக்கப்படுவதோடு, தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் மேதின நிகழ்வுகளும் இரத்துச் செய்யப்படுவதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கிருஸ் ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.

அத்துடன், தந்தை செல்வாவின் நினைவு தினத்தையொட்டி 21ம் திகதிய குண்டுத் தாக்குதலில் உயர்நீத்த உடன்பி றப்புகளுக்கு அஞ்சலி செலுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்றுள்ள அசாதா ரண நிலைமையில் கட்சின் மாநாடு மற்றும் மேதின நிகழ்வு என்பன தொடர் பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக் கையில்,

கடந்த 21ம் திகதி உயிர்ப்பு ஞாயிறு அன்று மட்டக்களப்பு, கொழும்பு உட் பட பல்வேறு இடங்களில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் சோகத்தில் இருந்து மக்கள் இன்னும் மீளவில்லை. 2015 ஜனவரி 08ம் நாளுக்குப் பின்னர் நிலவிய சமாதான நிலைமை முற்றாகச் சீர்கெட்டுவிட்டது.

மக்களிடையே சோகத்தோடு சேர்ந்த ஒரு அச்ச நிலைமை காணப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையிலே திட்டமிட்ட படி எமது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யின் 16வது மாநில மாநாட்டை வரும் 26ம் நாளன்று நடாத்துவது பொருத்தமற் றது எனக் காண்கின்றோம்.

எனவே எதிர்வரும் நாட்களில் மாநாட்டுக்கான தினம் தீர்மானிக்கப் படும் வரை இந்த ஏற்பாடுகள் ஒத்தி வைக்கப்படுகின்றன என்பதனைக் கட்சி அங்கத்தவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

இருப்பினும், மாநாட்டுச் செயற்பா டுகளில் தொய்வு ஏற்படாதவகையில் அது தொடர்பில் அக்கறையுள்ளவர்களாக இருக்கும் படியும் கேட்டுக் கொள்கின் றோம்.

இந்த சோகத்தின் மத்தியிலும் 26ம் திகதிய தந்தை செல்வாவின் நினைவு நாளை மிகவும் அடக்கமாக அந்தந்த மாவட்டங்களில் அனுஷ்டிக்க நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு கட்சிக் கிளைகளைக் கேட்டுக் கொள்வதோடு தந்தையின் அடக்கமான அல்லது அடை யாளமான நினைவு நிகழ்வை உடன டுத்து 21ம் திகதிய துன்பியலில் உயிர்நீ த்த எல்லா உடன்பிறப்புக்களுக்குமான நினைவஞ்சலியையும் நிகழ்த்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

அதே நேரம் நாட்டின் நிலைமை கருதி மேதின ஏற்பாடுகள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளன என்ற விடயத் தையும் கவனத்திற்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதின நிகழ்வு களும் நடைபெறமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் குறைகள் விரைவில் நிவர்த்தி செய்யப்படும்

க.விஜயரெத்தினம்

மட்டக்களப்பு போதனா வைத்தி யசாலையில் முழு வசதிகள் கொண்ட பிரேதயறை நிர்மாணித்துக் கொடுக் கப்படுவதோடு சட்ட வைத்திய அதி காரி பற்றாக்குறையும் நிவர்த்தி செய்து கொடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினரும்,இலங்கை தமிழரசுக்கட்சி யின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட மாவை சே னாதிராசா தலைமையிலான குழுவினர் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலே இவ்வாறு தெரி வித்தார். இக்கூட்டம் செவ்வாய்க்கிழமை (23)மாவட்ட செயலாளர் மா.உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடல் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநே சன்,முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர்களான பா.அரியநேந்திரன், பொன்.செல்வராசா,தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் அமைச்ச ருமான கி.துரைராஜசிங்கம்,மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் எஸ்.சத்தியசீலன்,மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டார் கள்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் :-

எதிர்வரும் காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் திடீரென ஏற்படும் பல அனர்த்தங்களின் போது உயிரிழப்போரின் சடலங்களை முறையாக வைத்து பராம ரிப்பதற்கும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் முழு வசதிகளுடன் கூடிய பிரேதயறை இல்லாமல் இருப்பது பெரும்குறை யாக காணப்படுகின்றது.

இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் மட் டக்களப்பு போதனா வைத் தியசாலையில் பிரேதயறை அமைப்பதற்கு சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேரட்ன அவர்களு டன் நேரடியாக கதைத்தும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் முழு வசதிகளுடன் கூடிய பிரேதயறையை அமைப்பதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளதாக மாவை சே னாதிராசா தெரிவித்தார்.

இப்பிரேதயறையை மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளின் தேவைய றிந்தும்,சுகாதார அமைச்சருடன் கதைத்து விஸ்தரிக்கவுள்ளோம்.மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் மேலும் இரு சட்ட வைத்திய அதிகாரிகளை சுகாதார அமைச்சர் கவனமெடுத்து நியமித்து தர வேண்டும்.மட்டக்களப்பு போதனா வைத் தியசாலையில் பிரேதயறை பிரச்சனை,ச ட்ட வைத்திய அதிகாரி பற்றாக்குறை என் பன தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவ ரும்,எமது தலைவருமான இரா.சம்பந்தன் ஐயாவுடன் தெரியப்படுத்தியும்,பாராளு மன்றத்தில் இதற்கான முன்னாயர்த்த நட வடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் எனத் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசா லைகளின் பாதுகாப்பு,இரவில் விஷேட பொலிஸ் போக்குவரத்து சேவையை விஸ்தரித்தல்,அரச திணைக்களின் பாது காப்பு,மாவட்டத்தின் தேவையறிந்து எரிபொருள் சேவையை முறையாக விஸ் தரித்தல்,வர்த்தக சங்கத்துடன் கதைத்து கடைகளை பொதுமக்களின் அத்தியவ சியமான பொருட்களை பெறுவதற்கு கடைகளை திறக்கச் செய்தல்,இரவுநேர புகையிரச்சேவையை விஸ்தரித்தல்,உள் ளிட்ட பல்வேறு விடயங்களை ஆரம்பித் தல் இதன்போது ஆராயப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசா லைகளில் சிசிச்சை பெற்று வருகின்றவர்க ளின் சுகநலம் விசாரித்தறிந்தேன்.மேலும் பாடசாலைகளின் பாதுகாப்பு,வணக்கஸ் தலங்களின் பாதுகாப்பு மற்றும் மாவட் டத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பாதுகாப்பு சம்பந்தமாகவும் இதன்போது கேட்டறிந்தார்.

மட்டக்களப்பு தேவாலயத்தில் காயமடைந்தவர்களுக்கு தன்னார்வ தொண்டர் நிறுவனங்களால் உதவி

செட்டுடீபாளையம் நிருபர்

மட்டக்களப்பு தேவால யத்தில் காயமடைந்தவர்க ளுக்கு மாவட்டத்தில் உள்ள தன்னார்வ தொண்டர் நிறுவ னங்களால் தலா 10,000 ரூபா பணம் வழங்கி வைப்பு.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) சியோன் தேவாலயத் தில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் காயமடைந்து போதனா வைத்தியசாலையில் தற்போது சிசிச்சை பெற்று வருகின்றவர்களை மாவட்டத்தில் இயங்கிவரும் தன்னார்வ தொண்டர் நிறுவனங்கள் மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் தலைமையில் பார்வை யிட்டும்,நிலைப்பாடு தேவையறிந்தும் ஒவ்வொரு தனிநபருக்கும் செவ்வாய்க்கி

முமை(23)பிற்பகல் மாவட்ட செயலாள ரால் 10,000 ரூபா பணம் வழங்கப்பட் டது.

இவ்வாறு 40குடும்பங்களைச் சேர்ந்த 58 நபர்களுக்கே சர்வோதயம், அலியன் எலாய்ட் தொண்டர் நிறுவனங்களால் பணம் வழங்கப்பட்டது.

குழந்தைகளையும் பெண்களையும் கொல்பவர்கள் உண்மையான முஸ்லிமாக இருக்கமுடியாது

தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவர் தௌபீக் மௌலவி தெரிவித்தார்

பொதுமக்களையும் குழந்தைக ளையும் பெண்களையும் கொல்பவர்கள் உண்மையான முஸ்லிமாக இருக்கமுடி யாது என தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவர் தௌபீக் மௌலவி தெரிவித் தார்.

தேசிய தௌஹீத் ஜமாத் மௌலவி ஷஹ்ரான் என்பவரினால்தான் ஆரம்பிக் கப்பட்டதாகவும் ஆனால் காலப்போக் கில் அவர் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான போக்கினை கொண்டிருந்ததன் காரணமாக தமது அமைப்பில் இருந்து விலக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

காத்தான்குடியில் உள்ள தேசிய தௌஹீத் ஜமாத்தின் பள்ளியில் நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரி வித்தார்.

அதன்காரணமாக மௌலவி ஷஹ்ரான் என்பவருக்கும் தமது அமைப்புக்கும் எந்த வித தொடர்பும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார். 2012ஆம் ஆண்டு தமது அமைப்பு மௌலவி ஷஹ்ரானால் ஆரம் பிக்கப்பட்டபோதும் 2017ஆம் ஆண்டு காத்தான்குடியில் ஏற்பட்ட கலவரம்; ஒன்றையடுத்து அவர் தலைமறைவாகியி ருந்த நிலையில் அரசாங்தக்திற்கு எதிரான கருத்துகளை சமூக ஊடகங்கள் வாயிலாக தெரிவித்துவந்த நிலையில் அவரை தமது அமைப்பில் இருந்து நீக்கியதாகவும் அவர் தெரிவித்தார். இஸ்லாம் என்பது தெளிவான மார்க்கம்.இஸ்லாத்தின் சட்டங்கள் தெளி வாக சொல்லப்பட்டுள்ளது.இஸ்லாத்திற் கும் இந்த தாக்குதலுக்கும் எந்தவித சம்பந் தமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர்களையும் பெண்களையும் கொலைசெய்யக்கூடாது என இஸ்லாம் தெளிவாக கூறியுள்ள நிலையில் இவ்வா றான தாக்குதல்களில் பல சிறுவர்களும் பெண்களும் உயிரிழந்துள்ளதன் காரணமாக இவ்வாறான தாக்குதலை மேற்கொண்டவர் கள் உண்மையான இஸ்லாமியராக இருக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கி வைப்பு

க.விஜயரெத்தினம்

மட்டக்களப்பு மாவட் டத்தில் சீயோன் தேவா லயத்தில் இடம் பெற்ற தற்கொலை தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்த குடும்பங் களுக்கு உதவி செய்யும் நோக்குடன் மாவட்டத் தில் செயற்படும் தன் னார்வ நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அத்தியாவசிய பொருட் களை வழங்கிவருகின்றது. அந்த வகையில் புதன் கிழமை (24) காலை வேள்ட்விசன் மற்றும் காகில்ஸ் ஆகிய இரண்டு நிறுவ னங்களும் சில பொருட்களை மாவட்ட

அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமா ரிடம் மாவட்ட செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

வங்கியில் குண்டுப்புரளி இராணுவத்தினர் சோதனை

பட்டிருப்பு நிருபர்

மட்டக்களப்பு நகரில் உள்ள தனியார் வங்கி யொன்றில் குண்டு இருப்பதாக வெளி யான தகவல்களை தொடர்ந்து அங்கு படையினரினால் தீவிர தேடுதல் பணி கள் முன்னெடுக்கப் பட்டன.

இதன்காரண மாக மட்டக்களப்பு நகரில் பதற்ற நிலமையேற்பட்டதுடன் பின்னர் நகரம் வழமைக்கு திரும்பியது.

மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில் அரசடியில் உள்ள தனியார் வங்கியொன்றிலேயெ பொலிஸ் அவசர சேவைக்கு கிடைத்த தகவலின் அடிப்ப டையில் அப்பகுதிக்கு சென்று குண்டுசெ யலிழக்கச்செய்யும் படையினர் மற்றும் பொலிஸார் தீவிர சோதனை நடவடிக் கைகளை மேற்கொண்டனர்.

குறித்த தனியார் வங்கியின் ஊழியர் கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு சுமார் ஒரு மணி நேரம் சோதனை நடவ

டிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது கல்முனை-மட்டக் களப்பு வீதியின் போக்குவரத்து அரசடி சந்திவரையில் மட்டுப்படுத்தப்பட்டிருந் தது.

இந்த சம்பவம் காரணமாக மட்டக் களப்பு நகரில் பதற்ற நிலமையேற்பட்ட துடன் ஏனைய வங்கிகளும் தமது நடவ டிக்கைகளை நிறுத்திக்கொண்டது.

எனினும் குறித்த பகுதியில் எந்தவித மான வெடிபொருட்களும் மீட்கப்படாத நிலையில் நகரின் நிலைமை வழமைக்கு திரும்பியது.

தந்தை செல்வாவின் 42வது நினைவு தினம்

கல்லடி நிருபர்

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவின் 42வது நினைவு தினம் மட்டக்களப்பில் அனுஸ்டிக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு நகரில் உள்ள தந்தை செல்வா பூங்காவில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன்,மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன்,பிரதி முதல்வர் க.சத்தியசீலன்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராஜா,பா.அரியநேத்திரன்,கிழக்கு மாகாணசபையின் முன்னாள் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார்,இலங்கை தமிழரசுக்கட்சியின் வடகிழக்கு மாகாண இளைஞர் அணி தலைவர் சேயோன் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டதை தொடர்ந்து மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இறுதியாக இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவின் ஆத்மசாந்திக்காக இரண்டு நிமிடங்கள் மௌன இறைவணக்கம் செலுத்தப்பட்டது.

திருகோணமலை நகரசபையில் அஞ்சலி நிகழ்வு; நகரசபை உறுப்பினர் க.ஜெயபிரகாஷ் கோரிக்கை

சேனையூர் நிருபர்

உயிர்த்த ஞாயிறன்று (21) நாட்டில் இடம் பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களால் உயிரிழந்த உறவுகளுக்கு திருகோணமலை நகரசபையில் ஈகைச் சுடர்கள் ஏற்றி அஞ்சலி நிகழ்வினை மேற்கொள்வதற்கு நகரசபையின் விஷேட கூட்டத்தை கூட்டுமாறு நகரசபை உறுப்பினர் க . ஜெயபிரகாஷ் திருகோணமலை நகரசபைத் தலைவர் நா. இராசநாயகம் அவர்களுக்கு வெள்ளிக்கிழமை (26) கடிதம் ஒன்றினை வழங்கி உள்ளார்.

திருகோணமலை நகரசபை சபா மண்டபத்தில் குறிப்பிட்ட அஞ்சலி நிகழ்வினை மேற்கொள்வதற்கு நகரசபை தலைவர் அனுமதி வழங்க வேண்டும் என உறுப்பினர் ஜெயபிரகாஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

மனித குலத்துக்கு எதிரான நாசகாரச் சக்திகளின் இதயம் அற்ற செயற்பாடு

காரைதீவு அமைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி கண்டனம்

கல்முனை நிருபர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை அப்பாவி மக்களை இலக்கு வைத்து நாட்டின் பல இடங்களிலும் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு தாக்குதல்களை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் காரைதீவு பிரதேச அமைப்பாளரும், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் பிரதி தவிசாளருமான வீரகத்தி கிருஷ்ணமூர்த்தி வன்மையாக கண்டித்துள்ளார்.

இவர் இது தொடர்பாக வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அப்பாவி மக்களை இலக்கு வைத்து தீவிரவாத கும்பலால் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு தாக்குதல்களை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் எதிரான நாசகார சக்திகளே இக் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை நடத்தி உள்ளார்கள் என்பது வெளிப்படை ஆகும். வழிபாட்டு தலங்களில் வழிபாடுகள் மேற்கொண்டிருந்த மக்கள் மீது கொலைவெறி தாக்குதல்கள் நடத்துகின்ற அளவுக்கு இதயம் அற்றவர்களாக நடந்து உள்ளனர்.

இத்தாக்குதல்களில் உயிரிழந்த அனைத்து உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம். அதே போல இத்தாக்குதல்களின் காயம் அடைந்தவர்கள் விரைந்து குணம் பெற வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். அதே நேரத்தில் மழை ஓய்ந்தாலும் தூவானம் விடவில்லை என்பது போல வெடிகுண்டு பீதி தொடரவே செய்கின்றது. எனவே மக்கள் அனைவரும் அவதானத்துடனும், விழிப்புடனும் செயற்பட வேண்டும் என்றும் கோருகின்றோம். அத்துடன் பொலிஸாரும், பாதுகாப்பு தரப்பினரும் தீவிரவாத கும்பலை வேரறுத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர் என்பதையும் இவ்விடத்தில் செல்லி வைக்கின்றேன்.

கருத்தரங்கு

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண அபாய சூழ்நிலை காரணமாக அம்பாணை மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களையும் விழிப்புணர் வூட்டும் முகமாக

மாவட்ட செயலாளரின் வேண்டு கோளுக்கமைய அம்பாணை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் அவர்களினால் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் வெடிபொருட்கள் அபாய முகாமைத்துவ விழிப்புணர்வு நிகழ்வு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது இதில் மேலதிக அரசாங்க அதிபர்களான ஏ.எல். அப்துல் லத்தீப், வீ.ஜெகதீஸன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விசேட கலந்துரையாடல்

துரைவந்தியமேடு நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களை வலுப்படுத்துதல் தொடர்பான விசேட கூட்டம் நேற்றைய தினம் மட்டு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந் மற்றும் உதவி மாவட்ட செயலாளர் அ.நவேஸ்வரன்இ மட்டு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ சேவைகள் உதவிப் பணிப்பாளர் எஸ்.எம்.சியாட்இ நிருவாக உத்தியோகத்தர் க.தயாபரன் மற்றும் அனர்த்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை தொடர்பான விளக்கங்கள் மற்றும் அனர்த்தம் ஏற்படாமல் தடுப்பதற்கான வழி முறைகள் இஅனர்த்தம் நிகழ்ந்தால் எவ்வாறு மக்களுக்கு உதவுவது மற்றும் அவசர கால நிமைமைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தல் இவ தந்திகளைத் தடுக்கும் வழிமுறைகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் அனர்த்த முகாமைத்துவ சேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள் 24 மணித்தியாலமும் தமது சேவையில் தயாராக இருக்க வேண்டிய கட்டாய கடமைப்பாடுகள் தொடர்பாக ஆலோசனையினை மாவட்ட அரசாங்க அதிபர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

காத்தான்குடி மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் பலத்த பாதுகாப்பு

எம்.பஹ்த் ஜுனைட்

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டில் சில பகுதிகளில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபங்கள் தெரிவித்து கடந்த மூன்று நாட்கள் வர்த்தக நிலையங்கள் மூடி துக்கம் அனுஸ்திக்கப்படது.

இருப்பினும் வியாழக்கிழமை (25) காத்தான்குடி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் மக்களின் நடமாட்டமும் வியாபார நடவடிக்கைகளும் வழமை நிலை போன்றே காணப்படுகிறது.

அத்துடன் அரச நிறுவனங்கள், தனியார் வங்கிகள், பொது நூலகங்கள் என அனைத்தும் வழமை போன்றே இயங்கி வருகிறது.

அத்துடன் காத்தான்குடி பிரதேசம் முழுவதும் பள்ளிவாயல்கள், பாடசாலைகள், பொது இடங்களில் இராணுவம் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுல்லதுடன் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தாக்குதல் சம்பவம் நடைபெற்று குறுகிய காலத்தினுள் குற்றவாளிகள் இனங்காணப்பட்டமை புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த வெற்றி

துரைவந்தியமேடு நிருபர்

இலங்கை புலனாய்வுப் பிரிவினர் தற் கொலைத் தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே பாதுகாப்பினை உறுதிப்படுத்தாத நிலையில் சம்பவம் நடைபெற்ற பின்னர் துரிதமாகச் செயற்பட்டமை உண்மையில் பாராட்டத்தக்கது. தற்கொலைத் தாக்குதல் சம்பவம் நடைபெற்று குறுகிய காலத்தினுள் குற்றவாளிகள் இனங்காணப் பட்டிருக்கின்றமை புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த வெற்றியாகும்.

அரசியல் இலாபம் கருதி சில அரசியல் வாதிகள் சர்வதேசத்தின் மீது சேறு பூச நினைப்பது வேடிக்கையானது.தற்கொலைக் கொலையாளிகள் இனங்காணப்பட்டிருக்கும் நிலையில் உண்மையினை ஏற்றுக் கொள்ள வேண்டும்.அதனை விடுத்து பூச்சாண்டி வேலை செய்ய நினைப்பதனை தமிழ் உணர்வாளர்கள் ஒரு போதும் ஏற்கத் தயார் இல்லை.குற்றவாளிகள் இனங்காணப்படுகின்ற போது இன பேதங்களுக்கு அப்பால் அரசு தண்டனை வழங்க வேண்டும்.

தற்கொலைத் தாக்குதலின் போது கொல்லப்பட்டுள்ளவர்களின் அதிகளவானவர்கள் தமிழர்கள் ஒரு மாற்று இனத்தவர் கொல்லப்பட்டால் கொந்தளிக்கும் அரசியல் வாதிகள் இன்று பல மறுப்பு அறிக்கையினை வெளியிட்டவாறு இருக்கின்றனர். இவற்றுக்கு உயிரினைப் படைத்த இறைவன் பதில் கூறுவான் இதில் எதுவிதமான ஐயப்பாடுகளும் கிடையாது.

வீரனுடைய பலம் எதிரியின் இலக்கினை தாக்குவது. மாறாக தேவாலயங்கள் மற்றும் பொது மக்கள் நடமாடுகின்ற இடங்கள் மீது தற்கொலைத் தாக்குதலை மேற்கொள்வது கீழ்த்;தரமான செயற் பாடாகும்.உயிர்த்த ஞாயிறு தினத்தில் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப் பட்ட தற்கொலைத் தாக்குதலானது முழு உலகத்தினையும் சோகத்தில் ஆழ்த்தியிருக்கின்றது.

தமிழ் மக்களுக்கு தீங்கினை ஏற்படுத்து கின்றவர்களை இணைத்து அரசியல் கலாசாரம் செய்யும் நிலைமை எதிர் காலத்தில் மாற்றப்பட வேண்டும்.கொல்லப்பட்டிருப் பவர்களில் அதிகளவானவர்கள் தமிழர் கள் இதனை மக்கள் பிரதி நிதிகள் உணர வேண்டும்.

எத்தனை நாட்கள் அஞ்சலி தெரிவித் தாலும் உயிர்த்த ஞாயிறு தினம் தமிழ் மக்கள் வாழ் நாளில் மறக்க முடியாத நாளாகும்.பாவம் அறியாத சிறுவர்கள் நயவஞ்சகர்களுக்கு செய்தது என்ன இதற் கான பொருத்தமான தீர்வினை அரசு வழங்க வேண்டும்.என கிழக்கு தமிழ் ஐக்கிய உணர்வாளர்கள் அமையம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிபிட்டுள்ளனர்.

ஆணின் சடலம் மீட்பு

கல்லடி நிருபர்

மட்டக்களப்பு நகரில் உள்ள வர்த்தக நிலையத்திற்கு பின்புறமான பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரின் மணிக்கூண்டு கோபுரத்திற்கு அருகில் உள்ள வர்த்தக நிலையத்திற்கு பின்புறமாகவுள்ள கட்டிடத்தில் நகைத்தொழில்செய்துவரும் நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் மட்டக்களப்பு கொக்குவில் பகுதியை சேர்ந்த க.அருட்செல்வம் (44வயது) என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தான் தொழில்செய்யும் பகுதிக்கு முன்பாகவுள்ள பகுதியிலேயே இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலம் தொடர்பில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மற்றும் படையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

துரைவந்தியமேடு நிருபர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இபிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான ஞானமுத்து ஸ்ரீநேசன் அவர்கள் துறைநீலாவணை பொது விளையாட்டு மைதானப் புனரமைப் புக்காக தமது பண்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பத்து இலட்சம் ரூபாயினை ஒதுக்கீடு செய்துள்ளார்.

துறைநீலாவணை பொது விளையாட்டு மைதானமானது மழை காலங்களில் சம தரையின்மையால் மைதானத்தினுள் வெள்ள நீர் தேங்கி விளையாட்டுக்கு அசௌகரியத்தினை ஏற்படுத்தி வருகின்றமை தொடர்பாக துறைநீலாவணை மத்திய விளையாட்டுக் கழகத்தினர் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களை நேரடியாகச் சந்தித்து குறித்த விளையாட்டு மைதானப் புனரமைப்பு தொடர்பான கோரிக்கையினை முன்வைத்தமைக்கு அமைவாக மைதானப் புனரமைப்பு வேலைகளுக்கான குறித்த நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்.குறித்த நிதியினை ஒதுக்கீடு செய்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் உதவிபுரிந்த அனைவருக்கும் விளையாட்டுக் கழகத்தினர் நன்றியினையும் பாராட்டினையும் தெரிவிக்கின்றனர்.

குறித்த நிதி மூலமாக மைதானப் புனரமைப்பு வேலைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெரிய நீலாவணையில் நடைபெற்ற வாகன விபத்தில் வியாபாரி படுகாயம்

துரைவந்தியமேடு நிருபர்

பெரிய நீலாவணை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வெள்ளரிப்பழங்களை விற்பனை செய்வதற்காக வீதியில் பயணித்த வியாபாரி படுகாயம். அடைந்துள்ள நிலையில் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவது கிரான்குளத்திலிருந்து கல்முனை நோக்கி மோட்டார் சைக்கிளில் வெள்ளரிப்பழங்களை விற்பனை செய்வதற்காக வருகை தந்த எஸ்.சின்னமகள் வயது 26 என்பவருக்கு பின்னால் வந்த கனரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து மோதியமையினால் குறித்த சம்பவம் நடைபெற்றது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் கட்டப்பட்டிருந்த வெள்ளரிப்பழங்கள் சேதமடைந்தது மாத்திரமல்லாது வியாபாரியும் படுகாயமடைந்த நிலையில் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கல்முனை வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இளைஞன் தற்கொலை

சின்னக் கிண்ணியா நிருபர்

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் இளைஞன் ஒருவன் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, கிண்ணியா நகரசபை வீதி, முதலாம் குறுக்குத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் 26 வயதான எம்.எச்.முகம்மது பாரி என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார். இவர் தனது வீட்டின் மேல் மாடியில் உள்ள அறை ஒன்றில் உள்ள கூரை கம்பத்தில் கயிற்றைப் போட்டு, தனது கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் காணப்பட்டார் என்றும் தற்கொலைக்கான காரணம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நாம் இலங்கையர் என்ற ரீதியில் முஸ்லிம்களின் எதிர்கால செயற்பாடுகள் சகவாழ்வுக்கு முன்னுரிமை வழங்குவதாக அமைய வேண்டும்

மருதமுனை ஜம்இய்யதுல் உலமா மற்றும் அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் விடுக்கும் அறிக்கை

பெரியநீலாவணை நிருபர்

யாரும் எதிர்பார்த்திருக்காத வகையில் சென்ற ஏப்ரல் 21 ஞாயிற்றுக்கிழமை ஈஸ்டர் ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கிறிஸ்தவ சகோதரர்கள் நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் மீது தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை நடாத்திய சம்பவத்தை மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கிறது.

'இஸ்லாம்' சாந்தி சமாதானம் சகவாழ்வு என்ற அர்த்தத்தைக் கருதுகின்ற ஒரு அறபுச் சொல் என்ற வகையில் அதிலிருந்து பெயரெச்சமாக வரும் முஸ்லிம் என்ற சொல் சாந்தியளிப்பவன் சமாதானத்தை உருவாக்குபவன் என்ற அர்த்தங்களில் கையாளப்பட்டு வருகின்றது. எனவே இஸ்லாம் ஒரு போதும் வன்முறைச் சம்பவங்களையோ பயங்கரவாத தாக்குதல்களையோ தற்கொலை தாக்குதல்களையோ ஆதரிக்கவில்லை என்பது இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தாகும்.

முழு நாடும் சர்வதேசமும் ஆழ்ந்த கவலையில் முழ்கியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் அடிப்படைவாதிகளிடமிருந்தும் தீவிரவாதிகளிடமிருந்தும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவே இந்த அசம்பாவிதங்களில் உயிர்நீத்த சகோதர நெஞ்சங்களின் குடும்பத்தினர் மற்றும் உறவுகளுக்கு ஆழ்ந்த ஆனுதாபங்களை மருதமுனை வாழ் மக்கள் தெரிவிப்பதோடு இந்நாடு எதிர் கொண்டுள்ள துயரத்தில் மருதமுனை மக்களாகிய நாமும் பங்கெடுத்து துக்கம் அனுஷ்டிப்பதோடு முடியுமான நிவாரண உதவிகளை மேற்கொள்ள முன்வர வேண்டுமென எமது சம்மேளனம் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றது.

இந்த நெருக்கடியான சூழலில் ஒரு வரை ஒருவர் குற்றம் சுமத்துவதை நிறுத்துவோம். தீவிரவாதத்தையும், தீவிரவாதிகளையும் ஏலவே கண்டு கொள்ளவும், உரிய நடவடிக்கைகளை எடுக்கவும் தவறியமை நாம் அனைவரும் விட்ட மாபெரும் வரலாற்றுத்தவறாகும்.

எமது அசமந்தப்போக்கின் விளைவாக விலைமதிக்க முடியாத பல அப்பாவி மனித உயிர்களை இழந்து தவிக்கின்றோம். இனி உடன் செய்ய வேண்டிய விடயங்களில் கவனத்தைக் குவிப்போம். இலங்கையர் என்ற வகையில் பேதங்களை மறந்து இதய சுத்தியுடன் ஒன்றிணைவோம் தீவிரவாத விஷக்கிருமிகளை அடையாளம் கண்டு துடைத்தெறிவோம். நம்தாய் மண்ணைக் காப்பாற்ற நாளைய தலைமுறையின் இம்மண்ணில் அமைதியாக வாழ்வதை உத்தரவாதப்படுத்துவோம்.

எனவே தற்போதய சூழ்நிலையை கருதி மருதமுனை ஜம்இயதுல் உலமா மற்றும் அனைத்துப் பள்ளிவாயல்கள் சம்மேளனம் பின்வரும் மேலான ஆலோசனைகளை முன்வைக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு பள்ளிவாசல்கள், பாடசாலைகள், மத்ரஸாக்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள் போன்றவற்றுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் அந்ததந்த நிறுவனங்களின் வசதிக்கேற்ப ஒரு பாதுகாப்புப் பொறிமுறையை ஏற்படுத்திக் கொள்ளல்.

பிரத்தியேக வகுப்புக்களின் நிறுவனங்கள் தமது பிரத்தியேக வகுப்புக்களை தற்காலிகமாக எதிர்வரும் 29ம் திகதிவரை இடைநிறுத்துவதுடன் வெளியிடங்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களுக்கு மாணவர்கள் செல்வதை நிறுத்திக் கொள்ளல்.

மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் இஸ்கூட்டிகளை; பள்ளிவாசலுக்கு கொண்டு செல்வதை இயன்றளவு குறைத்துக் கொள்வதுடன் மேலும் வாகன தரிப்பிடத்தில் இடை நிறுத்துபவர்கள் தங்களின் பெயர்களையும், தொடர்பு இலக்கங்களை அதில் குறிப்பிடல் வேண்டும்.

மிலேச்சத்தனமான குண்டுத்தாக்குதல்களை பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு வன்மையாகக்கண்டிக்கின்றது

கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் தேவாலயங்கள் மீதும் ஹோட்டல்களின் மீதும் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான குண்டுத்தாக்குதல்களை பெண்கள் செயற் பாட்டுவலையமைப்பு வன்மையாகக்கண்டிக் கின்றது. மகிழ்வுடன் ஈஸ்டர் தினத்தன்று தேவாலயத்தில் வழிபாட்டில் ஈடு பட்டிருந்தகுழந்தைகள் உட்பட 369 அப்பாவிப்பொதுமக்கள் குரூரமாகக் கொல்லப்பட்டுள்ளதுடன் நூற்றுக்க ணக்கானோர் காயமடைந்துள்ளனர். சிதறிய மனித உடலங்கள் பைகளில் கொண்டுசெல்லப்படுகின்றன.

குழந்தைகள் பெற்றோர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகளின் இறுதிக்கிரியை களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. இது குரூரமானதும் வார்த்தைகளால்விபரிக்கமுடியாதது மான ஈனச் செயலாகும். எமது எண் ணங்களும் பிரார்த்தனைகளும் இத்தாக் குதலில் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுடனும் கத்தோலிக்க சமுதாயத்துடனும் உள்ளது என்பதை நாம் தெரிவிக்கவிரும்புகின்றோம்.

இலங்கையின் அனைத்துச்சமுதா யங்களும் இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் ஏற்படுத்திய அதிர்ச்சியினால் உறைந்துபோயுள்ளன. புனித நாளில் கத்தோலிக்கர்கள் மற்றும்கிறிஸ்தவர் களை இலக்குவைத்து நடத்தப்பட் டுள்ள இத்தாக்குதல் அரசாங்கம் சி றுபான்மைமதமக்களை இவ்வாறான பயங்கரவாத தற்கொலைத் தாக்குதல் களில் இருந்து பாதுகாக்குமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. இந்தத் தாக்குதல்கள் சகல மக்கள் மத்தியிலும் யுத்தம் பற்றிய உணர்வினையும் பாது காப்பற்ற உணர்வினையும்தோற்றுவித் துள்ளது.

அண்மையில் முஸ்லிம்கள் தமக்கு எதிராக இலக்குவைக்கப்பட்டு நடத்தப் பட்ட இன வன்முறைகளுக்கு முகங் கொடுத்தனர். வெறுப்பைத் தூண்டும் சக்திகள் பதில் தாக்குதல்பற்றிய அச்ச த்தை முஸ்லிம் மத்தியில் ஏற்படுத்த லாம். இஸ்லாம் அப்பாவிமக்களைக் கொல்வதை வன்மையாகக் கண்டிப் பதுடன் அவ்வாறான செயல்களை நிராகரிக்கின்றது என்பதை ஏனைய மக்கள் அறிந்துகொள்ளவேண்டும் என இஸ்லாமிய மக்கள் ஏங்குகின்ற னர். தமிழ் மக்கள் மத்;தியிலும் இத்தாக்குதல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.இந்தத் தாக்குதல் பாகுபாடுமிக்க சட்டங்கள் மற்றும் நிய திச் சட்டங்களை நீக்குதல் உளளடங்கலாக வழங்கப் பட்ட நிலைமாறுகாலநீ தி பற்றியவாக்குறுதிகளை மறுதலிக்கப்பயன்படுத் தப்படலாம் எனத் தமிழ் மக்கள் அஞ்சுகின்றனர். வெளிநபர்கள் எமது அழகிய நாட்டை மீண்டும் இரத்தம் சிந்துதல் பாகுபாடு மற்றும் பயம் என்பவற்றுடன்இணைத் துள்ளனர்.

இந்தத்தாக்குதலின் சூத்திரதாரி களின் இழிசெயலை நாம் மிகவும் வன்மையாகக்கண்டிக்கிறோம். வணக் கத்தலங்களில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான இரக்கமற்ற பொதுமக்கள் மீதான படுகொலைகள் நாம் பகிர்ந் துகொள்ளும் மனிதத்தன்மைக்கு எதிரானவை என்பதுடன் அவை எவராலும் எந்தச் சந்தர்ப்பத்திலும்நியா யப்படுத்தமுடியாதவையாகும். இந்தக் குரூரக் குற்றத்திற்குத் துணைநின்ற அனைவரும் கைதுசெய்யப்பட்டு சட் டத்தினால் தண்டிக்கப்படவேண்டும். இவ்வாறான குற்றங்கள் மீண்டும் நிகழாமை மற்றும் இவை இடம்பெற அனுமதித்த அரசின் குறைபாடுகள் என்பவற்றுக்கான பொறுப்பான்மைகள் எதிர்வு கூறப்பட்டுள்ளன.

சாத்தியமான தாக்குதல்கள் பற்றிய தகவல்களை அரச புலனாய்வுப்பிரிவு கள் பெற்றுக்கொண்டபோதும் அவை பற்றி நாட்டுமக்களுக்கு அறியத்தராமல் இருந்தது மிகவும்வருத்தமளிக்கின்றது. இந்தக்கவனயீனமே இவ்வாறான பாரிய இடர்கள் மற்றும் சேதங்கள் ஏற்படக் காரணமாயிருந்தது என நாம் நம்புகிறோம்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர் பான நம்பகமான தகவல்களை உயர் அரசமட்டங்களில் மாத்திரம் வைத் திருக்காது சாதாரண குடி மக்களின் உயிர்களைக்காக்கும் வண்ணம்எவ்வாறு கையாள்வது மற்றும் வழங்குவது என் பதுபற்றி நாம் இந்தச்சம்பவங்களில் இருந்துகற்றுக்கொள்ளவேண்டும்.

இது எவ்வாறு நிகழ்ந்தது மற்றும் இங்கிருந்து நாம் எங்கு பயணிக்கப்போ கிறோம் எனத்தீர்மானிக்கத்திணறும் இந்தச்சந்தர்ப்பத்தில் அனைத்துக்கும் மேலாக நாம் ஒற்றுமையின்மூலமே எமது பலத்தைக்கண்டறியவேண்டும். வேற்றுமைகள் மற்றும் வெறுப்பு என்ப னவன் முறைகள் மற்றும் இழப்பையே விதைக்கும் என்பதை வரலாறு எமக் குக்கற்றுத்தந்துள்ளது. சம்பவங்கள் பற்றி விசாரணை செய்து குற்றவாளி களுக்கு தண்டனை வழங்குமாறும் மேலதிகதாக்குதல்களில் இருந்து மதச்சிறுபான்மைக் குழுக்களை பாது காக்குமாறும் எதிரத் தாக்குதல்களைத் தடுக்குமாறும் சமூக ஒற்றுமையை ஏற்படுத்துமாறும் நாம் அரசைக் கேட்டுக்கொள்கிறோம். சமூகங்க ளுக்குஇடையேயான பிளவுகளை நீ க்கும் முயற்சிகள் அனைத்து மட்டங்க ளிலும் பெண்களின் பங்களிப்பினைக் கொண்டதாக அமையவேண்டும். உறுதிப்படுத்தப்படாத அறிக்கைக ளைப்பரப்புவதைத் தவிர்த்து ஒற்றுமை மூலம் பலமடையும் முயற்சிகளுக்கு நாம் எமது முழு ஆதரவையும் வழங் குகிறோம். அரசாங்கம் தீங்கிழைக்கும் வதந்திகளில்இருந்தும் சமூக ஊடகங்க ளில் இடம்பெறும் வெறுப்புப் பேச்சு என்பவற்றில் இருந்தும் தொடர்ந்து மக்களைப் பாதுகாக்கவேண்டும். அப்பாவிப்பொதுமக்களை மேலதிக தாக்குதல்களில் இருந்தும் எதிர்த் தாக் குதல்களில் இருந்தும் பாதுகாப்பதற் கான நடடிக்கைகள் மற்றும் அதற்கான செய்தி வழங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.இதற்கு ஊரடங்குச்சட்டங்கள் மற்றும் வீதிக ளில் ஆயுதப்படையினரின் பிரசன்னம் என்பனமாத்திரம் போதுமானவை அல்ல.

இலங்கையின் அனைத்து சமூகங்க ளையும் இந்த முயற்சியில் இணைத்;து எமது சக குடிமக்களை சென்றடையு மாறு நாம் கோரிக்கைவிடுக்கின்றோம். இந்த வருடம் தேர்தல்வருடமாக இருப்பினும் இது அரசியலாக்கப்பட வேண்டியவிடயமல்ல. எமக்கு உரிய எதிர்காலத்தை அடைவதற்கு எமது ஒன்றுபட்ட ஆற்றுப்படுத்தல் மற்றும் தப்பிப் பிழைத்தல்ஒற்றுமையைக் கட்டி யெழுப்பல் மற்றும் நீதி என்பன அவசி யமானவை. இந்தச்சம்பவங்கள் சிவில் சமூகம் உள்ளிட்ட எம் அனைவரையும் சமுகத்தின் உள்ளே மற்றும் சமூகங்க ளின்இடையே நம்பிக்கையைக் கட்டி யெழுப்புதல் மற்றும் ஒன்றிணைந்து முன்னேறிச்செல்லல் என்பன எவ்வாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்ப வற்றை மீள் சிந்தனைக்கு உட்படுத்தும் நிலைக்குத்தள்ளியுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 24 மணித்தியாலயமும் தயார் நிலையில் இருக்க வேண்டும்

செட்டிபாளையம் நிருபர்

மட்டக்களப்பில் செயல் படும் அனர்த்த முகாமைத் துவ உத்தியோகத்தர்களின் கடமைகளை வலுப்படுத்த நடவடிக்கை.

மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ சே வை உத்தியோகத்தர்கள் மாவட்ட மட்டத்தில் 24 மணித்தியாலயமும் மக் களுக்கு அனர்த்தங்களின் போது கடமை புரியக்கூடி யவாறு தயார் நிலையில் இருக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செயல் படும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் பணி புரியும் உத்தியோகத்தர்களின் கட மைகளை வலுப்படுத்தும் விசேட கூட்டம் ஒன்று மாவட்ட செயலகத்தில் மாவட்ட அர சாங்க அதிபர் மா.உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தற்போதைய சூழ்நி லைக்கு ஏற்றவாறு அனர்த்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மாவட்ட மட் டத்தில் 24 மணித்தியாலயமும் மக்களுக்கு அனர்த்தங்களின் போது கடமை புரியக்கூ டியவாறு தயார் நிலையில் இருக்க வேண் டும் என அரசாங்க அதிபரால் அறிவுறுத்தல் செய்யப்பட்டது.

அனர்த்தங்கள் பற்றிய தகவல்களை முன் கூட்டியே சேகரிப்பதிலும் மக்களுக்கு இயன் றளவு சேவைகளை பணி புரிய பிரதேச மட் ட, கிராம மட்ட அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்கள் செயல் பட வேண்டும் எனவும் இதற்கென பிரதேச மட்டத் தில் உருவாக்கப்பட்டுள்ள அனர்த்த நிவாரண குழுக்க ளையும் பலப்படுத்தி உசார் நிலையில் வைக்குமாறும் அரசாங்க அதிபர் இங்கு கேட்டுக் கொண்டார்.

பொதுமக்களுக்கு அவ சர அனர்த்தங்கள் ஏற்படும் வேளையில் முன்னின்று பணியாற்ற வேண்டியது அனர்த்த நிவாரண சேவை பணியாளர்களின் பொறுப்பான கடமை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டுமெனவும்.அவசர கால நிலைமை தொடர்பாக மக்கள் விழிப்புணர்வை ஏற் படுத்தவும்,வதந்திகளை தடுத்தல், மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல உதவிகளை வழங்கவும் முயற்சிக்க வேண்டுமென அர சாங்க அதிபர் அறிவுறுத்துதல், ஆலோசனை தெரிவித்தார்.

இந்த விசேட கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சி னி ஸ்ரீகாந் ,மாவட்ட அனர்த்த முகாமைத் துவ சேவைகள் உதவிப்பணிப்பாளர் எ.எஸ். எம்.சியாட்,உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் ,நிர்வாக உத்தியோகத்தர் கே.தயாபரன்,மற்றும் அனர்த்த முகாமைத் துவ நிலையத்தின் உத்தியோகத்தர்கள், பல ரும் பிரசன்னமாயிருந்தனர்.

கிழக்கு ஊடகவியலாளர் விழாவில் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு

மருதமுனை நிருபர் றாசிக் நபா யிஸ்

கிழக்கு மாகாணத்திலுள்ள மூவி னங்களையும் சார்ந்த தெரிவு செய் யப்பட்ட ஊடகவியலாளர்களை அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் கடந்த 31ஆம் திகதி (ஞா யிற்றுக்கிழமை) கல்முனை ஆஸாத் பிளாஷா வரவேற்பு மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் கிழக்கு ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு எனும் தலைப்பில் நடைபெற்ற ஊட கவியலாளர்கள் கௌரவிப்பு விழா சம்மேளனத்தின் தலைவர் கலாபூ ஷணம் மீரா.எஸ். இஸ்ஸடீன் தலை மையில் நடைபெற்றது.

இதன் போது சிரேஷ்ட ஊடக வியலாளர், கலாபூஷணம் பி.எம். எம்.ஏ.காதர் (மருதமுனை) சிரேஷ்ட ஊடகவியலாளர், தேசமானி, எம்.ஐ.சம்சுடீன் (சாய்ந்தமருது) தேச கீர்த்தி, ஊடகவியலாளர் இஷட்.ஏ.றகு மான் (ஒலுவில்) ஆசிரியர், ஊட கவியலாளர் ஜெஸ்மி எம்.மூஸா (மருதமுனை) ஆகியோர் இக்கௌ ரவிப்பு விழாவில் பிரதம அதிதி கௌரவ அமைச்சர் றிஷாத் பதியுத்தீன் அவர்களால் மாலை, பதக்கம், பொன் னாடை, சான்றிதழ் ஞாபக சின்னம் போன்றன வழங்கப்பட்டு கௌரவிக் கப்பட்டார்கள்.

இராணுவம், பொலிஸ் விஷேட அதிரடிப்படை,பிரதேச மக்கள் ஆகியோரின் பாதுகாப்புடன் காத்தான்குடியில் ஜும்ஆ தொழுகை நிறைவேற்றம்

காத்தான்குடி நிருபர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக் களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம் பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்கு பாது காப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய மதத்தவர்களின் விஷேட தினங்களில் ஒன்றான ஒவ்வொரு வெள் ளிக்கிழமையும் அனைத்து முஸ்லிம்களும் ஜும்ஆ பள்ளிவாயல்களில் ஒன்று சே ர்ந்து ஜும்ஆ பிரசங்கத்திலும், ஜும்ஆ தொழுகையிலும் ஈடுபடுவதால் அங்கு எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறா மல் பாதுகாக்கும் வகையில் இராணுவம், பொலிஸ் விஷேட அதிரடிப்படை,பிரதேச மக்கள் ஆகியோரின் விஷேட பாதுகாப்பு டன் மட்டக்களப்பு-காத்தான்குடி பிரதேசத் தில் ஜும்ஆ பிரசங்கமும், ஜும்ஆ தொழு கையும் சிறப்பாக இடம்பெற்றது.

குறிப்பாக நாட்டில் பிரச்சினைகள் நீங்கி அமைதி,சமாதானம் நிலவுவதற்கு தொழு கையில் (குனூத்) பிரார்த்தனையும் இடம் பெற்றன.

அத்தோடு மக்களின் பாதுகாப்புக் கருதி வழமைக்கு மாறாக பாதுகாப்பு தரப்பினரின் வேண்டுகோளின் பேரில் ஒரு சில ஜும்ஆ பள்ளிகளில் வாராந்தம் ஒரு தடவை ஜும்ஆ என்ற அடிப்படையில் இடம்பெறு கின்ற ஜும்ஆ பிரசங்கம் மற்றும் ஜும்ஆ தொழுகை இன்று மாற்றப்பட்டு காத்தான் குடி அநேக ஜும்ஆ பள்ளிவாயல்களில் ஜும்ஆ நேரம் குறைக்கப்பட்டு ஜும்ஆ இடம்பெற்றதுடன், பள்ளிவாயல் வளாகம் மற்றும் பள்ளிவாயலுக்கு அருகாமையில் வாகனங்கள் நிறுத்துவதற்கு அனுமதிக்கப்ப டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வீதியை செப்பனிடுங்கள்

தோப்பூர் நிருபர்

திருகோணமலை பட்டினமும் சூழ லும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட. சாம்பல் தீவு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கோணேசபுரி சுனாமி வீட மைப்பு திட்டக்கிராமத்திலுள்ள வீதிகள் சேதமடைந்து காணப்படுவதால் இவ் வீதிகளை புனரமைத்துத்தருமாறு இங் குள்ள பொதுமக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

இவ் உள்ளக வீதிகள் நீண்டகால மாக சேதமடைந்து காணப்படுவதால் இவ் வீதியால் மக்கள் பயணிக்கமுடி யாது பெரிதும் சிரமப்படுவதாக கூறு கின்றனர்.

ஒவ்வொரு மதங்களும் அன்பையே போதிக்கின்றது

துறைநீலாவணை நிருபர்

கிறிஸ்தவர்கள் உயிர்ப்பு விழா கொண் டாடும் வேளையில் கிறிஸ்தவ தேவால யங்களில் இடம்பெற்ற துயரச்சம்பவங்கள் மிகவும் வேதனைக்குரியதாகும், இவ்வா றான சம்பவங்கள் நடைபெறாது இருக்க அர சாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கல்முனை திரு இருதயநாதர் தேவாலயத்தின் பங்குத் தந்தை அ.ஜேசுதாசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பங்குத்தந்தை மேலும் கூறியதாவது,

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆண்டவர் ஆன்ம சாந்தியையும் இழந்த உறவுகளுக்கு மன அமைதியையும், தேற்று தலும் இறைமகன் யேசு கொடுக்கும் படியாக வேண்டுகிறேன். கிறிஸ்தவ தேவாலயங்க ளில் நடைபெற்றுள்ள சம்பவங்களால் பல உயிரிழப்புக்கள், சேதங்கள் ஏற்பட்டுள்ளன. கிறிஸ்து இந்த உலகத்திற்கு அமைதியை, மனித மாண்பை, சமாதானத்தையே கொண் டுவந்தார். எல்லா மக்களையும் நேசித்தார். யேசு அன்புப்பாதையிலே அனைவரையும் அரவணைத்தார். யேசு மட்டுமல்ல ஒவ் வொரு மதங்களும் அன்பையே போதிக்கின் றது.

இந்நிலையில் தேவாலயங்களை குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட்டமையை வன்மையாக கண்டிக்கிறேன். நீதியை சமா தானத்தை, அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். இதைத்தான் ஆண்டவர் யேசுகிறிஸ்து மக்களுக்குச் சொன்னார்.

ஏனென்றால் யேசு வாழ்ந்த காலத்தில் இன, மத, அரசியல் குழப்பங்கள் இருந்தது. ஆகவே மனிதவாழ்க்கைக்கு அமைதி, நீதி, சமாதானம் இருக்கின்ற வேளையில் மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வார் கள். கடந்த நாட்களில் முழு மனித குலத்தின் விடுதலைக்காக மக்களின் பாவங்களுக்காக அடிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு, சிலுவை யில் அறையப்பட்டு இரத்தம் சிந்தி மரித்தார். அந்த துன்பகரமான வேளையில் கூட யேசு துன்பகரமான வார்த்தைகளை பயன்படுத்த வில்லை. எனவே நாம் மனித உயிர்களை நேசித்த மனிதர்களுக்கு துன்பத்தை வருவிக் காமல் வாழவேண்டும்.

பல்லின மத, கலாசாரத்துடன் வாழ்கின்ற இந்நாட்டில் சகோதரத்துவம், புரிந்துணர்வு, ஒற்றுமை, மனிதநேயம் தேவையாக இருக் கின்றது. இதைகடைப்பிடிக்கும் வேளையில் எமது நாட்டை எல்லோரும் சேர்ந்து ஒரு நாட்டு மக்களாக ஒற்றுமையாகவும் அன்பா கவும் வாழந்து அழிவுகளையும், பிரச்சினைக ளையும், பிரிவினைகளையும் அழித்தொழிக் கலாம். யேசுகிறிஸ்துவின் உயிர்ப்பு நாளில் இத்துயரச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களது ஆன்மா ஆண்டவரிடத்தில் இளைப்பா றட்டும் எனக்கூறினார்.

இறைவழிபாட்டுத் தலங்களை இலக்கு வைக்கும் பயங்கரவாதிகள் வாழத்தகுதியற்றவர்கள்

களுவாஞ்சிக்குடி நிருபர்

வன்முறை மூலம் அப்பாவி மக் களை பலி எடுக்கும் எந்த நபராக இருந் தாலும் அவர்களுக்கு ஈவு இரக்கம் காட்டாது சட்டம் தன் கடமையைச் சரிவரச்செய்யவேண்டும் என திருக் கோவில் பிரதேசசபையின் தமிழர்வி டுதலைக்கூட்டணியின் உறுப்பினர் என்.ரமேஸ் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு அன்று இடம் பெற்ற குண்டிவெடிப்புச்சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆண்டவரை வழிபடச்சென்ற மக்கள் மீது அநியாயமான தாக்கு தல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளதை மனிதாபிமானம் மிக்க எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இறைவழி பாட்டுத் தலங்களை இலக்கு வைக் கும் பயங்கரவாதிகள் இந்த உலகில் வாழத்தகுதியற்றவர்களாகும். காட் டில் வசிக்கும் மிருகங்களிடம் கூட மனிதாபிமானம் இருக்கும். மனித வடிவிலே உலாவுகின்ற காட்டுமிராண் டிகளிடம் எப்படி மனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியும். இந்த ஈனச் செயல்களில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இன்றி சட்டம் தன் கடமையைச் செய் யவேண்டும். அதி உச்சபட்சதண்ட னையை வழங்கவேண்டும். உயிரிழந்த உறவுகளுக்காக திருக்கோவில் பிரதேச மக்களின் சார்பில் எனது ஆழ்ந்த இரங் கலை தெரிவித்துக்கொள்கிறேன் என் றார்.

சித்திரை புதுவருட விழாவின்போது மாணவர்கள் கௌரவிப்பு

கரடித்தோட்ட நிருபர்

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சித்திரைப் புதுவருட கலாசார விளையாட்டு விழா காரைதீவு கனக ரெத்தினம் விளையாட்டரங்கில் நடைபெற்றபோது கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 9 பாடங்களிலும் ஏ தரச் சித்தி பெற்ற இராமகிருஷ்ண சங்க பெண்கள் பாடசாலை மாணவிகளும் சண்முகா மகா வித்தியாலய மாணவனும் கௌரவிக்கப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து நெல் கொள்வனவு

கரடித்தோட்ட நிருபர்

கடந்த பெரும் போக நெற் செய்கையில் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் அம்பாறை மாவட்டத்திலிருந்தே கூடுதலான நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போகத்தில் இம்மாவட்ட விவசாயிகளிடமிருந்து நாடு ஒரு கிலோ ரூபா.38.00 விலையில் 8751 மெற்றிக் தொன்னும் சம்பா ஒரு கிலோ ரூபா.41.00 விலையில் 2703 மெற்றிக் தொன்னும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பெரும் போகத்தில் மட்டும் கிட்டத்தட்ட 75000 ஹெக்டயர்களில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஏக்கருக்கு 100 தொடக்கம் 120 புசல் வரையான விளைச்சல் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணிக்கூட்டுக்கோபுரம் செயலிழப்பு

சேனையூர் நிருபர்

திருகோணமலை மத்திய பேருந்து நிலையத்தின் அருகில் அமைந்துள்ள மணிக்கூட்டு கோபுரம் செயலிழந்துள்ளது. இதனைப் புனரமைத்துத்தருமாறு பொது மக்கள் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை நகரின் மத்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டுகோபுரத்தில், டிஜிட்டல் முறையில் இயங்கும் மணிக்கூடுகள் பொருத்தப்பட்டுள்ளன.

எனினும் தற்போது அந்த மணிக்கூடுகள் இயங்காத நிலையில் காணப்படுகின்றன.

துர இடங்களில் இருந்து திருகோணமலைக்கு வரும் மக்களின், பயணிகளின் நலன் கருதி, குறித்த மணிக்கூடுகளைத் திருத்துவதற்கு சம்பந்தப்பட்டத் தரப்பினர் முன்வரவேண்டும் என்று திருகோணமலை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேவாலயங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் கவலையளிக்கின்றன

சேனையூர் அருள் மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ அ . அரசரெத்தினம் தெரிவிப்பு

சேனையூர் நிருபர்

கிறிஸ்தவர்கள் உயிர்ப்பு விழா கொண்டாடும் வேளையில் நடைபெற்ற துயரச்சம்பவங்கள் மிகவும் வேதனைக்குரியதாகும் . இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் . இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு இறைவன் ஆன்மசாந்தியையும், இழந்த உறவுகளுக்கு மன அமைதியையும் இறைவன் வழங்க வேண்டுகின்றேன்.

இவ்வாறு சேனையூர் நாகம்மாள் ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ அ . அரசரெத்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பியல் கருத்து தெரிவித்த அவர், கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெற்றுள்ள சம்பவங்களால் பல உயிரிழப்புக்கள் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

கிறிஸ்து இந்த உலகத்திற்கு அமைதியை மனிதமாண்பை சமாதானத்தையே கொண்டு வந்தார். ஒவ் வொரு மதங்களும் அன்பையே போதிக்கின்றது.

இந்த நிலையில் தேவாலயங்களை குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட்டமையை வன்மையாக கண்டிக்கிறேன்.

பல்லின மத, கலாசாரத்துடன் வாழ்கின்ற இந்நாட்டில் சகோதரத்துவம், புரிந்துணர்வு, ஒற்றுமை, மனிதநேயம் தேவையாக இருக்கின்றது.

இத்துயரச் சம்பவத்தில் உயிரிழந்த வர்களது ஆன்மா இறைவன் இடத்தில் இளைப்பாறட்டும் எனக்கூறினார்.

கல்வியலாளர் மர்ஹூம் ARA.அஸீஸ் ஞாபர்காத்த அறிவியல் நிலையம் திறப்பு

மருதமுனை நிருபர்
றாசிக் நபாயிஸ்

கல்வியலாளர் மர்ஹூம் AR-A.அஸீஸ் அவர்களின் ஞாபர்காத்த அறிவியல் நிலையம் மருதமுனை இஸ்லாம் நகரில் கலாநிதி, அஸீஸ் நுபைல் அவர்களின் ஏற்பாட்டில் கல்விமான்கள் மற்றும் உயரதிகளின் பங்கு பற்றுதலுடன் கல்முனை மாநகர கௌரவ முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை பிரதேத்தில் பலத்த பாதுகாப்புடன் எவ்வித அசம்பாவிதங்களுமற்ற நிலையில் அமைதியாக ஜும்ஆ தொழுகை நிறைவேற்றம்

கல்முனை நிருபர்

கல்முனை பிரதேசத்தில் பொலிசார் மற்றும் விசேட அதிரடிப்படை இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புடன் அமைதியாக ஜும்ஆ தொழுகை நிறை வேற்றப்பட்டது.

கல்முனை நகர், இஸ்லாமாபாத், கல்முனைக்குடியின் மூன்று ஜும்ஆ பள்ளிவாயில்கள் அடங்கலாக கல்முனையில் இடம் பெற்ற ஜும்ஆ கடமையை, பாதுகாப்பு தரப்பினரதும் தொண்டர் பணியில் ஈடுபட்ட இளைஞர்களினதும் பங்களிப்புடன் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் கல்முனை பிரதேச முஸ்லிம்கள் அமைதியாக நிறைவேற்றினர்.

இங்கு அமைதியாக எவ்வித அசம்பாவிதங்களுமற்ற நிலையில் ஜும்ஆ கடமையை நிறைவேற்ற கடமையில் ஈடுபட்ட பாதுகாப்பு தரப்பினருக்கும் இளைஞர்களுக்கும் பிரதேச மக்கள் தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றனர்.

பொலிஸ் ஊரடங்கு தொடர்ந்தால் மட்டு-கொழும்பு மாலை,இரவு நேர புகையிரதம் இடம் பெறாது

காத்தான்குடி நிருபர்

பொலிஸ் ஊரடங்கு தொடர்ந்தால் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி இடம்பெறும் மாலை மற்றும் இரவு நேர புகையிரதங்கள் இடம்பெறாது எனவும் பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்படாத தினங்களில் மாலை மற்றும் இரவு நேர புகையிரதம் சேவையில் ஈடுபடும் எனவும் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தின் பிரதான புகையிரத நிலைய அதிபர் சின்னத்தம்பி சுவேதகுமாரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி இடம்பெறும் புகையிரதம் தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

மட்டக்களப்பிலிருந்து கொழும் புக்கும் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கும் காலை மற்றும் மாலை, இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடும் மூன்று புகையிரதங்களில் காலையில் சேவையில் ஈடுபடும் ஒரு

புகையிரதம் மாத்திரம் தற்போது சேவையில் ஈடுபடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை காலை 11.00 மணிக்கு மட்டக்களப்பிலிருந்து மாகோ சந்திக்கு ஒரு புகையிரதம் சேவையில் ஈடுபடுவதுடன்,இரவு நேர எரிபொருள் புகையிரதம் இன்னும் சேவையில் ஈடுபடவில்லை.

அத்தோடு மட்டக்களப்பு மற்றும் காத்தான்குடி பிரதேசங்களிலிருந்து கொழும்பு நோக்கி இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களும்,தனியார் பஸ்களும் காலை நேரங்களில் சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

சின்னக் கிண்ணியா நிருபர்

கிண்ணியா பிரதேசத்தின் பல பகுதிகளில் குடியிருப்பாளர்களுக்கு மயக்க மருந்து தெளித்து தொடர்ச்சியாக கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த, குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஏழ சந்தேக நபர்களையும் மே மாதம் 9 ஆம்.

திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.எம். ஹம்ஸா உத்தர விட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று மாதங்களாக கிண்ணியா பொலிஸ் பிரிக்குட்பட்ட பெரியாற்றுமுனை, மாலிந்துறை, றஹ்மானியா நகர், அடப்பனார்வயல் ஆகிய பகுதிகளில் இரவு நேர கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வந்தன. இது குறித்து பொதுமக்கள் பல முறைப்பாடுகளை பொலிஸில் பதிவு செய்துள்ளனர்.

பொது மக்களின் ஒத்துழைப்போடு, பெரியாற்றுமுனையைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கடந்த 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

பதற்ற சூழலை பயன்படுத்தி தமிழர் பிரதேசங்களில் வழிப்பறி சம்பவம் தொடர்பாக முறைப்பாடு

கல்முனை நிருபர்

நாட்டின் பல இடங்களிலும் இடம் பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களால் நீடித்த பீதி அடைந்து உள்ள கிழக்கு மாகாண தமிழ் மக்கள் வழிப்பறி கொள்ளையர்களால் இலக்கு வைக்கப்படுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர் பிரதேசங்களில் மயான அமைதி பெரிதும் நிலவுகின்றது. ஆள் நடமாட்டம் அரிதாகவே காணப்படுகின்றது. ஆனால் புதிய நபர்களின் நடமாட்டம் ஆங்காங்கு இடம்பெறுகின்றது.

காரைதீவில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின் தொடர்ந்து வந்த புதிய நபர்கள் இருவரால் மோட்டார் சைக்கிள் ஒன்றை செலுத்தி சென்ற பெண் ஒருவரின் 1. 1/4 பவுண் பெறுமதி உடைய தங்க சங்கிலி அறுக்கப்பட்ட சம்பவம் நேற்று (23) செவ்வாய் கிழமை மாலை இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ஒருவருடைய மனைவியும், தாதிய உத்தியோகத்தருமான ஒருவரே இச்சம்பவத்தில் சங்கிலியை பறி கொடுத்தவர் ஆவார். இவர் இது தொடர்பாக உடனடியாக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து உள்ளார்.

இந்நிலையில் புதிய நபர்களின் நடமாட்டம் குறித்து கவனமாக இருக்க வேண்டும் என்று பெண்கள் கண்டிப்பாக எச்சரிக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

முன்பள்ளி மாணவர்களுக்கான சித்திர ஆக்க நிகழ்ச்சி

மருதமுனை நிருபர்
றாசிக் நபாயிஸ்

சிறுவர் செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் கல்முனை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த' அருண தகின ரடா' முன்பள்ளி மாணவர்களுக்கான சித்திர ஆக்க நிகழ்ச்சி 18ஆம் திகதி பிரதேச செயலக கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு முன்பள்ளி பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச். சம்றினாவின் ஒருங்கிணைப்பில் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல். எப்.சிபாயா, பிரதேச சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.ஐ.பஜ்மிலா, சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஹஸ்பியா பீவி, நிவாரண உத்தியோகத்தர் ஆர்.நஸானா மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என். றிபாயா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

அதிதிகளாக பிரதம முகாமைத்துவ உதவியாளர் எம்.என். எம். றம்ஸான் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர் ஏ.சீ.எம். பளீல் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இதில் சித்திர போட்டியில் கலந்து கொண்ட முன்பள்ளி மாணவர்களுக்கான கிண்ணங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

சித்திரை புதுவருடப்பிறப்பை முன்னிட்டு காரைதீவு விளையாட்டுக்கழகம் விபுலானந்தா சனசமூக நிலையமும் நடாந்தும் 23 வது மாபெரும் கலாசார விளையாட்டு விழா நிகழ்ச்சிகள் காரைதீவு கனக ரெத்தினம் விளையாட்டு அரங்கில் சனிக்கிழமை இடம் பெற்றது இதில். மரதன் ஓட்டம். படகோட்டம் சதுப்பு நிலஓட்டம் இடம்பெற்றன.

படம்: காரைதீவு நிருபர்

வவுனியா கருமாரி அம்மன் ஆலயத்தில் வெடிகுண்டு தாக்குதலில் பலியானவர்களிற்காக ஆத்ம சாந்தி பிரார்த்தனை

வவுனியா க.மதி

வவுனியா கருமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வெடிகுண்டு சம்பவத்தில் பலியானவர்களிற்காக ஆத்ம சாந்தி பிரார்த்தனை இடம் பெற்றது.

தமிழ் விருட்சம் மற்றும் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கருமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் உயிர் நீத்தவர்களிற்காக மூன்று நிமிட மௌன அஞ்சலியும், விசேட பூஜைகளும்;, இட்டம்பெற்றிருந்ததுடன் உயிர் நீத்தவர்களின் ஆத்ம சாந்திக்காக நெய்தீபங்களும் ஏற்றி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தணர் ஒன்றிய போசகர் பிரபாகர குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோதாரலிங்கம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சர்வமத குருமார் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடல்

வவுனியா க.மதி

வவுனியா மாவட்ட சர்வமத குருமார் வவுனியாஅரசாங்க அதிபரை சந்தித்து மாவட்டத்தின் பாதுகாப்பு மற்றும் மக்களுக்கிடையிலான நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தனர்.

மாவட்ட செயலகத்தின் அரசாங்க அதிபர் அலுவலகத்தினுள் இடம்பெற்ற இக் கலந்துரையாடிலில் நான்கு மதத்தலைவர்கள் மற்றும் சமாதான பேரவையின் மத நல்லிணக்க குழுவினரும் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது சர்வமத குழுவினரால் மகஜரொன்றும் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டதுடன் மத நல்லிணக்கத்திற்கு சர்வமத குழுவினரால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர்.

குண்டுவெடிப்பில் உயிரிழந்த மக்களிற்கு கிளிநொச்சி பரந்தன் பகுதியிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. பரந்தன் பேருந்து நிலையத்தில் குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. பரந்தன் பகுதியில் உள்ளஅனைத்த வர்த்தக நிலையங்கள், பொது சந்தை வர்த்தக செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்ட அங்சலி நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து மலர்வணக்கம் செலுத்தப்பட்டதுடன், மெழுவர்திதகளும் ஏற்றப்பட்டு அஞ்லி செலுத்தப்பட்டது, குறித்த அஞ்சலி நிகழ்வை பரந்தன் பிரதேச வர்த்தகர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

வடக்கு தந்தி

அவசரகால நிலை தொடர்பில் உணர்ந்து செயற்படுமாறு பளை பொலிசார் அறிவுறுத்தல்

அவசரகால நிலை தொடர்பில் உணர்ந்து செயற்படுமாறு பளை பொலிசார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

பளை நகர் வர்த்தகர்களை அழைத்து பொலிசார் இவ் வறிவித்தலை வழங்கியுள்ளனர். நாட்டில் தற்போதுள்ள நிலையை உணர்ந்து அவதானமாக செயற்படுமாறு பொலிசார் பணித்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள், சந்தேகத்திற்கிடமான பொருட்கள் தொடர்பில் அவதானித்தால் தமக்கு தகவல் வழங்குமாறும் பொலிசார் குறிப்பிட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு வவுனியா வளாகத்தில் அஞ்சலி நிகழ்வு

வவுனியா நிருபர்

இலங்கையில் கடந்த (21) ஈஸ்ரர் தினத்தில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் நடைபெற்றது.

வவுனியா வளாகத்தின் முதல்வர் ரி.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில் முதலாவது சுடரினை கல்லூரியின் முதல்வர் ஏற்றி வைக்க அதனைத் தொடர்ந்து விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டு குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏத்தி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

வவுனியா நகரசபையின் மாடு வெட்டும் கொல்களத்தில் கழிவுக்குழியில் வீழ்ந்து நால்வர் பலி

வவுனியா க.மதி

வவுனியா நகரசபையின் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படும் கொல்களத்தின் கழிவு பொருட்கள் விடப்படும் குழியை சுத்தகரித்துக்கொண்டிருந்த நகரசபையின் சுகாதார தொழிலாளிகள் நால்வர் மரணமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தினை நேரில் பார்த்தவர் கருத்து தெரிவிக்கையில்,

மதியம் 1 மணியளவில் மாடு வெட்டப்பட்ட இரத்தம் மற்றும் நீர் ஆகிய கழிவுப்பொருட்கள் விடப்படும் குழியை சுத்திகரிப்பதற்கு குழியினுள் நால்வர் இறங்கி நீரைப்பாச்சி அடித்தனர்.

இதன்போது ஒருவர் திடீரென மயக்கமுற்று குழியில் வீழ்ந்துள்ளார். இதனால் மற்றையவர் அவரை காப்பாற்ற முற்பட்டபோது ஏனைய இருவரும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க முற்பட்ட வேளை அவர்களும் மயக்குமுற்று கழிவுக்குள் விழ காப்பாற்றிக்கொண்டிருந்தவரும் மயக்கமுற்று வீழ்ந்தார்.

இதன் காரணமாக கழிவு பொருட்கள் அடங்கிய குழியில் வீழ்ந்தமையினால் உடனடியாக யாராலும் காப்பாற்ற முடியத நிலையில் அங்கு கடமையில் இருந்து காவலாளியும், வாகனத்தின் சாரதியுமாக மூவர் அவர்களை வெளியில் எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டும் இயலாத நிலையில் கூக்குரல் இட்டு அழைத்ததுடன் நகரசபையின் பொறுப்பதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதுடன் அம்புலன்ஸ் சேவைக்கும் அழைப்பினை மேற்கொண்டு உடனடியாக அவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததாக தெரிவித்தார்,

இந் நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சகாயமாதாபுரத்தினை சேர்ந்த செல்வராசா, வசந்தகுமார், ஜி. சசிக்குமார் (வயது 28), பூந்தோட்டத்தை சேர்ந்த சந்தனசாமி என்ற நகரசபை சுகாதார தொழிலாளிகளான குடும்பஸ்தர்கள் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின்; சடலங்கள் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கியமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனிடம் விளக்கம் கோருகிறது ரெலோ

வவுனியா நிருபர்

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு கோடீஸ்வரன் அவர்கள் கட்சி முடிவை மீறி வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கியமை தொடர்பில் விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்படவுள்ளதாகவும், அவரது பதிலைப் பொறுத்து கட்சி தலைமைக்குழு கூடி முடிவெடுக்கும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் செயலாளர் என்.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் ஈழ விடுதலை இயக்க (ரெலோ) அலுவலகத்தில் இடம்பெற்ற உயர்மட்ட உறுப்பரினர்களின் கலந்துரையாடலின் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் ஏற்கனவே வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதில்லை என தீர்மானித்திருந்தோம். குறிப்பாக கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 29, 30 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற எங்களுடைய தேசிய மாநாட்டில் அந்த முடிவை எடுத்திருந்தோம். அந்த முடிவினை நாம் எடுத்தமைக்கு காரணம் யுத்தம் முடிவடைந்து 10 வருடங்கள் கடந்தும் கூட படைக் குறைப்பு என்பது நடைபெறாமல் மிகப் பாரிய எண்ணிக்கையில் படையினரை அரசு தொடர்ந்தும் பராமரித்து வருகின்ற காரணத்தினால் பாரிய பொருளாதார சுமை தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமில்லாமல் சிங்கள மக்களுக்கும் சுமத்தப்பட்டு வந்திருக்கிறது. இது அநாவசியமானது. சாதரண பொதுமக்கள் தற்போது கூட அடிப்படை வசதிகளுக்காக போராடிக் கொண்டிருக்கின்ற நிலையிலேயே இந்த நிலமை நீடிக்க கூடாது. நீடிக்கவும் முடியாது. அந்தக் காரணத்திற்காக நாங்கள் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதில்லை என தீர்மானித்திருந்தோம்.

இடையிடையே அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சி என்ற வகையிலும், நாங்களும் கூட்டமைப்பின் பகுதியும், பாகமும் என்ற அடிப்படையிலும் பொதுவான நிலைப்பாட்டின் அடிப்படையில் சில அரசியல் முடிவுகளை மேற்கொண்டிருந்த சூழ்நிலையிலும் கூட வரவு செலவுத் திட்டம் தொடர்பில் எங்களுடைய நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இருக்கவில்லை. இந்த வருடம் பெப்ரவரி மாதம் நாங்கள் திருகோணமலையில் எங்களுடைய பொதுக் குழுக் கூட்டத்தை கூட்டியிருந்தோம். இதன்போதும் வரவு செலவுத் திட்டம் தொடர்பில் முன்னர் எடுத்த முடிவு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. அதற்கமைவாக கட்சியினுடைய தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கவில்லை. ஆனால் எங்களுடைய மற்ற பாராளுமன்ற உறுப்பினர் அம்பாறை மாவட்டத்தினுடைய திரு கோடீஸ்வரன் அவர்கள் ஆதரவு வழங்கினார். அதனடிப்படையில் அவர் கட்சியினுடைய முடிவை மீறியுள்ளார். அவர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என விவாதிக்கப்பட்டது. அவர் எங்களது கட்சியோடு கடந்த பல வருடங்களாக தொடர்ந்து இருந்து வந்திருக்கின்ற ஒருவர். இளம் அதரசியல்வாதி. அம்பாறை மாவட்டத்தின் ஒரே ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர். இவற்றையெல்லாம் நாங்கள் மனதிலே கொண்டு இந்த விடயத்தை விரிவாக, ஆழமாக, பாரபட்சமற்ற வகையில் கலந்துரையாடினோம். இந்த விடயம் தொடர்பில் அவரிடம் விளக்கோர முடிவு எடுத்துள்ளோம். எதற்காக அவர் கட்சியினுடைய முடிவை மீறி செயற்பட்டதாக விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்படும். நாளைய தினம் அக்கடிதம் அனுப்பப்படும். அவரது பதிலையடுத்து கட்சித் தலைக்குழு குழு நடவடிக்கை எடுக்கும் என்றார்.

வவுனியாவில் மோட்டார் சைக்கிளில் தப்பி சென்ற இளைஞனை துரத்திப் பிடித்த பொலிசார்

வவுனியா நிருபர்

வவுனியா நகர் பகுதி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவரை, பொலிசார் துரத்தி சென்று மடக்கி பிடித்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பூந்தோட்டத்தில் இருந்து வவுனியா நகர் பகுதி நோக்கி தலைக்கவசம் இன்றி சென்ற இளைஞனை போக்குவரத்து பொலிஸார் துரத்தி சென்று குடியிருப்பு பகுதியில் வைத்து மடக்கி பிடித்து வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். குறித்த இளைஞன் செலுத்திய மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றினர்.

தலைக்கவசம் இல்லாது சென்றதன் காரணமாகவே குறித்த இளைஞன் துரத்தி செல்லப்பட்டதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மௌலவி ஒருவரை தேடி பொலிசார் வலைவீச்சு

வவுனியா நிருபர்

ஈஸ்டர் ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களை நியாயப்படுத்தி சமூக வலைத்தளத்தில் காணொளியை வெளியிட்ட வவுனியா மற்றும் செட்டிக்குள பிரதேச பள்ளிவாசல்களின் மௌலவி ஒருவரை கைது செய்ய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்தனர்.

நாட்டில் நிலப்பரப்பை கோரி இஸ்லாமிய மக்கள் போரில் ஈடுபடவில்லை எனவும் பொறுமையின் எல்லை தாண்டியுள்ளதால், போராட்டம் நடத்தி இஸ்லாமியர்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என மௌலவி அந்த காணொளியில் கூறியிருந்தார்.

இந்த காணொளி தொடர்பாக பல தரப்பினர் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பை வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், செட்டிக்குளம் பொலிஸாருக்கு வழங்கியுள்ளார்.

வவுனியா செட்டிக்குளத்தை சேர்ந்த முனாஜித் என்ற மௌலவியே சமூக வலைத்தளத்தில் இந்த காணொளியை வெளியிட்டிருந்தார். 8 நிமிடங்கள் ஓடக் கூடிய காணொளி சமூக வலைத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தது.

சம்பவத்துடன் தொடர்புடைய மௌலவி பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். சந்தேக நபரை கைது செய்ய வவுனியா மற்றும் செட்டிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த மௌலவி தௌஹீத் ஜமாத் அமைப்பினை சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வலி கிழக்கு பிரதேச சபையில் தாக்குதல்களைக்கண்டித்துத் தீர்மானம்

அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற் கொள்ளப்படும் மிலேச்சத்தனமான தாக்குதல்களை கண்டித்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அபிவிருத்தி விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை வியாழக்கிழமை 11.30 மணிக்கு தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் அவை மண்டபத்தில் கூடியது. இவ்வாறு கூடிய போது, தவிசாளரின் தலைமையில் அவையில் சகலரும் எழுந்து நிற்க மண்டப மேடையில் மெழுகுதிரி ஏற்றப்பட்டு அஞ்சலிக்கப்பட்டது.

இவ் அஞ்சலியில் பிரதேச சபையின் தவிசாளர், நாட்டில் கூடிய அப்பாவிப்பொதுமக்கள் மீது நடந்தேறும் தாக்குதல்களை இக் கௌரவ அவை வண்மையாகக் கண்டிப்பதாகவும் இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாவண்ணம் சட்டம் ஒழுங்கு மற்றும் இதர நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இத் தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து அஞ்சலி உரைகள் சபை உறுப்பினர்களால் ஆற்றப்பட்டது. இவ் உரைகள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களுக்கான அஞ்சலி மற்றும் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுத்திநிற்கும் இழப்புக்கள், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது இருப்பதற்கு நாட்டின் சகல துறைகளும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டிய அவசியத்தினையும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீண்டகால நல்லிணக்க ஜனநாயக பயணம்.எல்லை தாண்டிய ஒன்றிணைவு மூலம் பலம் பெறும்

இயேசு பிரான் உயிர்த்த இந்த புனிதமான நம்பிக்கையளிக்கும் நாளில் மிலேச்சத்தனமான கொடூர தாக்குதல்கள் என்றுமே மன்னிக்க முடியாதது

வன்முறைகளை தமது வழிகளாக கையாள்பவர்களின் நோக்கம் எமது நாட்டை பல்வேறு வழிகளிலும் பாதிப்படைய செய்வதே.நீண்ட காலமாக பல்வேறு வழிகளிலும் பிரச்சினைகளால் எமது வளங்களை இழந்ததும்,இருக்கும் வளங்களை பயன்படுத்தாமலும் நாம் பின்னடைவுகளை சந்தித்திருந்தோம்.

உலகளவில் போட்டியிடும் அளவிற்கு எமது வளமும், பாரம்பரியங்களோடு, கற்றறிந்த பாடங்கள் அனுபவரீதியாக காணப்படுகின்றன.

எமக்கெதிராக பின்னப்படும் எவ்வாறான சூழ்ச்சிகளாக இருந்தாலும் முறியடிப்பதற்கு உணர்வுடன் கூடிய எமது ஒன்றிணைவு பெரும் பலமாக இருக்கும்.அதற்கான நம்பிக்கையை கட்டியெளுப்புவதற்கான நேரமும் இதுவே.

மிலேச்சதனமிக்கவர்கள் தமது கொடிய நோக்கங்களை அடைய பல்வேறு வழிகளிலும் முயல்கின்றார்கள்.எனவே நாம் பெற்ற முயற்சியின் பெரு பலனை எமது சந்ததியினர் அடைந்து கொள்ள கொடூரர்களின் முயற்சிகளை முறியடிப்போம்.

மக்கள் எந்த நேரத்திலும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து சூத்திரதாரிகளின் திட்டங்களை முறியடிக்க பலமான ஒன்றினைவுடன் கூடிய அர்ப்பணிப்போடு இருக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் மாகாணசபை உறுப்பினரின் வீட்டு வளவினுள் இனந்தெரியாதோரின் நடமாட்டம்

நெடுங்கேணி பொலிஸில் முறைப்பாடு

வவுனியா நிருபர்

முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதனின் நெடுங்கேணி வீட்டு வளவினுள் இனந்தெரியாதோர் நடமாடியுள்ளதாக அவர் நெடுங்கேணி பொலிஸில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள சமயம் 10 மணியளவில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் தனது வீட்டின் வாயில் கதவை மூடி பூட்டினால் பூட்டியபின்னர் நித்திரைக்கு சென்றுள்ளார்.

காலை எழுந்து பார்த்தபோது அவரது முன் வாயில் கதவு (கேட்) பூட்டு உடைக்கப்பட்டு வாயிற்கதவு சேதப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அச்சமான முன்னாள் மாகாணசபை உறுப்பினர் நெடுங்கேணி பொலிஸில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.இதன் பிரகாரம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளதுடன் இராணுவத்தினரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினரின் வீட்டுக்கு சென்று விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன்,

ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள சமயம் எனது வீட்டு வளவினுள் சிலர் நடமாடியுள்ளமை தெரியவந்துள்ளது. பொலிஸாரும் இராணுவத்தினரும் ஊரடங்கு வேளையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த சமயம் இச் சம்பவம் இடம்பெறக்காரணம் என்ன?

அண்மையில் எனக்கு எதிராக வவுனியா வடக்கு பிரதேசசபையின் உத்தியோகத்தர்களும் அங்கு பணியாற்றும் ஒரு கட்சியின் உறுப்பினர்களும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

குண்டு வெடிப்பில் பலியான வவுனியா இளைஞனின் இறுதி கிரியைகள்

வவுனியா க.மதி

கொழும்பில் சினமன் கிரான்ட் ஹோட்டலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலியான வவுனியா இளைஞனின் இறுதி கிரிகைகள் இடம்பெற்றது.

வவுனியா பட்டானிச்சூரை சேர்ந்த நிசாட் முகமட் நலிர் என்ற இளைஞன் கொழும்பில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கையை தொடர்ந்திருந்த நிலையில் சினமன் கிரான்ட் ஹோட்டலில் தொழிற்பயிற்சியின் நிமிர்த்தம் கடமையில் ஈடுபட்டிருந்தார்.

இதன் போதே குண்டு வெடிப்பில் ஸ்தலத்திலேயே பலியாகியிருந்த நிலையில் அவரது சடலம் உறவினர்களால் பொறுப்பேற்கப்பட்டு இன்று காலை வவுனியாவிற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இந்நிலையில் அவரது பட்டானிச்சூர் இல்லத்தில் இஸ்லாமிய முறைப் படியான சடங்குகள் இடம்பெற்று பட்டானிச்சூர் மைய வாடியில் சடலம் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா அரசாங்க அதிபர் ஐ.எம்.கணீபா மற்றும் மேலதிக அரசாங்க அதிபர், வவுனியா பிரதேச செயலாளர் மரண வீட்டிற்கு வருகை தந்து அரசினால் வழங்கப்படுகின்ற ஒரு இலட்சம் ரூபாவில் முற்பணமாக அறுபதாயிரம் ரூபாயை உயிரிழந்த இளைஞனின் தந்தையிடம் வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியாவில் இராணுவம் மற்றும் பொலிஸார் சுற்றிவளைப்பு தேடுதல்

வவுனியா க.மதி

வவுனியாவில் முஸ்லீம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இரர்ணுவமும் பொலிஸாரும் சேர்ந்து சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்டனர்.

வவுனியா பட்டான்ச்சூர் மற்றும் சாளம்பைக்குளம் பகுதிகளிலேயே இவ்வாறு அதிகளவான பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டுள்ளதுடன் வீதியால் செல்லும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களும் நிறுத்தி சோதனை செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களை அடுத்து நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் முக்கிய இடங்களான வைத்தியசாலை, பேரூந்து நிலையம், மதஸ்தளங்கள் என்பற்றில் கடந்த சில தினங்களாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொதிகளுடன் வருபவர்களிடம் சோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந் நிலையிலேயே இன்று வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் அதிகாலை 4 மணியில் இருந்து 8 மணிவரை இராணுவத்தினரும் பொலிஸாரும் சோதனையில் ஈடுபடடடிருந்தனர். எனினும் சந்தேகத்துக்கிடமாக எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சஜித் ஜனாதிபதியாக வேண்டும் என கூட்டமைப்பினர் தெரிவித்தமை தெரியாது

யாருக்கு ஆதரவு என கூட்டமைப்பு கூடி தீர்மானிக்கும் என்கிறார் மாவை

வவுனியா க.மதி

சஜித் பிரேமதாசா ஜனாதிபதியாக வேண்டும் என கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பது தொடர்பில் எனக்கு தெரியாது என தமிழரசுக்கட்சி தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற இளைஞரணி நிர்வாகத்தெரிவின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத:து தெரிவிக்கும்போது சஜித் பிரேமதாசா வீட்டது;திட்டங்களை கையளிக்க வரும்பொது தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கு பிரசன்னமாகி சஜித் பிரேமதாசா ஜனாதிபதியாக வரவேண்டும் என தெரிவித்து வருகின்றனரே அவ்வாறெனில் சஜித் ஜனாதிபதி வேட்பாளரானால் கூட்டமைப்பு ஆதரிக்குமா என கேட்ட பொழீது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத:து தெரிவித்த அவர்,

சஜித் பிரேமதாசா வீட்டுத்திட்டங்களை நிறுவுவதற்காக இங்கு வருகின்றபோது யார் அவர் ஜனாதிபதி என தெரிவித்தார்கள் என்பது தொடர்பில் நான் அறிந்திருக்கவில்லை. யார் யார் எவ்வாறு பேசுகின்றார்கள் என்பது தொடர்பில் கட்சியின் தீர்மானமாக நாங்கள் தீர்மானிக்கவேண்டியிருக்கும். ஜனாதிபதி தேர்தல் நடைமுறைக்கு வருகின்றபோது அந்த தேர்தலில் யார் வேட்பாளர்கள் என பார்த்து அதற்கு பொறுத்தமான வேட்பாளரை ஆதரிப்பதா இல்லையா என்பது தொடர்பிலான தீர்மானம் அப்போது எமது தமிழ் தேசியக்கூட்டமைப்பால் எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்குப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம்

கடந்த 21.04.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கிறிஸ்தவ தேவாலயங்களிலும், நட்சத்திர அந்தஸ்துள்ள சுற்றுலா விடுதிகளிலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்களைப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது எனப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், இரு நூற்றைம்பதிற்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் மரணிக்கவும் ஐந்நூறு வரையானவர்கள் காயங்களுக்குள்ளாகவும் காரணமான இத்தாக்குதல்கள் முழு மனித குலத்திற்கும் விரோதமான செயற்பாடுகளாகும். நீண்ட கொடிய யுத்தமொன்றின் அவலமான முடிவுக்குப் பின்னர், அமைதியானதொரு வாழ்வுக்காக ஏங்கியிருந்த எமது தேசத்தில், இத்தகைய மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவங்கள் மதத் தலங்களுக்குள்ளும், மக்கள் கூடுகின்ற விடுதிகளிலும் இடம்பெற்றிறுப்பது எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும்

இத் தாக்குதல்களில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், காயங்களுக்குள்ளானவர்களுடன் இணைந்து அவர்களின் வேதனையில் எமது கட்சியும் பங்கெடுத்துக்கொள்கின்றது.

மேலும், மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டவர்களின் துயரில் பங்கெடுப்பதுடன், இத்தகைய வழிபாட்டிடங்களில் வன்முறைகளைத் தூண்டும் மத அடிப்படைவாத, வலதுசாரிப் பிற்போக்கு சக்திகளை இனங்கண்டு எதிர்த்து நிராகரிக்கின்ற அதேவேளை, மதச்சார்பற்ற மனித மாண்பைப் பாதுகாக்கப் பாடுபடவும் வேண்டும் என எமது கட்சி வலியுறுத்துகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியாவில் போக்குவரத்து பொலிசார் திடீர் சோதனை நடவடிக்கை

வவுனியா நிருபர்

வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 20 க்கு மேற்பட்ட சாரதிகளுக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்யப்பட்டுள்ளது;.

வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியின் தலமையில் வவுனியா நகரசபை வீதியில் இன்று காலையில் இருந்து சுமார் இரண்டு மணித்தியாலயம் மேற்கொள்ளப்பட்ட இத் திடீர் சோதனை நடவடிக்கையின் போது இருபது சாரதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்யப்பட்டுள்ளதுடன், பத்துக்கு மேற்பட்ட சாரதிகளுக்கு எதிராக தண்டப்பணமும் விதிக்கப்பட்டு`ள்ளது.

குறித்த சோதனை நடவடிக்கையில் தலைக்கவசம் சீராக அணியாமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை, அதிக சத்தம் எழுப்பும் கோன் பயன்படுத்தியமை போன்ற பல்வேறு குற்றங்களுக்காகவே சாரதிகளுக்கு தண்டப் பணம் விதிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

வெடிகுண்டு சம்பவத்தை கண்டிக்கிறோம்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

வவுனியா க.மதி

கிருஸ்தவ ஆலயங்களிலும், நட்சத்திர விடுதிகளிலும் இடம்பெற்ற வெடிகுண்டு சம்பவத்தை கண்டிக்கிறோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் மு.ப.பர்சூக் தலைமையில்

பாடசாலை ரீதியாக இடம்பெற்ற சதுரங்கப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களிற்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் உரையாற்றும் போது;

அந்த மதத்தவர்களிற்கு எதிராக கிருஸ்தவ ஆலயங்களிலும், நட்சத்திர விடுதிகளிலும் ஈஸ்டரை கொண்டாடும் போது நடைபெற்றுள்ளன. இந்த மிக கேவலமான சம்பவத்தை நாங்கள் கண்டிக்கிறோம். தமிழ் பிரதேசங்கள் இவ்வகையான மோசமான சம்பவங்களால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசம். உயிரிழப்பு என்றால் எந்தள தூரத்திற்கு எங்களது ஒட்டுமொத்த வாழ்க்கையையும் பாதிக்கும் சமூகத்தையும் பாதிக்கும் என்பதை அனுபவ ரீதியாக அறிந்து வைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு நிலையிலே பாதிக்கப்பட்ட மக்களிற்கு எங்களால் இயன்றளவற்கு அவர்களிற்கு ஆதரவு கொடுக்க வேண்டிய ஒரு கடமையிலே நாங்கள் இருக்க வேண்டும்.

இன்றைக்கு இப்படிபட்ட சம்பவங்கள் நடைபெறுவதற்கு நாங்கள் கடந்த காலங்களிலே நடைபெற்ற இவ்வகையான சம்பவங்கள் தொடர்பாக இந்த நாட்டிலே இருக்க கூடிய மக்கள் எந்தளவு தூரத்திற்கு அந்த சம்பவங்களை அனுகி அந்த சம்பவங்கள் தொடராமல் இப்படிப்பட்ட மதங்களோ இனங்களோ பாதிக்கப்படாமல் அவர்கள் பாதுகாப்பாக உரிமையுடன் தங்களது அனைத்து அந்தஸ்துகளையும் அனுபவிக்க கூடிய ஒரு சூழலை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார்கள் என்பதை பற்றி நாம் யோசிக்க வேண்டும். அதை செய்யாமல் அவர்கள் பெரும்பான்மை இனத்தவர்களை விட வித்தியாசமானவர்கள். இந்த நாட்டிலே அவர்கள் உள்வாங்குவதற்கு தயங்கிற வகையிலே கடந்த எழபது வருடங்களாக இந்த நாட்டினுடைய வரலாறு இருக்கின்ற நிலையிலே மீண்டும் ஒரு முறை புதிய கோணத்திலே இன்னொரு சமூகம் குறிவைக்கப்படுகிறது.

கடந்த ஞாயிறு இடம்பெற்ற வெடிப்பு சம்பவங்களில் உயிரிழந்த மக்களிற்கு கிளிநொச்சியில் அஞ்சலி இடம்பெற்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு 6 மணியளவில் இடம்பெற்றது. கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சமய தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது உயிரிழந்த மக்களிற்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர்வணக்கம் இடம்பெற்றதுடன், உயிரிழந்தவர்களிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மெழுகுவர்திதகளும் ஏற்றப்பட்டமை குறிப்பிடதக்கதாகும்.

பாதுகாப்பு என்ற ரீதியில் வடக்கில் இராணுவத்தினை குவிக்காது பரந்துவட்டு சிந்தித்து செயற்பட வேண்டும்

முன்னாள் வடக்கு முதலமைச்சரின் அறிக்கை

வவுனியா க.மதி

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் ஒரு இனத்தை அடக்கியாள்வதற்காக இராணுவத்தை வடக்கில் நிலைநிறுத்தி வைத்திருக்காமல் நாட்டின் அனைத்து மக்களுக்குமான உண்மையான பாதுகாப்பை வலியுறுத்தும் விதத்தில்சீர்தூக்கிப் பார்த்து அதனை உறுதிப்படுத்தும் வகையில் மக்கள் தொகைக்கு ஏற்ப சகல மாகாணங்களுக்கும் இராணுவத்தைப் பரவலாக்கம் செய்யவேண்டியதன் அவசியத்தையும் இந்தத் தாக்குதல்கள் வலியுறுத்துகின்றன என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புனித உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பல்வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில் உயிரிழந்த மக்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் அதேவேளை உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் காயம் அடைந்து சிகிற்சை பெறுபவர்களின் துயரத்தில் நாங்களும் பங்கு கொள்கின்றோம். மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு சென்று காயம் அடைந்து சிகிற்சை பெற்றுவரும் மக்களைப் பார்த்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். பயங்கரவாத தாக்குதல் பல விடயங்களை உணர்த்தி இருக்கின்றன.

இன, மத ஏற்றத் தாழ்வுகள் இந்தத் தீவில் இருக்கும்போது அதனுடாக ஏற்படும் முரண் நிலைகளை சந்தர்ப்பவாத குழுக்களும் அந்நிய சக்திகளும் தமது நோக்கங்களை அடைவதற்கான வாய்ப்பாகவே பயன்படுத்த முயலுவார்கள். ஆகவே நிலையான சமாதான பூமியாக இத்தீவை மாற்றுவதற்கு எமது அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் துணிச்சலுடன் முன்வர வேண்டும். எமது அரசியல் சாசனமுஞ் சட்டமும் சகல இன, மத சமூகங்களுக்கும் சமத்துவத்தையும் பாதுகாப்பையும் நல்கும் விதத்தில் மாற்றியமைக்கப்பட வேண்டும். இதன் அவசியத்தை இந்தத் தாக்குதல்கள் இன்று எமக்கு உணர்த்தியுள்ளன.

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் ஒரு இனத்தை அடக்கியாள்வதற்காக இராணுவத்தை வடக்கில் நிலைநிறுத்தி வைத்திருக்காமல் நாட்டின் அனைத்து மக்களுக்குமான உண்மையான பாதுகாப்பை வலியுறுத்தும் விதத்தில்சீர்தூக்கிப் பார்த்து அதனை உறுதிப்படுத்தும் வகையில் மக்கள் தொகைக்கு ஏற்ப சகல மாகாணங்களுக்கும் இராணுவத்தைப் பரவலாக்கம் செய்யவேண்டியதன் அவசியத்தையும் இந்தத் தாக்குதல்கள் வலியுறுத்துகின்றன.

2009 க்கு பின்னர் இலங்கை ஊடாக அந்நிய சக்திகளின் மூலம் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களையும் இந்தத் தாக்குதல்கள் கோடிட்டு காட்டுகின்றன. ஆகவே, இந்தியா தனது நலனை மட்டும் கருத்தில் கொள்ளாமல்,தனது பாதுகாப்பானது இலங்கைத் தீவின் உண்மையான அமைதியிலேயே தங்கியிருக்கிறது என்பதைப் புரிந்து மதச்சார்பற்ற, வடக்கு கிழக்கு இணைந்த, உச்ச அதிகாரம் கொண்ட ஒரு சமஷ்டிக் கட்டமைப்பை இலங்கையில் ஏற்படுத்தி தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளும் ஒரு தீர்வைக் கொண்டுவருவதற்கு முன்னின்று பாடுபடவேண்டியதன் அவசியத்தையும் இந்தத் தாக்குதல் சம்பவங்கள் இந்தியாவுக்கு உணர்த்துகின்றன.

இந் நாட்டின் பெரும்பான்மையின மக்கள் தமது நண்பர்கள் யார் என்பதை அலசி ஆராய வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தையும் இந்தச் சம்பவங்கள் உணர்த்தியுள்ளன.

காட்டுமிராண்டித்தனமான இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டவர்களையும் அவர்களுக்கு உடந்தையாக நின்றவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையாகத் தண்டிக்க சகல தரப்பினரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்தத் தாக்குதல்களில் காயப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் மருத்துவ மற்றும் முதலுதவி உதவிகள் மேலும் ஏனைய உதவிகள் செய்த மருத்துவர்கள், தாதிமார்கள்,பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

சமூகப் புறக்கணிப்புகளே வன்முறைகளுக்கு வித்திடுகின்றன

மனித வாழ்வியல் உள்ளாக்கத்தில் சமூகக் கட்டமைப்புக்களே முக்கியமானதாகும். மனித நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து மனிதனின் வளர்ச்சி நாளாந்;தம் ஏதோ ஒரு விதத்தில் முன்னேற்றம் கண்டு கொண்டே வந்துள்ளன. அவ்வாறனதொரு முன்னேற்றத்தின் வெளிப்பாடே இன்;றைய நவீன விஞ்ஞான யுகம் என்று கூறலாம். இந்த விஞ்ஞான யுகத்தின் தோற்றமும், வளர்ச்சியும் மனித வாழ்வியலுக்கு புத்துயிர் ஊட்டி பல முன்னேற்றங்களைக் கொண்டு வந்தாலும் ஈற்றில் அவை முழு மனித சமூகத்திற்கும் சவாலானதொரு விடயமாக தோற்றம் பெற்றுள்;ளது என்றால் அதனை மறுப்பதற்கும் இடமில்லை.

இலங்கை 9 மாகாணங்கள், 25 மாவட்டங்களை கொண்டதாகவும் 4 மதத்தை பின்பற்றும் மூன்று மொழி பேசும் சமூகத்தினை கொண்டதாகும். இதில் பல்வேறு பிளவுகளைக்; பிரதேச அடிப்படையிலும் இனத்தின் அடிப்படையிலும் காணப்படுகின்றன. சமூகத்தினருக்கு அனைவரும் ஒற்றுமையாக இருப்பதுபோல காட்டிக்கொண்டாலும் இன்று பல தேவைகள், கொள்கைகள் அடிப்படையில் பிளவுபட்டும் தனிமைப்படுத்தப்பட்டும் இனங்கள் காணப்படுகின்றன.

ஆரம்ப காலந்தொட்டு மனித சமூகம் குறிப்பாக அறிவு முதிர்ச்சியடைந்து வந்த காலத்தில் இங்கு காணப்பட்ட சமூகங்கள் அல்லது மனிதக் கட்டமைப்புக்கள் தத்தமது வாழ்வியல் வளர்ச்சிப் படிகளில் ஒற்றுமைப்பட்டவர்களாகவே காணப்பட்டுள்ளனர். அவ்வாறானதொரு ஒற்றுமையின் அல்லது முன்னேற்றத்தின் வெளிப்பாடுகள் மனித சமூகம் பழமையிலிருந்து புதுமையின் தோற்றத்திற்கு அல்லது சொகுசு வாழ்வியல் வட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளான் எனலாம். இவ்வாறான புதுமையான சொகுசு வாழ்வியல் இன்று ஒவ்வொரு மனிதனுக்கும் இடையில் இன்று ஒவ்வொரு மனிதனுக்கும் இடையில் பாரியதொரு பின் விளைவுகளை அல்லது முரண்பாட்டுத் தன்மைகளை தோற்றுவிப்பதாகவே பரிணாமம் அடைந்துள்ளது.

இந்த பரிணாமத்தின் வெளிப்பாடுகள் ஒவ்வொரு மனிதனையும் சுயமான அல்லது தனி வழியில் அவன் நினைத்த விதத்தில் செல்வதற்கும் வழிகோலியுள்ளது. இது தற்கால சூழ்நிலையில் சமூகத்தில் பாரியதொரு சிக்கலாக உருவெடுத்து சமூக விழுமியங்கள் கொச்சைப்படுத்தப்படும் அல்லது அவற்றிற்கு எதிரான போக்குகளை ஏதோ ஒரு வழியில் தோற்றுவித்து வருகின்றது எனலாம். இவ்வாறான நிலைமைகள் இலங்கை போன்ற பல்லின, பல்சமூக மக்கள் வாழும் நாட்டில் பாரியதொரு ஆபத்தான நிலைமைகளை தோற்வித்து அதன் வெளிப்பாடுகள் இலங்கையயின் இன நல்லிணகத்திற்கும் அதன் ஒரு மைப்பாட்டிற்கும் குந்தகத் தன்மைகளை ஏற்படுத்தி வருகின்;றது.

இலங்கையில் பௌத்த மதக்கொள்கையுடையவர்கள் பெரும்பான்மையாகவும் அதற்கு அடுத்தப்படியாக தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்;ட தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை உள்ளடக்கியதான பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய சமயங்களைப் பிரதிபலிக்கும் சமய ரீதியான மக்கள் இந்நாட்டில் வாழுகின்றனர். இவ்வாறான பல்லின சமூகக் கட்டமைப்புக்குள் இனம் என்ற ஒரு விடயம் இன்று இலங்கையின் தலை விதியையே மாற்றி மத்தியில் பல்வேறுபட்ட இனப்பிளவுகளை ஏற்படுத்தி மூன்று தசாப்த இலங்கையின் கொடிய யுத்தக் கொடூரத்திற்கு காரணமாக ஆனதையும் அதன் வடுக்களையும் எவராலும் மறந்துவிட முடியாது.

மேற்படி நிலைமைகளுக்கான காரணங்கள் தான் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பாகுபாடாகும். இந்தப் பாகுபாடுகள் இலங்கையின் வரலாற்றுக் காலந்தொட்டு இருந்து வந்தாலும் இதன் உக்கிரக் கட்டங்கள் 1956 ஆம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டம் இனவாதிகளால் முதல் முதலாக தோற்றவிக்கப்பட்டது முதல் இலங்கையில் இன நல்லுறவுக்களுக்கு இன்றுவரை தொடராக உள்ளக ரீதியாக பிரச்சினைகள் காணப்பட்டு வருகின்றமையைக் குறிப்பிடலாம். இவ்வாறான பின்னணியில் ஒரு இனத்திற்குச் சார்பான சட்டங்கள் இலங்கை மக்களின் ஜனநாயக உரிமைகளும் சலுகைகளும் பறிபோவதற்கும், பெரும்பான்மை சமூகங்களைப் போல் சிறுபான்மை மக்களும் தமது உரிமைகளை அனுபவிக்க முடியாது மாறாக மறுக்கப்படுவதற்கு காலாக அமைந்தது.

இலங்கை ஒரு சிறிய நாடாக இருப்பதால் இதனை பல துண்டுகளாக பிரிப்பதைவிட இந்நாட்டு மக்கள் என்ற வகையில் அனைவரும் சேர்ந்து வாழ வேண்டும் என்பதுடன் அவரவர் அவரவரது தனித்துவங்களைப் பாதுகாத்துக் கொண்டு இலங்கையர் என்ற அடையாளத்துடன் வாழ்வதே சாலச்சிறந்தது. இதன் மூலமே உன்னதமான மனிதப் பெறுமானங்களை பாதுகாத்துக் கொள்ளலாம். இந்த விடயங்களை அகிம்சையாக பெற்று இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழ்வதற்கான ஆதங்கத்தில் சிறுபான்மைச் சமூகங்கள் குறிப்பாக தமிழ் சமூகம் காத்திருந்த போதெல்லாம் அதற்கான சாதகத் தன்மைகளோ அல்லது விட்டுக் கொடுப்புக்களோ அல்லது அவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற ஆட்சியாளர்களின் குறிக்கோள்;களோ கிஞ்சித்தும் காணப்படவில்லை என்றே கூறலாம்.

ஒரு சமூகம் இன்னொரு சமூகத்திற்கு கிடைக்க வேண்டிய அனைத்தையுமே அபகரிக்கும் கைங்கரியங்கள் அதிகரிக்கத் தொடங்கியதன் பின் விளைவுகளின் தோற்றுவாய்கள் தான் 1980களுக்;குப் பின்னரான வடபகுதி தமிழ் மக்கள்; இளைஞர்களின் போராட்ட வரலாறுகளாகும். இந்நிலை மலையக சமூகத்தினையும் பாரிய அளவில் பாதிப்பினை ஏற்படுத்தியது.

கிடைக்க வேண்டியதை அகிம்சையாக கேட்ட போதெல்லாம் உதறிதள்ளிய இனவாதிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தியாவது தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடுகளே இலங்கையின் 30 வருடகாலம் உள்ளிட்ட பல வருட கால உரிமைப்போராட்டங்களாகும். இந்த நிலைமைகளுக்கு வித்திட்டவர்களும் அவற்றை வளர விட்டவர்களும் கடும்போக்;கு அரசியல்வாதிகளும் அவர்களுடன் இணைந்து சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக இனவாத சாயம் பூசியவர்களும்தான் காரண கர்த்தாக்களாகும்.

சமூகத்தில் வாழும் எல்லாச் சமூகங்களையும் அரவணைக்கத் தெரியாத முட்டாளத்தனமான அரசியல் தலைமைகள் அக்காலத்தில் விட்ட பிழைகளும், அதன் மூலமான தவறுகளும் இலங்கையின் அபிவிருத்தியிலும், சமூக, அரசியல், கலை, கலாசாரங்களிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி விட்டன. குறிப்பாக சிறுபான்;மை மக்களும் இந்த நாட்டு மக்கள் என்ற எண்ணக்கருக்கள் அற்றவர்களாக எதையெடுத்தாலும் அவற்றை வழங்காது மறுப்பதும், விட்டுக்கொடுக்காமை போன்ற தன்மைகள் இலங்கை வாழ் குறிப்பாக சிறுபான்மை மக்கள் மத்தியில் பாரிய வெறுப்புணர்வுகளை தோற்றுவித்து அதன் மூலம் இன முறுகல் நிலைமைகள் ஏற்பட பாலமாக அமைந்து விட்டது எனலாம்.

மேற்படி நிலைமைகள் தற்போது அரசியல் நீரோட்டத்தில்; பல மாற்றங்களையும் சிறுபான்மை மக்களின் ஆதரவிலும் பெரும்பான்மைக்கு பிரச்சினையாக மட்டுமல்லாது ஈடு செய்ய முடியாதளவு சவாலாகவும் உருவெடுத்துள்ளதாக புத்திஜீவிகளின் கருத்துக்களில் இருந்து அறியக் கூடியதாகவுள்ளது. மேற்படிப் புத்திஜீவிகளின் கருத்துக்களின்படி பல்லின சமூக கட்டமைப்புக்கள் காணப்படும் ஒரு நாட்டில் அவர்கள் அனைவரும் இந்த நாட்டுப் பிரஜைகள் என்;ற ரீதியிலேயே மதிக்கப்படுவதுடன், அரசியலமைப்புச் சட்டங்கள், நீதி, விசாரணைகள் எல்லாமே சமமானதாகவே பாரபட்சமற்ற விதத்தில் நிலை நாட்டப்படவேண்டும் என்ற விடயங்கள் தெளிவாகின்றன. ஆனால் சிறுபான்;மை மக்கள என்ற காரணத்தினால் அவர்களுக்கான சகல ஜனநாயக உரிமைகளும் தொடராகவே புறக்கணிக்கப்பட்டும் அவற்றை கேட்கும் போதெல்லாம் வழங்க மறுப்பதெல்லாம் இலங்கையின் சமூக மற்றும் கலாசார விடயங்களில் பின்னடைவுகளையே தோற்றுவித்துள்ளது எனலாம்.

தமிழ் இளைஞர்கள் தமது உரிமைக்காக இந்த நாட்டையே பலகாலம் வேறாக்கி தமது கட்டுப்பாட்டுக்குள்; வைத்திருந்த நிலைமைகளுக்கும் அதன் மூலம் வடக்கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மேலும் மலையக தமிழர்கள் பட்ட துன்ப துயரங்கள் எல்லாவற்றிற்கும் கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த பெரும்பான்மை அரசியல் தலைமைகளும், ஆட்சியாளர்;களுமே முழுப்பொறுப்பபையும் ஏற்க வேண்டியவர்கள். அவர்களின் விடாப்பிடி நிலைமைகள் சமூகச் சீர்கேடுகளுக்கும், வன்முறைகளுக்கும் வித்திட்டனவே தவிர எந்த விதத்திலும் அமைதிக்கும் சமாதானத்திற்குமான முன்நகர்வுகள் ஏற்படவில்லை அல்லதுகடைப்பிடிக்கவில்லை என்;றே கூறலாம். பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அல்லதுகிடைக்க வேண்டியவற்றைப் பெற்;றுக்கொள்வதில் ஒருசாரார் அவற்றை ஏற்படுத்த முடியாத இருசாராரும் சேர்ந்துதான் தீர்க்க வேண்டும் அப்போதுதான் பிரச்சினைகளுக்கு தகுந்த தீர்வுகள் கிட்டும் அதற்காகச்; சில தியாகங்களைச் செய்யவும் வேண்டும்.

இலங்கை மக்களைப் பொருத்த வரை போர் என்ற வரையறைக்குள் தாராளமாகவே தியாகங்களை தமது உரிமைகளைப் பெறுவதற்காக செய்துவிட்டனர். இனியும் அவ்வாறான தியாயங்கள் தேவையில்லை மாறாக புரிந்துணர்வு என்ற தியாகத்துடன் செயற்பட வேண்டிய தற்போது தேவையாகவுள்ளது. போருக்குப் பின் இலங்கையின் நிலைமைகளை எடுத்துக் கொண்டால் அது அபிவிருத்தி விடயங்களில் முன்னேற்றங் கண்டாலும் சமூக முன்னேற்றங்கள் குறிப்பாக யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களின் விடயத்தில் அது உரிய முறையில் செல்வாக்குச் செலுத்த வில்லை என்ற வாதங்களே அதிகமாகப் பேசப்படுகின்றது.

அரசாங்கத்திற்கு கூட வாக்குகளை வழங்கியிருந்தாலும் கூட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு விடலாம் என்பதும்கூட மடமைத்தனம் என்றுகூட சொல்லலாம். இனங்களுக்கிடையில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படாத வரையில் அங்கு சமாதானம் மலர்ந்து விடும் என்;று சொல்லி விட முடியாது. ஒரு இனத்தை மற்றய இனம் புறந்தள்ளும் முட்டாள் தனமான செயற்பாடுகளை ஆதரிக்கும் அரசியல் தலைமைகளும் இனவாதிகளும் அந்த விடயங்களில் இருந்து தம்மை சற்று மாற்றிக் கொண்டு சமாதானமான வாழ்வியல் வழி முறைகளுக்கு மக்கள் சுதந்திரமாகச் செல்வதற்கான இடத்தைக் கொடுக்க வேண்டும். அதேநேரம் அனைத்து சமூகத்தின் மத்தியிலும் உள்ள தீவிர மதச்சிந்தனை செயற்பாடுகளை தடுத்து நிறுத்த வேண்டும்.

கடந்;தவாரம் இயேசு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று எதிர்ப்பார்க்காத வகையில் பயங்கரவாதிகளின் தாக்குதல் இலங்கையில் இரத்த ஆறை ஏற்படுத்தியது. நாட்டின் பல்லின மக்கள் மத்தியில் ஒரு இனத்தை மாத்திரம் குற்;றவாளியாக பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் மனிதம் குன்றி மிருகத்தனமான செயற்பாடுகளை செய்வதற்கு பழக்கப்பட்ட ஒரு குழுவினர் உலகில் வாழும் நிலையில், ஒருசிலர் எவ்வளவுதான் தேன் போன்ற வார்த்தையைக் கொட்டி சுமூகமான பழகினாலும் அவரவர் இனம், மொழி, மதம் மீதான அதீத பற்றை மனதில் கொண்டு பாரபட்சமான முறையில் செயற்படும், நட்பு கொள்ளும் நிலை தொடர்ந்து வருகின்றது. இவ்வாறான கைங்கரியங்களை விட்டு மனிதம் முக்கியம் என்ற நிலைப்பாட்டில் மீண்டும் மனித அழிவுக்கு சூழலை ஏற்படுத்திக் கொடுக்காமல் அனைத்து இனங்களும் ஒற்றுமையாக நாட்டை கட்டியெழுப்புவதற்கு முன்வர வேண்டும்.

எனவே கல்வி கற்ற சமூகம் மக்கள் மத்தியில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கும் இலங்கை அரசியலுக்கு அப்பால் நேர்த்தியான கருத்தாடல்களை மேற்கொள்ள வேண்டும். வடக்கு முதல் தெற்கு வரை சிறந்;த தெளிவூட்டலை ஏற்படுத்துவதற்கு தமிழ், சிங்களம், முஸ்லிம் இனங்கள் மத்தியில் செயற்பட வேண்டும். சிறிய நாட்டினை பிளவுபடுத்தும் கொள்கைக்களுக்கு அப்பால்; அனைவரும் சுமூகமான நல்லிணக்கத்துடன் ஒன்றாக வாழ்வதற்கும் சர்வதேச அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்;வதற்கும் அனைத்து தரப்பு மதத்தினரும் செயற்பட வேண்டும்.

சி.அருள்நேசன்
கிழக்குப் பல்கலைக்கழகம்

சமூக வலைத்தளங்களில் சிக்கும் பெண்களை பாதுகாப்பது எப்படி?

எந்த ஒரு விசயத்திலும் நன்மையும் இருக்கும். தீமையும் இருக்கும். உடல் நலத்துக்கு டாக்டர்கள் கொடுக்கும் மாத்திரையைக்கூட பக்கவிளைவுகள் உண்டு. பேஸ்புக்கில் இருக்காதா என்ன? எப்படி அணுக வேண்டும் என்ற புரிதல் இருந்தால் போதும் பிரச்சினை ஏற்படாது. இதற்கு கற்றுக்கொடுத்தல்தான் முக்கியம்.

பள்ளியில் இருந்தே இதனை ஆரம்பிக்க வேண்டும். விளையாட்டுக்கு பயிற்சி இருப்பது போல், பொது அறிவுக்கு பாடம் நடத்துவது போல் வாழ்வியல் பற்றிய மனவளக்கலை பயிற்சியும் அளிக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க் கையில் ஏற்படும் பிரச்சினைகளை சந்திக்க அவர்களுக்கு மனதிடம் உண்டாகும்.

ஜெர்மனி கார்கள்தான் பேமஸ். அங்குள்ள சாலைகளும் உலத்தரமானவை. போக்குவரத்து குற்றங்களுக்கு அதிகப்படியான அபராதமோ தண்டனையோ விதிக்கும் சட்ட திட்டம் கிடையாது. அப்படி இருந்தும் உலகிலேயே அங்குதான் விபத்துக்கள் குறைவு. காரணம் எப்படி வாகனங்களை ஓட்ட வேண்டும் என்பது குறித்து அவர்களுக்கு நன்கு கற்பிக்கப்பட்டு வருகிறது. அதுபோல் வாழ்க்கை முறை குறித்து குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கற்பித்து வந்தால் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாது.

ஒவ்வொரு குழந்தையும் வாழ்க்கை முறை குறித்த விழிப்புணர்வை பெற்று விட்டால் பிரச்சினை ஏற்படும் சமயங்களில் அவர்கள் உடலில் சுரக்கும் ஹார்மோன்களே சிக்கல்களில் இருந்து காப்பாற்றி கொள்ளும் திறனை அளிக்கும்.

பொதுவாக மூன்று விசயங்களில் ஈர்ப்பு இருக்கும். ஒன்று ஆண்பெண் கவர்ச்சி. இரண்டாவது புகழ். புகழுக்கு மயங்காதவர்கள் யாருமே கிடையாது. மூன்றாவது அன்பு. அன்புக்கு அடிமையாகாதவர்கள் யாரும் இல்லை. இந்த மூன்றும் கவர்ந்து இழுப்பவை. அதனால் இந்த மூன்றும் கிடைக்கும் இடம் நோக்கி அனைவரும் செல்கிறார்கள்.

இன்றைய இளைஞர்களுக்கு சமூகவலை தளங்கள் மூலம் இந்த மூன்றும் கிடைக்கிறது. அதாவது அவர்கள் போடும் ஸ்டேடஸ், டிக்டாக் செயலில் ஆடல் பாடல் மூலம் பிரபலம் என்ற புகழ் கிடைக்கிறது. அதன் மூலம் ஆண்பெண்களிடையே நட்பு ஏற்பட்டு கவர்ச்சியால் ஈர்க்கப்படுகிறார்கள். அடுத்து தொடர்ந்து காட்டும் அன்பில் அவர்கள் மயங்கி விழுகிறார்கள். அதன் பின்னரே இது போன்ற வக்கிரமான குற்றச் செயல்கள் நடக்கின்றன.

சமூக வலைதளங்கள் மூலம் கிடைக்கும் இவை யாவும் உண்மையானவை அல்ல. ஒருவருக்கு ஐந்தாயிரம் பேர் எப்படி நண்பனாக, தோழியாக இருக்க முடியும்? அந்த உறவுகளில் போலியானவையும் இருக்கலாம். எல்லாவற்றையும் உண்மை என்று நம்பி விடுவதால் தான் பிரச்சினையே. வீடு வேறு, வெளிஉலகம் வேறு. வீட்டில் சில குறைகள் இருக்கலாம். வெளியே இருக்கும் பூங்கா பார்க்க பசுமையாக அழகாகத்தான் இருக்கும். அது உங்கள் வாழ்விடம் ஆகாது. அதுபோல் நம் வீட்டு உறவுகள் போல் வெளி தொடர்பு உறவுகள் இருக்காது. அதை உண்மை என்று மயங்காதீர்கள். இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள மெல்லிய கோட்டை உணர்ந்து கொண்டால் எல்லை மீறாமல் பார்த்துக் கொள்ளலாம்.

சினிமாவில் நடிக்கும் நடிகர் அந்த கதையுடன் எப்படி தொடர்பு இல்லாமல் இருக்கிறாரோ அது போன்றதுதான் இதுவும். ஆனால் பெண்கள் முகநூலில் காட்டும் அன்பை உண்மை என்று நம்பி படுகுழியில் விழுந்து விடுகிறார்கள்.

எனவே முகநூலில் ஒரு ஸ்டேட்டஸ் போடும் போதோ, டிக்டாக் செயலியில் ஆடல் பாடலை போடும் போதோ சற்று சிந்திக்க வேண்டும். இதனால் என்ன பின்விளைவுகள் ஏற்படும் என உணர்ந்து செயல்பட்டால் நல்லது.

பொதுவாக நேர்மறையான விசயங்களைவிட எதிர்மறையான விசயங்களே மக்கள் மனதில் அதிக ஈர்ப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும். அதாவது 1:16 என்ற விகிதத்தில் உள்ளது. 16 நல்ல விசயங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை ஒரு கெட்ட விசயம் செய்து விடும். அதனால்தான் குழந்தைகள் எதிர்மறையான செயல்களால் எளிதில் ஈர்க்கப்படுகின்றனர். எனவே எப்பொழுதும் நல்லவற்றையே பேச வேண்டும். நல்லவற்றையே செய்ய வேண்டும். சூழலை நல்லவிதமாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

மேலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் தோழமையுடன் நடந்து கொள்ள வேண்டும். கண்டிப்புடன் இருந்தால் அது பெற்றோர்குழந்தைகளிடையே இடைவெளியை ஏற்படுத்தி விடும். அதில் தான் ஆபத்து உண்டாகிறது. பயத்தின் காரணமாக குழந்தைகள் தங்கள் பிரச்சினையை சொல்ல மாட்டார்கள். இதனால் ஏற்படும் மன அழுத்தம் காரணமாக தங்களுக்கு ஆறுதலாக இருக்கும் நபர்களைத்தேடி செல்வார்கள். இப்படியாகத்தான் கயவர்கள் காட்டும் போலியான அன்பில் மாட்டிக் கொள்கிறார்கள்.

சமூகவலை தளங்களில் ஆண்கள் வீசும் வலைகளில் பெண்கள் எப்படி சிக்கி கொள்கிறார்கள் என்றால் மனோவசியம் செய்யப்படுகிறார்கள். முகநூலில் நட்பு கொண்ட ஆண்பெண் இருவரும் தொடக்கத்தில் மனம் விட்டு பேசுகிறார்கள். அடுத்த கட்டமாக அந்த ஆண் தன் விருப்பங்களை திரும்ப திரும்ப கூறுகிறான். எந்தவொரு கட்டளையும் தொடர்ந்து கொடுக்கும் போது அதை செய்ய மனம் பழக்கப்பட்டு விடுகிறது. பறவைகள், விலங்குகளை பழக்கப்படுத்துகிறோம் அல்லவா, அது போல் தான். அந்த நபர் மீது நம்பிக்கை ஏற்பட்டதும் அவள் தன்னை சுற்றி அமைத்திருந்த வேலியை உடைத்து விடுகிறாள். அதன் பின் அவன் சொல்கிறபடி நடக்க தொடங்குகிறாள். இந்த மனோவசியத்தில் தான் பெண்கள் சிக்கி கொள்கிறார்கள்.

பொதுவாக பெண் குழந்தைகள் இதுபோன்ற விசயங்களை வெளியே சொல்ல மாட்டார்கள் என்பதால் ஆண்கள் துணிந்து தவறு செய்கிறார்கள். பெண் குழந்தைகளும் பெற்றோரிடம் எதனையும் தெரியப்படுத்தும் நிலையில் இருந்தால் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாது. எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தை களிடம் அன்பாக தோழமையாக நடந்து கொண்டால் அவர்கள் தங்களுக்கு ஏற்படும் எந்த பிரச்சினைகள் என்றாலும் தயங்காமல் தெரிவிப்பார்கள். பின் விளைவுகள் ஏற்படும் முன்னரே தடுத்து நிறுத்தி விடலாம்.

மேலும் பெற்றோர்கள் என் குழந்தை அப்படியெல்லாம் தவறு செய்யமாட்டான். அந்த துணிவெல்லாம் அவனுக்கு கிடையாது என்றும், என் குழந்தை எந்த பிரச்சினையென்றாலும் சமாளித்து விடுவான் என்றும் நம்பியிருக்கக் கூடாது. அதுவும் ஆபத்தை விளைவிக்கும். குழந்தைகளிடம் கஷ்டப்பட்டு படிங்க, கஷ்டப்பட்டு வேலை செய்யுங்க. அப்போதுதான் நல்லா இருக்கலாம் என்று சொல்லி வந்தால், தேவையான விஷயங்களை செய்ய கஷ்டம்தான் படணும், மகிழ்ச்சிக்கான தேடல் என்பது நல்ல விசயங்களில் இருக்காது போல என நினைத்து கேளிக்கை விசயங்களில் நாட்டம் கொள்கின்றனர்.

எனவே அவர்கள் எதனையும் இஷ்டப்பட்டு செய்யும் வகையில் நடந்து கொண்டால் மகிழ்ச்சியாக இருப்பார்கள். அவர்கள் மனம் கெட்ட விசயங்களில் அலை பாயாது.

நாம் எந்த விசயத்தை அடிக்கடி நினைக்கிறமோ, விரும்புகிறமோ அது ஆழ்மனதில் பதிந்து விடும். அதனால் குழந்தைகளிடம் எப்போதும் நல்லவற்றையே பேச வேண்டும். அவர்களை சுற்றிலும் நல்ல சூழலை ஏற்படுத்த வேண்டும். இல்லை என்றால் எவ்வளவுதான் உணர்வு மனதளவில் நாம் நல்லவற்றை எண்ணி னாலும் ஆழ்மனதில் கெட்ட விசயங்கள் பதிந்திருந்தால் அதுவே வெளிப்பட்டு செயலாகும்.

இரண்டு வகையான பார்வை இருக்கிறது. பிரச்சினைகள் இல்லாத சூழலை ஏற்படுத்துவது ஒரு விசயம். பிரச்சினைகள் இருந்தாலும் அதில் இருந்து எப்படி தற்காத்து கொள்வது? ஒரு விசயத்தில் பிரச்சினை இருக்கிறதா இல்லையா? பிரச்சினை இருந்தால் அதனை எப்படி கையாள்வது என்பது குறித்து பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கும் அறிவுத்த வேண்டும்.

இந்த பாலியல் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஒரு மனநல வாழ்வியல் ஆலோசகராக நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் இந்த பாதிப்பால் அவர்கள் சுருண்டு போய்விடக் கூடாது. இது அவங்களுக்கு ஒரு பெரிய விபத்தாக இருக்கிறது. சாதாரணமாக ஒரு விபத்தை கண்ணால் பார்த்தால் கூட அது மனதுக்குள் ஒரு அதிர்ச்சியை துயரத்தை ஏற்படுத்தும்.

ஆனால் அவர்களே விபத்தில் சிக்கி இருக்கும் போது எப்படி இருக்கும்? அதுவும் தன் மீது அன்பு காட்டிய நபரே இப்படி நடந்து கொண்டதால் கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பார்கள். பெரிய பாரமாக தான் இருக்கும். இந்த சம்பவம் அவர்கள் மனதில் சித்திரமாக பதிந்திருக்கும். இது பின்னாட்களில் வேறு எது நடந்தாலும் பதட்டத்தை ஏற்படுத்தும். எனவே அதில் இருந்து மீட்டெடுக்க அவர்களுக்கு தகுந்த மனநல சிகிச்சையும் மனநல திட பயிற்சியும் அளிக்க வேண்டும்.

பிரபல பாலிவுட் இயக்குநரும், நடிகருமான அனுராக் காஷ்யப், இயக்குநர் ரஞ்சித்தை நேரில் சந்தித்து பேசியது பாலிவுட்டில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழில் மூன்றாவது படத்திலேயே ரஜினியை இயக்கும் வாய்ப்பை பெற்றவர் என்ற பெருமைக்குரியவர் இயக்குநர் ரஞ்சித். கபாலி பட வெற்றியால் மீண்டும் ரஞ்சித்திற்கே படம் இயக்கும் வாய்ப்பை ரஜினி தந்தார். முன்னணி இயக்குநர்களில் ஒருவரானார் ரஞ்சித். விரைவில் பாலிவுட்டிலும் அறிமுகமாக இருக்கிறார் அவர். இந்நிலையில், பாலிவுட் திரைப்பட உலகின் மிக முக்கிய மான இயக்குநர்களில் ஒருவரும், நடிகருமான அனுராக் காஷ்யப், ரஞ்சித்தை நேரில் சந்தித்து பேசியுள்ளார். சமீபத்தில் 'காலா', 'பரியேறும் பெருமாள்' படங்களை பார்த்த தாக்கத்தினால் ரஞ்சித்தை அவர் மும்பையில் சந்தித்தார்.

இரஞ்சித்துக்கு விருந்தளித்த அனுராக், ரஜினி நடிப்பில் வெளியான 'காலா' திரைப்படம் குறித்து சிலாகித்து பேசியிருக்கிறார். அந்த படத்தின் அரசியல், தொழிற்நுட்ப நேர்த்தி ஆகியவை குறித்தும் விரிவாக பேசியிருக்கிறார். மேலும் பா.இரஞ்சித் தயாரிப்பில், மாரி செல்வராஜ் இயக்கத்தில் உருவான பரியேறும் பெருமாள் படம் குறித்தும் அவர் பாராட்டியிருக்கிறார்.

மேலும், 'இந்திய சமூகத்தில் சாதிய ஏற்றத்தாழ்வு, வர்க்கம் , பெண்ணடிமைத்தனம் குறித்து கலைஞர்களுக்கு சரியான புரிதல் வேண்டும். கலைஞர்கள் அதை கவனத்தில் கொள்ளவேண்டும். நாம் செய்யவேண்டிய பணிகள் நிறைய இருக்கிறது. இந்திய அளவில் தலித் அரசியலை வெளிப்படையாகவும், நேர்மையாகவும் துணிச்சலாக பேசக்கூடிய படைப்பாளியான உங்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன்' என்றும் இந்த சந்திப்பின் போது, தனது விருப்பத்தினை ரஞ்சித்திடம் தெரிவித்திருக்கிறார் அனுராக் காஷ்யப்.

இந்த சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்த இயக்குநர் பா.இரஞ்சித், 'உண்மையிலேயே அவரை சந்தித்தது மகிழ்ச்சியாக இருக்கிறது. 'காலா', 'பரியேறும் பெருமாள்' குறித்து அவர் பேசியது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. கூடிய விரைவில் சேர்ந்து பணியாற்றுவோம் என்றும் கூறியிருக்கிறா' என்று உற்சாகமாக கூறினார்.

தனக்கு மனரீதியான பிரச்சினை இருப்பதாக நடிகர் விஜய் ஆண்டனி தெரிவித்துள்ளார். ஆண்ட்ரு லூயிஸ் இயக்கத்தில் அர்ஜுன், விஜய் ஆண்டனி, அஷிமா, நாசர் உள்ளிட்டோர் நடித்துள்ள படம் கொலைகாரன். க்ரைம் திரில்லர் படமான இதன் டிரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் அர்ஜுன், விஜய் ஆண்டனி, இயக்குனர் சசி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் பேசிய நடிகர் விஜய் ஆண்டனி, தனக்கு சைகாலஜிக்கல் பிரச்சினை இருப்பதாகக் கூறினார்.

என்னுடைய நண்பர் ஆண்ட்ருவுடன் வேலை பார்த்தது சந்தோஷமான விஷயம். எதுக்குமே சமரசம் செய்துகொள்ளாத இயக்குனர் அவர். படத்தை சொன்ன தேதியில், சொன்ன பட்ஜெட்டில் முடித்துவிட்டார். அவர் மென்மேலும் உயர வேண்டும் என்பது தான் எனது விருப்பம்.

இந்த படத்தில் இசை பெரிதாக பேசப்படும். அந்த அளவுக்கு சிறப்பான பின்னணி இசையை அமைத்திருக்கிறார் சைமன் கே கிங். ஒளிப்பதிவாளர் முகேஷ் உள்பட எல்லோருமே சிறப்பான பங்களிப்பை தந்திருக்கிறார்கள்.

எனக்கு ஒரு சைகாலஜிக்கல் பிரச்சினை இருக்கு. நான் நடிக்கும் போது எதிரில் இருப்பவர் நன்றாக நடித்தால் எனக்கு நடிக்க வராது. அவரை நான் ரசிக்க ஆரம்பித்துவிடுவேன். நான் நல்ல ரசிகனாக இருப்பது தான் சினிமாவில் எனது வெற்றிக்கு காரணம் என நான் நினைக்கிறேன்.

இளையராஜா இசையை ரசித்து தான் நான் இசையமைப்பாளர் ஆனேன். அதுபோல் தான் நல்ல நடிகர்களை பார்த்து, ரசித்து, இப்போது நடிகராகிவிட்டேன். ஆனால் நன்றாக நடிக்கிறேனா என எனக்கு தெரியவில்லை.

இந்த படத்தில் அர்ஜுன் நடிப்பை பார்த்து ரசித்தேன். சர்வதேச தரத்திலான நடிப்பை அவர் தந்திருக்கிறார். அவரை பார்த்து நடிக்க கற்றுக்கொண்டேனா என்பது தெரியவில்லை. ஆனால் அவரது நடிப்பை பார்த்து வியந்தேன். அர்ஜுன் வந்த பிறகு தான் இந்த படம் பெரிய படமாக மாறியது இவ்வாறு அவர் கூறினார்.



ரஷ்மிகான

அழவைத்த இய

ரஷ்மிகா மந்தனாவை இயக்குநர் அ
பவம் நடந்துள்ளது. விஜய் தேவரகொ
கோவிந்தம் படம் மூலம் டோலிவுட்டில்
ரஷ்மிகா மந்தனா. மீண்டும் விஜய் தே
டன் சேர்ந்து காம்ரேட் என்ற தெலுங்கு
முடித்துள்ளார். தெலுங்கு திரையுலகில்
வளர்ந்து வருகிறார். அவர் அண்மையில்
யில் சுவாரஸ்யமான விஷயம் ஒன்றை தெ

நான் கீத கோவிந்தம் படத்தில் நட
நாள் ஷூட்டிங்கிற்கு கொஞ்சம் தாமதம
செட்டிற்கு சென்றால் யாருமே என்னுட
எனக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. ஏ
லேட்டாக வந்தோம். ஏன் யாருமே பேச
கிறார்கள் என்று எனக்கு ஒன்றுமே புரிய
ரஷ்மிகா. செட்டில் இருந்தவர்கள் யாரு
அப்செட் ஆகி நான் அழத் துவங்கிவி
பார்த்த இயக்குநர் பரசுராம் என்னிடம்
யாகவே உங்களின் சோக உணர்வுகளை
நினைத்து இப்படி ஒரு கேம் ஆடினோ
ரஷ்மிகா தெரிவித்தார்.

பாக்யராஜ் கண்ணன் இயக்கத்தில்
வரும் கார்த்தி 19 படத்தின் ஹீரோயின் ர
தான். இது தான் அவர் நடிக்கும் முதல்
பது குறிப்பிடத்தக்கது.

இயக்குனர் பாலாவிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய நந்தன் சுப்பராயன் இயக்கும் படம் மயூரன். இதுபற்றி அவர் கூறும்போது, ஒரு சில மாணவர் விடுதியில் சட்டவிரோத மாக கடத்தல், போதை பொருள் நடமாட்டம். கொலை, தற்கொலை போன்ற சம்பவங்கள் நடக்கிறது. மயூரன் என்றால் விரைந்து காக்க வருபவன் என்று பொருள். என்னுடன் படித்த சக மாணவர்கள் இன்றைக்கு வெவ்வேறு பணிகளில் உள்ளனர். அவர்கள் இணைந்து இப்படத்தை தயாரிக்கின்றனர்.

கைலாஷ், பாலாஜி ராதாகிருஷ்ணன், ரமேஷ்குமார், அமுதவாணன், அஸ்மிதா, வேல ராமமூர்த்தி, முத்துக்குமரன் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். வில்லனாக நடிக்க வட நாட்டு வாலிபர் தேவைப்பட்டதால் ஆடிஷன் வைத்தோம். ஜார்க்கண்ட் வாலிபர் பங்கேற்று போதை மருந்து பயன்படுத்துபவர்போல் நடித்தார். அதே பாத்திரத்தை அவருக்கு வழங்கிவிட்டோம். பரமேஷ்வர் ஒளிப்பதிவு. ஜுபின், ஜெரார்ட் இசை. சிதம்பரம், புதுச்சேரி, கேஜிஎஃப், சென்னையில் ஷூட்டிங் நடந்துள்ளது என்றார்.

திரு

மணம் செய்துகொண்டால் சினிமா மார்க்கெட் விழுந்து விடும் என்ற சென்டிமென்ட் பல காலமாகவே நடிகைகள் மத்தியில் நிலவுகிறது. அதற்கு பயந்து இன்றைக்கும் சில நடிகைகள் 30 வயதை கடந்தும் காதலர்களை காக்க வைத்துவிட்டு நடிப்பில் கவனம் செலுத்தி வருகின்றனர். அவர்களில் வித்தியாசமானவர் சமந்தா. முன்னணி நடிகையாக இருக்கும்போதே நாக சைதன்யாவை காதலித்து மணந்துகொண்டார். திருமணத்துக்கு முன்பிருந்ததைவிட இப்போதுதான் நிறைய படங்களில் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார் சமந்தா. அதுவும் கவர்ச்சி காட்சிகளுக்கும், இரட்டை அர்த்த வசனங்களுக்கும் மறுப்பு சொல்லாமல் நடிக்கிறார்.

கடந்த ஆண்டில் சமந்தா நடிகையர் திலகம் மற்றும் ரங்கஸ்தலம் (தெலுங்கு) படங்களில் நடித்திருந்தார். இந்த இரண்டு படங்களுமே தற்போது நேஷனல் அவார்டு போட்டியில் பங்கேற்கிறது. இரண்டு படங்களில் எந்த படத்துக்கு அவார்டு கிடைக்குமென்று சமந்தாவிடம் கேட்டால், 'ரெண்டு படமுமே சிறந்த படங்கள்தான் எந்த படத்துக்கு அவார்டு கெடச்சாலும் சந்தோஷம்தான். ஏன்?, ஒண்ணில்ல ரெண்டு படத்துக்கும் நேஷனல் அவார்டு கெடச்சா ரொம்ப ரொம்ப சந்தோஷம்'ன்னு பேராசையை வெளியிட்டார்.

சமந்தாவின் பேராசை

அட
துண

பொலி

வுட் உள்ளிட்ட
பல்வேறு மொழி
களிலிருந்து நடிகர்,
நடிகைகள் கோலிவுட்
நடிக்கின்றனர். பலருக்கு
தமிழ் தெரியாது. வசனங்
களை ஆங்கிலத்தில் எழுதி
வைத்து மனப்பாடம் செய்து
பேசுகின்றனர்.

ஆனால் சொந்த மொழி
ஒரு நடிகருக்கு தெரியவில்
என்று புகார் கூறியிருக்கிறார்
நடிகை. சத்யராஜ் நடித்த ஒரு
இரவில் படத்தில் விபசார பெ
ணாக நடித்தவர் அனுமோல். இ
மலையாளத்தில் ரஞ்சித் இயக்கி
ஞான் படத்தில் துல்கர் சல்மானுட
நடித்தார். படப்பிடிப்பின்போது துல்க
தனது வசனங்களை ஆங்கிலத்தில் எழுதி
வைத்து பிறகு பேசி நடித்தார். அவர் இப்ப
செய்ததற்கு காரணம் துல்கருக்கு மலையாளம்
தெரியாதாம். இந்த ரகசியத்தை சமீபத்தில் போட்டு
உடைத்தார் அனுமோல். மம்மூட்டியின் மகனான துல்க
ருக்கே மலையாளம் தெரியாது என்று அனுமோல்
கூறுவது வேடிக்கையாக இருப்பதாக ரசிகர்கள்
கிண்டல் செய்திருக்கின்றனர்.

வை

க்குநர்

அழ வைத்த சம்
ண்டாவின் கீத
பிரபலமானவர்
வரகொண்டாவு
படத்தில் நடித்து
அசுர வேகத்தில்
அளித்த பேட்டி
தரிவித்தார்.
டித்தபோது ஒரு
ாக சென்றேன்.
ன் பேசவில்லை.
ஒரு நாள் தானே
மாட்டேன் என்
வில்லை என்றார்
தும் பேசாததால்
ட்டேன். இதை
வந்து, இயற்கை
ா படம் பிடிக்க
ம் என்றார் என

கார்த்தி நடித்து
ஷ்மிகா மந்தனா
தமிழ் படம் என்

தொல்லை தாங்க முடியவில்லை

உன்னைப்போல் ஒருவன், வெடி, பயணம், 6, என் வழி தனி வழி போன்ற பல தமிழ் மற்றும் தெலுங்கு படங்களில் நடித்திருக்கும் பூனம் கவுர், ஒன்றிரண்டு ஹீரோக்கள் பற்றி விமர்சனம் செய்தார். அந்த ஹீரோக்களின் ரசிகர்கள் பூனமை கடுமையாக தாக்கி பதிலடி தருகின்றனர். பூனமை விமர்சித்து யூடியூபிலும், சமூக வலைதளங்களிலும் சர்ச்சை கருத்துக்கள் பகிரப்படுவதால் நொந்து போன நடிகை, சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்திருக்கிறார். அதில் யூ டியூபிலும், நெட்டிலும் என்னைப்பற்றி அவதூறு பரப்பி வருகின்றனர். இதனால் எனக்கு டென்ஷன் அதிகரித்திருக்கிறது. இந்த டார்ச்சரை என்னால் தாங்க முடியவில்லை. சம்பந்தப்பட்டவர்களை கண்டுபிடித்து தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என கூறி உள்ளார். பெண்கள இழிவா பேசறதால சம்பந்தப்பட்டவங்களுக்கு என்ன கெடக்கப் போவுதுன்னு எனக்கு தெரியல. குறிப்பா என்னய, என்னோட தனிப்பட்ட வாழ்க்கய குறி வச்சி தாக்கறாங்க. சில பேர் மேல எனக்கு சந்தேகம் இருக்கு அவங்க மேல கடுமையா ஆக்ஷன் எடுக்கணும்னு தெரிவித்திருக்கிறார் பூனம்.

வாய்ப்பை மறுத்த நடிகை

பாகுபலி பட இயக்குனர் ராஜமவுலி இயக்கத்தில் நடிக்க முன்னணி ஹீரோக்கள், ஹீரோயின்கள் தயாராக இருக்கும் நிலையில் அவர் படத்தில் நடிக்க மறுத்திருக்கிறார் இளம் நடிகை ஒருவர். ராஜமவுலி இயக்கும் 'ஆர்ஆர்ஆர்' புதுபடத்தில் ராம்சரண், ஜூனியர் என்டிஆர் நடிக்கின்றனர். இந்தி நடிகை அலியாபட் ஹீரோயினாக நடிக்கிறார். மற்றொரு ஹீரோயினாக பிரிட்டிஷ் நடிகை டெய்ஸி எட்கர் ஜோன்ஸ் ஒப்பந்தம் ஆனார். இந்நிலையில் ராம் சரணுக்கு அடிபட்டதால் படப்பிடிப்பு தள்ளிப்போனது. இதனால் படத்திலிருந்து விலகினார் டெய்ஸி. அவருக்கு பதிலாக யாரை நடிக்க வைப்பது என்று பேச்சு வந்த போது எமி ஜாக்ஸன் பெயர் பரிசீலிக்கப்பட்டது. தற்போது அவர் கர்ப்பமாக இருப்பதால் அந்த வாய்ப்பு கை நழுவியது. அடுத்து ஷ்ரத்தாகபூரை பட தரப்பு அணுகியது. இவர் ஏற்கனவே பிரபாஸ் ஜோடியாக சாஹோ படத்தில் நடிக்கிறார்.

ராஜமவுலி படம் என்பதால் ஷ்ரத்தாவால் பட வாய்ப்பை உடனே மறுக்க முடியவில்லை. ஏற்கனவே நிறைய படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டிருப்பதால் கால்ஷீட் தேதியை அட்ஜெஸ்ட் செய்து ராஜமவுலி படத்தில் நடிக்க முயன்றார். அது முடியாததால் ராஜமவுலி படத்துக்கு நோ சொல்லிவிட்டார். எனவே டெய்ஸியின் வாய்ப்பு மீண்டும் வெளிநாட்டு நடிகைக்கு போகுமா? அல்லது நம்மூர் நடிகைக்கு கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இயக்குனர் விஜய் இயக்கத்தில் பிரபுதேவா, தமன்னா நடிப்பில் உருவான 'தேவி 2' திரைப்படத்தின் படப்பிடிப்பு மற்றும் தொழில்நுட்ப பணிகள் முடிவடைந்த நிலையில் இந்த படத்தின் ரிலீஸ் தேதி விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் இந்த படத்தை பார்த்த சென்சார் அதிகாரிகள் படத்திற்கு 'யூ' சான்றிதழ் அளித்துள்ளனர். திகில் பேய்ப்படம் என்பதால் குழந்தைகள் அதிகளவில் விரும்பி பார்க்கும் நிலையில் இந்த படம் யூ சான்றிதழ் பெற்றிருப்பது படக்குழுவினர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியாக உள்ளது.

பிரபுதேவா, தமன்னா, நந்திதா, கோவை சரளா, குருசோமசுந்தரம், நாசர், சதீஷ், யோகிபாபு, ஆர்ஜே பாலாஜி உள்பட பலர் நடித்துள்ள இந்த படத்திற்கு சாம் சிஎஸ் இசை யமைத்துள்ளார். அயங்கா போஸ் ஒளிப்பதிவில், அந்தோணி படத்தொகுப்பில் உருவாகியுள்ள இந்த படத்தை தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி என மூன்று மொழிகளில் தயாராகியுள்ளது.

ா ஷர்மாவின் னிச்சல் முடிவு

இயக்குநர் ஷக்தி சிதம்பரம் இயக்கத்தில் பிரபுதேவா, பிரபு, ஷர்மா ஆகியோரது நடிப்பில் வெளியான படம் சார்லின் சாப்ளின் 2. இந்தப்படத்தில் ஷர்மா ஒரு சிறிய கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்களின் கவனம் பெற்றார்.

தற்போது ஷர்மா திருநங்கை வேடத்தில் நடிக்க உள்ளதாகவும், இதில் ஆணாக இருந்து பெண்ணாக மாறும் கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகிறது.

அதாவது இந்தப்படத்தில் திருமணம் செய்த பின்னர் ஹீரோவிற்கு, இவர் ஆணாக இருந்து பெண்ணாக மாறியவர் என்ற உண்மை தெரிந்தபின் என்ன நடக்கும் என்பது தான் படத்தின் கதை என்றும் இப்படத்தை பற்றிய செய்திகள் வெளியாகிறது.

தமிழ் சினிமா சமீப காலமாக பல சோதனைகளை சந்தித்து வருகின்றது. இதில் குறிப்பாக கதை திருட்டு போன்ற விஷயங்கள் பெரிய நடிகர்கள் படங்களிலேயே நடக்கின்றது.

அதிலும் தொடர்ந்து விஜய் படங்களில் இது நடந்து வருவது மிகவும் வருத்தம் தான், இந்நிலையில் தளபதி-63 கதை என்னுடையது என உதவி இயக்குனர் செல்வா கூறியது அனைவரும் அறிந்ததே.

அவர் சமீபத்தில் இதுக்குறித்து பேசுகையில் நான் அஜித், விஜய் என்றெல்லாம் பிரித்து பேசவில்லை.

ஆனால், அஜித் சார் பில்லா என்ற படத்தை எடுத்தார், அவர் நினைத்திருந்தால், ரைட்ஸ் வாங்காமல், அப்படியே எடுத்துவிட்டு, வேறு ஒரு டைட்டிலில் ரிலிஸ் செய்யலாம்.

அந்த நேர்மை ஏன் இவர்களிடம் இல்லை, கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் என்று அனைத்திலும் உங்கள் பெயர் வரவேண்டும் என்று நினைக்கிறீர்கள் என்று கடுமையாக பேசியுள்ளார்.

காதோடு... காதாக...

நடிகையின் காதல் ஊரறிந்த விசயம் தான். ஆனால் அவர்கள் எப்போது திருமணம் செய்து கொள்வார்கள் என்பது தான் ரசிகர்கள் முன்வைக்கும் கேள்வி. ஊர் ஊராக இருவரும் சுற்றி வருவதும், ஒன்றாக எடுத்துக் கொண்ட புகைப்படங்களை சமூகவலைதளத்தில் வெளியிடுவதும் என காதலில் இருவரும் பிசியாக இருக்கிறார்கள். ஏறக்குறைய இருவருமே நேரடியாக தங்களது காதலை ஒப்புக் கொண்டும் விட்டனர். நடிகை சினிமாவில் தனது இலக்கை அடைந்த பிறகே திருமணம் எனத் தெளிவாகச் சொல்லி விட்டதாகத் தெரிகிறது. காதலரும் இதற்கு ஓகே சொல்லி விட்டார். அதனால் ஒரே நேரத்தில் பல படங்களில் நடிகை தீவிரமாக நடித்து வருகிறார். இந்நிலையில், சமீபத்தில் இருவரது குடும்ப உறுப்பினர்களும் நேரில் சந்தித்துக் கொண்டனர். இது தொடர்பான புகைப்படங்களும் இணையத்தில் உலா வந்தன. இதனால் விரைவில் திருமண தேதி அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தற்போது வெளிவந்துள்ள தகவல்படி, மகனின் திருமணத்திற்கு மாமியார் அவசரப்படுத்துகிறாராம். ஆனால் நடிகை அதற்கு சம்மதிக்கவில்லையாம். இதனால் காதலர்கள் மத்தியில் மனக்கசப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. காதலர் நடிகையை சமாதானம் செய்யப் போகிறாரா இல்லை தாயை சமாதானம் செய்யப் போகிறாரா என்பது தெரியவில்லை. இவரையே திருமணம் செய்து கொண்டு செட்டில் ஆக வேண்டும் என்பது தான் நடிகையின் ரசிகர்கள் விரும்புவது. ஒருவேளை காதலரின் தாய் இறங்கி வர மறுத்தால், காதலருக்காக தனது லட்சியத்தை நடிகை விட்டுக்கொடுப்பாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

★★★★★

இளம் நடிகை ஒருவரை பார்த்தால் நடிகர்களின் மனைவிமார்கள் ஒதுங்கிப் போகிறார்களாம். பாலிவுட்டில் இளம் நடிகை ஒருவருக்கும், திருமணமான சீனியர் ஹீரோவுக்கும் இடையே தொடர்பு என்று பேசப்படுகிறது. யார் விஷயத்திலும் தலையிடாத அந்த ஹீரோ நடிகையின் விஷயத்தில் அதிக அக்கறை காட்டுவதால் தான் இந்த பேச்சு கிளம்பியது. இந்த கள்ளத்தொடர்பு பேச்சால் நடிகருக்கும், அவரின் மனைவிக்கும் இடையே அடிக்கடி சண்டை ஏற்படுவதாக கூறப்படுகிறது. அதே நடிகையின் பெயர் திருமணமான இளம் நடிகர் ஒருவருடனும் அடிபட்டது. இருவரும் ஜோடியாக ஹோட்டலில் இருந்து வெளியே வர அந்த செய்தி தீயாக பரவியது. அந்த நடிகரோ பதறிப் போய், அய்யய்யோ எங்களுக்கு இடையே எதுவும் இல்லை. சும்மா நட்பு ரீதியில் சந்தித்தேன். பொண்டாட்டி ஊரில் இல்லாததால் அழைத்து வரவில்லை. இல்லை என்றால் அவருடன் தான் வந்து நடிகையை பார்த்திருப்பேன் என்றார். இளம் நடிகர் விஷயம் அடங்கிவிட்டது என்றாலும் சீனியர் நடிகர் விவகாரம் இன்னும் அடங்கவில்லை. நடிகையும் எவ்வளவோ விளக்கம் கொடுத்தும் அதை நம்ப யாரும் தயாராக இல்லை. இதையடுத்து அவர் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ளுங்கள், எனக்கென்ன வந்தது என்று நடந்து கொள்கிறார். நடிகை தன்னை பற்றி விளக்கம் அளித்து விளக்கம் அளித்து டயர்டாகிவிட்டார். அவர் பேச்சை யாரும் நம்புவதாக இல்லை. இந்நிலையில் பிற நடிகர்களின் மனைவிமார்கள் நடிகையை பார்த்தால் ஒதுங்கிச் செல்கிறார்களாம். அவ வரா, புருஷனை மறைத்து வை என்று சொல்லி கிண்டல் செய்கிறார்களாம்.

★★★★★

நடிகர் ஒருவர் தனக்கு ஜோடியாக சர்ச்சை நடிகையை நடிக்க வைக்க வேண்டும் என்று அடம் பிடிக்கிறாராம். பணக்கார குடும்பத்தை சேர்ந்தவர் அந்த நடிகர். அவர் நடித்த படங்களில் ஒரு சில தான் நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. இந்நிலையில் நடிகர் சம்பள விஷயத்தில் கறாராக இருக்கிறாராம். கதை சொல்ல வரும் இயக்குநர்களிடம் இரண்டு விரலை காட்டி அதிர வைக்கிறாராம். சார், உங்களுக்கு அந்த அளவுக்கு மார்கெட் இல்லையே என்று எப்படி சொல்வேன் என இயக்குநர்கள் புலம்புகிறார்களாம். சம்பள விஷயத்தில் டார்ச்சர் செய்வதுடன் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. எனக்கு ஜோடியாக சர்ச்சையை நடிகையை ஒப்பந்தம் செய்யுங்கள் என்று தயாரிப்பாளர்கள், இயக்குநர்களிடம் கூறுகிறாராம். அந்தம்மா ரேஞ்சே வேறு, உங்களுக்கு எல்லாம் ஜோடியாக நடிக்க மாட்டாங்க என்று தயாரிப்பாளர்கள் சிலர் வெளிப்படையாகவே சொல்லிவிட்டார்களாம். அதெல்லாம் நடிப்பார், போய் கேளுங்க என்று பாடாய் படுத்துகிறாராம். நடிகர் செய்யும் டார்ச்சர் பற்றி தான் தயாரிப்பாளர்கள் புலம்புகிறார்கள்.

★★★★★

இளம் நடிகை ஒருவரை பார்த்து இயக்குநர்கள் முகம் சுளிக்கிறார்கள். இளம் நடிகை ஒருவர் தனது பெயரை கெடுத்துக் கொள்வதில் அதிக ஆர்வமாக உள்ளார். அவரை தேடி பட வாய்ப்புகள் வந்து குவிந்தாலும் அதை ஏற்பது இல்லை. அதற்கு தனி விளக்கம் வைத்திருக்கிறார். இந்நிலையில் தன்னிடம் கதை சொல்ல வரும் இயக்குநர்களை அதிர்ச்சி அடைய வைக்கிறார் அம்மணி. கவர்ச்சி தூக்கலான காட்சிகள், இரட்டை அர்த்த வசனங்கள் உங்கள் படத்தில் இருக்குமா என்று எடுத்த எடுப்பில் கேட்கிறாராம் நடிகை.

அது போன்ற காட்சிகள் இல்லை என்று எந்த இயக்குநராவது கூறினால் அப்படி என்றால் நான் சொல்லும் கவர்ச்சி காட்சிகளை சேருங்க, இல்லை என்றால் நடையை கட்டுங்க என்கிறாராம். கவர்ச்சி, இரட்டை அர்த்த வசன காட்சிகளில் நடிக்க நடிகைகள் யோசிக்க இவரோ அதையே கேட்டு அடம்பிடிக்கிறாராம். இந்த பொண்ணு என்ன ஒரு மாதிரி இருக்கு என்று இயக்குநர்கள் நொந்து கொள்கிறார்களாம்.

செய்தி வாசிப்பாளராக மீடியா உலகில் நுழைந்த பிரியா பவானி சங்கர் சின்னத்திரையில் கல்யாணம் முதல் காதல் வரை என்ற தொடரில் நடித்து பிரபலமானார்.

அதனை தொடர்ந்து வெள்ளி திரையில் மேயாத மான் என்ற படத்தின் மூலம் அறிமுகமானார். பிறகு கடைக்குட்டி சிங்கம் படத்தில் நடித்துள்ளார். இவர் நடிப்பில் இரண்டு படங்கள் வெளியாகி இவருக்கென்று பெரிய ரசிகர்கள் கூட்டமே சேர்ந்துவிட்டது. சிங்கிள் கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களை தேர்வு செய்து நடித்துவரும் பிரியா பவானி ஷங்கர் சமீப நாட்களாக ட்ரான்ஸ் பிரண்ட் மேலாடை, அரை ட்ராயர் உள்ளிட்ட வரை அணிந்துகொண்டு போஸ் கொடுத்து அந்த புகைப்படங்கள் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு ரசிகர்களுக்கு ஷாக் கொடுத்து வருகிறார். அந்தவகையில் தற்போது மீண்டும், அரை குறை ஆடைகளை அணிந்துகொண்டு சுற்றி வருகிறார்.மேலும் அதனை புகைபடமெடுத்து தனது இன்ஸ்டாகிராமிலும் பதிவிட்டுள்ளார்.

ஆராரிராரோ...ராரோ..ராரோ.. ஆராரிராரோ..

தாயாகப்போகும் பெண்ணுக்கு சில அறிவுரைகள்!

கர்ப்பிணித் தாய்மார்கள் போஷாக்கான மிதமான உணவையே உட்கொள்ளவேண்டும். சராசரியாக இவர்களுக்கு 2500-லிருந்து 2800 கலோரி வரையுள்ள சக்தி உடைய உணவு தேவை. குண்டாக இருக்கும் கர்ப்பிணித் தாய்மார்க்குச் சிறிது குறைந்த அளவு சக்தி உடைய உணவு அளித்தால் போதுமானது. கர்ப்ப காலம் முழுவதிலும் உப்பைக் கட்டுப்படுத்துவது நல்லது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அதிக புரதம், காய்கறிகள், குறைந்த கொழுப்புள்ள கலப்பட உணவு உகந்தது. முடிந்தால் நாளொன்றுக்கு ஒரு லிட்டர் பாலினைக் கர்ப்பிணித் தாய்மார்கள் குடிப்பது நல்லது.

பச்சைக் காய்களிகள் கூடுதல் இரும்புச்சத்தினைக் கொடுக்கும். பழங்களையும், காய்கறிகளையும் இவர்கள் எடுத்துக்கொள்ள வலியுறுத்த வேண்டும். இறைச்சி, மீன், முட்டைகள், ரொட்டி, சாதம், தயிர் போன்றவை இவர்களுக்கு நல்லது.

கர்ப்ப காலத்தில் உணவினைக் கட்டுப்படுத்தினால் ஊட்டச்சத்துக் குறைவினை தாய்க்கும் சேய்க்கும் ஏற்படுத்திவிடும். அதன் விளைவாகக் கர்ப்ப பையிலேயே குழந்தை இறந்துவிடுதல், குறைப்பிரசவம் போன்றவையும், பிரசவத்தில் பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. கர்ப்ப காலத்தில் அதிகமாகச் சாப்பிடுவதையும் தவிர்க்கவேண்டும்.

கர்ப்ப காலத்தின் கடைசி வாரங்களில் மார்பகங்களைக் கவனித்தல் மிகவும் முக்கியமாகும். மார்பகங்கள் பெரிதாகும் இந்த காலகட்டத்தில் இறுக்கமான, தேவையற்ற அழுத்தத்தை அளிக்கும் துணிகளை அணிய கூடாது. மார்பகங்கள் பெரியதாகவும் கனமானதாகவும் இருந்தால், அதனைத் தாங்குமாறு சரியான உள்ளாடைகளை அணிந்து கொள்ள வேண்டும்.

கர்ப்பத்தின் கடைசி கட்டத்தில் காம்புகளை சோப்பு மற்றும் தண்ணீரினால் தினமும் கழுவி முன்னுக்கு இழுத்து விடவேண்டும். மலச்சிக்கலை கர்ப்பிணித் தாய்மார்கள் தவிர்த்தல் நல்லது. அதற்காக மலமிளக்கிகளை உபயோகிக்கக்கூடாது. நிறைய தண்ணீர் குடிப்பது, கீரைகளைச் சாப்பிடுவது, பழங்களைச் சாப்பிடுவது போன்றவற்றைச் செய்தாலேயே மலம் தினமும் முறையாக வந்துவிடும். அதோடு எளிமையான உடற்பயிற்சிகளும் செய்வது மலம் இயற்கையாக வெளிவர உதவும்.

கர்ப்ப காலத்தில் மன அமைதியுடன் இருத்தல் அவசியம். முடிந்த அளவுக்கு மன இறுக்கத்தைக் குறைத்து மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். அதற்கு மனதிற்கு இதமளிக்கும் புத்தகங்கள் படித்தல், தொலைக்காட்சி பார்த்தல், தியானம் செய்தல், கைவினைப் பொருட்களைச் செய்தல் போன்றவை உதவியாய் இருக்கும்.

களைப்பு ஏன் வருகிறது?

மனிதர்கள் ஏன் அடிக்கடி களைப்படைகிறார்கள் என்பதற்கு ஜேன் பிராடி என்ற மருத்துவ அறிஞர் ஒரு விளக்கம் அளித்துள்ளார். கடுமையான உழைப்பினால் கரியமில வாயு, லாக்டிக் அமிலம் போன்ற கழிவுப் பொருட்கள் அதிக அளவு ரத்தத்துடன் கலந்து ஒருவரை விரைவில் களைப்படையச் செய்கின்றன.

ஜலதோஷம், நீரிழிவு, புற்றுநோய் இவற்றின் அறிகுறி இருந்தாலும், அவை உடலை களைப்படையச் செய்துவிடும். உணர்ச்சி வசப்படுவதாலும், மனத்தளர்ச்சியினாலும் அதிகமான எதிர்பார்ப்புகளாலும் களைப்பு ஏற்படுவது உண்டு. அவசரமாக உண்பதாலோ, சரிவர உண்ணாமல் இருப்பதாலோ உடலில் சர்க்கரை சத்துக்குறைவு ஏற்பட்டு களைப்பு உண்டாகிறது. அதிகமான உடற் பயிற்சி, குறைந்த உறக்கம் போன்றவையும் களைப்பின் காரணங்களாகும்.

மிகச் சமீபத்தில் மற்றொரு ஆச்சரியமான கண்டுபிடிப்பும் வெளிவந்துள்ளது. குறைப்பிரசவத்தில் அதாவது ஏழு, எட்டு மாதங்களில் பிறந்தவர்கள் வெகு எளிதில் களைப்படைந்து விடுவார்களாம். இது குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்கும் மற்றும் பெரியவர்களுக்கும் கசப்பான சேதி. ஆனாலும் அதுதான் நிஜம். அடிக்கடி களைப்பு, தொண்டைக் கமறல், கண் எரிச்சல், உடலில் சோர்வு, லேசான நடுக்கம், தும்மல், மூக்கடைப்பு, மூக்கில் நீர் சொட்டுதல் போன்றவை நமக்கு ஏற்பட்டால் அது அழையா விருந்தாளியான ஜல தோஷத்தைக் குறிக்கிறது. ஜலதோஷத்தால் பாதித்த ஒருவருக்கு எளிதாக பிற பெரிய நோய்களும் தாக்கக்கூடும்.

ஆகவே, இந்த தொல்லை தரும் ஜல தோஷத்தை தடுப்பது எப்படி? இதற்கு மிகச் சரியான மருந்து ஒருவகை அமிலம் தான். இதன் பெயர் அஸ்கார்பிக் அமிலம் ஆகும். நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு இந்த அமிலம் 80 மில்லி கிராமும், தாய்மார்களுக்கு 100 மில்லி கிராமும் தேவைப்படுகிறது. இந்த அளவு குறைந்தால் நோய்கள் மிக எளிதில் தொற்றிக்கொள்ளும். களைப்பு ஏற்படும் போது எலுமிச்சம்பழத்தில் அதிகமாக காணப்படும் இந்த அமிலம் அந்தக் களைப்பை போக்குகிறது. இந்த அமிலத்துக்கு வேறு பெயரும் உண்டு. அதன் பெயர் விற்றமின் 'சி', இது குறைந்தாலும் களைப்பு ஏற்படும். குறிப்பாக கோடைகாலத்தில் மிக அதிக களைப்பு ஏற்படும்.

கோடையிலிருந்து தப்பிப்பது எப்படி?

ஆண்டுக்கு ஆண்டு கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துக்கொண்டே செல்கிறதே தவிர குறைந்தபாடில்லை. இயற்கையை வெல்ல எவராலும் முடியாது. எனவே அதனோடு இசைந்து வாழ கற்றுக்கொள்வது சாலச்சிறந்தது. கொடூரமாக கொளுத்தும் வெயில் காரணமாக வெயிலுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் சிலர் சுருண்டு விழுந்து மரணம் அடைகிறார்கள்.

வெயில் கொடுமையால் பகல் வேளைகளில் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாத அளவிற்கு வெயிலும் வீட்டிற்குள் இருக்கவே முடியாத அளவிற்கு புழுக்கம் மக்களை வாட்டுகிறது. குழந்தைகள், முதியவர்கள் என பாகுபாடு இன்றி அனைவரும் வெயிலால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். நகர்ப்புற பகுதிகளில் வெயில் மண்டைய பிளக்கிறதே என நினைத்தால், கிராமப்புறங்களில் அதை விட மோசம். பெரும்பாலானோர் கோடை வெயிலுக்கு பயந்து கொண்டு உச்சி நேரங்களில் வெளியில் வருவதே இல்லை.

நமது உடலின் தட்பவெப்பநிலை சீராக இல்லாமல், திடீர் என மாறிக் கொண்டே இருப்பது, உடலை வெகுவாக பாதிக்க செய்கிறது. வெயிலின் கொடுமையினால் நம் உடல் மட்டுமல்ல... நமது தலைமுடி, கண்கள், சருமம் என அனைத்தையும் உஷ்ணம் ஒரு கை பார்த்துவிட்டுத்தான் செல்லும்.

அதிக நேரம் வெயிலில் அலைந்து விட்டு குளிர்சாதன அறைக்குள் சென்றால் மோசமான பின்விளைவுகளை உண்டாக்கும். வெயிலின்போது தேவைக்கு அதிகமாக காபி, டீ, உடலுக்கு வேண்டாத குளிர்பானங்கள் போன்றவை மென்மேலும் தாகத்தை தூண்டும். உணவுப் பழக்கங்களும் வெயில் காலத்தில் கவனிக்க வேண்டியது. அதிக காரமான உணவுகள், சூடான உணவுகள், எண்ணெய் பலகாரங்கள் போன்றவற்றை பெரும்பாலும் தவிர்க்கவும். வெயில் நேரங்களில் இது போன்ற உணவுகள் அஜீரணம் உள்ளிட்ட வயிற்றுக்கோளாறுகளை ஏற்படுத்தும்.

எனவே இயற்கையான பானங்களை அதிகம் பருக வேண்டும். பழச்சாறுகள், இளநீர், கூழ், மோர் போன்றவை அதிகம் குடிக்கலாம். வெள்ளரி, தர்ப்பூசணி சூப், தக்காளி சூப் வகைகளை சாப்பிடலாம். திராட்சை, சாத்துக்குடி ஆரஞ்சு, எலுமிச்சை,மாதுளை, முலாம் பழம், ஆப்பிள் போன்றவற்றின் பழச்சாறுகளையும் பருகலாம். நுங்கு, கொய்யா போன்றவையும் உடல் வெப்பத்தைத் தணிக்க உதவும்.

வெயிலில் வெளியே செல்வதாக இருந்தாலும் சரி, வெளியே சென்று வந்தாலும் சரி ஒரு முறை குளியலை போட வேண்டும். குறைந்தபட்சம் நாள் ஒன்றுக்கு 2 முறை குளிக்கலாம். இரவு உறங்கும் முன் குளித்துவிட்டு உறங்கினால் உடல் குளிர்ச்சி அடையும். வெயில் நேரத்தில் வீட்டிலிருந்து வெளியே செல்லும் போது குடை எடுத்துச்செல்லலாம். அல்லது தலைக்கு தொப்பி அணிந்துகொள்ளலாம். கண்களுக்கு கூலிங் கிளாஸ் அணிந்துகொள்ளலாம். பெரும்பாலும் வெயில் நேரங்களில் வெளியில் செல்வதையே தவிர்க்கலாம்.

உடல் அதிகமான உஷ்ணத்தை பெறும் நேரத்தில், நன்றாக தண்ணீர் அருந்த வேண்டும். அதனால் வெளியேறும் வியர்வை உள்ளே செல்லும் தண்ணீர் என இணைந்து, நமது உடலின் உஷ்ண நிலையை சீராக வைத்துக்கொள்ள மிகவும் உதவுகிறது. அந்த வகையில் வெயிலுக்கு உகந்த உடைகள் என்றால் அது பருத்தி உடைகள்தான். பொதுவாக கருப்பு ஆடைகள் வெயிலை உள் இழுக்கும் என்பது அனைவரும் அறிந்த அறிவியல். எனவே ஆடைகளையும் இந்த காலகட்டத்தில் நாம் தேர்ந்தெடுத்து அணியலாம்.

இரவில் வெந்நீர் குடிப்பது நல்லதா?

காலை நேரத்தில் வெந்நீர் குடிப்பது உடலுக்கு மிகவும் நல்லது என்று ஆரோக்கியம் குறித்து வல்லுநர்கள் கூறுவதை நாம் அறிவோம். நம்மில் பலரும் இதனை பின்பற்றிக் கொண்டு இருப்பார்கள். வெந்நீர் உடலுக்கும் உடல் உறுப்புகளுக்கும் அதிகபடியான நன்மைகளை செய்யக்கூடியது. ஆனால் இரவு நேரத்தில் வெந்நீர் குடித்தால் உடலுக்கு நல்லதா? என்ற கேள்வி பலருக்கும் இருக்கும்.

ஆம். உண்மையில் ஆரோக்கியத்திற்கும் நம் அழகிற்கும் இரவு நேரத்தில் வெந்நீர் குடிப்பது அவசியம். சிலர் தூங்கும் முன் தண்ணீர் குடித்தால், சிறுநீர் உபாதைகள் ஏற்பட்டு, தூக்கம் கெட்டுவிடும் என்றே தண்ணீர் குடிப்பதை தவிர்த்திடுவார்கள்.

குறிப்பிடத்தக்க விஷயம் என்ன வென்றால், இரவு படுக்கும் முன் வெந்நீர் குடித்தால் தூக்கம் சிறப்பாக இருக்கும். மேலும் வெந்நீர் அருந்துவதால் உண்டாகும் நன்மைகளை பார்ப்போம்.

உடலில் நீர் பற்றாக்குறை ஏற்படும் போது தான் மன அழுத்தம் மற்றும் உணர்வு நிலையில் ஏற்ற இறக்கம் போன்றவை உண்டாகும். மேலும் இதனால் தூக்கம் தடைப்படும்.

தினசரி இரவு நேரத்தில் தூங்க போகும் முன் வெந்நீர் குடித்துவிட்டு தூங்குவதால் உணர்ச்சி நிலை சீராக இருக்கும்.

வெந்நீர் அருந்துவதால், உடலின் உள்ளே வெப்பம் உற்பத்தியாகி, வியர்வையாக வெளியேறும். இதனால் உடலில் உள்ள நச்சுக்கள் வெளியாகி, இரத்த ஓட்டம் சீராக இருக்கும்.

நம் உடலுக்கு நீர் என்பது மிகவும் முக்கிய தேவையாக இருக்கிறது.

ஏனென்றால், வியர்வை, சிறுநீர் போன்றவற்றால் உடலில் நீர் இழப்பு ஏற்பட்டு கொண்டுதான் இருக்கிறது. இதனை சமன் செய்ய தொடர்ச்சியாக நீர் அருந்துவது கட்டாயம்.

இரவு நேரத்தில் வெந்நீர் குடித்து விட்டு படுப்பதால் உடலில் நீர் தேவை பூர்த்தியாகிறது.

சாப்பிட்டு முடித்தபின் வெந்நீர் அருந்துவதால் செரிமானம் எளிதாக இருக்கும். கடினமான உணவுகள் கூட எளிதில் ஜீரணமாக்க கூடிய திறன் வெந்நீருக்கு உண்டு.

இரவு நேரத்தில் செரிமானம் என்பது சற்றே தாமதமாக இருக்கும். வெந்நீர் குடுப்பதால் அந்த பிரச்சனை இருக்காது.

வெந்நீர் அருந்துவதால் உணவுகள் எளிதில் ஜீரணமாகிறது. உணவு எளிதில் உடைத்து சத்துக்கள் உடலுக்கு கிடைக்க செய்கிறது. இதனால் உடல் எடையும் குறைகிறது. காலையும் இரவும் வெந்நீர் குடிப்பது மிகவும் நல்லது. ஆரோக்கியமாக வாழ இதனை பின்பற்றுவோம்.

நோய்களைக் குணப்படுத்தும் பொன்னாங்கண்ணி

கீரையைப் போன்ற உணவு வேறு எதுவும் இல்லை, கீரையைப் போல் நோய் தீர்க்கும் வைத்தியனும் இல்லை என்றார்கள் சித்தர்கள். அதற்கு ஏற்ப பல உன்னதமான கீரை வகைகள் நம் மண்ணில் விளைகின்றன. அதில் பொன்னாங்கண்ணி கீரை மகத்துவம் நிறைந்தது. இந்த கீரை

மேனிக்கு பொன் போன்ற மினுமினுப்பையும் அழகையும் தரக்கூடியது. அதனால் தான் அதை பொன்னாங்கண்ணி என்று கூறினார்கள்.

பொன்+ஆம்+ காண்+ நீ = பொன்னாங் கண்ணி.

பொன்னாங்கண்ணியில் சீமை பொன்னாங்கண்ணி, நாட்டுப் பொன்னாங்கண்ணி என்று இருவகைகள் உள்ளன.

இதில் சீமை பொன்னாங்கண்ணி அழகுக்காக வளர்க்கப்படுகிறது. இதில் மருத்துவக்குணம் குறைவு. பச்சையாக கிடைக்கும் நாட்டுப் பொன்னாங்கண்ணியில் தான் பலவித சத்துகள் நிறைந்துள்ளன.

பொன்னாங்கண்ணி கீரையில் இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ், புரதம், வைட்டமின்கள் ஏ,பி,சி போன்ற சத்துக்கள் உள்ளன.

மருத்துவப் பயன்கள்:

கீரைகளின் ராஜா என்று அழைக்கப்படும் பொன்னாங்கண்ணிக் கீரை பலவித நோய்களை குணப்படுத்த உதவும் அற்புத உணவாகவும் மூலிகையாகவும் திகழ்கிறது.

பொன்னாங்கண்ணிக் கீரையை பச்சையாகவோ அல்லது சமையல் செய்தோ தொடர்ந்து 27 நாட்கள் சாப்பிட்டு வந்தால் பகலில் கூட நட்சத்திரங்களைப் பார்க்கலாம் என்பார்கள். அந்த அளவுக்கு கண் ணொளிக் கொடுக்கும் சத்துக்கள் அதில் உள்ளன. இதை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் கண்ணாடி அணிய வேண்டிய தேவையே இருக்காது.

பொன்னாங்கண்ணிக் கீரையைத் தைலமாகத் தயாரித்தும் பயன்படுத்தலாம். அதாவது கீரையின் சாறுஎடுத்து அதனுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து காய்ச்ச வேண்டும். மெழுகுப் பதம் வரை கொதிக்க வைத்து வடிகட்ட வேண்டும்.

அந்த தைலத்தை தலையில் தேய்த்து குளித்து வந்தால் கண் புகைச்சல், உடல் சூடு ஆகிய பிரச்சினைகள் சரியாகும். புத்துணர்வும் கிடைக்கும். கண் பார்வையும் தெளிவாகும்.

உணவே மருந்து மருந்தே உணவு என்ற பழமொழி முழுக்க முழுக்க கீரைகளுக்குப் பொருந்தும். கீரையை பச்சையாகவோ சமைத்தோ சாப்பிடுவதன் மூலம் உடலுக்கு தேவையான சத்துகள் கிடைப்பதுடன் பல நோய்களைக் குணப்படுத்தவும் முடியும்.

உலகம் முழுவதும் இருக்கிற மக்களால் மிகவும் விரும்பி அருந்தும் பானமாக டீ அல்லது தேநீர் இருக்கிறது. இந்த தேநீரில் கிரீன் டீ, பிளாக் டீ போன்ற பல வகைகள் இருக்கின்றன. அதில் பிளாக் டீ அருந்துவதால் கிடைக்கும் பலன்கள் என்ன என்பதை இங்கு தெரிந்து கொள்ளலாம். பிளாக் டீ என்பது கருப்பு தேயிலையை இரசாயன கலவையில் ஆக்சிஜனுடன இணைக்கப்படும்போது தயாரிக்கப்படுவது. பிளாக் டீயில் 10% பாலிபீனால்கள் உள்ளது.

உடல் எடையை குறைக்க நினைப்பவர்களுக்கும் அல்லது அந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் சிறந்த ஒரு பானமாக பிளாக் டீ இருக்கிறது. இதிலிருக்கும் வேதி பொருட்கள் உடலில் எடையை கூட்ட உதவும் ட்ரைகிளிஸெரைட் கொழுப்பின் அளவை மிகவும் குறைகிறது.

கடுமையான மலச்சிக்கலால் அவதிபடுபவர்கள் தினந்தோறும் காலை மற்றும் மாலை வேளைகளில் பிளாக் டீ தொடர்ந்து அருந்தி வந்தால் தினமும் மலம்கழிக்கும் நிலை உண்டாகி மலச்சிக்கல் தீரும்.

நன்மைகள்:

★ நீரிழிவு நோய், இரத்த அழுத்தம் ஆகியவை பிளாக் டீ அருந்துவதால் தடுக்கப்படுகிறது.

★ வாய் வழி புற்று நோய் வராமல் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

★ பிளாக் டீயில் காஃபின் குறைந்த அளவு இருப்பதால் மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது.

★ மேலும், சுவாச அமைப்பு, சிறுநீரகம் மற்றும் இதய இயக்கத்தை சீராக்குகிறது.

★ பிளாக் டீயில் உள்ள ஒரு குறிப்பிட்ட பொருள் நோய்யெதிர்ப்பு சக்தியை கொடுக்கிறது

★ பிளாக் டீயில் உள்ள அமினோ ஆசிட் மன அழுத்தத்தை குறைத்து மனதை ரிலாக்ஸ் செய்கிறது.

★ பிளாக் டீயில் ஃப்ளூரைடு இருப்பதால் பல் மற்றும் எலும்பு ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

★ பிளாக் டீயில், ஆப்பிள்களில் இருக்கும் சத்துக்கள் இருக்கிறது.

★ பிளாக் டீ பாக்டீரியாவிடமிருந்து பாதுகாக்க உதவுகிறது மற்றும் நோயெதிர்ப்பு அமைப்பையும் பலப்படுத்துகிறது.

★ ஒரு கப் பிளாக் டீயில் உடலை ஹைட்ரேட் செய்து சருமத்தைப் பாதுகாக்க உதவுகிறது.

★ பிளாக் டீ மன அழுத்தத்தை தடுக்கிறது. இது ஹார்மோன் அளவுகளையும் சமப்படுத்துகிறது.

★ இது கொழுப்பு அளவை சமப்படுத்துவதால் பக்கவாதம் அபாயங்களை குறைக்க உதவுகிறது.

வை-பை பாஸ்வேர்ட்டினை கண்டறிவது எப்படி?

குறிப்பு: ரூட் செய்யப்படாத ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் இந்த வசதியை பயன்படுத்த முடியாது. இத்துடன், ஸ்மார்ட் போன்கள் ரூட் செய்வது ஒருவரின் தனிப்பட்ட விருப்பத்தில் தொடர வேண்டும். ஸ்மார்ட்போன்கள் ரூட் செய்யப்பட்டால் அவற்றிற்கு வழங்கப்பட்ட வாரண்டி செல்லாமல் போகும்.

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள வைபை நெட்வொர்க்களின் பாஸ்வேர்டுகளை கண்டறிவது எப்படி என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

இண்டர்நெட் பயன்பாடு நாடு முழுக்க அதிகரித்து வரும் நிலையில், அனைத்து பட்ஜெட்களிலும் இண்டர்நெட் பேக்கள் கிடைக்கின்றன. இத்துடன் பொது இடங்களில் இலவச வைபை மற்றும் பெரும்பாலானோர் வீடுகளில் வைபை பயன்படுத்தப்படுகிறது.

பொது இடங்களில் வைபை பயன்படுத்துவோர் தொடர்ச்சியாக அங்கு செல்லும் போது, அடிக்கடி அங்கிருப்பவர்களின் வைபை பாஸ்வேர்டுகளை கேட்பதை தவிர்த்து பாஸ்வேர்டுகளை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்யும் போது ஒவ்வொரு முறையும் பாஸ்வேர்டுகளை கேட்பதை தவிர்க்க முடிவதோடு எளிதாக போனில் வைபை இணைப்பைப் பெற முடியும்.

இதனால் வைபை நெட்வொர்க்கில் இணைந்திருப்பவர்கள் குறிப்பிட்ட நெட்வொர்க் பாஸ்வேர்டுகளை பார்க்க என்ன செய்ய வேண்டும் என்பதை தொடர்ந்து பார்ப்போம். இதற்கான வழிமுறையை தொடரும் முன் உங்களது ஸ்மார்ட்போன் ரூட் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

★ கூகுள் பிளே ஸ்டோரில் கிடைக்கும் வைபை பாஸ்வேர்டு வியூவர் (Wi-Fi Password Viewer ROOT) செயலியை டவுன்லோடு செய்ய வேண்டும்.

★ செயலியை இன்ஸ்டால் செய்ததும், செயலி கோரும் அனைத்து பெர்மிஷன்களையும் அனுமதிக்க வேண்டும். இவ்வாறு செய்யும் போது பதிவு செய்யப்பட்டுள்ள வைபை பாஸ்வேர்டுகளை பார்க்க முடியும்.

★ வைபை பாஸ்வேர்டு வியூவர் கேட்கும் பெர்மிஷன்களை அனுமதித்ததும் ஸ்மார்ட்போனில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள பாஸ்வேர்டுகளை செயலி காண்பிக்கும்.

★ ஒருவேளை பாஸ்வேர்டுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமெனில் செயலியில் உள்ள பாஸ்வேர்டினை அழுத்தி பிடித்து, பாஸ்வேர்டினை கிளிப் போர்டில் காப்பி செய்து குறுந்தகவல் மூலம் மற்றவர்களுக்கு அனுப்பலாம்.

ஜீப்ரானிக்ஸின் புதிய ஜுக் பார் ஸ்பீக்கர்

ஜீப்ரானிக்ஸ் நிறுவனம் புதிய ஜுக் பார் ஸ்பீக்கரை அறிமுகப்படுத்தியுள்ளது. ப்ளூடூத் வசதியுடன் கூடிய இந்த ஸ்பீக்கரில் சினிமாவில் பார்ப்பது போன்ற ஒலி அனுபவத்தைப் பெற முடியும் என அந்நிறுவனம் உத்தரவாதம் அளிக்கிறது.

ஜீப்ரானிக்ஸ் நிறுவனம், ஏற்கன்வே சந்தையில் உள்ள அதன் சவுண்டு பார் ஸ்பீக்கரான ஜுக் பாரில் ப்ளூடூத் அம்சத்தினைச் சேர்த்து அதனைப் புதுப்பித்துள்ளது. மேலும் ஒழுங்கற்ற முறையில் காணப்படும் ஒயர்களின் தேவையின்றி சரவுண்டு சவுண்டு கேட்கும் அம்சத்தையும் இதில் சேர்த்துள்ளது. இந்த சவுண்டு மான்ஸ்டர் பார் ஸ்பீக்கரை தொலைக்காட்சி, கைபேசி, டேபிலட் அல்லது கணினியில் என எதிலும் இணைத்துக் கொள்ளலாம்.

பென் டிரைவுகளுக்கான க்குஆ ஸ்லாட்டுகள், SD/MMC கார்டுகளுக்கான ஸ்லாட்டு, உள்ளேயே வடிவமைக்கப்பட்ட FM டியூனர் மற்றும் ஆக்ஸ்-இன் ஆகிய பல்வேறு வகையான இணைப்பு முறைகளைத் தேர்ந்தெடுக்கும் வசதியுடன் வருகிறது. இதில் கீழ்நோக்கி ஒலியெழுப்பும் சப்-வூஃபர் மற்றும் பாரில் நடுத்தர/உயர்தர டிரைவர்களையும் கொண்டுள்ளது. இந்த ஸ்பீக்கரின் மொத்த அவுட்புட் 49 வாட்ஸ் RMS ஆகும். இந்த ஸ்பீக்கர் 40hz&20khz என்ற எல்லைக்குள் ஒலியை அளிக்க வல்லதாகும். ரிமோட் கண்ட்ரோல் வைத்தும் ஸ்பீக்கரை இயக்கலாம்.

போன் மெமரியை சேமிக்கும் வழிமுறைகள்

போனின் மெமரியை முடிந்த வரை காலியாக வைத்திருக்க வேண்டும். ஸ்டோரேஜ் நிரம்பி இருந்தால் உங்கள் போன் மெதுவாக செயல்படும். முக்கியமான மெசேஜ்களை மட்டும் வைத்து மற்ற மெசேஜ்களை போனில் இருந்து அழித்து விடவும்.

கூகுள் போட்டோக்களுக்கு உங்கள் போட்டோ அப்லோடை ஆன் செய்யவும். இதனால் உங்களது எல்லா போட்டோக்களும் பதிவேற்றம் செய்யப்பட்டு வை-பை அல்லது மொபைல் நெட்வொர்க் மூலமாக கூகுள் கணக்குக்கு சேமிக்கப்படுகின்றது. இதனால் போட்டோக்களை நீக்கினாலும் அவை முழுவதுமாக நீக்கப்படுவதில்லை.

எல்லா கோப்புகளையும் மைக்ரோ எஸ்டிக்கு மாற்றவும். இதனால் உங்கள் போனின் ஸ்டோரேஜ் காக்கப்படுகின்றது. இசை சேவைகளை பயன்படுத்தி பாடல்கள் மற்றும் வீடியோக்களை கேட்டும் கண்டும் மகிழுங்கள். உயர்வரையறை போட்டோக்களை கிலிக் செய்வதால் ஸ்டோரேஜ் இடம் அதிக அளவில் நிரப்பப்படும். எனவே சாதாரணமான போட்டோக்களை எடுக்கவும்.

நீங்கள் க்ரோம் பிரவுஸர் பயன்படுத்தினால் கேச்சி, டேடா மற்றும் க்ரோம் பிரவுசர் ஹிஸ்ட்ரியை சுத்தம் செய்தல் அவசியம். இவ்வகை போட்டோக்கள் அதிக அளவில் இடத்தை ஆக்கிரமிப்பு செய்கின்றன. ஆகவே தரவுகளையும் டவுன்லோடையும் அதிமாக பயன்படுத்தும் இன்ஸ்டாகிராம் போட்டோக்களை நீக்கவும்.

இன் ஆப் டவுன்லோட்கள் உங்கள் ஸ்டோரேஜை அதிகப்படுத்தும். ஆகவே ஆஃப்லைன் யூட்யூப், பாடல்கள், வீடியோக்கள் போன்றவற்றை நீக்கவும். ஆப்பிற்கு சென்று ஆஃப்லைன் வீடியோக்கள் அனைத்தையும் நீக்கி விடவும்.

தேவையற்ற ஆப்ஸ்களை நீக்கி தேவையான ஆப்களை மட்டும் வைத்து கொள்ளவும். அதிக அளவில் ஆப்ஸ்களை சேமித்து வைத்தால் உங்கள் போனின் மெமரி காலியாகும்.இவை உங்கள் போனை மெதுவாக செயல்பட வைக்கும். இதில் கேமரா ஆப்ஸ்கள் அடங்கும். உங்கள் போனின் கேமராவை கொண்டே நீங்கள் போட்டோ எடுக்க முடியும் என்பதால் அதற்கென எந்த செயலியும் டவுன்லோட் செய்திருந்தால் அவற்றை நீக்கி விடவும்.

சிமென்டை பூசவேண்டாம் விரித்தாலே போதும்!

சிமென்ட் அதிகம் செலவு செய்யாமல் கட்டடத்தை கட்ட, ஒரு புதுவித தொழில்நுட்பம் வந்திருக்கிறது. மிகவும் சன்னமான சிமென்ட் பூச்சு தேவைப்படும் கட்டடங்களுக்கு, தார்பாலின் போல சுருட்டி எடுத்துச் செல்லும் வகையில் உள்ள இந்த சிமென்ட் மிகவும் சிக்கனமானது. 'கார்டெக்ஸ் கம்போசிட்ஸ்' என்ற நிறுவனம் இதை

தயாரித்து உள்ளது.இந்த சிமென்ட் தாள் நான்கு அடுக்குகளை கொண்டது. வெளி அடுக்கில் நீரில் கரையக்கூடிய இழைகள் இருக்கும். இதற்கு அடுத்த உள் அடுக்கில், கார்டெக்ஸின் ரகசிய பார்முலாவில் தயாரான சிமென்ட் வைக்கப்பட்டிருக்கும். மூன்றாவது அடுக்கில், முப்பரிமாண கட்டமைப்புள்ள விரிப்பு இருக்கும். இறுதி அடுக்கில், 'வாட்டர் ப்ரூப்' விரிப்பு உள்ளது.இந்த நான்கடுக்கு விரிப்பை உருவாக்க, வழக்கமான சிமென்டை விட குறைவான அளவே தேவை என்பதோடு, இரு மடங்கு வலுவானதும்கூட. இதை சிறியதாக சுருட்டி அடுக்க முடியும். எனவே போக்குவரத்து செலவு குறைவாகவே ஆகும்.கட்டடத்திற்கு சென்றதும் இதை விரித்து சுவரில் வைத்து தண்ணீர் ஊற்றினால் போதும். சுவற்றில் அப்படியே ஒட்டிக்கொள்ளும். சிறிது நேரத்தில் சிமென்ட் 'செட்டில்' ஆக ஆரம்பித்துவிடும். கார்டெக்ஸ் சிமென்ட் விரிப்பு, 1 சதுர அடிக்கு, 305 ரூபாய். இது வழக்கமான சிமென்ட் பூச்சுக்கு ஆகும் செலவைவிட, 135 ரூபாய் குறைவு என்கிறது கார்டெக்ஸ் நிறுவனம். கார்டெக்ஸ் காம்போசிட்டை தினத்துக்கு, 400 சதுர மீட்டர் வரை போட முடியும்.

திரையில் தோன்றும் கீ போர்ட்

விண்டோஸ் இயக்கத்தில், திரையில் நம் பயன்பாட்டிற்கென ஒரு கீ போர்ட் தரப்படுகிறது. கம்ப்யூட்டருடன் இணைத்துப் பயன்படுத்தும் கீ போர்ட் நமக்கு இல்லை என்றாலும், இதனை நாம் பயன்படுத்த முடியும். குறிப்பாக, இப்போது வரும் தொடு உணர் திரை எனப்படும் டச் ஸ்கிரீன் திரையில் இதன் பயன்பாடு அதிக வசதிகளைத் தருகிறது. இதனை மவுஸ் மூலம் பயன்படுத்தலாம்.

விண்டோஸ் 8 மற்றும் விண்டோஸ் 10 சிஸ்டங்களில், இரண்டு வகையான கீ போர்ட் தரப்படுகிறது. இவை: basic touch keyboard மற்றும் advanced on-screen keyboard. இரண்டாவது கீ போர்டினை Ease of Access செட்டிங்ஸ் அமைப்பில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். இந்த இரண்டினையும் எப்படி பெற்றுப் பயன்படுத்துவது எனப் பார்க்கலாம்.

விண்டோஸ் 10: டாஸ்க்பாரிலிருந்து விரைவாக, இந்த கீ போர்டினை அணுக, டாஸ்க் பாரில் ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் காண்டெக்ஸ்ட் மெனுவில், "Show touch keyboard button" என்ற விருப்பத்தினை இயக்கி வைக்கவும். இயக்கி வைத்தவுடன், சிஸ்டம் ட்ரேயில், கீ போர்ட் ஐகான் ஒன்றினைப் பார்க்கலாம். சிஸ்டம் ட்ரேயில் இல்லை என்றால், நோட்டிபிகேஷன் ஏரியாவில் காணலாம். இதில் கிளிக் செய்தாலோ அல்லது விரலால் தொட்டாலோ, உடன் திரையில் ஆன் ஸ்கிரீன் கீ போர்ட் காட்சி அளிக்கும். கீகளைக் கிளிக் செய்து அல்லது தொட்டு இயக்கலாம். இதன் மூலம், வழக்கமாக நாம் எப்படி கம்ப்யூட்டருக்குக் கட்டளைகளை அனுப்புகிறோமோ, அதே போல கட்டளைகளை அமைத்து இயக்கலாம். டெக்ஸ்ட் அமைக்கலாம். தொடு திரை என்றால், உங்கள் விரலே பேனாவாக இங்கு மாறும். வலது மேல் பக்கத்தில் உள்ள ஐகான்கள் கீ போர்டினை நகர்த்தவும், அதனைப் பெரிதாக்கவும் உதவும். இந்த கீ போர்டின் அடிப்பாகத்தில் உள்ள கீ போர்ட் பட்டன்களை இயக்குவதன் மூலம், கீ போர்டின் வெவ்வேறு வடிவமைப்புகளுக்கு மாறிக் கொள்ளலாம்.

கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட இன்னொரு கீ போர்டும் இந்த சிஸ்டத்தில் தரப்பட்டுள்ளது. இதனை, விண்டோஸ் 10 சிஸ்டம் கொண்டிருக்கும் Ease of Access settings மூலம் பெற்றுக் கொள்ளலாம். இதனைப் பெற, ஸ்டார்ட் மெனு திறந்து, Settings. என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். அங்கு Ease of Access > Keyboard எனச் சென்று, விண்டோவின் மேலாகக் கிடைக்கும் "On-Screen Keyboard" என்ற ஆப்ஷனை இயக்கவும்.

இதில் கூடுதலாகச் சில கீகள் தரப்படும். வழக்கமாக, நாம் இணைத்துச் செயல்படுத்தும் கீ போர்ட் போல இதில் பல கீகள் கிடைக்கும். வழக்கமான டெஸ்க் டாப் விண்டோ போல இதன் தோற்றம் இருக்கும். இதன் அளவினை மாற்றி அமைக்கலாம். இதனைத் தொடு உணர் கீ போர்டுடன் ஒப்பிடுகையில், பல வேறுபாடுகள் இருப்பதனைக் காணலாம். கீ போர்டுக்கு வலது கீழாக மூலையில் தரப்பட்டுள்ள "Options" பட்டனை அழுத்தினால், கூடுதல் மாற்றங்களை மேற்கொள்ளலாம் என்பதனைக் காணலாம். இதனை டாஸ்க் பாரில் பின் செய்தும் வைக்கலாம். அதன் மூலம், மீண்டும், எப்போது வேண்டுமானாலும் இதனை இயக்கிப் பயன்படுத்தலாம்.

இந்த கீ போர்டினை, விண்டோஸ் 10 சிஸ்டத்தினை இயக்கி, உள் நுழைந்திடும் (sign-in) திரையிலும் பெறலாம். இந்த உள் நுழைதல் திரையின் கீழ் வலது மூலையில் "Ease of Access" பட்டன் ஒன்று இருக்கும். அதில் கிளிக் செய்து, பின்னர் கிடைக்கும் மெனுவில் "On-Screen Keyboard" என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.

விண்டோஸ் 8/8.1: விண்டோஸ் 8 மற்றும் விண் 8.1 சிஸ்டங்களிலும், ஏறத்தாழ, விண்டோஸ் 10 சிஸ்டத்தில் மேற்கொண்ட செயல்பாடுகளின் மூலமாகவே, திரையில் இயங்கும் கீ போர்டினைப் பெறலாம். சின்ன சின்ன வேறுபாடுகள் உண்டு. அவற்றை இங்கு பார்க்கலாம். இதனைப் பெற டூல் பாரில் ரைட் கிளிக் செய்திடவும். பின்னர் Toolbars," தேர்ந்தெடுத்து, அதில் ''Touch Keyboard" என்பதை, டிக் அமைத்து, இயக்கப்பட்ட நிலைக்குக் கொண்டு வரவும்.

இதனை மேற்கொண்டால், நம் சிஸ்டம் ட்ரேயில் அல்லது நோட்டிபிகேஷன் ஏரியாவில், டச் கீ போர்ட் ஐகான் கிடைக்கும். இதனைத் தொட்டு அல்லது கிளிக் செய்து, திரைக்கான கீ போர்டினைப் பெறலாம்.

வழக்கமான ஆன் ஸ்கிரீன் கீ போர்டினையும், இந்த சிஸ்டங்களில் பெறலாம். இதற்கு, விண்டோஸ் 8.1 சிஸ்டம் இயங்கும் கம்ப்யூட்டர்களில், ஸ்டார்ட் பட்டனில், ரைட் கிளிக் செய்திட வேண்டும். விண்டோஸ் சிஸ்டம் 8 எனில், திரையில், கீழாக இடது மூலையில் கிளிக் செய்திட வேண்டும். தொடர்ந்து, Control Panel கிளிக் செய்திடவும். கண்ட்ரோல் பேனல் விண்டோவில், தொடர்ந்து "Ease of Access," >> "Ease of Access Center," >> "Start On-Screen Keyboard" என்று செல்லவும். கீ போர்டினை, டாஸ்க் பாரில் பின் செய்தும் வைத்துக் கொள்ளலாம்.

விண்டோஸ் 8 சிஸ்டத்தில், உள் நுழைதல் திரை வழியாகவும், ஆன் ஸ்கிரீன் கீ போர்டினைப் பெறலாம். இந்த திரை விண்டோவில், கீழாக இடது மூலையில் கிடைக்கும் "Ease of Access" ஐகானில் கிளிக் செய்திடவும். அங்கு கிடைக்கும் மெனுவில், On-Screen Keyboard என்பதில் கிளிக் செய்திட்டால், கீ போர்ட் திரையில் காட்டப்படும்.

விண்டோஸ் 7: உங்கள் கம்ப்யூட்டரில் விண்டோஸ் 7 இயங்குவதாக இருந்தால், Start பட்டனில் கிளிக் செய்து, All Programs தேர்ந்தெடுத்து, அதன் பின்னர், Accessories > Ease of Access > On-Screen Keyboard எனச் செல்லவும்.

கண்ட்ரோல் பேனல் பிரிவிலும் இது கிடைக்கும். அந்த பிரிவு சென்று, அதன் Ease of Access Center பிரிவினைத் தேர்ந்தெடுக்கவும். அதில் Start On-Screen Keyboard என்ற பட்டன் கிடைக்கும். இதில் கிளிக் செய்தால், ஆன் ஸ்கிரீன் கீ போர்ட் கிடைக்கும். மிக எளிதாக இதனைத் தொடர்ந்து பெற, இந்த புரோகிராமினை, டாஸ்க் பாரில் பின் செய்து வைக்கலாம். இது விண்டோஸ் 8 மற்றும் விண் 10 சிஸ்டங்களில் கிடைத்த திரை கீ போர்ட் போல தோற்றத்தில் இல்லாவிட்டாலும், செயல்பாட்டில் ஒரே மாதிரி

யாகவே செயல்படும்.

விண்டோஸ் 7 சிஸ்டத்தின் உள் நுழைதல் திரை வழி, ஆன் ஸ்கிரீன் கீ போர்டினைப் பயன்படுத்த, அத்திரையில், இடது கீழ் புறம் உள்ள Ease of Access பட்டனில் கிளிக் செய்திடவும். அங்கு கிடைக்கும் பட்டியலில், Type without the keyboard (On-Screen Keyboard) என்பதில் டிக் அடையாளம் ஏற்படுத்தவும்.

திரையில் தோன்றும் கீ போர்ட், டைப் செய்து டெக்ஸ்ட் அமைக்க மட்டும் எனப் பல பயனாளர்கள் எண்ணுகின்றனர். வழக்கமான கீ போர்ட் ஷார்ட் கட் கீ தொகுப்பின் செயல்பாடுகளையும் இதன் மூலம் மேற்கொள்ளலாம். வழக்கமாக, இணைத்துச் செயல்படுத்தும் கீ போர்ட் வழியாக மேற்கொள்ளும் அனைத்து செயல்பாடுகளையும், இதன் வழியாகவும் மேற்கொள்ளலாம்.

ஸ்மார்ட்போன் பிராசஸர்

ஸ்மார்ட்போன்கள் சீராக இயங்க மிக முக்கிய பாகங்களில் ஒன்றாக பிராசஸர்கள் இருக்கிறது. எனினும் பிராசஸர்கள் என்றால் என்ன, இது நம் ஸ்மார்ட்போன்களில் என்ன செய்யும்.

ஸ்மார்ட்போன் அல்லது டேப்லெட் சாதனங்களின் மிக முக்கிய பாகமாக அதன் பிராசஸர் இருக்கிறது. நாம் கொடுக்கும் விலைக்கு ஏற்ப ஸ்மார்ட்போன்களில் வெவ்வேறு விதமான பிராசஸர்கள் வழங்கப்படுகின்றன. எக்சைனோஸ், ஆக்டா கோர், குவாட் கோர் என இத்தனை பிராசஸர்கள் நம் ஸ்மார்ட்போனில் எவ்வாறு வேலை செய்கிறது?

பிராசஸர் என்றால் என்ன?

உங்களின் ஸ்மார்ட்போன் என்ன செய்ய வேண்டுமோ அவற்றை பிராசஸர்கள் தான் செய்யும். ஒவ்வொரு மொபைல் போனும் சாதாரண லேண்ட்லைன் டெலிபோன்கள் ஆகும். போர்டபிள் கம்ப்யூட்டர்களான ஸ்மார்ட்போன்களில் டெலிபோன் வசதிகளும் வழங்கப்படுகிறது.

மென்மையான தொடுதிரை டிஸ்ப்ளேவினுள் முழுமையான கம்ப்யூட்டர் வேலை செய்யும், இவை உங்களது செயலிகள் எவ்வாறு வேலை செய்ய வேண்டும், ஜி.பி.எஸ். எவ்வாறு உங்களை வீட்டிற்கு அழைத்து செல்லும் என்பதை செய்து முடிக்க பொருப்பு வகிக்கும். பொதுவாக அனைத்து வேலைகளுக்கும் மூளையாக பிராசஸர்களே இருக்கின்றன.

கோர் என்றால் என்ன?

மெயின் பிராசஸர்களில் பணிகளை சரியாக புரிந்து கொண்டு, செயல்படுத்துவதை கோர் சரியாக செய்யும். சாதனங்களில் துவக்கத்தில் சிங்கிள்-கோர் பிராசஸர் வழங்கப்பட்டன. ஆனால் பொறியாளர்கள் அதிக சக்திவாய்ந்த கோர்களஐ ஒவ்வொரு சாதனத்திலும் வழங்கியுள்ளனர். இவை டூயல்-கோர் சாதனங்களில் இருந்து குவாட்-கோர், ஹெக்சா-கோர் மற்றும் ஆக்டா கோர் (எட்டு கோர்கள்) வரை ஸ்மார்ட் போன் மற்றும் டேப்லெட்களில் வழங்கப்படுகின்றன.

அதிக கோர்களின் பயன்?

ஸ்மார்ட்போன்களில் அதிக கோர் கொண்ட பிராசஸர்கள் எனில் அவை உங்களது சாதனத்தில் அதிகப்படியான பணிகளை அதிவேகமாக செய்து முடிக்கும். இதனால் செயலிகள் வேகமாக லோடு ஆகும், அதிக தரமுள்ள புகைப்படம் அல்லது எச்.டி. தரத்தில் வீடியோக்களை பதிவு செய்ய முடியும். அனிமேஷன்கள் சீராக இயங்கும், கேமிங்-இன் போது, ஸ்மார்ட்போன் வேகம் குறையாது.

இதேபோல் பல்வேறு பயன்களை வழங்கும் கோர்கள் இருந்தால் ,ஸ்மார்ட்போன்களின் செயல்திறனை ஊக்குவிக்க முடியும்.

ஆக்டா-கோர் ஸ்மார்ட்போனை விட குவாட்-கோர் வேகமானதா?

ஆக்டா-கோர் பிராசஸர் குவாட்-கோரை விட வேகமாக இயங்குவது இவை செயல்படுத்தும் அம்சங்களை சார்ந்தது. அதாவது ஸ்மார்ட்போனில் வெப் பிரவுசிங் செய்யும் போது ஒரு கோர் வேலை செய்யும், மற்ற கோர்கள் எதுவும் செய்யாது. அடுத்து ஸ்மார்ட்போனில் அழைப்பு வரும் போது இரண்டாவது கோர் வேலை செய்யும். இரண்டு அம்சங்களும் சீராகவும், வேகமாகவும் இயங்கும் ஆனாலும் இவை இருமடங்கு வேகத்தில் இயங்காது.

மற்ற அம்சங்கள்?

ஸ்மார்ட்போன்கள் இயங்க மிக முக்கிய அம்சங்களில் பிராசஸர் ஒன்று. இதைத் தவிர கிராஃபிக்ஸ் பிராசஸிங் யுனிட், ரேம், வை-பை ஆன்டெனா, ஜி.பி.எஸ். என பல்வேறு அம்சங்கள் உள்ளன. இவை அனைத்தும் ஒன்றிணைந்து வேலை செய்யும். இதனால் ஸ்மார்ட் போன் மற்றும் டேப்லெட்களை வாங்க அனைத்து அம்சங்களையும் கவனிக்க வேண்டும்.

சருமப் பிரச்சினைக்கு தீர்வாகும் வெந்தயம்!

வெந்தயத்தை கொண்டு தலைமுடியின் ஆரோக்கியத்தை மட்டுமின்றி சருமத்தில் ஏற்படும் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும். வெந்தயம் எளிதில் கிடைக்கக்கூடிய பொருள் என்பதால், இதனைக் கொண்டு சருமத்தை எளிதில் பராமரிக்கலாம்.

வெந்தயம் சிறந்த கிளின்சராகவும் செயல்படும். தினமும் வெந்தயத்தை பால் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி மென்மையாக 15 நிமிடம் மசாஜ் செய்து பின் கழுவ வேண்டும். இதனைக் கொண்டு சருமத்தைப் பராமரித்தால், சருமத்துளைகளில் ஏற்பட்டுள்ள அடைப்புக்கள் அனைத்தும் நீங்கி சருமம் சுத்தமாக இருக்கும். இதனை தினமும் செய்து வந்தால், முகத்தின் நிறம் அதிகரிக்கும்.

வெந்தயத்தை நீரில் ஊற வைத்து பேஸ்ட் செய்து, பால் சேர்த்து கலந்து முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனை வாரம் இருமுறை செய்து வரலாம். வெயில் காலத்தில் வெளியில் சென்று வந்தபின் இந்த பேஸ்பேக் போட்டு கொண்டால் சருமம் கருமை அடைவதை தடுக்கலாம்.

வெந்தய பொடியை தயிர் சேர்த்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி சிறிது நேரம் ஊற வைத்து பின் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், முகத்தின் நிறம் அதிகரிக்கும்.

ஆனால் வெந்தயம் குளிர்ச்சி மிக்கது என்பதால், சுவாச பிரச்சனைகள் இருப்பவர்கள் இதனை வாரம் 2 முறை போடுவது நல்லது.

வெந்தயத்தை பொடி செய்து அதனை தேன் சேர்த்து கலந்து முகத்தில் தடவி ஸ்கரப் செய்து பின் கழுவ வேண்டும். பருக்கள் வருவது தடுக்கப்படும்.

வெயிலில் சருமத்தின் நிறம் கருமை நிறத்தில் மாற்றமடைந்திருந்தால், அதனை வெந்தயத்தைக் கொண்டு எளிதில் நீக்கலாம். அதற்கு 1/2 கப் வெந்தயத்தை நீரில் போட்டு கொதிக்க விட்டு, அந்நீரை குளிர வைத்து பின் அதனைக் கொண்டு தினமும் இரவில் படுக்கும் முன் முகம் கை, கால்களில் தடவி, மறுநாள் காலையில் கழுவ வேண்டும்.

சரும எரிச்சலைப் போக்கும் ஐஸ்கட்டி மசாஜ்!

வெப்ப தாக்கத்தில் இருந்து சருமத்தை காக்க ஐஸ்கட்டிகளை பயன்படுத்தலாம்.

வெயிலில் அதிக நேரம் அலைந்து வேலை பார்த்துவிட்டு வீட்டுக்கு சென்றால் ஐஸ்கட்டிகளை கொண்டு சருமத்திற்கு மசாஜ் செய்யலாம். அது வெயிலால் ஏற்பட்ட சரும எரிச்சலை போக்க வழிவகை செய்யும்.

வறண்ட சருமம் கொண்டவர்கள் வெப்ப தாக்கத்தால் அதிக சிரமங்களை எதிர்கொள்ள நேரும். அவர்கள் சருமத்தில் ஈரப்பதத்தை தக்க வைக்க ஐஸ் கட்டிகளை பயன்படுத்தலாம். அதன் மூலம் வறண்ட சருமத்தை பொலிவுற செய்யலாம்.

ஒருசிலருக்கு வெயில் காலத்தில் சருமத்தில் பருக்கள் முளைக்கும். அதில் வீக்கமும் உண்டாகும். அதனை போக்க 10 நிமிடங்கள் ஐஸ்கட்டியால் ஒத்தடம் கொடுத்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

ஐஸ்கட்டிகளை கொண்டு மசாஜ் செய்வதன் மூலம் சருமத்தில் உள்ள எண்ணெய் பசை தன்மை நீங்கி, சருமம் மிருதுவாகும். அதிக எண்ணெய் சுரப்பினை தடுத்து புத்துணர்ச்சியை ஏற்படுத்திக் கொடுக்கும்.

ஒருசிலருக்கு சில மணி நேரங்கள் வெயிலில் அலைந்தாலே சருமத்தில் கருமை படிந்துவிடும். அதனை போக்க முகத்திற்கு ஐஸ்கட்டிகளை கொண்டு மசாஜ் செய்து வரலாம்.

காலை, மாலை இரு வேளையும் ஐஸ்கட்டிகளை கொண்டு மசாஜ் செய்து வருவது நிம்மதியான தூக்கத்திற்கு வழிவகுக்கும்.

ஐஸ்கட்டிகளை பயன்படுத்துவதன் மூலம் சருமத்தில் படிந்திருக்கும் இறந்த செல்கள் நீங்கி, முகத்திற்கு பொலிவு சேர்க்கும்.

ஐஸ்கட்டிகள் மசாஜ் மூலம் ரத்த ஓட்டம் சீராகும். அதனால் முகச்சுருக்கம் தவிர்க்கப்படும்.

ரோஸ் வாட்டர் மற்றும் வெள்ளரிக்காயை அரைத்து அதனுடன் ஐஸ்கட்டி சேர்த்து மசாஜ் செய்வதன் மூலம் கண்களுக்கு கீழ் உள்ள கருவளையங்களை போக்கலாம்.

உதடுகள் மிருதுவாக காட்சியளிக்கவும் ஐஸ்கட்டி மசாஜ் செய்யலாம்.

வெயிலினால் ஏற்படும் முக சோர்வை போக்க ஐஸ்கட்டிகளை கொண்டு அழுத்தமாக மசாஜ் செய்ய வேண்டும். அதன் மூலம் சருமத்தில் குளிர்ச்சி பரவும். முகம் பளிச்சென்று இருக்கும்.

என்றும் இளமையாக ஜொலிக்க...

நாம் அனைவருமே அழகான, இளமையான தோற்றம் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசை கொண்டவர்களே! இல்லை என மறுத்தாலும் நம் அடிமனதில் இந்த ஆசை கண்டிப்பாக ஒட்டிக் கொண்டு தான் இருக்கும்..! எனவே, அனைவரும் அழகாக இளமையாக இருக்க உண்ண வேண்டிய உணவுகள் குறித்து இங்கு படித்தறிவோம்..!

சிட்ரஸ் பழங்களில் ஆரஞ்சு, எலுமிச்சையில் வைட்டமின் 'சி' நிறைந்திருக்கிறது. எனவே இந்தப் பழங்களைச் சாப்பிட்டால் இவற்றில் உள்ள வைட்டமின் 'சி', உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி, சருமத்தைப் புத்துணர்ச்சியுடனும், அழகாகவும் வைத்துக் கொள்ள உதவுகிறது.

நீர்ச்சத்து நிறைந்துள்ள இந்தப் பழங்களில் லைகோபீன் அதிகம் உள்ளது. எனவே இவற்றை அதிகம் சாப்பிட, வெயிலினால் பாதிப்படைந்த சருமச் செல்கள் அனைத்தும் குளிர்ச்சியடைந்து, சருமம் அழகாகும்.

தக்காளியில், சருமத்தில் உள்ள சுருக்கங்களையும் முதுமைக் கோடுகளையும் தடுக்கும் லைகோபீன் அதிகமாக இருக்கிறது. எனவே இதை அப்படியே சாப்பிடலாம் அல்லது சருமத்துக்கு 'மாஸ்க்' போல தடவிப் பயன்படுத்தலாம்.

நல்ல ஆரோக்கியமான, இளமைத் தோற்றத்தை நீட்டிக்கும் ஆன்டிஆக்சிடன்ட் அதிகம் உள்ள உணவுகளை சேர்த்து வந்தால், உடலில் உள்ள நச்சுக்கள் வெளியேறி, உடல் நன்கு பொலிவு பெறும்.

அதிலும் குறிப்பாக, வைட்டமின் சி, ஏ, ஈ, லைகோபீன், லுட்டின் போன்ற ஆன்டி ஆக்சிடன்ட்கள் நிறைந்த பழங்களையும் காய்கறிகளையும் உணவில் அதிகம் சேர்த்து வந்தால், முதுமை வயதிலும், சற்று இளமையுடனேயே இருக்கலாம்.

உங்கள் திருமண நாளை உற்சாகமாக கொண்டாட...

திருமணநாள் என்பது ஒரு வருக்கொருவர் பரிசு கொடுத்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வதற்கானது மட்டுமல்ல. ஒருவர் மீது ஒருவர் வைத்துள்ள அன்பைக் காட்டுவதற்கு கிடைக்கும் அருமையான வாய்ப்பு.

திருமண நாளை உற்சாகமாக கொண்டாட ஒவ்வொரு தம்பதியும் ஒரு மாதத்திற்கு முன்பே திட்டமிட்டுவிடுகிறார்கள். கணவரும், மனைவியும் ஒருவரை ஒருவர் எப்படி எல்லாம் உற்சாகப்படுத்தலாம் என்று ஒரு பட்டியலே தயார்செய்து, நடைமுறைப்படுத்த முயற்சி செய்கிறார்கள். அவர்கள் வித்தியாசமான முறையில் திருமண நாளை கொண்டாட சில ஐடியாக்கள்:

திருமணநாள் என்பது ஒரு வருக்கொருவர் பரிசு கொடுத்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வதற்கானது மட்டுமல்ல. ஒருவர் மீது ஒருவர் வைத்துள்ள அன்பைக் காட்டுவதற்கு கிடைக்கும் அருமையான வாய்ப்பு அது. அதனால் அந்த நாளை, அடுத்த திருமணநாள் வரை மறக்க முடியாத நாளாக்க முயற்சி செய்யுங்கள்.

வகுப்பு

துணையுடன் அதிக நேரம் செலவழிப்பதே அந்த நாளின் முக்கிய இலக்காக இருக்க வேண்டும். சமையல் வகுப்பு, நடன வகுப்பு போன்றவைகளுக்கு தம்பதியர் மட்டுமே ஜோடியாக சென்று வரலாம். ஒவ்வொருவருக்கும் எந்தெந்த விஷயங்களில் ஈடுபாடு அதிகம் இருக்கிறது என்பதை பட்டியலிடலாம். இருவரிடமும் என்னென்ன திறமைகள் இருக்கிறது என்பதை பற்றி தெரிந்து, அதை அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான மனப்பூர்வமான முயற்சியை தொடங்கலாம்.

கடிதம்

திருமண நாள் நெருங்குவதற்கு சில வாரங்கள் இருக்கும்போதே கடிதங்கள் எழுத தொடங்கிவிடலாம். துணையிடம் உங்களை கவர்ந்த விஷயங்களை கடிதத்தில் குறிப்பிடலாம். அவர் மீது கொண்டிருக்கும் காதலை கவிதையாகவோ, உணர்வுபூர்வமான வார்த்தைகளாகவோ வெளிப்படுத்தலாம். எழுதியதை ரகசியமாக வைத்துக்கொண்டு, திருமண நாளில் துணையிடம் கொடுத்து அவருக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கலாம்.

கிச்சன் டிப்ஸ்

ஒரு பானையில் மணலைப் போட்டு, அதில் எலுமிச்சைப் பழங்களை புதைத்து வைத்தால் பழங்கள் கெடாது இருக்கும். தேங்காய் துண்டுகளை தயிரில் போட்டு வைத்தால், தயிர் ஒரு வாரம் வரை கெடாது இருக்கும்.

கண்ணாடி எதுவும் சிதறி உடைந்து விட்டால் சாண உருண்டைகளை ஒற்றி எடுப்பார்கள் பழைய காலத்தில்! இப்போது சாணிக்கு எங்கே போவது? கோதுமை மாவு உருண்டையால் சுத்தமாக ஒற்றி எடுக்கலாமே.

புதிதாக முறம் வாங்கியவுடன் செம்பருத்தி இலைகளை அரைத்துப் பூசி விட்டால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடும்.

வெண்டைக்காயை நறுக்கியதும் ஒரு நியூஸ்பேப்பரில் போட்டு, பேப்பரால் மூடிவிட்டு அரை மணி நேரத்துக்குப் பின் அதில் பொரியல் செய்தால் குழகுழப்பு இருக்காது.

இனிப்பு வகைகளை அவனில் சூடு பண்ணலாம். ஆனால் இனிப்பு வகைகளில் சில்வர் பாயில் இருந்தால் அவனில் சூடேற்றக் கூடாது.

வாழைக்காய், மாங்காய், முருங்கைக்காய்களை குளிர்ந்த நீரில் போட்டு வைத்தால் மூன்று நாட்களானாலும் புதிது போல் இருக்கும்.

வடாம் மாவில் கடைசியாக கொஞ்சம் இருக்கும்போது அதில் போர்ன் விடா அல்லது பூஸ்ட் 3 டீஸ்பூன் போட்டு தண்ணீரில் நன்றாக கரைத்து மாவில் சேர்த்துப் பிறகு வடாம் பிழிந்தால் சாக்லெட் மணத்துடன் வித்தியாசமான கலரில் வடாம் தயார்.

நேந்திரங்காய் சிப்ஸ் வறுக்கும் போது ஒரு மஞ்சளையும் இடித்து சேருங்கள். சிப்ஸுக்கு நல்ல நிறம் கிடைக்கும்.

பீட்ரூட்டை தேவையான அளவுக்கு துண்டு துண்டாக்கி உப்பு போட்டு வேகவைத்துக் கொள்ளவும். தண்ணீரை நன்றாக வடிகட்டி ஒரு நாள் முழுக்க வெயிலில் காய வையுங்கள். பிறகு வழக்கமாக ஊறுகாய் செய்வதைப் போல செய்தால் சுவையாக இருக்கும்.

காலை உணவிற்குப் பின் நூடுல்ஸ் மீதம் இருந்தால் அதனுடன் சில பச்சைக் காய்களை நறுக்கி, தயிர் சேர்த்து சாலட் தயாரிக்கலாம்.

ஒவ்வொரு முறை கேஸை (Gas) அணைக்கும் போது ஸ்விட்சுடன், ரெகுலேட்டரையும் அணைத்து விட்டால் கேஸ் 1 வாரம் வரை கூட வரும். கேஸ் மிச்சமாகும்.

கிச்சனில் கேஸ் அடுப்பிற்கு மேல் சிறிய ஸ்டாண்டோ, ஷெல்ஃபோ மாட்டுவதை தவிர்க்கவும். சாமான்கள் ஏதாவது தேவைப்பட்டால் எடுக்கும் போது தவறலாம். எரியும்போது அவைகளை எடுப்பதால் தீப்பற்றும் அபாயம் உண்டு.

மாமியாரிடம் மருமகள் கூறும் பொய்கள்

பெண்கள் தங்கள் மாமியாரிடம் அப்படி என்ன தான் பொய் சொல்கிறார்கள்? தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளதா? தெரிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்.

விருப்பத்துடனோ அல்லது விருப்பம் இல்லாமலோ நம் அன்றாட வாழ்க்கையில் நாம் பல பொய்களைக் கூறி தான் வருகிறோம். பொதுவாக பெண்களுக்கு ஒத்துப் போகாதவர்கள் என பார்த்தால் கண்டிப்பாக அவர்களின் மாமியார் அந்த பட்டியலில் இருப்பார்கள். அதனால் அவர்களிடம் பெண்கள் பொய் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட தான் செய்யும். நாம் ஏற்கனவே சொன்னதைப் போல், யாரையும் பாதிக்காத வகையில் கூறப்படும் பொய்களில் ஒன்றும் தவறில்லை.

சரி, பெண்கள் தங்கள் மாமியாரிடம் அப்படி என்ன தான் பொய் சொல்கிறார்கள்? தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளதா? தெரிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்!

மாமியார்களிடம் பொய் சொல்லும் போது, பெண்கள் பகடை காயாய் பயன்படுத்துவது தங்கள் கணவன்மார்களை தான். சொல்லப்போனால், தங்கள் மாமியாரிடம் இருந்து அனுமதிகளைப் பெறுவதற்கு தங்கள் கணவனை பயன்படுத்திக் கொள்வதை சில பெண்கள் ஒத்துக் கொண்டுள்ளனர்.

மிகவும் புகழ் பெற்ற பொய்களில் இதுவும் ஒன்று. குறிப்பாக மாமியாருடன் சேர்ந்து வாழாத மருமகள்கள் கூறுவது. அனைத்திலும் மூக்கை நுழைக்கும் மாமியாரை சந்திக்காமல் தவிர்க்க வேண்டுமானால், எனக்கு வேலையுள்ளது, எனக்கு உடம்பு சரியில்லை, எனக்கு நேரமில்லை என்ற பொய்களை பொதுவாக பெண்கள் கூறி விடுவார்கள்.

சில நேரங்களில் அது உண்மையாக இருந்தாலும் கூட, இதனை ஒரு சாக்காக தான் பயன்படுத்துகிறோம் என் பல பெண்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

உங்கள் பரிசுகள் என்றால் எனக்கு கொள்ளை பிரியம் தங்கள் மருமகளுக்கு பரிசு பொருட்களை அள்ளி கொடுப்பது சில மாமியார்களின் பழக்கமாக இருக்கும்.

ஆனால் பல நேரங்களில் அவர்கள் வாங்கி தரும் பரிசு பொருட்கள் மருமகள்களுக்கு பிடிப்பதில்லை.

அந்த பரிசுகள் எப்படி இருக்கிறது என் அவர்களிடம் கேட்கும் போது, இது மிக அழகிய ஆடை. ஆனால் இதை அணிவதற்கான சிறந்த நிகழ்வுக்காக காத்துக் கொண்டிருக்கிறேன்.

இந்த கப் மிக அழகாக உள்ளது, இதனை தினமும் பயன்படுத்தி இதன் அழகையோ கெடுக்க நான் விரும்பவில்லை போன்ற பொய்களை கூறுவது இயல்பான ஒன்று தான்.

ஆனால் இதற்கு பின்னணியில் உள்ள உண்மை என்ன தெரியுமா? இந்த பரிசுகள் உங்களுக்கு சுத்தமாக பிடிக்காது. அதனை வருங்காலத்தில் யாருக்காவது அப்படியே நீங்கள் பரிசாக கொடுத்து விடுவீர்கள்.

தங்கள் பெண் தோழிகளுடன் நேரத்தை செலவழிக்க மருமகள்கள் தங்கள் மாமியார்களிடம் கூறும் பொதுவான பொய்களில் இதுவும் ஒன்றாகும். வார இறுதியில் நண்பர்களை சந்திக்க வேண்டியிருந்தது. அப்படிப்பட்ட நேரத்தில் அலுவலகத்தில் அவசர வேலை இருக்கிறது என மாமியாரிடம் கூறி விடுவார்கள் விடுமுறை தினத்தில் திடீரென வேலை வருவது நடக்க கூடிய ஒன்று தான். ஆனால் அதையே ஒரு சாக்காக வைத்து உங்கள் நண்பர்களை சந்திக்க நீங்கள் செல்லலாம் தானே!

தங்கள் மாமியாரிடம் தன்னை நிரூபிக்க தன்னை எல்லோரும் இப்படி அப்படி என் புகழ்வார்கள் என பல மருமகள்கள் பொய் கூறுவார்கள். ஆம், தங்களின் திறமையை கண்டு அனைவரும் புகழ்ந்துள்ளனர் என்று தாங்கள் பொய் கூறுவதாக சில பெண்கள் ஒத்துக்கொண்டுள்ளனர். இன்னும் என்ன? திருமணமான பெண்கள் மட்டுமல்லாது திருமணமாக போகும் பெண்களும் கூட தங்கள் மாமியாரிடம் நல்ல பெயரை வாங்க இப்படி பொய் கூறுவார்கள்.

குழந்தைகளை உங்களால் தான் நல்ல படியாக வளர்க்க முடியும் குழந்தைகள் பிறந்து விட்டால், உங்களுக்கு அரக்கர்களாக தெரிந்த மாமியார் நல்ல விதமாக தோன்றுவார்கள். குழந்தைகளை மிக அருமையாக பராமரிப்பதாக மாமியாரிடம் பெண்கள் கூறுவார்கள்.

பல நேரங்களில், குழந்தைகளை மாமியார்கள் பார்த்துக் கொள்வதற்காக பெண்கள் கூறும் பொய்கள். மாமியாருக்கும், தன் கணவனுக்கும் உள்ள நெருக்கத்தை ஒரு பெண் விரும்பாவிட்டாலும் கூட, தன் குழந்தையை பார்த்துக் கொள்ள உதவி வேண்டும் என்பதால், மாமியாரோடு அனுசரித்து செல்வார்கள் பெண்கள்.

பொய் சொல்வது நல்லதா கெட்டதா என்பது தெரியவில்லை.

ஆனால் மேற்கூறிய சில பொய்கள் கண்டிப்பாக சில நேரங்களில் சுவாரசியமாக தான் இருக்கும்.

கத்தரிக்காய் துவையல்

தேவையான பொருட்கள் :
பெரிய கத்தரிக்காய் - 1
உளுத்தம் பருப்பு - 2 தேக்கரண்டி
மிளகு - 1 தேக்கரண்டி
மிளகாய் வற்றல் - 3
புளி - நெல்லிக்காய் அளவு
பெருங்காயம் - சிறு துண்டு
எண்ணெய் - 3 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு

செய்முறை :

பெரிய முழு கத்தரிக்காயில் சிறிது எண்ணெய் தடவி அடுப்பில் வைத்து தோல் கருகும் வரை சுடவும்.

எண்ணெயில் பெருங்காயம், உளுந்து, மிளகு, மிளகாய் வற்றலை வறுக்கவும்.

சுட்ட கத்தரிக்காய் நன்றாக ஆறியதும் தோலை உரித்துக்கொள்ளவும்.

மிக்ஸியில் வறுத்த சாமான்களுடன், புளி, உப்பு சேர்த்து சற்று கரகரப்பாக அரைக்கவும்.

கடைசியில் சுட்ட கத்தரி சேர்த்து ஒரு சுற்று சுற்றி எடுக்கவும். நைசாக அரைக்க கூடாது.

சூப்பரான கத்தரிக்காய் துவையல் ரெடி.

வைனோனா மினசோட்டா

இது மினசோட்டா மாநிலத்தில் தென்கிழக்குப் பகுதியில், மினியாபொலிஸ் நகரிலிருந்து ஏறத்தாழ 135 மைல்கள் தொலைவில், மிசிசிப்பி பேராற்றின் மேற்புற மடைக்கரை பள்ளத்தாக்கில் அமைந்திருக்கும் ஆற்றங்கரை நகரம்.

இயற்கையாகவே பல மில்லியன் வருடங்களுக்கு முன்னால் செதுக்கப்பட்டப் பள்ளத்தாக்கில் பழமையும், நவீன நகர வசதிகளையும் ஓரிடத்தில் கொண்ட இடமாக அமைந்துள்ளது.

இவ்விடம் இரண்டு பல்கலைக்கழகங்களும் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியும் உண்டு. பார்க்க வருபவர்கள் குறைந்த நேரத்தில் பார்ப்பதானால் Gavin Heights எனப்படும் மலைக்குன்றிலிருந்து இயற்கை அன்னையின் எழிலான நீள்கூந்தல் போன்று பரவியிருக்கும் மிசிசிப்பி ஆற்றையும், மேலும் கிழக்குக்கரையில் விஸ்கொன்சின் மாநிலத்தையும் பார்வையிடலாம்.

வைனோனாவை உல்லாசமாகச் சுற்றி வர அரை நாளிலிருந்து, ஓரிரு நாட்களும் தங்கி வரலாம். இவ்விடம் இயற்கையின் எழிலையும், பன்னிறம் தோய்க்கும் கண்ணாடித் (stain glass studios) தொழிலாளர்களின் கைவண்ணங்களையும் பார்வையிடலாம்.

இயற்கையை ரசிப்பவர்கள் வெளிப்புற முகாமிடவும் (Campgrounds) ஆற்றங்கரையில் இருக்கவும் பலபூங்காக்கள் இவ்விடம் உண்டு.

பிரதான இடங்கள் Great River Bluffs State Park, Pla-Ma Campground Prairie Island Campground மற்றும் Whitewater State Park ஆகியவை. மாநில வனப்பாதுகாவலர் அனுமதியுடன் (Department of Natural Resources DNR, MN State Park Permit) இவ்விடங்களை பாவிக்கலாம்.

உணவகக் குறிப்பு

உணவகங்களைப் பொறுத்தளவில் பெரும்பான்

மையாக அமெரிக்க உணவுகள் காணப்படினும், தமிழ் மக்கள் காரமான உணவு சாப்பிட வேண்டின் Little Thailand, Golden China மற்றும் மெக்சிகன் உணவகங்கள் உண்டு. மேலும் Hy-Vee னும் காய்கறி, உணவுப்பொருள் கடையும், சந்தை வசதிகளும் உண்டு.

வர்ணம் தீட்டுவோம்

உலகப் பழமொழிகள்

★ நாம் எப்போது ஆரம்பிப்பது என்று நினைக்கும்போது, அதுவே மிகுந்த தாமதமாகிறது.

★ அவர்களுடைய இழப்பிற்காக நான் துக்கப்படுகிறேன்.. ஆனால் மிக அதிகமாக நான் காலம் இழந்ததற்கே துக்கப்படுகிறேன். எவரும் தங்கள் பணப்பையைக் காத்துக்கொள்ள முடியும் ஆனால், இழந்துபோன காலத்தை ஒருவரும் மீண்டும் சொந்தமாக்கிக்கொள்ள முடியாது.

★ மூன்று நாளைக்குப் பின் ஒரு பெண், ஒரு விருந்தினர், மழை மூவரும் களைப்படையச் செய்கின்றனர்.

★ கண்ணீரால் கடினமான வைரத்தையும் உருக்கலாம்.

★ எங்கே சுதந்திரம் வீழ்கிறதோ அங்கே ஒருவரும் தைரியமாகப் பேச மாட்டார்கள்.

★ மரியாதைகளும் ஒரு சுமையே.

★ சிங்கப் படையை ஒரு கலைமான் ஏற்று நடத்துவதைவிட கலைமான்களின் படையை சிங்கம் தலைமையேற்று நடத்திச் செல்வது மிகப் பயங்கரமானதாக இருக்கும்.

★ இன்று எனக்கு. நாளை உனக்கு.

★ இரவும் தனிமையும் முழுக்க சாத்தான்களுடையன.

★ நமக்கு மேலே உள்ள விஷயங்களும், நமக்குக் கீழேயுள்ள விடியல்களும் நமக்கு ஒன்றும் இல்லை.

★ அதிகமாகத் தெரிந்துகொண்டிருப்பதைவிட குறைவாகத் தெரிந்துகொண்டிருப்பவர் இழப்பது மிகவும் சிறிதளவே.

★ நிதானமாக ஆத்திரப்படு.

★ பூமாலையில் உராய்ந்தால் பூ ஆதாரம்.

★ ஆபத்து இல்லாமல் ஆபத்தை கடக்க முடியாது.

★ செங்குத்தான மலைகள் முன்னாலே, ஓநாய்கள் பின்னாலே.

★ ஆலாபனை இனிய பண்ணிசைப் பாடலின் நாற்றங்கால்.

★ அறிவாளிகளால் உணர்வுகள் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்படுகின்றன. ஆனால், முட்டாள்களால் பரிமாறப்படுகின்றன.

★ வீரம் குறைந்த நெஞ்சம் ஒருபோதும் அழகிய மங்கையைச் சேர்ந்தமாக்கிக் கொள்ளாது.

★ அழகிய முகமும் நல்ல அதிர்ஷ்டமும் ஒரே வழியில் பயணம் போகாது.

★ அழுவதிலும் நிச்சயம் இன்பம் இருக்கிறது.

★ மனிதன் இடத்தை அழகுபடுத்துகிறான். இடமல்ல மனிதனை அழகுபடுத்துவது.

★ உன்னுடைய அரிவாள் தீட்டப்பட்டால் உன் வேலை தாமதமாகாது.

★ அதிர்ஷ்டம் நிலையில்லா மனத்தினள். அவளால் கொடுக்கப்பட்டதை திரும்பவும் வேகமாக்க் கேட்கிறாள்.

★ உண்மை வெறுப்பை வளர்க்கிறது. செல்வச் செழிப்பு செருக்கை வளர்க்கிறது. பாதுகாப்பு அபாயத்தை வளர்க்கிறது.

★ ஒரு மனிதனை மிகவும் அதிகமாக அதிர்ஷ்டம் சீராட்டும்போது அது அவனை முட்டாளாக்குகிறது.

★ அதிர்ஷ்டம் ஒரு கண்ணாடி. அது ஒளிவீசும் தருணத்தில் உடைந்து போகிறது.

கொம்பேறி மூக்கனுக்கு விஷமுண்டா?

கொம்பேறி மூக்கன் படுபயங்கர விஷப்பாம்பு என்கிறார்களே... உண்மையா?

தெற்காசியாவில் அதிகளவில் கொம்பேறி மூக்கன் பாம்பு காணப்படுகிறது. இந்த பாம்பைப் பற்றிய விநோத நம்பிக்கைகள் மக்களிடம் உண்டு.

கொம்பேறி மூக்கன் பாம்பு, ஒரு மனிதரைக் கடித்துவிட்டால் உடனே சரசரவென ஓடி (தவழ்ந்துதான்) சுடுகாட்டுக்கு அருகில் உள்ள மரத்தின் மீது ஏறிக் கொள்ளுமாம். தனது பைனாகுலர் போன்ற கூர்மையான கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு, கூர்ந்து பார்த்துக் கொண்டே இருக்குமாம்.

கடிபட்ட ஆசாமி, நுரை கக்கி, செத்து, அவரை சுடுகாட்டுக்கு எடுத்து வரும் வரைக்கும் அந்த இடத்தை விட்டு ஆடாமல் அசையாமல் காத்துக் கொண்டிருக்குமாம். ஆசாமியின் உடலை எரித்து, அதனால் ஏற்படும் புகையைப் பார்த்த பின்புதான் மரத்தை விட்டு இறங்குமாம். இந்த (அதிசயப்) பாம்புக்கும் பெப்பே காட்டவும் அங்குள்ள மனிதர்கள் ஒரு ஐடியா வைத்திருக்கின்றனர். அந்தப் பகுதியில் வைக்கோலை போட்டுக் கொளுத்திவிடுவார்களாம். புகையைப் பார்த்து ஏமாந்த பாம்பு, தரையிறங்கி விட்டால் கடிபட்ட மனிதனுக்கு தானாகவே விஷம் இறங்கிவிடுமாம். இதுதான் அந்த நம்பிக்கை! ஆனால் அதற்கு விஷமே இல்லை.



சிங்கராஜா எதிர்பார்த்த மரியாதை

சிங்கராஜா கம்பீரமாக நடந்து வந்தது. வழியில் பார்த்த விலங்குகளும் பறவைகளும் வணக்கம் சொல்லிவிட்டுச் சென்றன.

பரவாயில்லையே, எனக்கு இன்னும் இந்தக் காட்டில் செல்வாக்கு நீடித்துக்கொண்டுதான் இருக்கிறது. வணக்கம் சொல்வதிலேயே அது தெரிகிறது என்று நினைத்தது சிங்கராஜா.

அப்போது அந்தப் பக்கமாக வந்த கரடி, சிங்கராஜாவைக் கவனிக்காமல் வேகமாகக் கடந்து சென்றது. உடனே சிங்கராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

கரடியே, இங்கே வா என்று காடு அதிரும்படி கர்ஜனை செய்தது.

குரல் கேட்டு, பயந்துகொண்டே ஓடிவந்தது கரடி.

என்னைப் பார்த்தும் பார்க்காததுபோல் செல்லும் அளவுக்கு நீ பெரியவனாகிவிட்டாயா? அரசருக்கு வணக்கம் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையான நாகரிகம் கூட உனக்குத் தெரியாதா? என்று கோபத்துடன் கேட்டது சிங்கராஜா.

மன்னியுங்கள் சிங்கராஜா. என்னுடைய குட்டியைக் காணவில்லை. அந்தத் துயரத்தில் இருந்ததால் உங்களைக் கவனிக்கவில்லை. இப்போது வணக்கம் சொல்லிவிடுகிறேன் என்று கை கூப்பியது கரடி.

என்னை விட உன் குட்டி காணாமல் போனதுதான் உனக்குப் பெரிய விஷயமாக இருக்கிறதா? இந்த ஆணவத்துக்குச் சரியான தண்டனையை இப்போதே அளிக்கிறேன். யாரங்கே, உடனே சபையைக் கூட்டுங்கள் என்று உத்தரவிட்டது சிங்கராஜா.

சற்று நேரத்தில் சபை கூடியது. விலங்குகளும் பறவைகளும் என்ன நடக்குமோ என்ற பதற்றத்தில் அமர்ந்திருந்தன.

இன்று நானே வழக்கு கொண்டு வந்திருக்கிறேன். கரடி எனக்கு வணக்கம் செல்லாமல், ஆணவமாக நடந்துகொண்டது. இதற்குத் தண்டனையாகக் கரடியைக் காட்டிலிருந்து விலக்கி வைக்கிறேன். ஒரு மாதத்துக்குப் பிறகு, என்னிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு மீண்டும் காட்டுக்குள் வசிக்கலாம் என்று தீர்ப்பு வழங்கியது சிங்கராஜா.

சிங்கராஜா, மன்னியுங்கள். நேற்று கரடியின் குட்டி காணாமல் போய்விட்டதால், துயரத்தில் உங்களைக் கவனிக்கவில்லை. மற்றபடி உங்களை மனத்தளவில் கூட அவமரியாதை செய்ய வேண்டும் என்று நினைக்காது கரடி என்று புலி கூறியது.

இப்படிக் கரடிக்கு ஆதரவாக யாராவது பேசினால், அவர்களுக்கும் தண்டனை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒரு மாதமும் கரடியிடம் யாரும் பேசக் கூடாது என்ற சிங்கராஜா, வேகமாகச் சபையை விட்டு வெளியேறியது.

கரடிக்கு உதவ முடியாத வருத்தத்தில் விலங்குகளும் பறவைகளும் கலைந்து சென்றன. காட்டின் எல்லைக்குச் சென்று வசிக்க ஆரம்பித்தது கரடி.

ஒரு வாரத்துக்குப் பிறகு, வன உலாவுக்குக் கிளம்பியது சிங்கராஜா. திடீரென்று காலில் ஏதோ குத்தியதுபோலிருந்தது. உடைந்த கண்ணாடி சீசா, சிங்கராஜாவின் பாதத்தைக் கிழித்துவிட்டது. ரத்தம் கொட்டியது. வலி உயிர் போனது.

சிங்கராஜாவின் அலறலைக் கேட்டு புலி வந்தது.

உடனே வைத்தியரை அழையுங்கள். ரத்தம் கொட்டுகிறது. வலியைத் தாங்க முடியவில்லை என்றது சிங்கராஜா.

கரடி வைத்தியர் காட்டுக்குள் இல்லை ராஜா. உங்கள் தண்டனைக்காக எல்லையில் இருக்கிறது.

உடனே அழைத்து வாருங்கள்.

பேசினால் தண்டனை என்று சொன்னீர்களே.

ஐயோ விவாதிக்க இது நேரமில்லை. இப்போதே கரடி வந்தாக வேண்டும். இது என் உத்தரவு.

அடுத்த ஒரு மணி நேரத்தில் கரடி வந்து சேர்ந்தது. சிங்கராஜாவுக்கு வணக்கம் சொன்னது. மருந்து போட்டது.

சிங்கராஜா, ஒரு வாரத்துக்குத் தினமும் மருந்து வைத்துக் கட்ட வேண்டும். அப்போதுதான் குணமாகும். ஆனால், தினமும் என்னால் எல்லையில் இருந்து வர இயலாது. அதனால் நீங்களே மருந்துக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள் என்றது கரடி.

தண்டனை பெற்றும் ஆணவம் மட்டும் குறையவில்லைபோலிருக்கிறது என்றது சிங்கம்.

நான் என்ன தவறு செய்தேன்? எனக்கு அளிக்கப்பட்ட தண்டனை அநியாயம் என்பது இந்தக் காட்டுவாசிகளுக்கும் ஏன் உங்களுக்கும் கூடத் தெரியும். ஆனால், நான் அநாவசியமாகத் தண்டனையை அனுபவித்து வருகிறேன். மருத்துவரின் கடமை உயிரைக் காப்பாற்றுவதுதான் என்பதால் கூப்பிட்ட உடனே ஓடிவந்தேன். எல்லையிலிருந்து என் குட்டியை விட்டுவிட்டு வர முடியாது. மன்னியுங்கள் என்று சொல்லிவிட்டுக் கிளம்பியது கரடி.

கரடியே, சற்று நில்லு. இப்போதே உன் தண்டனையை ரத்து செய்கிறேன். இனிமேல் யாருக்கும் இப்படி அநாவசியமாகத் தண்டனை அளிக்க மாட்டேன். மரியாதை என்பது தானாக வரவேண்டும், கேட்டுப் பெறக் கூடாது என்பதையும் புரிந்துகொண்டேன் என்று வலியுடன் கூறியது சிங்கராஜா.

நன்றி சொன்ன கரடி, தினமும் சிங்கராஜாவின் காலுக்கு மருந்து போட்டு, ஐந்தே நாட்களில் குணப்படுத்திவிட்டது.

கண்டுபிடியுங்கள்!

கீழே உள்ள 10 குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட நாட்டைக் குறிக்கின்றன. அது எந்த நாடு என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. வடக்கு ஆப்பிரிக்காவில் மத்திய தரைக் கடல் பகுதியில் அமைந்துள்ள நாடு.

2. இந்த நாட்டின் 80% நிலம் சகாரா பாலைவனமாக இருக்கிறது.

3. 1962-ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிடமிருந்து விடுதலை பெற்றது.

4. பேரீட்சை, செர்ரி அதிகம் விளைவதால், இது 'பேரீட்சைகளின் நாடு' என்று அழைக்கப்படுகிறது.

5. இதுவரை 15 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று, 15 பதக்கங்களைப் பெற்றிருக்கிறது. இதில் 5 தங்கப் பதக்கங்களும் உண்டு.

6. Albert Camus இலக்கியத்துக்கும் Claude Cohen-Tannoudj இயற்பியலுக்கும் நோபல் பரிசு பெற்றிருக்கிறார்கள்.

7. மற்ற ஆப்பிரிக்க நாடுகளை விட இந்த நாட்டில் பெண்கள் அதிகம் படிக்கிறார்கள், உயர்ந்த பதவிகளில் இருக்கிறார்கள்.

8. தேசிய விலங்கு ஃபென்னெக் நரி. இது பாலைவனங்களில் வசிக்கும் சிறிய வகை நரி.

9. கொடியில் இருக்கும் சிவப்பு, சுதந்திரப் போராட்ட வீரர்களையும், பச்சை இயற்கையையும், வெள்ளை அமைதியையும், சிவப்புப் பிறை, நட்சத்திரம் இஸ்லாமிய நாடு என்பதையும் குறிக்கிறது.

10. மிகப் பெரிய நதி செலிஃப். பரப்பளவில் ஆப்பிரிக்காவின் மிகப் பெரிய நாடு, உலக அளவில் பத்தாவது பெரிய நாடு.

விடை: அல்ஜீரியா

விடுகதைகளும் விடைகளும்

1) குண்டு முழி ராசாவிற்கு குடலெல்லாம் பல். அது என்ன?

2) ஊசி நுழையாத கிணற்றில் ஒரு ஆழாக்கு தண்ணீர் அது என்ன?

3) உயரப்பறக்கும். ஊன்றுகோலில் நிற்கும். அது என்ன?

4) நடைக்கு உவமை, நளனின் தூது வன். அது என்ன?

5) மூடிய அரங்குக்குள் முத்துச்சிப்பிகள் அது என்ன?

6) திரவமாகப் பிறந்தான். புகையாய் மறைந்தான். அது என்ன?

7) இருட்டு வீட்டில் முரட்டுச் சிப்பாய் அது என்ன?

8) பகலில் துயிலுவான், இரவில் அலறுவான் அது என்ன?

9) பாடத் தெரிந்தவனுக்கு ஆடத் தெரியாது. ஆடத்தெரிந்தவனுக்குப் பாடத் தெரியாது. அது என்ன?

10) பதுக்கி வைத்த முத்துக்கள் எங்கே, பவள வாய் திறந்து பார்ப்போமா? அது என்ன?

விடைகள்

1) மாதுளம்பழம்

2) இளநீர்

3) கொடி

4) அன்னம்

5) வாய், பற்கள்

6) பெட்ரோல்

7) பூட்டு

8) ஆந்தை

9) மயில், குயில்

10) பற்கள்

சிறுவர் பாடல்கள்

மயிலே மயிலே ஆடிவா

மயிலே மயிலே ஆடிவா
மழை வரப்போகுது ஆடிவா
தோகை விரித்தபடி ஆடிவா
முடிந்தால் முருகனையும் ஏற்றிவா
கிளியே கிளியே பறந்துவா
கொந்தல் பழங்கள் நான்தருவேன்
கொண்டைக்கிளியே பறந்துவா
கீ கீ என்றே பறந்துவா
குயிலே குயிலே பாடிவா
தேனிசையாய் பாடிவா
மயிலார் உண்டு நடனமாட
குயிலே குயிலே பாடிவா
புறாவே புறாவே இறங்கிவா
கரணம் அடித்து இறங்கிவா
தானியம் நிறைய நான் தருவேன்
தகவல் ஒன்று சொல்லிவிடு
அம்மம்மாவிடம்
தகவல் ஒன்று சொல்லிவிடு.

இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்

இவ்வாரம் 2ம் குரு பார்வையால் தனலாபம், பொருள் வரவு, வெளிநாட்டு நிதி சேர்கை உண்டு. ஜென்ம வெள்ளி அஷ்டமத்து வியாழன் இருப்பதால் தேகம் புது வீரியம் பெறும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு அதிகாரம் கொள்வர். தனுஸ் தானத்தைக் குரு நோக்குவதால் வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் , கூட்டு வாணிபத்தையும் மேற் கொள்ளலாம். விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு பயிர் உற்பத்திகளை பெருக்கலாம்.

7ம் களத்திர சப்தம பாவத்தில் குரு சஞ்சரிப்ப தால் களத்திர சுகம், இல்லறம் நன்கு அமையும். கணவன், மனைவி கருத்து ஒற்றுமை , பிள்ளைக ளுடன் அன்பு, பாசம் நிலவும். அஷ்டமத்தில் சனி குஜன் இருப்பதால் ஆயுட் பலம் உண்டு. உத்தியோ கத்தர் தம் பணிகளில் புது உத்வேகம் அடைந்து ஏற் றம் காண்பர். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்க ளின் வரவு கூடும். விவசாயிகளுக்கு அரச மானியம் உரிய வேளையில் கிடைக்கும்.

இவ்வாரம் 7இல் களத்திர (சப்தமத்தில்) செவ் வாய், சனியுடன் பகைபெற்று மறைவதாலும், குரு சத்துரு பாவத்தில் மறைவுற்று இருப்பதாலும் புரு ஷன், மனைவியிடையிலேயே கருத்து மோதல் கள் அவ்வவ்போது தோன்றி மறையும். எதிலும் நிதானத்துடன் செயல்பட்டு நன்மை பயக்கும். உத்தியோகத்தர்க்கு கணிசமான வேலைப்ப ழுவும், மேலதிக வேலையும் கிடைக்கும். ல சி ரமங்கள் ஏற்படும்.

இவ்வாரம் ஜென்மராகு , கண்டகதேது தோஷம் இருப்பதால் தேகாபிமானம் அவசியம். கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை உண் டாகும். புத்தி, புத்திர ஸ்தானத்தில் குரு சஞ்ச ரிப்பதால் புத்தி பலம் கூடும். புத்திரர் உதவி, அனுகூலம் கூடும். ஜீவன பாவத்தில் வெள்ளி உச்ச யோகம் பெறுவதால் செய்தொழில் விருத்தி இலாபம், சேமிப்பு வங்கி இருப்பு , நிதி வசதி கள் மன நிறைவைக் கொடுக்கும். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் அடைவர்.

இவ்வாரம் 4ம் சுக மாதுரு பாவத்தில் குரு கண்டக தோஷம் 5 இல் சனியுடன் பகைச் செவ் வாய் தோஷம் , அட்டமத்தில் சூரியன் , புதன் தோஷமிருப்பதால் தேகாபிமானம் அவசியம். கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை பயக் கும். 9ம் பிதுர் பாவத்தில் வெள்ளி இருப்பதால் பிதாவழி உதவி, அனுகூலம், தர்ம காரியங்களில் ஈடுபாடு, ஆர்வம் நோன்பு , விரதம் அனுஷ்டித் தல் ஆலய தரிசனம் முதலியன கிட்டும். ஆசிரி யர் , மாணவர், பெற்றோர் உறவு வளரும்.

இவ்வாரம் செய்தொழில் விருத்தி , இலா பம் சேமிப்பு கிட்டும். ஈடுபடும் கரும காரியங் கள் யாவும் சிரமத்தின் மத்தியில் நடைபெறும். தொழில் ஸ்தானத்தை குஜன், சனி நோக்குவ தால் உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை அதிகரிக்கும். அதிகாரிகளின் பாராட்டையும் பெறுவது கடினமாகும். வியாபாரிகள் புதிய முதலீ டுகளையும், கொள்முதல்களையும் மட்டுபடுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு அரச மானியம் உரிய வேளையில் வந்து சேராது.

2ம் தன குடும்ப பாவத்தில் குரு இருப்பதால் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன குடும்பம் அபிவிருத்தி அடையும். ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் சிரமமின்றி நிறைவேறும். சத் துரு பாவத்தில் புதன், ரவி சஞ்சரிப்பதால் சத் துரு ஜெயம் , ரோக நிவர்த்தி உண்டாகும். 7இல் வெள்ளி சுகத்தால் கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயம் பெற்று, திருமண சமந்தமான நிகழ்வுகள் நடைபெறும்.

ஜென்ம குரு , ஏழரை கடைக்கறு 5இல் ரவி தோஷமிருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்ய வேண்டும். உத்தியோகத்தர்க்கு கணிசமான வேலைச்சுமையும், மேலதிக வேலையும் கிடைக் கும். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் நல்ல ஆதாயத்தை கொடுக்கும். விவசாயிகளுக்கு அரச மாணியம் உடன் வந்து சேரும். சத்துரு ஸ்தா னத்தில் வெள்ளி சஞ்சரிப்பதால் சத்துரு ஜெயம், ரோக நிவர்த்தி உண்டு.

இவ்வாரம் 1ம் ஜென்மத்து பகை செவ்வாய் சனியுடன் சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டாகும். தேகாபிமானம் அவசியம். அல்லாவிடின் வைத்திய செலவைக் கொடுக் கும். ஜீவன ஸ்தானத்தைக் குரு , வெள்ளி , புதன் நேரடியாக நோக்குவதால் செய்தொழில் விருத்தி , மேன்மை , நிதிவரவு , வங்கி வசதிகள் நிறைவைக் கொடுக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்க ளின் வரவு அதிகரிக்கும். விவசாயிகளுக்கு அரச மானியம் உடன் வந்து சேரும்.

11ம் இலாப பாவத்தில் குரு 4இல் வெள்ளி சஞ்சரிப்பதால் தொழிலால் இலாபம் வங்கி வசதி கள் அதிகரிக்கும். உத்தியோகத்தர் பதவிச்சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வார். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் நல்ல ஆதாய முன்னேற்றம் காண்பர். அரச உதவிகள் , வங்கிக் கடன்கள் கிடைக்கும். குடும்பப் பெண்களின் இல் லற நிர்வாகம் நன்கு நடைபெறும். சிவில் வழக்கு விடயங்களில் சாதக நிலை தோன்றும்.

2ம் தனபாவத்தில் நீச புதன், சூரியன் (ரவி) சஞ்சரிப்பதால் தனலாபம், பொருள்வரவுண்டு. மனை, வாகன , குடும்பம் அபிவிருத்தியடையும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். குடும்பத்தில் ஒற்றுமை, நிம்மதி நிலவும். உத்தியோகப் பெண் களும் தம் பணிகளில் உத்வேகமடைந்து ஏற்றம் காண்பர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ப இலாப அடைவர். ஆசிரியர், மாணவர் , உறவு வளரும். குடும்பப் பெண்களுக்கு புருஷன், மனைவி ஒற் றுமை நிலவும்.

ஜென்ம ராசியில் ரவி புதன் சுபர்கள் சஞ்சரிப் பதால் தேகம் புதுப்பொழிவு அடைந்து வீரியம் பெறும். 10 ம் தொழில் ஜீவன தர்ம பாவத்தில் குஜன் சனியும், தர்ம 9ம் பாவத்தில் குரு சஞ்சரிப் பதால் செய்தொழில் விருத்தி , இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் ஏற்படும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும், கொள்முதல்களையும் தொடங்க லாம். விவசாயிகள் விளைப்பொருட்களை சந்தைப் படுத்தலினால் நல்ல ஆதாய முன்னேற்ற அடை வர்.

கண் திருஷ்டியைப் போக்கும் பரிகாரங்கள்

இல்லாதவன் இருப்பவனை பார்த்து பெருமூச்சு விடுவதும்..ஏக்கப்பார்வை பார்ப் பதும், கண்களால் கண்டு பொறாமைப்ப டுவது கண்பார்வை திருஷ்டி எனப்படும்... கிராமங்களில் இதனை எப்படி கழிக்கிறார் கள் என பார்ப்போம்.

சிலர் கல் உப்பு கொஞ்சம் எடுத்து தலையை 3 முறை சுற்றி ஓடும் தண்ணீரில் போடுவார்கள்..பிறந்த குழந்தைகளுக்கு ஒரு வேஷ்டி துணி சிறிது கிழித்து திரி செய்து திரியை தலை முதல் கால் வரை வலது புறம் தடவி மற்றொரு திரியை இடதுபக்கமாக தடவி அதனை சுவர் ஓரமாக வைத்து எரிய விடவும். குழந்தை அழாமல் தூங்கி விடும்.

குடும்பத்தில் இருக்கும் அனைவரின் தோஷம் நீங்க, தெரு மண் கொஞ்சம் எடுத்து கடுகு, உப்பு, மூன்று காய்ந்த மிளகாய் எல்லாம் சேர்த்து கிழக்கு பார்த்து அமர்ந்து மூன்று முறை எல்லோரையும் சுற்றி எரியும் விறகு அடுப்பில் போட்டுவிடவேண்டும். இது கண் திருஷ்டியை போக்கும். இதை செவ்வாய் அல்லது ஞாயிற்றுக்கிழமையில் செய்வார்கள்.

நம் வீட்டிற்குள் கெட்ட சக்தி நுழை யாமல் தடுக்கவும், கெட்ட எண்ணம் உடைய மனிதர்களின் தாக்கம் பாதிக்கா மல் இருக்கவும், கண் திருஷ்டி விலக வும் வீட்டு வாசலில் பௌர்ணமியில் நீர் பூசணி கட்டி தொங்கவிடலாம். வளர்பிறை வெள்ளிக்கிழமையில் காலை 9 மணிக்கு கற்றாழை கட்டி தொங்கவிடலாம்...வாச லுக்கு மேல்...ஒரு எலுமிச்சை, ஒரு பச்சை மிளகாய் என மாற்றி மாற்றி 3 எலுமிச்சை நான்கு பச்சை மிளகாய் என கெட்டியான கயிறில் கோர்த்து தொங்கவிடலாம்...செவ் வாய் கிழமையில் இதை செய்யலாம். சிலர்

படிகாரக்கல், வெள்ளெருக்கு வேர், மருதா ணிக்கட்டை சேர்த்தும் தொங்க விடுவர்.

மூன்று வயது குழந்தை வரை கன்னத் தில் கருப்பு பொட்டு வைத்துவிடுவர். இதுவும் கெட்ட கண் பார்வையை தடுக் கும்...நாமும் வெளியே செல்லும்போது கருப்பு பொட்டு சிறிது வைக்கலாம்.. அந்த கருப்பு பொட்டு ஹோம குண்டத்தில் எடுக் கப்பட்ட சாம்பலாக இருக்க வேண்டும். அதனை நெய்யில் கலந்து இட்டுக்கொள்ள வேண்டும்.

முருக வழிபாடும் நோன்புகளும்

ஒருமுறை வசிட்ட முனிவர், தன்னிடம் வந்த முசுகுந்த சக்கரவர்த்திக்கு முருகனுக்குரிய நோன்புகளைப் பற்றிக் கூறினார். வாரத்தின் 7 நாட்களுள் வெள்ளிக்கிழமையன்று செய்யப் படும் நோன்பு சிறப்பானது. இது முருகக் கட வுளுக்கு உரிய நோன்பாகும். இந்நோன்பை நோற்று பகீரதன் தன் அரசை மீண்டும் பெற் றான்.

முன்னொரு காலத்தில் நாரதமுனிவர் விநாய கரிடம் வந்தார். ஏழு முனிவர்களை காட்டிலும் உயர்ந்தவராக தான் ஆவதற்கு என்ன செய்ய வேண்டும் எனக்கேட்டார். அதற்கு விநாயகர், முருகனுக்குரிய கார்த்திகை நோன்பினை நோற் கும்படி சொல்லியருளினார். அந்நோன்பை இயற்றுபவர் பரணிநாள் பகலில் நீராட வேண்டும். ஒரு வேளை மட்டும் உணவு சாப் பிட வேண்டும். வெள்ளை நிற ஆடை அணிய வேண்டும்.

கார்த்திகை நாள் காலையில் நீராட வேண் டும். நாணல் புல்லில் இரவில் படுக்க வேண் டும். முருகன் திருவடிகளையே உறக்கமின்றி நினைத்திருக்க வேண்டும்.இந்த முறைப்படியே நாரத முனிவர் நோன்பிருந்தார். ரோகிணி நாள் அன்று முனிவர்களோடு சேர்ந்து உணவு உண் டார். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் நோன் பிருந்தார். முருகன் அருளால் ஏழு முனிவர் களை காட்டிலும் உயர்ந்தவர் ஆனார்.

இது போல கார்த்திகை நோன்பு இருந்த வர்கள் பலர். அவர்கள் முருகனின் அருளால் மேன்மைகள் பலவற்றை அடைந்தனர். முருக னுக்குரிய நோன்புகளும் சஷ்டியும் ஒன்று. ஐப் பசி மாதம் சுக்லபட்ச பிரதமை நாள் முதலாக ஆறு நாட்கள் முறையாக நீராட வேண்டும். உண்ணாதிருக்க வேண்டும். மோதகம் செய்து படைத்து முருகனை வழிபட வேண்டும். இதுவே சஷ்டி நோன்பு ஆகும்.

பாவக்கழுவாய் பண்டிகை

மக்களுடைய பாவங்களுக்கு பரிகாரம் செலுத்துகின்ற விழா தான் 'பாவக்கழுவாய் விழா' என அழைக்கப்படுகிறது.

ஆண்டவர் மோசேயிடம், ஏழாம் மாதம் பத்தாம் நாள், பாவக்கழுவாய் நாள். புனித ச பை கூடும் நாள். அன்று நீங்கள் உங்களையே தாழ்த்திக்கொண்டு, ஆண்டவருக்கு எரிபலி செலுத்த வேண் டும். அந்த நாளை ஓய்வு நாளாய் அனுச ரிக்க வேண்டும் என கட்டளை கொடுத் தார்.

அது மிகவும் முக்கியமான நாளாகக் கொண்டாடப்பட்டது. அந்த பலியில் பங்கு பெறாதவர்கள் அழிக்கப்படுவார் கள். உயிர் வாழவேண்டுமென்றால் அந்த பண்டிகையைக் கடைப்பிடித்தே ஆக வேண்டும் எனுமளவுக்கு அந்த விழா கடு மையாக கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

கடவுளின் ஆலயத்தில் தூயகம், அதா வது மகா பரிசுத்த ஸ்தலம் ஒன்று உண்டு. அங்கே யாரும் நுழைய முடியாது. தூய கத்துக்கு முன்னால் ஒரு தொங்கு திரை இருக்கும். அதைத் தாண்டி யாராவது நுழைந்தால் கடவுளால் அவர்கள் கொல் லப் படுவார்கள்.

அந்த நாளில் மோசேயின் சகோதரர் ஆரோன் என்பவர் தான் பலி செலுத்தும் அனுமதி பெற்ற குருவாக இருந்தார். அவர் அந்த தூயகத்துக்கு நுழையும் முன் இரண்டு பலிகளைச் செலுத்த வேண்டும்.

நன்றாகக் குளித்து சுத்தமானபின், நார்ப்பட்டினாலான ஆடைகளைத் உடுத்த வேண்டும். கச்சை, தலைப்பாகை போன்ற வற்றை அணிய வேண்டும். முதலில் அவர் ஒரு காளையைப் பலியிட்டு தனக்கும், தன் குடும்பத்துக்கும் இருக்கும் பாவக்கறை களை நீக்க வேண்டும்.

அதன்பின் இரண்டு வெள்ளாட்டுக்

கிடாக் களைக் கொண்டு வருவார். அதில் ஒரு ஆடு பலியாகப் போகும் ஆடு. இன் னொன்று போக்கு ஆடாக அனுப்பப் படப் போகும் ஆடு.

பலி கொடுக்கப்படுவதெற்கென தெரிந்து கொள்ளப்பட்ட ஆட்டை முதலில் ஆரோன் அடிப்பார். அந்த ரத்தத்துடன் தான் தூயகத்தில் தொங்கு திரையைத் தாண்டி அவர் நுழைய முடியும். அவர் ஒற்றை ஆளாக தனி யாக தூயகத்தில் நுழைந்து சடங்கு களைச் செய்வார். அப்போது அந்த சந்திப்புக் கூடாரத்திலேயே யாரும் இருக்கக் கூடாது.

பின்னர் இரண்டாவது ஆடு கொண்டு வரப்படும். அதன் மீது ஆரோன் கைகளை வைப்பார். இஸ் ரேல் மக்கள் செய்த அத்தனை பாவங் களையும் அதன் மேல் சுமத்துவார். அந்த ஆட்டை ஒருவர் கொண்டு சென் று பாலை நிலத்தில் அலைய விடு வார். பின் அவர் குளித்து தூய்மையா னபின் ஊருக்குள் வருவார்.

அன்றைய தினம் முழுவதும் மக்கள் நோன்பிருந்து தங்கள் பாவங்க ளையெல்லாம் கடவுளிடம் அறிக்கை செய்து மன்னிப்பு கேட்பார்கள்.

இதுவே அன்றைய காலத்தில் கொண்டாடப்பட்ட பாவக்கழுவாய் சடங்கு விழா.

விவிலியத்தில் கொண்டாடப்படும் விழாக்கள் குறியீடுகளே. அவற்றுக் கான உண்மையான பொருள் மறை வாய் இருக்கும்.

இதுவும் இறைமகன் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடு கின்ற ஒரு விழா. பலியாகும் ஆடு, இறைமகன் இயேசு. அவர் கல்வா ரியில் பலியானார். அவர் பலியான போது ஆலயத்தின் தொங்கு திரை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந் தது. அதன் மூலம் கடவுளுக்கும் மக் களுக்கும் இடையேயிருந்த திரையை இறைமகன் இயேசு அழித்து விட்டார். கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே இப்போது நேரடியான உறவு இயேசு வின் மூலம் உருவாகி விட்டது.

அவரே பாவம் இல்லாத முதன்மை குரு, பிரதான ஆசாரியன். கிறிஸ்துவும் தலைமைக் குருவா கத் தம்மையே உயர்த்திக் கொள்ள வில்லை. நீர் என் மைந்தர், இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன் என்று அவரிடம் கூறியவரே அந்த மேன்மையை அவருக்கு அளித்தார் எனும் எபிரேயர் 5:5 வசனம் அதை தெளிவாக்குகிறது. இரண்டாவது ஆடு குறித்து பல்வேறு இறையியல் சிந்தனைகள் உலவுகின்றன. அதில் பெரும்பாலானோர் ஒத்துக் கொள் ளும் சிந்தனை, இரண்டாவது ஆடு 'சாத்தான்' என்பது. பாவம் மனுக்கு லத்தில் நுழைய முக்கிய காரணமாக இருந்தவன் சாத்தான். எனவே அவனே பாவத்தின் சுமையைச் சுமக்க வேண்டும். இயேசுவின் இரண்டாம் வருகையின் போது ஆயிரம் ஆண்டு கள் அரசாட்சி நடக்கும். அப்போது ச ாத்தான் கட்டி வைக்கப்படும். அதன் பின் சில காலம் கட்டவிழ்த்து விடப் படும் என்கிறது திருவெளிப்பாடு 20-ம் அதிகாரம்.

இன்றைக்கு இந்த விழா நமக்கு உணர்த்தும் பாடம், இறைமகன் இயேசுவின் பலியை உணர்ந்து கொள்வதும், அதன் மூலம் கிடைக் கும் மீட்பை அணிந்து கொள்வதும், பாவமற்ற ஒரு வாழ்க்கையை ஆரம் பிப்பதும் தான்.

இரண்டாம் வருகை எப்போது வரும் என்பதல்ல கேள்வி.

வந்தால் நாம் தயாராக இருக்கி றோமா என்பது மட்டுமே கேள்வி.

நீதியோடு வாழ்வோம்; நீதியைப் பெறுவோம்!

மனித நேயத்தை வலியு றுத்தும் மார்க்கங் களில் முன் னிலை வகிக்கிறது, இஸ்லாம். மக்களின் உரிமைகளைப் பறிப் பதையும், அவர்களின் உயிர், உடைமை, மானம் ஆகியவற்றை சேதப்படுத்துவதையும் அவர்கள் கொடுமைப்படுத்தப்படுவதையும் இஸ்லாம் தடைசெய்கிறது. அதற் கான பாவத்தை குற்றவாளி மீதே சுமத்துகிறது.

பிறரை பாதிக்கும்படியான செயலை செய்துவிட்டு, அதற் காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால் அந்த பாவம் மன்னிக்கப்படுமா? என்ற கேள் விக்கு,'மன்னிக்க மாட்டான்' என்ற பதிலே கிடைக்கிறது.

'மனித நேயம்' மட்டுமல்ல, அடுத்தவர் உரிமையை பறிக்கும்அதிகாரம் யாருக்கும் இல்லை என்று இஸ்லாம் ஆணித்தரமாக கூறு கிறது.

உலகத்தை படைத்து காத்துவரும் ஏக இறைவன் அல்லாஹ் ஒருவனே. தான் படைத்த உயிரினங்களின் மீது எல்லையில்லா அதிகாரம் அல்லாஹ்விடம் உள்ளது. இதுபற்றி திருக்குர்ஆனில் (40:2-3) இவ்வாறு கூறப்பட் டுள்ளது:

'இவ்வேதம் அல்லாஹ்விடம் இருந்து இறக்கி அருளப்பட்டிருக்கின்றது. அவனே வல்லமை மிக்கவன். அனைத்தையும் அறிந் தவன். பாவத்தை மன்னிப்பவன். பாவமன் னிப்புக் கோரி மீள்வதை ஏற்றுக்கொள்பவன். கடும் தண்டனையளிப்பவன். அருட்பேறு உடையவன். அவனைத்தவிர வணக்கத்திற் குரிய இறைவன் வேறுயாருமில்லை. அவனி டமே அனைவரும் திரும்பிச் செல்ல வேண்டி யிருக்கிறது'.

பாவம் செய்தவர்களின் பாவமன்னிப்பை ஏற்று மன்னிப்பை அளிப்பவன் இறைவன். ஆனால், ஒரு மனிதன் பிறருக்கு தீங்கு செய் துவிட்டு இறைவனிடம் பாவமன்னிப்புக் கேட்டால், பாதிக்கப்பட்ட நபர் மன்னிக்காத வரையில், இறைவன் மன்னிப்பதில்லை.

தவறு செய்த மனிதன் அழுது புரண் டாலும், நோன்பு நோற்றாலும், தொழுது அழுது மன்னிப்புக் கேட்டாலும், தீங்கு இழைத்த நபரை அல்லாஹ் மன்னிப்ப தில்லை. மன்னிக்கும் உரிமை தனக்கு இல்லை என்று இறைவன் கைவிரித்துவிடுகி றான்.

'அநீதம் செய்யப்பட்ட மனிதன் மன்னித் தால் ஒழிய இறைவன் மன்னிப்பதில்லை' என்பது நபிமொழி.

இது எத்தகைய உயரிய பண்பாடு. அகி லத்தை படைத்த இறைவன், அர்ப்பமான மனிதனுக்கு இந்த உரிமையை தருகிறான். காரணம், தன் படைப்பிற்கு அவன் அளித் துள்ள உரிமை. 'அநீதம் இழைக்கப்பட்டவ ருக்கும் இறைவனுக்கும் இடையில் எந்த ஒரு தடையும் இல்லை'. (புகாரி)

அடுத்தவரின் உரிமை என்பது, பொருட்களை எடுப்பதோ, தாக்குவதோ, துன் புறுத்துவதோ மட்டுமல்ல. ஒருவரைப்பற்றி பிறரிடம் புறம்பேசுவது, அவதூறு பேசுவது என மன ரீதியாக துன்புறுத்துவது ஆகும். ஒரு மனிதனின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப் பதும் துன் புறுத்தும் செயலாகும்.

இப்படிப்பட்டவர்களுக்கு என்ன தண் டனை கிடைக்கும் என்பதை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

'குறைசொல்லி புறம் பேசித் திரியும் ஒவ் வொருவனுக்கும் கேடு தான்'. (104:1)

புறம் பேசுவதை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் வெறுத் திருக்கிறார்கள் என்பது நபி மொழியாகும்.

'கோள் சொல்பவன் சுவனத்தில் நுழைய மாட்டான்'என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர் கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

பாரம்பரிய உணவுமுறை

உடல் ஆரோக்கிய த்திற்கும் விவசாய மறுமலர்ச்சிக்கும் வித்திடும்

இரத்தினம் நடராஜன்
அக்கரைப்பற்று

பண்டைய சிலோன் என்ற எமது சிலங்கா நாட்டில் மன்னர் ஆட்சிக்காலம் முதல் மக்கள் ஆட்சிக்காலம் வரை விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பராக்கிரம சமுத்திரம், சேனநாயக்க சமுத்திரம், மகாவலி மற்றும் சிறிய நடுத்தர விவசாயக் குறங்கள் யாவும் பாரிய நெற்செய்கைக்கு பாரிய பங்களிப்பினை நல்கிக் கொண்டிருக்கின்றன.

தற்போது எமது நாடு நெல் உற்பத்தியில் குறிப்பிட்டுச் சொல்லும் படியான வளர்ச்சியினை கண்டுள்ளதாக ஜனாதிபதி மட்டக்களப்பில் இடம்பெற்ற நாட்டுக்காக ஒன்றிணைவோம் என்ற செயற்திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார். இதேநேரம் இறக்குமதியாகும் கோதுமைமாவுக்கான விசேட வரி அறவிடப்படுவதாகவும் அரசு கூறியிருப்பதானது மக்கள் அரிசி உணவிற்கு மாறவேண்டும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பண்டங்களினால் எமது நாட்டின் தேசிய உற்பத்தி பாதிக்கப்படுவது மட்டுமல்லாது நாட்டின் செல்வங்கள் அந்நிய நாடுகளுக்கு சென்று கொண்டிருக்கிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியும், அச்சமற்ற சூழ்நிலையும் நெல் உற்பத்திக்காக அரசு உரமானியம் நெல்லுக்கான அதிகபட்ச விலை நிர்ணயம், கடன் திட்டங்கள் போன்றவைகளால் விவசாயத்துறை புத்துயிர் பெற்றுள்ளது. நாட்டின் விவசாய செய்கையில் அதிக பங்களிப்பினை குருநாகல், பொலன்நறுவை, மன்னார் உட்பட வட, கிழக்கு பிரதேசங்கள் காணப்படுகின்றது. இப்பகுதிகளில் தற்போது மக்கள் கூடுதல் நெற்செய்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். மாவட்ட அடிப்படையில் பார்போமாக இருந்தால், நெற்பயிர்ச் செய்கையில் குருநாகல் மாவட்டமே முதலிடத்தில் காணப்படுகின்றது. ஆனாலும் குறைந்தளவு நிலப் பிரதேசத்தில் கூடுதல் விளைச்சலைப் பெறும் மாவட்டமாக மன்னார் காணப்படுவதாக விவசாயத் தகவல்கள் கூறுகின்றது. இதற்கு அடுத்தபடியாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் அமைந்துள்ளது.

விவசாய உற்பத்திக்கு மழைவீழ்ச்சி, சூரியஒளி, மனிதவலு, வேலையாட்கள் பாரம்பரிய விதிமுறைகள், விஞ்ஞானப் பொறிமுறை, தற்காலத்திற்கு ஏற்புடையதான பயிர்பாதுகாப்பு அறுவடை, தானிய சேமிப்பு, சந்தைப்படுத்தல் போன்ற பிரதான காரணங்கள் துணை செய்கின்றது. தனி ஒருவர் விவசாயம் செய்கின்ற நிலையிலும் அங்கு ஒரு குழுமனித சக்தியின்வெளிப்பாடே விவசாய அறுவடை. ஆகவே விவசாய நடவடிக்கையானது பல மறைமுக தொழில் வாய்ப்புக்கு வித்திடுகின்றது.

அரிசிச் சோறு மனித உடலுக்கு போஷாக்கானது என ஆய்வுகள் கூறுகின்றது. இதில் சிவப்பு அரிசி பாவனையினை

எனலாம். மேற்கத்தையே பண்டங்களை கீழைத்தேய நாடுகளுக்கு விற்பனை செய்து பணம் சம்பாதிக்கும் யுக்தியினையே அவர்கள் கையாண்டுள்ளனர் எனலாம். இன்று நாம் இந்த உணவிற்கு அடிமையாகி விட்டோம். பாண் என்ற றொட்டி அறிமுகமாகியதும் வெதுப்பகங்கள் தோன்றியதும் அந்நியர்களின் வருகைக்குப் பின்பு என உறுதியாகச் சொல்ல முடியும்.

எமது சமுதாயத்தின் உணவுத் தேவை பெரும்பாலும் கோதுமைத் தானியத்திற்கு சென்று கொண்டிருக்கின்றது. இது தவிர்க்கப்படும் போதுதான் நாட்டின் விவசாயத்துறை மறுமலர்ச்சி காணும். அதேநேரம் கிராமியப் பொருளாதாரத்தையும் மேம்பட வைக்க முடியும். பாரம்பரிய உணவுப் பழக்கத்திற்கு எமது இளைய சந்ததியினரை கொண்டு வரும் பெரும் பணியினை நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். எதிர்கால சந்ததியினரின் தேக ஆரோக்கியம் பேணப்படுதல் அவசியமாகும்.

இன்றைய நவீன விஞ்ஞான ஆய்வுகளின் படி உலோகப் பாத்திரங்களை சமையலுக்கு பயன்படுத்துவதை தவிர்த்து மண் பாத்திரங்களை பயன்படுத்துமாறு கூறுகின்றது. இதேபோன்று உணவுகளில் ஏற்படுகின்ற நச்சுப்பதார்த்தங்களையும் மண்பாத்திரங்கள் இல்லாமல் செய்து விடுகின்றது என விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர்.

எனவே கோதுமை மா, மைதா மா மற்றும் ஏனைய உணவுப் பழக்கங்களிலிருந்து விடுபட்டு அரிசிச்சோறு பயன்பாட்டிற்கு நாமும் எமது இளைய தலைமுறையினரும் வரவேண்டும். இது உடல்நலப் பாதுகாப்பினை தருவதுடன் விவசாய உற்பத்திக்கு வழிவகுக்கும் எனலாம்.

முன்பு எல்லாம் அரிசியையும் உழுந்தையும் ஊறவைத்து ஆட்டுக்கல், அம்மியில் அரைத்து புளிக்க வைத்து செய்த இட்லி, தோசையின் சுவையே தனி. நாட்டுப்பச்சை அரிசியை ஊறவைத்து இடித்து புளிப்பதற்காக தென்னங் கள்ளும் சேர்த்து பிசைந்து சுட்ட பால் அப்பத்தின் சுவை இன்றைய தலைமுறையினர் எத்தனை பேருக்குத் தெரியும்.

ஆனால் இன்று பக்கட்டில் அடைக்கப்பட்ட ரெடிமேட் அப்பமாவில் அப்பமும், இட்லியும், தோசையும் செய்யும் காலமாகிவிட்டது. எம் முன்னோர்கள் இயற்கையுடன் ஒன்றி உறவாடி வாழ்ந்ததாலேயே நோயின்றி பல்லாண்டு வாழ்ந்துள்ளனர்.

எமது நாட்டு மக்களில் அநேகமானவர்கள் இரவு உணவா சோறும் கறியுமே பயன்படுத்தி வந்துள்ளனர். இவற்றுடன் சிலர் அரிசி மா பிட்டு, இடியப்பம், குரக்கன் பிட்டு போன்றவற்றையும் பயன் படுத்தியுள்ளனர். இன்றும் இந்த நிலை கிராமப்புறங்களில் நிலவுகின்ற போதிலும் வளர்ந்து வரும் இளையபராயத்தினர் வெதுப்பக உணவு வகைகளான நூடில்ஸ், கொத்துரொட்டி, மீன், சிக்கன், மட்டன், இறால், நண்டு போன்றவற்றை குருமா, பொரியல் போன்ற நவீன சுவை பொருந்தியதாக தயார் செய்து உண்கிறார்கள்.

இவை நாக்குக்கு ருசியாக இருக்கலாம். இருப்பினும் உடலுக்கு ஆரோக்கியமானதாக இல்லை. இதில் கூடுதலாக எண்ணெய், உப்புக்கள், மசாலா வகைகள் அதிகம் சுவைக்காக சுவையூட்டிகள் போன்றன சேர்க்கப்படுகின்றது. இது எமது உடல் ஆரோக்கியத்திற்கு கேடானது என சுகாதாரத்துறை எச்சரிக்கை செய்கின்றது.

எனவே நாம் நாகரிக உணவுகளைத் தவிர்த்து எமது பாரம்பரிய உணவு வகைகளுக்கு திரும்பி நாம் பல்லாண்டு ஆரோக்கியமாக வாழவேண்டும். இதன் மூலமாக நாட்டின் உணவு உற்பத்தியும் உயர்வுகாணும்.

அதிகரிக்க வேண்டுமென சுகாதாரத்துறை பரிந்துரை செய்கின்றது. நீரிழிவு என்பது இலகுவில் குணமடையாத நோய். எமது நாட்டில் வாழும் மக்கள் தொகையில் கால் பகுதியினருக்கு நீரிழிவு நோய் முழுமையாகவோ அல்லது பாதி அளவிலோ இருக்கும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு தற்கால சமுதாயத்தில் காணப்படும் உணவுப் பழக்க வழக்கமே பிரதான மூலமாக இருக்கின்றது. சிவப்பு அரிசியில் இந்த நோயைக் கட்டுப்படுத்தும் அல்லது வராமல் பாதுகாக்கும் வீரியம் அதிகம் இருப்பதாகவும் இதனால் தவிடு நீக்காத சிவப்பு அரிசிச்சோறு அல்லது அரிசிமா பண்டங்களை உணவில் எடுத்துக் கொள்ள வேண்டுமென சுகாதரப் பிரிவு பரிந்துரை செய்கின்றது.

இதேநேரம், எமது முன்னோர்கள் அரிசிச் சோற்றையே பிரதான உணவாக மூன்று வேளைகளிலும் பயன்படுத்தியுள்ளனர். கிராமப்புறங்களில் மண்பானைகளில் சமைக்கப்பட்ட உணவில் இரவில் நீரை ஊற்றி காலையில் தயிர் அல்லது தேங்காய்ப்பூ பச்சை, மிளகாய் அல்லது பனைவெல்லம் கலந்து காலையில் சாப்பிடுவார்கள்.

அதாவது பழைய சோற்றில் நீரூற்றி கரைத்து காலை உணவினை பூர்த்தி செய்துள்ளனர். இதே உணவே விவசாயிகளின் பிரதான போஷாக்கான உணவாக இருந்துள்ளது. அவர்கள் நல்ல உழைப்பாளிகளாக இருப்பதற்கு நீருணவே காரணம் எனலாம். பழைய சோறு பச்சமிளகாய் என்ற பாடல் எவ்வளவு பொருத்தமானது.

இன்று நாம் கடைகளில் பரோட்டா, மற்றும் கோதுமைப் பண்டங்களை வாங்கிச் சாப்பிடுகின்றோம். ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின்பே எமது நாளாந்த உணவில் கோதுமை மா பண்ட உணவு சேர்ந்துள்ளது

ஜனநாயகம் திரும்பி விட்டதா?

தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற பைபிள் வாசகப்படி ஒருபுதிய பரிமாணத்தை கட்டியெழுப்ப அறிமுகப்படுத்தப்பட்டதுதான் தகவல் அறியும் உரிமைச்சட்டம். ஆனால் இன்று இரண்டு வருடங்கள் கடந்தும் இச்சட்டமானது மக்கள் மத்தியில் பூரணமாக சென்றதா? எனில் அது வினவுவதற்குரிய கேள்வி மட்டுமே தவிர விடை அளிப்பதற்கான ஒரு பதில் அல்ல!.

மக்கள் உரிமையை உறுதி செய்வதே தகவலறியும் உரிமைச்சட்டத்தின் பிரதான அம்சம்.. மக்களுக்காக வழங்கப்படும் இவ்வாறான உரிமை ஒன்று தொடர்பில் பொது மக்கள் போதியளவு தெளிவுபடுத்தப்பட்டுள்ளார்களா? என்ற கேள்வி எம் மத்தியில் எழுந்துள்ளது. ஒவ்வொரு மக்களும் ஏதோ ஒரு வகையில் வரி செலுத்துகிறார்கள். அந்த பணத்திற்கு என்ன நடக்கிறது? என்பதை அறிவதற்கு உரித்துடையவர்களாக இருக்கின்ற போதும் அவை தொடர்பாக விளக்கமளிப்பதற்கு யாரும் முன்வருவதில்லை என்பது எதிர்பார்ப்பிற்குரிய விடயமே.

சுமார் நான்கு தசாப்தங்களுக்கு முன்பே மேற்கத்தேய நாடுகளால் பிரகடனப்படுத்தப்பட் இந்த சட்டம் இதுவரை 120 நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 68 நாடுகள் நடை முறைப்படுத்தி உள்ளன. இலங்கையின் அரசியலமைப்பின் 19வது சீர்திருத்தத்திலேயே தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. 2016.03.24 பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. 2017.02.03 நடைமுறைப்படுத்தப்பட்டது.

மக்கள் நலன் சார்ந்த பல சட்டங்கள் பாராளுமன்றத்தின் ஊடாக உருவாக்கப்படுகின்ற போதும் அது தொடர்பான விழிப் புணர்வு அற்ற அல்லது தெளிவில்லாத தன்மை பெரும்பாலான மக்களிடம் காணப்படுகின்றது. இந்நிலையே தகவல் உரிமைச் சட்டத்திலும் தொடர்கிறது. இச்சட்டம் ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் உரியது என்ற பிழையான கண்ணோட்டம் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. எனவே அவைகளையப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம். சமூகம் பல இழப்புக்களை சந்தித்துள்ளது. எனவே மக்கள் தமக்கு கிடைத்துள்ள இச் சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி பெறகூடிய அளவு தகவல்களைப் பெற சட்டம் பற்றிய விளக்கம் கொடுக்கப்பட வேண்டும். எவ்வாறான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்? எந்த அணுகுமுறையூடாக அதிகாரிகளை அணுகவேண்டும்? தகவல் பெறுவதற்கான காலவரையறை என்பன தொடர்பாக மக்களுக்கு அறியத்தர வேண்டும். கிராமஇ பிரதேசஇ மாவட்டஇ மாகாண ரீதியாக தகவல்களை மக்களுக்கு அறிவிப்பது அவசியமாகிறது. தட்டுங்கள் திறக்கப்படும்இகேளுங்கள் கொடுக்கப்படும் என்பதற்கிணங்க மக்கள் தமக்கான உரிமைகளை பெறுவதற்கு வழிப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் ஜனநாயகம் திரும்புவதற்கான தொடக்கமாக தகவலறியும் உரிமைச் சட்டம் கருதப்பட்டாலும் இச்சட்டத்தின் எதிர்காலம் என்பது மக்கள் தகவலறியும் உரிமையை எந்த அளவிற்கு விவேகத்துடனும்இ வலுவாகவும் பயன்படுத்துகிறார்கள் என்பதை வைத்தே அளவீடு செய்ய முடியும்.

கம்சனா இரத்தினேஸ்வரன்
ஊடகத்துறை
யாழ்பல்கலைக்கழகம்

ஒரு துளி அன்பு...

உமா, பேருந்து நிலையத்தில் முருகன் பேக்கரி அருகே நின்று கொண்டிருந்தாள். இன்றைக்கு வேகமாக இருட்டிவிட்டதைப் போலத் தோன்றியது. மனதில் படிந்திருந்த குழப்பங்களும் கவலைகளும் அப்படித் தோன்ற வைக்கிறதோ என்று நினைத்தாள்.

அச்சகத்தைப் பூட்டும்போதே மணி இரவு ஏழுக்கு மேல் ஆகிவிட்டது. எப்படியும் ஏழேகால் மணி பேருந்தைப் பிடித்துவிடலாம் என்று அவசர அவசரமாக வந்தாள். அவள் பேருந்து நிலையத்திற்குள் நுழையும்போதே நாற்பத்தியேழாம் நம்பர் பேருந்து வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தது. இனி இருபத்தியேழாம் நம்பர் பேருந்துதான். அரைமணி நேரமோ, முக்கால்மணி நேரமோ ஆகலாம். அவள் கரட்டுப்பாளையம் போக வேண்டும்.

இன்றைக்கு முகூர்த்தநாள் என்பதால் பேருந்து நிலையத்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. இந்தக் கூட்டத்தில் எங்காவது ஏதாவது கொஞ்சம் ஆறுதலோ, ஒரு துளி அன்போ கிடைக்குமா? என்று அவளுக்குத் தேடிப் பார்க்கத் தோன்றியது. அன்பை யாராவது கடைகளில் விற்றால் எப்படி இருக்கும்? ஒரு நூறு கிராம்... வேண்டாம்... ஐம்பது கிராம்... போதும்... ஒரு துளி அன்பு... போதும்... ஒரு துளி அன்பு போதுமே!

காலையில் அலுவலகத்திற்குப் போனதில் இருந்து எத்தனை பிரச்னைகள்?

காலையில் வீட்டைவிட்டுப் புறப்படும்போது அலைபேசி அடித்தது. நீலகண்டன் அழைக்கிறான். அவன்தான் அச்சகத்தின் உரிமையாளன்.

''அண்ணா... சொல்லுங்கண்ணா...'' என்றாள் உமா.

''உமா... இன்னைக்கு நீதான் பிரஸ்சைப் பார்த்துக்கணும்...''

''ஏனுங்கண்ணா?''

''வேணு திருப்பூர் போறான்... அவங்க சித்தப்பா பொண்ணுக்கு வளைகாப்பாம்... இன்னைக்கு வரமாட்டான். கிருஷ்ணகுமாரண்ணன் பழநியில கல்யாணம்னு சொல்லிப் போயிட்டாரு... நானும் வரமாட்டேன். இடம் ஒண்ணு வாங்கற விஷயமா கோயமுத்தூர் போறேன். ஆபீசை நீதான் பார்த்துக்கணும்...''

உமாவுக்கு இன்றைக்கு வேலை அதிகம் இருக்கும்போல தோன்றியது. நேற்றைய வேலைகளின் மிச்சம் நினைவுக்கு வந்தது.

''சரிங்கண்ணா...''

''ஏதாச்சும் சந்தேகம்னா கூப்பிடு...'' என்று நீலகண்டன் வைத்துவிட்டான்.

நிலா அச்சகம் பொள்ளாச்சி கரிகாற்சோழன் வீதியில் இருக்கிறது. வேணுகோபால்தான் ஆப்செட் மிஷின் ஆபரேட்டர். கிருஷ்ணகுமார் பைண்டிங் வேலைகளைப் பார்ப்பார். உமா கணினி வடிவமைப்பாளராக வேலை பார்க்கிறாள்.

வேலைக்குச் சேர்ந்து பதின்மூன்று மாதங்கள் ஆகின்றன. ஆறாயிரம் ரூபாய் சம்பளம். ரேவதி அக்காவும் வடிவமைப்பாளர் வேலைதான் பார்க்கிறாள். கர்ப்பமாக இருப்பதால் விடுப்பில் இருக்கிறாள்.

உமாவுக்கு ஆனி வந்தால் இருபத்தியேழு வயதாகிவிடும். இந்த வருடத்திற்குள் கல்யாணத்தை முடித்துவிட வேண்டும் என்று அம்மாவும் அப்பாவும் தீவிரமாக முடிவெடுத்திருக்கிறார்கள். போன வாரம் பெரியநாயக்கன்பாளையத்திலிருந்து ஒரு மாப்பிள்ளை வீடு வந்தது. அநேகமாக அது முடிந்து விடுகிற நிலையில் இருப்பதாக சித்தி சொன்னாள். மாப்பிள்ளை வீட்டுக்காரர்களுக்கு உமாவைப் ரொம்பப் பிடித்துப் போய்விட்டதாக தகவல் வந்ததாகச் சொன்னாள். உமாவுக்கும் மாப்பிள்ளையைப் பிடித்த மாதிரித்தான் தோன்றியது. இதுவரை ஏழெட்டு மாப்பிள்ளைக்கு மேல் பார்த்திருப்பார்கள். அவர்கள் நிறைய நகைகளையும் பணத்தையும் எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்த மாப்பிள்ளை வீட்டில் அப்படியெல்லாம் எதிர்பார்க்கவில்லை. உமாவுக்கும்கூட இந்தக் கல்யாணம் நடந்துவிடும் என்கிற நம்பிக்கை துளிர்த்திருந்தது. ஆனால் இன்று நடந்த சம்பவம் நம்பிக்கையை உடைத்துவிட்டது.

உமா நினைத்த மாதிரியே இன்றைக்கு நிறைய வேலைகள் இருந்தன. ஒரு விளம்பர வடிவமைப்பு, இரண்டு பில் புக் வேலை, ஒரு துண்டுஅறிக்கை, ஒரு திருமண அழைப்பிதழ் வேலை என்று பரபரப்பாக இருந்தாள்.

மதியம் மூன்று மணிக்கு மேல்தான் சாப்பிட நேரம் கிடைத்தது. டிபன் பாக்ஸத் திறந்து இரண்டு வாய் சாப்பிட ஆரம்பித்த நேரத்தில்தான் அவர் வந்தார். நல்ல பசி. குழம்பு கொஞ்சம் சலித்துப்போய் வாசம் வீசியது. வேறுவழியில்லாமல் பிசைந்து சாப்பிட ஆரம்பித்தாள். பசி அவளுக்கு அயர்ச்சியையும் சோர்வையும் தந்திருந்தது.

அச்சகத்துக்குள் நுழைந்த மனிதருக்கு ஐம்பத்தைந்து வயதுக்குமேல் இருக்கலாம். பளபளவென்று டை அடித்து வழுக்கையை மறைக்க முயன்றிருந்தார். மடிப்புக் கலையாத பேண்ட் சட்டையும் இன் பண்ணியிருந்த விதமும் அவரை ஏதோ அதிகாரியைப் போன்ற தோரணையைக் கொண்டு வந்திருந்தது. அவர் பேச்சிலும் அது தெரிந்தது.

''எக்ஸ்கியூஸ் மீ...'' அவருடைய அதிர வைக்கும் குரல் திடுக்கிட வைத்தது.

கம்ப்யூட்டர் மேசைக்கு கீழே உட்கார்ந்திருந்த உமா நிமிர்ந்து பார்த்தாள்.

''ஓ சாப்பிடறீங்களா? வேற யாரும் இல்லியா?''

''இல்லீங்க. என்ன வேணும்?''

''கல்யாணப் பத்திரிக்கை அடிக்கணும்...''

''ஒரு அஞ்சு நிமிசம்... உட்காருங்க சார்... சாப்பிட்டுட்டு வந்திடறேன்.''

''இல்ல... எனக்கு டயம் இல்ல. கொஞ்சம் அவசரம்... இன்விடேசன் மாடல் இருந்தா கொடுங்க. நீங்க சாப்பிடறதுக்குள்ள நான் பார்த்து செலக்ட் பண்ணிக்கிறேன்...''

அது முடியாது. பதினொரு மணிக்கு ஆறு பேர் திருமண அழைப்பிதழ் அடிக்க வேண்டும் என்று வந்தார்கள். ஃபைலில் இருந்த அழைப்பிதழ் மாதிரிகளை ''கலை கலை'யென்று கலைத்து வைத்திருக்கிறார்கள். அழைப்பிதழ்களைப் புகைப்படம் எடுத்து யார் யாருக்கோ வாட்ஸ் அப்பில் அனுப்பினார்கள். ஒருவழியாக ஓர் அழைப்பிதழைத் தேர்ந்தெடுத்து முடிப்பதற்குள் மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. தங்கள் நல்வரவை நாடுபவர்களின் பெயர்ப் பட்டியலில் ஓர் ஊரே அடங்கி இருந்தது. பெயர்களை மாற்றி மாற்றிச் சொல்லி வரிசைப்படுத்தி, திருத்தம் பார்த்து, வாட்ஸ் அப் - மின்னஞ்சல் என்று அனுப்பி... பசி அவளுக்கு மிகுந்த சோர்வை உண்டாக்கியிருந்தது.

உமாவுக்கு பன்னிரண்டரை மணிக்கே பசிக்க ஆரம்பித்துவிட்டது. ஒரு மணியிலிருந்து ஒன்றரை மணிக்குள் சாப்பிட்டுவிடுவாள். ஒரு மணியிலிருந்தே கடிகாரத்தைப் பார்க்க ஆரம்பித்துவிட்டாள்.

''சரிம்மா... எல்லாம் சரியா இருக்கு... நாங்க போயிட்டு எதுக்கும் இன்னொரு தடவை பார்த்துட்டு போன் பண்றோம். அப்புறம் பத்திரிக்கை அடிச்சிருங்க...''

நீலகண்டனை அலைபேசியில் அழைத்து, ஐநூறு திருமண அழைப்பிதழ்களுக்கு எவ்வளவு வாங்குவது என்று கேட்டுவிட்டு, முன்பணம் ஆயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டாள்.

அவர்கள் போனதும் பரபரவென்று எழுந்தாள். முதுகு வலித்தது. மூன்று மணிநேரத்திற்கும் மேல் ஒரே இடத்தில் அமர்ந்திருந்தது நினைவுக்கு வந்தது. முதலில் பாத்ரூம் போக வேண்டும்.

கை, கால்களை எல்லாம் கழுவிட்டு சாப்பிடலாம் என்று ஓடிவந்தாள்.

''என்னம்மா யோசிக்கறே? மாடல் எங்க இருக்கு சீக்கிரம்...'' என்று அவர் அவசரப்படுத்தினார்.

''சார்... எல்லாம் கலைஞ்சு கிடக்கு... ஒரு அஞ்சு நிமிசம்...'' என்றாள். பசி... அவளால் சரியாகக்கூட பேச முடியவில்லை.

''இங்க பாரும்மா... எனக்கு நிற்க நேரமில்லை. நீ மாடல் எடுத்துக்கொடு. சும்மாவெல்லாம் என்னால நிற்க முடியாது.''

உமாவுக்கு ஒருமாதிரி ஆகிவிட்டது.

''என்ன மனுசன்?'

சாப்பிடுகிறவேளையில் வருகிறவர்கள், ''''பொறுமையா சாப்பிட்டு வாம்மா...'' என்று சொல்வதைப் பார்த்திருக்கிறாள். இப்படி அவசரப்படுகிற ஆளை இப்போதுதான் பார்க்கிறாள்.

எரிச்சலை அடக்கிக்கொண்டு எழுந்து அழைப்பிதழ்கள் கோர்த்திருந்த ஃபைலை எடுத்துக் கொடுத்தாள். அழைப்பிதழ்கள் கன்னாபின்னாவென்று கலைந்திருந்தன. சாப்பிட்டுவிட்டு அடுக்கலாம் என்று நினைத்திருந்தாள்.

வாங்கியவர் அவளை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தார்.

''இதுதான் மாடலா? ஏம்மா குப்பை மாதிரி கொண்டுவந்து கொடுக்கறே?'' என்று அதட்டுகிற தொனியில் கேட்டார்.

அவளுக்குக் கோபமாக வந்தது. அடக்கிக் கொண்டாள்.

பேசாமல் சாப்பிட உட்கார்ந்தாள்.

அழைப்பிதழ் மாதிரிகளைப் புரட்டிக்கொண்டே வந்தவர், ''சொல்லிக்கற மாதிரி டிசைன் எதுவும் இல்லையே...'' என்றார்.

உமா பதில் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

''ஏம்மா... உன்னைத்தான் கேட்கறேன்...'' என்றார் சத்தமாக.

''இதுல இருக்கற மாடல்தான் சார்...'' சொல்லிவிட்டு வேகவேகமாகச் சாப்பிட ஆரம்பித்தாள்.

அவர் ஏதோ முணுமுணுத்தபடி புரட்டிக் கொண்டிருந்தார்.

உமா சாப்பிட்டு முடித்துவிட்டுப் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டு வந்தபோது, ஃபைலில் கோர்த்திருந்த அழைப்பிதழ்களை அப்படியே பிய்த்து எடுத்திருந்தார். உமா பதறிப் போய்விட்டாள். நீலகண்டன் அண்ணன் திட்டப் போகிறது.

''''சார்... எதுக்கு சார் இப்படி பிச்சு எடுத்தீங்க... கேட்டிருந்தா பியக்காம எடுத்துக் கொடுத்திருப்பனே?''

உமாவை ஒருமாதிரியாகப் பார்த்தார். எரித்துவிடுகிற மாதிரியான பார்வை.

''என்னம்மா இப்ப? என்ன பெரிய கொலைக் குத்தமா நடந்து போச்சு?''

''இல்ல சார்... பத்திரிகைகளை கிழிக்காம எடுத்திருக்கலாம்னுதான் சொன்னேன்.''

அவருக்கு ஏதோ அவமானம் நிகழ்ந்துவிட்டதைப்போல தலையை அசைத்துக் கொண்டார்.

''இப்ப என்ன பத்திரிகையை ரெண்டாவா கிழிச்சுப் போட்டேன். மாடலுக்கு பத்திரிகையை எடுத்தா இப்படிப் பேசறே?''

''சார் எதுவும் தப்பா சொல்லலையே''

''அப்போ நான் தப்புப் பண்ணிட்டேன்னு சொல்றியா? நல்லா இருக்கும்மா உன் பேச்சு. என்ன பேசற நீ?''

உமாவுக்கு என்ன பேசுவதென்று புரியவில்லை. கோபத்தில் ஏதாவது கத்திவிடலாமா என்று நினைத்தாள்.

''நீங்கதான் சார் தப்பாப் புரிஞ்சுக்கிட்டீங்க?'' என்றாள்.

''ஏம்மா... என்ன சர்வீஸ் பண்றே? கஸ்டமர்கிட்ட எப்படிப் பேசறதுன்னுகூட உங்க ஓனர் சொல்லித் தரலையா? ஓனரோட போன் நெம்பர் கொடு. நான் பேசறேன்.''

அவளுக்குக் கோபம் வந்துவிட்டது.

''''பேசுங்க'' என்று அலைபேசி எண்ணைக் கொடுத்தாள்.

அவர் வெளியில்போய் அலைபேசியில் ''காச்மூச்'சென்று ஏதோ கத்தினார். இல்லாததையும் பொல்லாததையும் சேர்த்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

உமா நிதானமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இந்தா... சார் பேசறார்...'' என்று அதிகாரமாய் அலைபேசியை அவளிடம் நீட்டினார்.

''என்னம்மா பிரச்சினை?'' நீலகண்டன் கேட்டான்.

அவர் ஏதோ ஆங்கிலத்தில் தனியாக முணுமுணுத்துக் கொண்டிருக்க, உமா நடந்தவற்றைச் சொன்னாள்.

''சரிம்மா... கண்டுக்காதே... சிலபேரு இப்படித்தான் இருப்பாங்க... பத்திரிகை எல்லாம் அடிக்கமாட்டாங்க. பேசி அனுப்பிடு'' என்று போனைத் துண்டித்தான்.

உமா அலைபேசியை அவரிடம் நீட்டினாள். அவர் அலைபேசியைத் துண்டித்தது தெரியாமல், ''ஹலோ, ஹலோ...'' என்று கத்திக் கொண்டிருந்தார்.

அந்த நேரம் பார்த்து வெள்ளை வேட்டி - வெள்ளை சட்டை அணிந்திருத்த யாரோ ஒருவர் அலுவலகத்திற்குள் நுழைந்தார்.

''கட் ஆயிடுச்சா... என்னம்மா சொன்னாரு?'' என்று அதட்டினார்.

அவள் பேச விருப்பம் இல்லாமல் புதிதாக வந்தவரிடம், ''என்ன வேணுங்க சார்?'' கேட்டாள். புதிதாக வந்தவர் பதில் சொல்வதற்குள் அவர் முந்திக்கொண்டார்.

''கஸ்டமர்கிட்ட எப்படிப் பேசணும்னு கூடத் தெரியலே உன்னையெல்லாம் எப்படி வேலைக்கு வச்சிருக்கறாங்க? கொஞ்சம்கூட

னிக்காமப் போயிட்டனே'

''ஏய்... உமா?''

''ஏம்மா... என்னாச்சு?''

சட்டென்று மனசுக்குள் ஒரு கலக்கம் தோன்ற, பதற்றமானாள்.

''என்னன்னு தெரியலையே... மாப்பிள்ளை வீட்டில இருந்து பொண்ணு சரிவராதுன்னு சொல்றாங்க. ஆபீசுல என்ன நடந்துச்சு?''

உமா உடைந்து போனாள்.

''ஒண்ணும் நடக்கலைம்மா...''

''அவரு என்னமோ சொல்றாரு. பொறுப்பில்லாத பொண்ணுன்னு...''

''அம்மா... நான் வீட்டுக்கு வந்து சொல்றேன்.''

''என்னடி நடந்துச்சு? அவங்க மனசு கோணற மாதிரி ஏதாச்சும் நடந்திட்டியா?''

''அப்படியெல்லாம் இல்லம்மா... வந்து சொல்றேன்...''

''என்னமோ போ... நல்ல இடம் அமைஞ்சது... இப்படிக் கெடுத்திட்டியே...''

உமா அலைபேசியை அணைத்துவிட்டாள். அவளுக்குக் கலக்கமாக இருந்தது. செய்யாத தவறுக்குத் தண்டனை கிடைக்கிற மாதிரி உள்ளுக்குள் வலித்தது. வேலையில் கவனம் செல்லவில்லை. இருக்கையில் அமர்ந்தபடி கணினித் திரையை வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

அலைபேசி அழைத்தது. ஒருவித நடுக்கத்தோடு எடுத்துப் பார்த்தாள்.

ரேவதி அக்கா.

உமா ரேவதி அக்காவிடம் அழுது கொட்டித் தீர்த்துவிட்டாள்.

''''விடு புள்ளே... சும்மா இதையே மனசுல நெனைச்சுக்கிட்டு இருக்காதே. ஏதோ நல்லதுக்குன்னு நெனைச்சுக்கோ. அழுகாதே. ரொம்ப கஷ்டமா இருந்தா... நேரத்திலேயே வீட்டுக்குக் கிளம்பிப் போயிடு. அவங்களா ஏதாச்சும் தப்பா கற்பனை பண்ணி முடிவெடுத்தா, நாம என்ன செய்ய முடியும்? நைட் கூப்பிடு'' என்றாள் ரேவதி அக்கா.

ரேவதி அக்காவிடம் பேசியதில் மனசு பாரம் குறைந்த மாதிரி இருந்தது. ஆனால் வீட்டுக்கு நேரத்திலேயே போக முடியாது. அங்கே பிரச்னை என்ன வடிவத்தில் காத்திருக்கிறதோ?

மறுபடியும் அலைபேசி அழைத்தது.

இப்போது நீலகண்டன்...

''என்னம்மா உமா இப்படிப் பண்ணிட்டே?''

''அண்ணா... என்னாச்சுங்க?''

''வந்தவரு பெரிய கஸ்டமரும்மா. இப்பத்தான் என்னோட சொந்தக்காரர் போன் பண்ணிச் சொன்னாரு, அவருதான் அவரை அனுப்பி வச்சாராம். மூவாயிரம் பத்திரிகை. பெரிய ஆர்டர். ரொம்ப சங்கடப்பட்டாரு. என்னம்மா நடந்துச்சு...?''

''அண்ணா... உங்கள்ட்ட அப்பவே சொன்னனே...''

''இல்லம்மா... நீ கொஞ்சம் பார்த்துப் பேசியிருக்கலாம். பெரிய ஆர்டர் போச்சே உன்னை நம்பி விட்டு வந்ததுக்கு இப்படிப் பண்ணிட்டியே? எவ்வளவு நஷ்டம்? கெட்ட பேரு வேற?''

உமா மௌனமாக இருந்தாள்.

''சரி... வைம்மா'' என்றான் நீலகண்டன்.

உமா அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

இன்றைக்கு ஏன் இப்படி நடக்கிறது?

நாம் தனியாக இருக்கிறோம். நமக்கு யாருமே இல்லை என்கிற மாதிரி ஏதேதோ எண்ணங்கள் தோன்றி அவள் மனசை அலைக்கழித்தன. நிம்மதியாக வேலைகளைச் செய்ய முடியாமல் தவித்தாள். இருக்கிற வேலைகளை ஒருவழியாக முடித்துவிட்டுக் கிளம்பும்போது மணி ஏழாகிவிட்டது.

பேருந்து நிலையத்தை நோக்கி நடக்கும்போது தன்னை மட்டும் இருள் சூழ்ந்திருக்க, காணாமல் போய்க் கொண்டிருப்பதைப் போல உணர்ந்தாள். இன்றைக்கு வீடு நிம்மதி இழந்து தவிக்கப் போகிறது. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் எதைச் சொல்லி புரிய வைப்பது?

பேருந்து நிலையம் வழக்கத்தைவிட இரைச்சலாக இருந்தது. உமா வழக்கமாக நிற்கும் தேநீர்க் கடை பக்கத்தில் நிறையப் பேர் நின்றிருந்தார்கள். கொஞ்சம் தள்ளி சிமெண்ட் பெஞ்சை ஒட்டிய தூண் அருகே நின்றுகொண்டாள். அவளருகே நின்றுகொண்டிருந்த இரண்டு பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''புள்ள எத்தனாம் வகுப்பு படிக்கிறா?''

''ஆறாம் வகுப்பு வந்துட்டா அக்கா...''

''எப்படியாச்சும் கஷ்டப்பட்டு படிக்க வெச்சுரு. பத்தாம் வகுப்பு வரைக்குமாவது படிக்க வெச்சுரு...?''

''ஆமாக்கா படிக்க வைக்கோணும்... அவளும் நல்லாப் படிக்கறா அக்கா. பொறுப்பில்லாத புருசனக் கட்டிக்கிட்டு...''

உமாவின் அலைபேசி அடித்தது. எடுத்துப் பார்த்தாள்.

''அம்மா...''

''என்ன சொல்லப் போகிறாளோ... பேசலாமா? வேண்டாமா?'' குழப்பத்தோடு அலைபேசியைக் காதில் வைத்தாள்.

''கண்ணு... எங்க சாமி இருக்குற?''

அம்மாவின் கனிவான குரல்... உமாவால் நம்ம முடியவில்லை.

''பஸ்சுக்கு நின்னுட்டு இருக்கறேன்...''

''சரி சாமி... பார்த்து பங்கா வா... மனசுல ஒண்ணும் வச்சுக்காத தங்கம்... மத்தியானம் ஏதோ அவசரப்பட்டுப் பேசிப் போட்டேன்.''

''ம்...'' என்றாள் உமா.

''''பார்த்து வா சாமி... மனசுல ஒண்ணும் நெனைச்சுக்க வேண்டாம். அவங்க என்னமோ சொல்லிட்டுப் போகட்டும். எம்பொண்ணைப் பத்தி எனக்குத் தெரியாது. வேலைக்குப் போற இடத்தில ஆயிரம் பிரச்னை இருக்கும். நீ எதையும் நெனைக்க வேண்டாம். என்ன சாமி... போனை வெச்சிடறேன்...''

உமாவை யாரோ ஆதரவாகப் பற்றிப் பிடிப்பதைப் போல தோன்றியது. கண்கள் கலங்கிவிட்டன. மணிக்கட்டில் பொட்டென்று ஒரு துளி கண்ணீர் விழுந்தது. ஒரே ஒரு துளியில் மனசு அன்பால் நிறைந்து துயரங்கள் எல்லாம் கரைந்து கொண்டிருப்பதை அவளால் உணரமுடிந்தது.

பொறுப்பே கிடையாது. மனுசங்களை மதிக்கத் தெரியாத ஜென்மம். பொண்ணாம்மா நீ. உன்னையும் நம்பி ஆபீசை விட்டுட்டுப் போறாங்களே, அவங்களைச் சொல்லணும். கொஞ்சம்கூட மரியாதை தெரியாத பொண்ணா இருக்கே?''

என்று ஏதேதோ திட்டிக்கொண்டே வெளியேறினார்.

அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. அடக்கிக்கொண்டு புதிதாக வந்தவரைப் பார்த்தாள்.

'சொல்லுங்க சார்...'' என்றாள்.

அலுவலகத்தைச் சுற்றும் முற்றும் பார்த்தார்.

''ஓனர் இல்லையாம்மா?''

''வெளியூர் போயிருக்கறார் சார்.''

''சும்மா அவரைத்தான் பார்க்க வந்தேன்...'' என்று சொல்லிவிட்டு வெளியேறினார்.

''சார்... ஓனர் வந்தா என்ன சொல்றது?''

அவர் காதில் வாங்கிக் கொள்ளாமல் போய்விட்டார்.

''யாரு... எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே?' என்று யோசித்தாள்.

அதற்குப் பின் அவளால் வேலை செய்ய முடியவில்லை. மனசு அமைதியில்லாமல் தவித்தது. அந்த மனிதர் திட்டிக் கொண்டே போனது காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது. இப்போதும்கூட அலுவலகத்திற்கு முன்னால் நின்று திட்டிக் கொண்டிருப்பதைப் போல இருந்தது.

வேலையைச் சரியாகச் செய்ய முடியாமல் தவித்தாள். ரேவதி அக்காவுடன் பேசினால் மனசு ஆறும் என்று நினைத்தாள். அலைபேசியில் அழைத்தபோது யாருடனோ பேசிக் கொண்டிருப்பதாக தகவல் வந்தது.

மணி ஐந்தானபோது அம்மாவிடமிருந்து அழைப்பு வந்தது.

''ஏம்மா?'' என்றாள்.

''என்னடி இப்படிப் பண்ணிட்ட?''

அம்மாவின் குரலில் தெரிந்த பதற்றம், அவளுக்கு ஒருவித பயத்தைத் தந்தது.

''ஏம்மா என்னாச்சு?''

''மாப்பிள்ளையோட தாய்மாமா உன்னைப் பார்க்க ஆபீசுக்கு வந்தாராமா?''

''என்னைப் பார்க்கவா? இல்லையே?''

சட்டென்று அவள் நினைவில் வெள்ளை சட்டை வெள்ளை வேட்டி மனிதர் வந்தார்.

''அவரு மாப்பிள்ளையோட மாமாவா? அதுதான் எங்கேயோ பார்த்த மாதிரி இருந்துச்சா ச்சே... அந்தப் பிரச்னையில சரியா கவ

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 28.04.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.